
# 2010 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 11</u>

**18.01.2010** பிரம்மாபாபாவுக்கு சமமாக மோகத்திலிருந்து விடுபட்டு நினைவு சொரூபமாக ஆவதற்காக மனதிற்கான அட்டவணை அமைத்து, கர்மம் செய்யும் பொழுது கர்ம யோகியாக, அசரீரியாக ஆவதற்கான பயிற்சி செய்க!

**30.01.2010** நான்கு பாடங்களிலும் கவமான் (சுய மரியாதை) நிலையின் அனுபவி சொரூபமாகி, அனுபவத்தின் அத்தாரிட்டியை (சக்தி) செயலில் ஈடுபடுத்துங்கள்!

**11.02.2010** சிவ தந்தையின் பிறந்த நாளில் கோபம் என்ற எருக்கம்பூவை பாப்தாதாவிற்கு அர்ப்பணம் செய்து தூய நிலைக் கண்ணாடியாக (தர்பன்) ஆகுங்கள். தாய்மையான இல்லற வாழ்க்கையின் பிரத்யட்சத்தின் வெளிப்பாடு மூலமாக தந்தையின் பிரத்யட்சத்தை வெகு அருகாண்மையில் கொண்டு வாருங்கள்! (சிவ ஜெயந்தி)

**28.02.2010** தேக உணர்வின் 'நான்' 'நான்' என்ற வார்த்தையை ஹோலியில் எரித்து விட்டு பரமாத்மா தொடர்பு என்னும் வர்ணத்தைப் பூசிக் கொண்டு ஹோலியைக் கொண்டாடுங்கள்!

**15.03.2010** பரமாத்மா அன்பிற்கு பாத்திரமான ஆத்மாக்களே! துக்கமானவர்களுக்கு சுகத்தின் அஞ்சலியைத் தாருங்கள், விணானவைகளை முடித்து விட்டு சக்தி வாய்ந்தவர்களாக ஆகுங்கள், சமயத்தை அருகாமையில் கொண்டு வாருங்கள்!

**31.03.2010** மூதாதையர் (பூர்வஜ்) மற்றும் பூஜிக்கத்தக்கவர்களின்(பூஜ்யர்) சுவமானத்தில் இருந்து அனைவரையும் பாலனை (வளர்ப்பு) செய்யுங்கள். முழு மரத்திற்கும் மனதின் மூலம் சக்தியை (சகாஷ்) வழங்குங்கள்!

**24.10.2010** நேரத்தின் வேகத்திற்கு ஏற்ப இப்போது சுபாவ சம்ஸ்காரத்தை மாற்றுவதில் தீரத்தன்மையைக் கொண்டு வாருங்கள்; மனதின் மூலமாக ஆத்மாக்களுக்கு விதவிதமான ஒளிக்கதிர்களை வழங்குங்கள்!

**15.11.2010** சுயமாற்றத்தின் வேகத்தை அதிகரித்து சுபாவ சம்ஸ்காரத்தை முடித்து விடுகின்ற விழாவைக் கொண்டாடுங்கள். ஒவ்வொரு எண்ணத்திலும், சொல்லிலும் செயலிலும் பிரம்மாபாபாவைப் பின்பற்றுங்கள்!

**30.11.2010** ஒவ்வொரு நொடியும் மனதிற்குப் பயிற்சி செய்து அதனை சக்திசாலியாக மாற்றுங்கள். பாபாவே உலகம் (சன்சார்) என்று இருக்கும்பொழுது

சுபாவத்தையும் (சம்ஸ்கார்) பாபாவைப் போலவே மாற்றிக் கொள்ளுங்கள்!

**15.12.2010** எனதை உனதாக மாற்றிவிட்டு கவலையில்லாத ராஜாவாக மாறுங்கள். ஒரு வினாடியில் வீணானவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற பழக்கம் உடையவராகி ஒவ்வொரு எண்ணத்தையும் ஒவ்வொரு நேரத்தையும் லாபகரமாக ஈடுபடுத்துங்கள்!

**31.12.2010** பழைய வருடத்திற்கு விடைகொடுத்து அனுப்புவதுடன் பழைய சுபாவங்களுக்கும் விடை கொடுத்து அனுப்பி தடைகளற்றவர்களாக இருப்பதற்காக திட சங்கல்பம் எடுங்கள் மற்றும் இரக்க உள்ளம், மாஸ்டர் வள்ளலாக மாறி மனதின் சேவை மூலமாக துக்கம், அசாந்தியில் உள்ள ஆத்மாக்களுக்கு அடைக்கலம் கொடுங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## 18.01.2010 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பிரம்மாபாபாவுக்கு சமமாக மோகத்திலிருந்து விடுபட்டு நினைவு சொரூபமாக ஆவதற்காக மனதிற்கான அட்டவணை அமைத்து, கர்மம் செய்யும் பொழுது கர்ம யோகியாக, அசரீரியாக ஆவதற்கான பயிற்சி செய்க!

இன்று நாலாபுறமும் உள்ள குழந்தைகளிடம் விசேஷமாக அன்பு நிறைந்துள்ளது. இன்றைய நாளை நினைவு தினம் என்று சொல்லப்படும். பாப்தாதா அமிர்தவேளையிலிருந்து நாலா புறமும் பார்த்தார். உள்நாடு மற்றும் அயல்நாடு அனைத்து இடங்களிலும் உள்ள எல்லாக் குழந்தைகளின் மனதிலும் பாபாவுடைய அன்பின் சித்திரமே தென்பட்டது. மேலும் பாபாவின் உள்ளத்திலும் ஒவ்வொரு குழந்தைகளின் அன்பு எனும் சித்திரமே காணப்படுகிறது. இன்றைய நாள் விசேஷமாக அள்பு நிறைந்த நினைவு தினமாக சொல்லப்படும். பாப்தாதா அமிர்தவேளையிலிருந்து அனைத்து குழந்தைகளிடமும் இருந்த அநேக விதமான அன்பெனும் முத்துக்களால் அமைக்கப்பட்ட மாலையைப் பார்க்கின்றார். ஒவ்வொரு குழந்தைகளின் உள்ளத்திலும் இந்த பாடல் தானாகவே ஒலித்துக் கொண்டிருக்கிறது -மேரா (என்னுடைய) பாபா, பிரம்மாபாபா, மீட்டா (இனிமையான) பாபா. அதுபோலவே பாப்தாதாவின் உள்ளத்திலும் ஒலித்துக் கொண்டிருக்கிறது மீட்டே பச்சே, பியாரே பச்சே. இன்று ஒவ்வொருவருடைய உள்ளங்களிலும் சக்திகளைக் காட்டிலும் அன்பெனும் சக்தியே அதிகமாக நிறைந்துள்ளது. இந்த பரமாத்மா அன்பு ஈஸ்வரிய அன்பு சங்கம யுகத்தில் மட்டுமே அனுபவமாகிறது. இந்த பரமாத்மாவின் அன்பை அனுபவித்தவரே புரிந்து கொள்வர். அந்த

அன்பானது ஒவ்வொரு குழந்தைகளையும் சகஜ யோகியாக மாற்றிவிடுகிறது. பாப்தாதாவும் பார்க்கின்றார். அனைத்துக் குழந்தைகளிடத்திலும் அன்பின் அனுபவம் மிக மிக அதிகமாகவே உள்ளது. உங்கள் அனைவருடைய பிறப்பிற்கும் ஆதாரம் அன்புதான். உங்களில் ஒரு குழந்தை கூட அன்பில்லாதவர் என்று பார்க்க முடியவில்லை. சக்திகள் கூட குறைவாக இருக்கலாம் ஆனால் பாபாவின் அன்பு மற்றும் நிமித்தமான விசேஷ ஆத்மாக்களின் அன்பு இதனுடைய அனுபவம் பெரும்பாலும் எல்லோருடைய முகத்திலும் தென்படுகிறது. இன்று உங்கள் எல்லோரையும் விசேஷமாக இங்கு வரையில் யார் கொண்டுவந்தது? எந்த விமானத்தில் வந்தீர்கள்? ரயிலிலா அல்லது விமானத்திலா? அனைவருடைய முகத்திலும் தென்படுகிறது அன்பெனும் விமானத்தின் மூலமாக வந்துள்ளீர்கள். என்ன செய்தாலும் சரி, அன்பெனும் விமானத்தின் மூலம் நீங்கள் வந்து விட்டீர்கள்.

இன்றைய நாள் நினைவு நாள் என்று சொல்லப்படுகிறது ஆனால் நினைவோடு மட்டுமல்லாமல் சக்தி தரும் நாள் என்றும் சொல்லப்படும். இன்றைய நாளை மிக மிக ஊக்கம் உற்சாகம் தரும் நாளாகவும் கூறலாம். ஏனென்றால் இன்றைய நாளில் பாப்தாதாவின் விசேஷமாக பிரம்மாபாபா நிமித்தமாக உள்ள மகாவீர் குழந்தைகளுக்கு உலக சேவைக்கான கிரீடம் அணிவித்தார். பாபா மற்றும் பிரம்மாபாபா இருவருமே தன்னை மறைத்துக் கொண்டார்கள். மேலும் குழந்தைகளுக்கு உலக சேவைக்கான நினைவுத் திலகம் அணிவித்தார். குழந்தைகளை செய்பவராக மாற்றினார்; தன்னை செய்விப்பவராக ஆக்கிக் கொண்டார். தன்னைப்போலவே பரிஸ்தா ரூபத்தை வரதானமாக கொடுத்து ஒளிக் கிரீடம் அணிவித்தார். பாப்தாதா வரதானமாக அளித்த கிரிடம், திலகம் அப்படியே அதனை சேவையில் பயன்படுத்துகின்ற குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார். குழந்தைகள் சேவைக்கான வரதானங்களை செயலில் கொண்டு வந்தார்கள். இதனைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். இதுவரையில் நீங்கள் நடிப்பை நடித்து வந்தீர்கள், இன்னும் நடிக்க வேண்டும். அதற்கான பன்மடங்கு விசேஷமான வாழ்த்துக்களை பிரம்மாபாபா வழங்கிக் கொண்டிருக்கின்றார். ஆஹா! என் குழந்தைகளே ஆஹா அயல் நாட்டிலும் பாபா சுற்றிப் பார்த்தார். அங்கே

என்ன தெரிய வந்தது. ஒவ்வொரு குழந்தையும் அன்பில் மூழ்கி உள்ளனர். பாபாவின் மூலமாக சக்தி கிடைக்கின்றது. ஏனென்றால் இந்த நாள் விசேஷமாக அன்புடன் சக்திகள் எனும் வரதானங்களை பிராப்தம் செய்யும் நாளாகும். பாப்தாதா பார்க்கின்றார். சில சில குழந்தைகள் மிகவும் நன்றாக முழுமையான ஈடுபாட்டுடன் மற்றும் ஆர்வத்துடன் நினைவிலும், சேவையிலும் மூழ்கி உள்ளனர். அமிர்தவேளையில் மிக நன்றாகவே அனுபவம் செய்கின்றனர். அசரிரீ நிலையையும் அனுபவம் செய்கின்றனர் ஆனால் கர்ம யோகியாக மாறுகின்ற நேரத்தில் செயலும் செய்ய வேண்டும், நினைவும் செய்ய வேண்டும் இவை இரண்டிற்கும் நடுவே வேறுபாடு சிறிது காணப்படுகிறது. முயற்சி செய்கின்றார்கள் அதில் செயலும் நினைவும் சமநிலை இருக்க வேண்டும் ஆனால் அமிர்தவேளையில் அனுபவம் செய்வதுப் போல கர்ம யோகத்தில் இல்லை வேற்றுமையே காணப்படுகிறது. முயற்சி செய்ய வேண்டி இருக்கிறது. பாப்தாதாவும் அனைத்துக் குழந்தைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார். உலக விநாசம் எதிர்பாராத விதமாக எப்பொழுது வேண்டுமாயினும் திடீர் என்று ஏற்படலாம். அப்படி முழு நாளும் கவனம் இல்லாது போனால் ஏதாவது தாரணையில் குறைவு இருந்தால் கர்ம யோகி ஆகும் நிலையில் வேறுபாடே காணப்படும். எனவே உலக விநாசத்திற்கானத் தேதியை பாப்தாதா முன்னதாக சொல்வதில்லை ஆனால் தன்னுடைய வாழ்க்கையின் காலம் எப்பொழுது முடிவடையும், இது தெரியுமா? சிலருக்குத் தெரியும் எனது மரணம் இந்த தேதியில் வரும் என்று, தெரியுமா? கை உயர்த்துங்கள் திடீரென எது வேண்டுமானாலும் நடக்கலாம். ஏதேனும் இயற்கை சீற்றம் காரணமானால் எத்தனை பேர் சேர்ந்து இறந்து போகிறார்கள். எனவே உலக அழிவுக்கான தேதியை மனதில் வைத்துக் கொண்டு சோம்பலாக இருந்து விடாதீர்கள். உங்களுடைய ஜெகதம்பாவின் சுலோகன் -ஒருபொழுதும் எப்போது என்று சொல்லாதீர்கள், இப்பொழுதே என்று சொல்லுங்கள். நாளை எது வேண்டுமாயின் நடக்கலாம் ஆனால் நான் எப்போதுமே தயாராகத் தான் (சதா எவரெடி) இருக்க வேண்டும். சதா எவரெடியாகத்தான் இருக்க வேண்டும். இந்த அளவிற்கு கவனம் எல்லோரிடமும் உள்ளதா? தன்னுடைய கர்மங்களின் கணக்கு வழக்குகளை முடித்து விட்டீர்களா? நான்கு பாடங்கள் ஞானம், யோகம், சேவை மற்றும் தாரணை இந்த நான்கிலுமே அப்படி தயாராகி விட்டீர்களா? முழுமையான எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம்

அனுபவம் ஆகிறதா? சோதனை செய்தீர்களா? இப்படி உங்கள் உள்ளத்தில் சதா எவரெடியாக இருக்கின்றேனா என்று சோதனை செய்கின்றீர்களா? மோகத்தை விடுத்து நினைவு சொரூபமாக வேண்டும். ஏனென்றால் பிரம்மாபாபாவும் தன்னை முயற்சி செய்து தான் அந்த நிலையை அனுபவம் செய்தார். அதனை அனுபவி குழந்தைகளும் பார்த்தீர்கள். இந்த மாதிரியான வாயுமண்டலம் எங்குமே கிடையாது. எந்த ஒரு கணக்கு வழக்கு மற்றும் அனைத்தையும் முடித்துக் கொண்டு திடீரென்று அசரீரி நிலையை பயிற்சி செய்து அசரீரியாக பறந்து சென்று விட்டார். சிலர் நினைக்கிறார்கள் பிரம்மாபாபாவுக்குத் தெரியும் என்று ஆனால் நஷ்டோ மோகா நிலை, குழந்தைகளின் கை மீது கை கொடுத்தபொழுதும் எங்காவது அவருக்கு ஈர்ப்பு இருந்ததா? பரிஸ்தா ஆகி விட்டார். குழந்தைகளுக்கும் பரிஸ்தா ஆவதற்கான திலகம் அணிவித்தார். இதற்கான காரணம் என்னவென்றால் நீண்ட காலமான அசரீரி நிலையின் பயிற்சிதான். கூடவே இருந்த அனுபவி குழந்தைகள் அதனை அனுபவம் செய்திருப்பீர்கள். கர்மம் செய்து கொண்டிருக்கும்பொழுதே அசரீரி ஆகி விட்டார். இங்கே கர்மயோகத்தில் காணப்படும் வித்தியாசத்திற்கு காரணம் என்னவென்றால் கர்மம் செய்யும் பொழுது நினைவு ஏற்படுவதில்லை. நான் ஆத்மா என்பதை எல்லோரும் தெரிந்துள்ளீர்கள், எப்படிப்பட்ட ஆத்மா நான்? நான் செய்விக்கும் ஆத்மா மற்றும் இந்த கர்ம இந்திரியங்கள் செய்கின்றன. இந்த செய்விப்பவன் என்ற சுய மரியாதை கர்மம் செய்யும் பொழுதும் நினைவு சொரூபமாக இருக்க வேண்டும். கர்ம இந்திரியங்கள் மூலமாக கர்மம் செய்யத்தான் வேண்டும் ஆனால் நான் செய்விப்பவன், நான் எஜமானன் இந்த ஒரு இருக்கையில் நிலைபெற்று இருந்தால் எந்த கர்மேந்திரியமும் உங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கும். நீங்கள் முதலில் இருக்கையில் நிலைத்து இல்லாமல் இருப்பதால் தான் யாரும் யாரையும் பொருட்படுத்துவதில்லை. எனவே நான் செய்விப்பவன் ஆத்மா, இந்த கர்மேந்திரியங்கள் செய்கின்றன. கர்மேந்திரியங்கள் செய்விப்பது கிடையாது. பிரம்மாபாபா அனுபவம் சொல்வதைப் போல, பிரம்மாபாபாவும் ஆரம்பத்தில் இந்த பயிற்சி செய்துள்ளார். தினசரி இரவு வேளையில் இந்த கர்மேந்திரியங்களை ராஜ தர்பாரில் ஒருங்கிணைத்து சோதனை செய்வதுண்டு பழைய குழந்தைகள் அந்த

கையேடை (டைரி) பார்த்திருப்பீர்கள். தினசரி ராஜ சபை அமைத்து தன்னை அங்கே எஜமானனாக. உணர்ந்து ஒவ்வொரு கர்மேந்திரியங்களிடமிருந்தும் செய்தியைக் கேட்பார். அவர்களும் கொடுத்தனர். அந்தளவிற்கு அவர் ஆரம்பத்திலிருந்தே கவனம் வைத்திருந்தார். அதுபோலவே நீங்களும் தன்னை செய்விப்பவன் எஜமானனாக புரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் ஆத்மா ராஜா, இந்த கர்மேந்திரியங்கள் உடன் துணையாக இருப்பவர்கள். எனவே இதனை சோதிக்க வேண்டும் இன்றைய முழு நாளிலும் விசேஷமாக மனம், புத்தி, சம்ஸ்காரம் இவற்றின் நிலை என்னவாக இருந்தது? சுபாவம் என்றாலும் சம்ஸ்காரம் என்றாலும் ஒன்றுதான். உடனுக்குடன் சோதனை செய்வதால் கர்மேந்திரியங்களுக்கு கவனம் இருக்கும், நமது ராஜா நம்மிடம் நிலவரத்தைக் கேட்பார் என்று எனவே ஆத்மா ராஜாவாக இருந்து கர்மேந்திரியங்கள் மூலமாக செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் சோதனை செய்யுங்கள். இல்லையென்றால் நடைமுறையில் பார்க்கும்பொழுது சில குழந்தைகள் சொல்கிறார்கள் நாங்கள் கர்மேந்திரியங்களுக்கு கட்டளைத் தருகிறோம் ஆனால் அது மறுபடியும் அப்படியே நடந்து விடுகிறது. முயற்சி செய்கிறீர்கள் ஆனால் சிலருடைய சம்ஸ்காரம் அல்லது சுபாவம் தன்னுடைய கட்டுப்பாட்டில் இருப்பதில்லை. அதற்குக் காரணம் இதுவே தான் தன்னுடைய சுயமரியாதையின் விஷயத்தில் நிலைத்திருக்கவில்லை. உங்களுடைய இருக்கையில் அமராமல் எவ்வளவு தான் நீங்கள் கட்டளைப் போட்டாலும் யாரும் உங்கள் பேச்சை கேட்க மாட்டார்கள். எனவே கர்மம் செய்யும்பொழுது தன்னுடைய செய்விப்பவன் என்ற ராஜ சிம்மாசனத்தில் நிலையாக நிலைத்திருக்க வேண்டும். சில குழந்தைகள் பாப்தாதாவுடன் இப்படியும் ஆன்மீக உரையாடல் செய்கிறார்கள். பாபா நீங்கள் எங்களை சர்வ சக்திவானாக ஆக்கி விட்டீர்கள். சக்திவான் மட்டுமல்ல சர்வ சக்திவான் என்ற வரதானமும் ஒவ்வொரு பிராமண குழந்தைகளுக்கும் பிறவியிலேயே கொடுத்து விட்டீர்கள். அது பிறவியின் வரதானம் என்று நினைவும் இருக்கிறது, ஒவ்வொரு குழந்தைக்கும் பாபா மாஸ்டர் சர்வ சக்திவான் பவ என்ற வரதானம் கொடுத்துள்ளார். வரதானம் கொடுத்தது யார்? ஆல் மைட்டி அதாரிட்டி அல்லவா! ஆனால் புகார் செய்கிறார்கள் எந்த சக்தி எந்த சமயத்தில் வேண்டுமோ அப்பொழுது அது வருவதில்லை. சொல்வதை கேட்பதில்லை அது ஏன்? ஆல் மைட்டி அதாரிட்டியின் வரதானம் அது

என்று இருக்கும்பொழுது அவரை விட பெரியவர் யாருமே இல்லையே! அப்படி வரதானத்தின் நிலையில் நிலைத்திருந்து நீங்கள் கட்டளைப் பிறப்பித்தால் நீங்கள் சொல்வதை அது செய்யாமல் இருக்கவே முடியாது. நீங்கள் கூப்பிடும் நேரத்தில் சக்திகள் வந்து விடும். ஆத்மா ராஜா மற்றொன்று சர்வ சக்திவான் தந்தையின் வரதானம் நான் ஆத்மா மாலிக் (எஜமான்) என்ற நினைவு சொரூபத்தில் இருங்கள். வரதானம் உள்ளது இது இரண்டு சொரூபத்தின் நினைவிலும் நிலைத்திருந்து கட்டளை போடுங்கள். அப்பொழுது சக்தியானது உங்கள் கட்டளையை மீறுவது என்பது இயலாத காரியம் ஆகும். ஏனென்றால் வரதானம் பாபாவினுடைய சொத்துக்கு அதிகாரி நீங்கள் சங்கமயுகத்தில் உங்கள் எல்லோருக்குமே சர்வ சக்திவான் என்ற பட்டமும் கிடைத்துள்ளது. இப்பொழுது கிடைத்த அந்த பட்டத்தின் நினைவில் மட்டும் நிலைத்து இருந்தால் போதும், எப்பொழுதுமே அப்படி இருப்பதில்லை. அவ்வப்போது வந்து விடுகிறது இந்த எப்பொழுதாவது என்ற வார்த்தையை பிராமண அகராதியிலிருந்து எடுத்து விடுங்கள். இப்பொழுதே ஆஜர் ஆக வேண்டும். நீங்கள் சொல்கிறீர்கள் அல்லவா! பாபா உங்களை நினைத்த உடன் நீங்கள் வந்து விட்டீர்கள் அனுபவம் உள்ளதா? கை உயர்த்துங்கள். அனுபவம் உள்ளதா? இப்போது பாருங்கள், கை உயர்த்திவிட்டீர்கள், கூப்பிட்ட உடன் பாபா வந்து விடுகிறார். இறைவனே கூப்பிட்ட உடன் வந்து விடும்பொழுது இந்த சக்தி எம்மாத்திரம்? இந்த சக்திகளும் உங்களுக்கு பாபாவிடமிருந்து கிடைத்த சொத்துக்கள் ஆகும். எனவே நீங்கள் எஜமானனாக இருந்து கட்டளை இடுங்கள். நீங்கள் எஜமானனாக இருந்து கட்டளை இடுவதில்லை, சக்தி இழந்து விடுகிறது. எனவே நிலையில் நிலைத்திருந்து கட்டளை பிறப்பிக்க வேண்டும். நீங்கள் எஜமானனாகவே இல்லாதபொழுது அது எப்படி உங்கள் சொல்லைக் கேட்கும்.

இப்பொழுது பாப்தாதா என்ன விரும்புகின்றார் தெரியுமா? பாபா இதைத்தான் விரும்புகின்றார் என்னுடைய ஒவ்வொரு குழந்தைகளும் செயல் செய்யும் பொழுதும் ராஜா குழந்தையாக இருந்து சுய ராஜ்ய அதிகாரி ஆகி செயல்பட வேண்டும். சுய ராஜ்யத்தின் சீட்டை ஒருபொழுதும் விட்டு விடக்கூடாது. அப்படியென்றால் ராஜா முழு நாளும் ராஜா தானே. சில சமயம் ராஜா சில சமயம் ராஜா இல்லை

என்றிருப்பாரா. நீங்கள் அரியாசனத்தில் அமருகிறீர்களோ இல்லையோ ஆனால் வீட்டிலிருந்தாலும் நான் ராஜா என்பதை மறந்து போகக் கூடாது. கர்மயோகி மற்றும் அமிர்தவேளையில் எதார்த்தமான யோகம் சக்திசாலி நிலையில் நிலைத்திருப்பது போலவே இருக்க வேண்டும். வேறுபாடு இருக்கக் கூடாது. இரண்டு வேளைதான் ஆனால் நீங்கள் யார்? நீங்களோ உலகத்தையே மாற்றுபவர்கள், உலகிற்கு நன்மை செய்பவர்கள். எனவே பாபா இதைத்தான் எதிர்பார்க்கின்றார். போகப்போக தன்னுடைய ராஜ நிலையை மறந்து போகாதீர்கள். ஒருபொழுதும் இருக்கையை விட்டுவிடாதீர்கள். நீங்கள் ஆசனத்தில் அமரவில்லையென்றால் உங்கள் சொல்லை யாருமே மதிக்க மாட்டார்கள். இன்றைய உலகில் பாருங்கள் சீட்டிற்குப் பின்னால் என்னென்ன நடக்கிறது. தன்னுடைய உரிமையை பெறுவதற்காக எவ்வளவு எல்லாம் முயற்சி செய்கிறார்கள். தன்னுடைய உரிமையை யாருமே விட்டுத் தர விரும்புவதில்லை. அப்படி இருக்கும்பொழுது நீங்கள் தன்னுடைய பரமாத்மாவின் உரிமையில் நீங்கள் யார்! நீங்கள் ஒவ்வொரு சமயமும் வேலைகள் பல செய்தாலும் தன் மனதிற்கு அட்டவனையைப் போட்டு வையுங்கள். இந்த வேலை செய்யும்பொழுது என் மனம் எந்த சுய மரியாதையில் இருக்க வேண்டும். இன்று நான் எந்த லட்சியத்தில் இருப்பேன்? ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு சுய மரியாதையின் பட்டியலைப் போட்டு வைத்துக் கொள்ளுங்கள். வித விதமான அட்டவணையாகவும் இருக்கலாம். எப்படி ஸ்தூலமான செயல் செய்வதற்காக அட்டவணைக் குறித்து வைப்பதுப் போல மனதிற்காகவும் அட்டவணையை குறிக்க வேண்டும். இந்த சமயத்தில் இந்த வேலை செய்யும்பொழுது அதே சமயத்தில் மனதிற்கான சுய மரியாதை என்ன இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். எஜமான் என்ற அதிகாரம் எந்த சுய மரியாதையின் வடிவத்தில் இருக்க வேண்டும். இப்படியாக மனதிற்கான அட்டவணையைக் குறிக்க வேண்டும். அட்டவணைக் குறிப்பு எழுதத் தெரியுமா? மாதர்களுக்குத் தெரியுமா? மாதர்கள் தனக்குத் தானாகவே நிகழ்ச்சிகளை அமைத்துக் கொள்ளுங்கள். நன்றாக சமைக்க வேண்டும் என்றால் அந்த சமயத்தில் எந்த சுய மரியாதையை தன் புத்தியில் கொண்டு வர வேண்டும். சுய மரியாதைகளின் மாலை மிகப் பெரியது. அது மிகப் பெரிய மாலை. சுயமரியாதை எண்ணிக் கொண்டே செல்லுங்கள். அது மாலையின் மணியாக சேர்ந்து கொண்டே இருக்கும். வெகுகாலமாக இருக்கின்ற

குழந்தைகளில் கூட சில குழந்தைகள் சொல்கிறார்கள் விநாசத்திற்கான அறிகுறி எதுவும் தெரியவில்லையே என்று! இன்னும் அதற்கான தேதி நிச்சயிக்கப்படவில்லை, பார்த்துக் கொள்ளலாம், செய்துவிடுவோம் -இப்படி நினைப்பதெல்லாம் கவனக்குறைவே ஆகும். செய்தி தருவதில் கூட விஷ்வ கல்யாணகாரி நீங்கள் சில குழந்தைகள் நினைக்கின்றார்கள் இன்னும் நேரம் இருக்கிறது. செய்தி மெல்லமாக கொடுக்கலாம் ஆனால் இப்படி நினைக்கக் கூடாது. ஏனென்றால் செய்தியை நீங்கள் வெகு காலம் கழித்து கடைசியாக கொடுப்பீர்களேயானால் அப்பொழுது புகார் சொல்வார்கள் நீங்கள் ஏன் முன்பே சொல்லவில்லை? அப்படி சொல்லியிருந்தால் நாங்களும் ஏதாவது செய்திருப்போமே, இப்போது வந்து சொல்கிறீர்களே நாங்கள் இப்பொழுது தந்தையின் அறிமுகம் மட்டும் தெரிந்து கொண்டு பிரபு உங்கள் லீலையே அளவு கடந்தது என்று தான் சொல்ல முடியும். பதவி அடைய முடியாது ஏன்? நீண்ட காலத்திற்கான சகயோகமும் தேவை. நீங்கள் அனைவரும் வாரிசு அமர்ந்துள்ளீர்கள் அல்லவா! யார் தன்னை வாரிசு என்று புரிந்துள்ளீர்களோ கை உயர்த்துங்கள், வாரிசா? நல்லது. வாரிசு என்றால் நீங்கள் முழு ஆஸ்தி பெற வேண்டுமா குறைவாக பெற வேண்டுமா? அனைவரும் சொல்வீர்கள் முழு ஆஸ்தி பெற வேண்டுமென்று அப்படியென்றால் 21-பிறவிக்கு முழுமையாக ஆதி முதல் இறுதி வரை ராயல் பிரஜையாக அல்ல, ராயல் குடும்பத்தில் வர வேண்டும். ராஜ குடும்பத்திலும் வர வேண்டும். அரியணையில் ஒருவர் தான் அமர முடியும் அல்லவா! அவருடன் யுகலும் (தம்பதியராக) அமருவீர்கள் ஆனால் அங்கே சபை கூடும் பொழுது ராயல் குடும்பத்தினரைச் சார்ந்த விசேஷமான நிமித்த ஆத்மாக்கள் கிரீடம் அணிந்து அமருவார்கள். கிரீடம் அணியாமல் யாருமே அமர மாட்டார்கள். ஒவ்வொரு செயலிலும் தன்னுடைய கருத்துக்களையும் பரிமாறுபவர்கள் அதாவது ராஜ்யம் செய்பவர் மட்டுமல்ல. உடனிருந்து ஒத்துழைப்பாக இருப்பவரும் ஆவார். எனவே முழுமையான ஆஸ்தி பெற வேண்டும் என்றால் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை 21-பிறவிக்கும் அதில் பாதி கிடையாது. இடையில் விட்டு விட்டு சென்று விடக் கூடாது. அங்கே. அகால மரணமே கிடையாது. எனவே நீங்கள் முழு ஆஸ்தி பெறுவீர்களா அல்லது சிறிது கிடைத்தவுடனேயே மகிழ்ச்சி அடைவீர்களா! உங்களுடைய மாதேஸ்வரி ஜெகதம்பா இதையே லட்சியமாக கொண்டிருந்தார். பாபா கொடுக்கின்ற ஒவ்வொரு

ஸ்ரீமத்தையும் அது மனதிற்காகவோ, சொல்லிற்காகவோ அல்லது செயலிற்காகவோ எதுவாக இருந்தாலும் நாம் அதை செய்தே தீர வேண்டும். அது போலவே முழு ஆஸ்தி பெற விரும்புகிறவர்களும் இதையே புத்தியில் லட்சியமாக கொள்ளுங்கள். (எவரெடி, அச்சானக்) திடீரென, சதா தயாராக இருங்கள் மேலும் நீண்ட காலத்திற்கு இம்மூன்று சொல்லையும் நினைவில் வைக்க வேண்டும். எனவே பாப்தாதாவின் அனைத்து ஆசை தீபங்களாக விளங்கும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும். பாபா இதையே வரதானமாக வழங்குகின்றார். இம்மூன்று சொல்லையும் நினைவில் வைத்து அனைவரும் ஆசை தீபங்களாக பிரத்யக்ஷமாக செய்து காண்பியுங்கள்.

பாப்தாதா பார்க்கின்றார் குழந்தைகள் வித விதமான முறைகளில் கோர்ஸ் அமைத்திருக்கிறார்கள் நன்றாக இருக்கிறது. பாப்தாதா வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார் ஆனால் இப்பொழுது சமயத்திற்கு ஏற்ப கோர்ஸ்க்கு பதிலாக ஃபோர்ஸ் உடன் (விரைவேகமாக) செயல்படக்கூடிய கோர்ஸ்ஸை அமைக்க வேண்டும். அப்படிப்பட்ட தீவிர வேகத்தில் செயல்படுகின்ற அளவிற்கு கோர்ஸ் உருவாக்கினால் அதனால் ஆத்மாக்கள் தந்தைக்கு ஸ்நேகி சகயோகியாக மட்டுமல்லாமல் ஒவ்வொரு ஸ்ரீமத்தையும் கடைப்பிடித்து சக்தியை நிறைத்துக் கொள்ளும் ஆத்மாவாக மாறுவார்கள். தந்தைக்கு அருகே வருகின்ற ரத்தினம் ஆவார்கள். இது செய்ய முடியுமா இப்பொழுது சக்தி வாய்ந்த பாடமுறை (கோர்ஸ்ஸை) உருவாக்குங்கள். ஏனென்றால் பாப்தாதா பார்த்துக் கொண்டுள்ளார் இப்போது இயற்கை ஆரவாரம் அடைகின்றது. எனவே ஏதேனும் ஒரு காரணத்தால் இயற்கை ஆட்டம் கண்டு தன்னுடைய இயலாமையை வெளிக்கு காண்பிக்கும், காண்பித்துக் கொண்டே இருக்கும். நீங்கள் கனவில் கூட நினைக்காதது நடை முறையில் பார்ப்பீர்கள் எனவே இயற்கையையும் சதோபிரதானம் ஆக்க வேண்டும். இப்பொழுது அதன் அதனுடைய பிரபாவத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. எனவே சமயத்திற்கேற்ப புது புது விஷயங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. நீங்கள் அனைவரும் வாரிசு அல்லவா. சிநேகி - சகயோகி மட்டுமல்ல வாரிசு குழந்தைகள் நீங்கள். முழு அதிகாரிகள், அப்படிதானே? வாரிசு அல்லவா வாரிசு தானே! இரட்டை அயல் நாட்டவரும் வாரிசு தானே! வாரிசா முழு அதிகாரம்

பெற்றவர்கள் தானே. அரை குறை இல்லையே! பாண்டவர்கள் முழு அதிகாரம், முழு ஆஸ்தி பெறுபவர்கள் தானே?

பாப்தாதாவின் ஆசை தீபம் நான் இதை நினைவில் வையுங்கள். இந்த நினைவு நாளில் ஒவ்வொரு குழந்தைகளும் இங்கே வந்திருந்தாலும் சரி வெளியில் அவரவர் இடங்களில் அமர்ந்திருந்தாலும் சரி, நீங்கள் எங்கேயிருந்தாலும் தந்தையின் உள்ளத்தில் இடம் பெற்றவர்கள். ஒவ்வொரு குழந்தையும் பாப்தாதாவின் கட்டளையை ஏற்றுக் கொள்ள வேண்டும் அப்படியே மாற வேண்டும். எப்பொழுது என்ற வார்த்தை சொல்லக் கூடாது இப்பொழுதே, நாளை என்பதை யார் பார்த்தது இன்றே எதை செய்ய வேண்டுமோ அதை செய்தே ஆக வேண்டும். சிந்திக்கக் கூடாது. சிந்திப்போம்! செய்வோம்! நடந்து விடும்! இப்படி பாபாவுக்குக் கூட குழந்தைகள் ஆறுதல் சொல்கிறார்கள். பாபா நீங்கள் கவலைப்படாதீர்கள் நாங்கள் தக்க சமயத்தில் சரியாகி விடுவோம் ஆனால் பாப்தாதா இதைத்தான் விரும்புகின்றார் இப்பொழுது கூட ஏதாவது சோதனை வந்தால் ஒவ்வொரு குழந்தையும் முழுமையாக வெற்றி அடைய வேண்டும் முடியுமா? முழு வெற்றி அடைவீர்களா? நல்லது. இன்று முதல் முறையாக வந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். முதல் முறையாக வந்திருப்பவர்களுக்கு பாப்தாதா மிக மிக அன்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார். மேலும் வரதானங்களும் வழங்குகின்றார். தீவிர முயற்சி செய்தால் நீங்கள் விரும்பினால் முதல் நம்பரில் கூட வந்து விடலாம். நடைமுறையில் நீங்கள் செய்ய விரும்பினால் செய்து நீங்கள் அடைந்து விடலாம். இது பாப்தாதாவின் வரதானம். இதற்காக முதல் முறையாக வந்திருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதா ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை சொல்லிக் கொள்கிறார். கடைசியாக வந்திருந்தாலும் வேகமாக செயல்பட்டு முதல் எண்ணை அடைந்து விடுங்கள். இந்த தில் குஷ் மிட்டாய் சாப்பிடுங்கள். பாப்தாதாவிற்கு ஒரு வகையில் மகிழ்ச்சி எப்படியோ நீங்கள் டூலேட் பலகை போடுவதற்கு முன்னால் வந்து விட்டீர்கள். இது மிகவும் மகிழ்ச்சி தரும் விஷயம் ஆகும். அப்படி வந்த நீங்கள் முன்னேறிச் சென்று விட்டால் நாங்கள் அனைவருமே மகிழ்ச்சி அடைவோம். ஒருபொழுதும் இப்படி சொல்லமாட்டோம் நாங்கள் இருக்கும்பொழுது நீங்கள் எப்படி முன்னால் வரலாம் என்று முதலில் நீங்கள் நல்லது. அமருங்கள் தில் குஷ் மிட்டாய் சாப்பிடுங்கள்.

சேவைக்கான முறை இந்தூர் மண்டலம்: இந்தூரின் அர்த்தமே கோட்டிற்கு உள்ளே இருப்பதாகும். பாப்தாதாவிற்கு ஒவ்வொரு மண்டலத்தின் சேவைக்காண உற்சாகத்தைப் பார்த்து மகிழ்ச்சி ஏற்படுகிறது. எல்லோரும் சேவைக்கான வாய்ப்பையும் நல்ல முறையில் எடுத்துக் கொள்கிறார்கள். ஏனென்றால் சேவைக்கான பலனும் கிடைக்கிறது என்பதைத் தெரிந்துள்ளார்கள். என்ன பலன் கிடைக்கிறது? அனைவருடைய ஆசீர்வாதம் கிடைக்கிறது. மக்கள் நினைக்கிறார்கள் ஒரு பிராமணனுக்கு உணவு வழங்கினால் புண்ணியம் சேரும் என்று ஆனால் நீங்கள் எத்தனை பிராமணர்களுக்கு உணவு வழங்குகிறீர்கள், எவ்வளவு புண்ணியம் சேருகின்றது. எல்லோரும் உண்மையான பிராமணர்கள். நீங்கள் அனைவரும் சேவைக்கான பலனை சாப்பிட்டீர்களா? சாப்பிட்டீர்களா? எனவே ஆரோக்கியமாக இருக்கின்றீர்களா? பலனை உட்கொள்வதால் ஆரோக்கியம் கிடைத்து விடுகின்றது நல்லதுதானே. ஒவ்வொரு மண்டலத்திலும் நாளுக்கு நாள் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது ஆனால் பாப்தாதா முன்பு கூட சொல்லி யிருக்கிறார். எண்ணிக்கை அதிகரிப்பது இது நல்லது தான். செய்தி கிடைத்தது. தந்தையின் செய்தி கிடைத்த உடன் தந்தைக்கு குழந்தை ஆகி விட்டார்கள். அதற்காக வாழ்த்துக்கள் ஆனால் இப்பொழுது சமயத்திற்கு ஏற்ப பாபா முன்பு சொன்னது போல வரிசை உருவாக்குங்கள். இந்தூர் பக்கா (உறுதியான) வாரிசு குழந்தைகள் தானே. ஏனென்றால் பாப்தாதா அந்த ஊரிசு குழந்தைகளுக்கான சோதனை செய்வார். முதலில் பெயர் பட்டியலை அனுப்புங்கள். பாப்தாதா பார்ப்பார் அந்தப் பெயர் பட்டியலில் உள்ள வாரிசு குழந்தைகள் எந்தளவிற்கு வாரிசு குழந்தைகளுக்கான தன்னுடைய செயல்களை காப்பாற்றி வருகிறார்கள் என்பதை பாபா பார்ப்பார். மேலும் பாப்தாதா சொல்லியிருக்கிறார். மிக பிரசித்தமான அனுபவி குழந்தை களின் அனுபவத்தை கேட்டு பிறருக்கும் ஊக்கம் உற்சாகம் வரவேண்டும். நானும் இப்படி மாற வேண்டுமென்று. அதற்குரிய மைக் தரமான குழந்தைகளை தயார் செய்ய வேண்டும். அப்படி செய்வீர்களா, வேலை செய்தீர்களா? இந்தூர் செய்தீர்களா? இப்போது பாப்தாதாவிடம் பெயர் பட்டியல் வரவில்லை. நல்லது.

(சதீஷ்கரில் அரசாங்கம் முழுவதும் இங்கே வந்துள்ளது, அவர்கள் இப்பொழுது மைக்காக மாறி நன்றாக சேவை செய்து கொண்டிருக்கிறார்கள்) நல்லது. இவர்கள் அனைவரும் இந்தூர் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. நல்லது. பாப்தாதாவிற்கு இந்தூர் மீது ஒரு விசேஷமான நம்பிக்கை உள்ளது ஏனென்றால் இது பிரம்மாபாபாவின் இறுதி காலத்தில் பாப்தாதாவே இந்தூர் சென்டரை திறக்கச் செய்தார், எனவே இன்று நினைவு நாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். இந்தூரில் யாருமே செய்யாத ஒரு விஷயத்தை செய்து காட்ட வேண்டும். அது எல்லோருக்கும் பிடித்தமானதாகவும் இருக்க வேண்டும். அனைத்து மண்டலங்களும் முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதாவிடம் அனைவரைப் பற்றியும் செய்தி வந்துக் கொண்டிருக்கிறது ஆனால் பாப்தாதா இப்பொழுது மிக வேகமாக சென்று முன்னேறுவதற்கான விருப்பம் வைத்துள்ளார். மேலும் ஒவ்வொரு மண்டலமும் நிர்விக்னமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள அனைத்து சேவை நிலையங்களும் உப சேவை நிலையங்களும் ஒவ்வொரு ஏரியாவும் தடைகளற்ற சேவை நிலையங்களாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரிடமும் தீவிர முயற்சிக்கான ஆர்வம் இருக்க வேண்டும். இந்த நம்பரை இந்தூர் எடுத்துக் கொள்ளுமா! இதில் நம்பர்-1 என்ற இடத்திற்கான ரிப்போர்ட் எந்த ஜோனிலிருந்தும் வரவில்லை. அப்படியென்றால் எல்லா மண்டலங்களும் நிர்விக்னமாக உள்ளதா முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள், ஆனால் மண்டலத்தில் உள்ள எல்லோரும் அனைத்து கீதா பாடசாலைகளும் தடைகளற்றவராக இருக்க வேண்டும். இந்த ரிப்போர்ட் தான் பாபா விரும்புகிறார். நல்லது.

<u>மெடிக்கல் துறை</u>: இந்த துறையில் மருத்துவர்கள் எத்தனைப் பேர் வந்துள்ளீர்கள். மருத்துவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. இத்தனை மருத்துவர்களா, ஏனென்றால் பாப்தாதா பார்க்கின்றார். மருத்துவர்களின் சேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது ஏனென்றால் இப்பொழுதெல்லாம் எல்லோரிடத்திலும் கவலையும், பயமும் குடிகொண்டுள்ளது. இங்குள்ள மருத்துவர்கள் நீங்கள் கண்டிப்பாக இரட்டை மருத்துவர்களாகத்தான் இருப்பீர்கள். அப்படி இரட்டை மருத்துவர்களாக இருப்பவர்கள் கை உயர்த்துங்கள். மருத்துவம் உடலுக்கும், மனதுக்கும் செய்பவர்கள், ஏனென்றால்

இப்பொழுதெல்லாம் மனதிற்கான வியாதி அதிகரித்துக் கொண்டே உள்ளது. எனவே இரட்டை மருத்துவர்களின் சேவை அதிகரித்துக் கொண்டே இருக்கும். இயற்கையின் ஆர்பாட்டத்தால் புது புது வியாதிகள் உருவாகிக் கொண்டே இருக்கிறது இப்படிப்பட்ட நேரத்தில் இரட்டை மருத்துவர்களின் சேவை மிக அவசியம். நீங்கள் எல்லோரும் எவரெடிதானே எங்கேயிருந்து அழைப்பு வந்தாலும் சேவைக்காக நீங்கள் தயாராக இருக்கின்றீர்களா அப்படி தயாராக இருப்பவர்கள் தன்னுடைய நேரத்தை தருபவர்கள் கை உயர்த்துங்கள். மிக நல்லது.

உங்கள் பெயரை குறித்துக் கொடுங்கள் ஏனென்றால் அழைப்பு வந்த உடன் நீங்கள் நேரத்தை ஒதுக்க வேண்டும். ஒதுக்குவீர்களா? யார் நேரத்தை கொடுக்க தயாராக இருக்கிறீர் களோ கை உயர்த்துங்கள் நல்லது. சகோதரிகள் குறைவாக இருக்கின்றனர். சேவை நிலையங்களை பார்த்துக் கொள்ள வேண்டும். மற்றவர்களின் பெயரை குறித்துக் கொடுங்கள். பாப்தாதா மருத்துவர்களைப் பற்றி மகிமை செய்கிறார் ஏன் மகிமை செய்கிறார்? ஏனென்றால் மருத்துவர் களும் பாப்தாதாவிற்கு நிகராக துக்கத்தை பெற்றுக் கொண்டு சுகத்தைத் தருகிறார்கள் ஆனால் அல்ப காலத்திற்கு மட்டுமே தருகிறார்கள். பாப்தாதாவோ சதா காலத்திற்காக தருகிறார். எனவே இரட்டை மருத்துவராக இருந்தால் மேலும் நேரம் ஒதுக்கி சேவைக்கு பயன்படும்பொழுது அப்படிப்பட்ட இரட்டை மருத்துவர்களுக்கு மதிப்பு மேலும் மேலும் அதிகரிக்கும். பாப்தாதா கேள்விப்பட்டார் மருத்துவர்களுக்கு நேரமே இருப்பதில்லை. உண்மையில் மருத்துவர்கள் ஒவ்வொருவருமே பிஸியாகத்தான் இருக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் தான் அதிகமான மிகப் பெரிய சேவையும் செய்ய முடியும். முன்பு கூட பாபா சொல்லி இருக்கிறார் ஒவ்வொரு மருத்துவரும் தன்னுடைய அடையாள அச்சிடும்பொழுது அதற்கு பின்னால் காலி இடத்தில் சேவைக்கான வார்த்தைகளை அச்சிடலாம். அட்டைகளை நீங்கள் அடையாள அட்டையை வைத்திருக்கிறீர்கள் அல்லவா? நீங்கள் யாரை சந்திப்பீர்களோ அவர்களுக்கெல்லாம் அடையாள அட்டையை தருகிறீர்கள் அறிமுகத்திற்காக. அதே போல் தந்தையின் அறிமுகத்திற்காகவும் அந்த அட்டையை பயன்படுத்திக் கொள்ளுங்கள். பின்னால் இருக்கும் காலி இடத்தில் மனதிற்கான மருத்துவம் கிடைக்கும். இடத்தின் முகவரி அச்சடிக்கலாமே. தன்னை

நாடி வருகின்ற அத்தனை நோயாளிகளுக்கும் இந்த அடையாள அட்டையை வழங்கும்பொழுது நீங்கள் வீட்டிலிருந்தபடியே சேவை செய்பவர்கள் ஆவீர்கள். ஏனென்றால் மருத்துவர்கள் சொன்னால் எல்லோருமே கேட்பார்கள். பிறர் யார் சொன்னாலும் அதை பொருட்படுத்த மாட்டார்கள். இதை சாப்பிடாதீர்கள் என்றால் சாப்பிட்டுக் கொண்டே தான் இருப்பார்கள், ஆனால் மருத்துவர் சொன்னால் இதை சாப்பிட்டால் உடலுக்கு ஏற்றுக் கொள்ளாது. என்று சொன்னால் உடனே கேட்பார்கள். அதை விருப்பத்தோடு செய்கிறார்களோ அல்லது வலுக்கட்டாயமாக செய்கிறார்களோ, ஆனால் மருத்துவர் சொல்லி விட்டார் என்பதற்காக கண்டிப்பாக செய்வார்கள். எனவே பாப்தாதா சொல்கிறார்கள் மருத்துவர்கள் மிக அதிகமான சேவை செய்யலாம் நல்லது. இப்போதும் பார்க்கின்றேன் நிகழ்ச்சிகளை அதிகம் செய்து கொண்டுதான் இருக்கிறீர்கள், ஆனால் இது சற்று விரைவாகவும் செயல்பட வேண்டும். உங்களுடைய மண்டலங்களில் உள்ள விதவிதமான மருத்துவர்களை ஒன்று சேர்த்து நிகழ்ச்சிகளை ஏற்படுத்தலாம். அப்படி எல்லா மருத்துவர்களும் ஒன்றிணைந்து நிகழ்ச்சி நடத்தும் பொழுது அது மிகப் பெரிய சேவையாக மாறிவிடும். பாப்தாதாவிற்கு மருத்துவருக்கான சேவை மிக அவசியமாகின்றது. ஏனென்றால் இந்த வியாதிகள் மேலும் மேலும் அதிகரிக்கத்தான் போகிறது. மனோ வியாதிகள் எல்லா பக்கங்களிலும் பரவியுள்ளது. மருத்துவர்கள் ஆகிய உங்களுடைய தொழிலை வைத்தே மக்கள் பயந்துக் கொண்டு உங்கள் சொல்லை ஏற்றுக் கொள்கிறார்கள். நல்லது. பாப்தாதாவிற்கு அனைத்து துறையினரும் செய்கின்ற சேவையை பார்த்து மற்றும் அச்சேவையின் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

இரட்டை அயல்நாட்டவர் (**40** நாடுகளிலிருந்து வந்துள்ளனர்): இன்று நீங்கள் அனைவரும் விசேஷமான நாளை கொண்டாட வந்துள்ளீர்கள். பாப்தாதா விற்கும் மகிழ்ச்சி தான் ஏனென்றால் இந்த நாளைக் குறித்து அனைவருமே ஊக்கம் உற்சாகத்தோடு மதுபனிற்கு வந்துள்ளீர்கள். குறிப்பாக இந்த நாளைக் கொண்டாடுவதற்காக வந்துள்ளவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. யாருடைய நாள் இது கை உயர்த்துங்கள். இரண்டு கை உயர்த்துங்கள், மிக்க நல்லது. அழைப்பிதழ் தருவதற்காகவும் அபுவை யாத்திரை செய்வதற்கும் இது ஒரு நல்ல

வாய்ப்பாக உள்ளது. ஏனென்றால் பாப்தாதாவும் சிந்து வில் தன்னுடைய அவதாரம் செய்துள்ளார். அஸ்திவாரம் சிந்து தானே! எனவே சிந்தி மக்களும் தன்னுடைய உரிமையை கொண்டாடுகிறார்கள். தாங்கள் சிந்தி என்று. அனைவரும் யாத்திரை செய்வதற்கு இது ஒரு நல்ல விதியாக அமைந்துள்ளது. எனவே பாப்தாதா அனைவருக்கும் விசேஷமான வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். நல்லது. இது நமது வீடு நன்றாக இருக்கிறது அல்லவா? ஏனென்றால் இங்கு பார்த்தால் மதுபனில் யார் பெயரும் கிடையாது. ஏனென்றால் இது பாபாவுடைய வீடு எனவே நீங்கள் அனைவரும் பாபாவின் வீட்டிற்கு வந்துள்ளீர்கள். நீங்கள் அனைவரும் எங்கே வந்துள்ளீர்கள். நமது வீட்டிற்கு.

இமாச்சல பிரதேசத்தின் முக்கிய மந்திரி எதிரே அமர்ந்துள்ளார். இவரும் இங்கே வந்துள்ளார். நீங்கள் எங்கே வந்துள்ளீர்கள் தன்னுடைய வீட்டிற்கு வந்துள்ளீர்கள் தன்னுடைய குடும்பத்திற்கு வந்துள்ளீர்கள். பாப்தாதாவும் இதையே சொல்கிறார். அரசியலும் ஆன்மீகமும் ஒன்றிணைந்து விட்டால் நமது காந்திஜியின் அவர்களின் எண்ணத்தை பூர்த்தி செய்து விடலாம். சகஜமாக அதை நிறைவேற்றி விடலாம் செய்து கொண்டுதான் இருக்கின்றீர்கள். பாப்தாதாவுக்கும் மகிழ்ச்சி ஏதேனும் ஒரு சங்கத்துடன் சேர்ந்து தலைவர்களின் பெயர்களும் பிரபல்யம் அடைந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த அரசியல், ஆன்மீகம், அறிவியல் மூன்றும் ஒன்றிணைந்து ஒரே சங்கல்பம் செய்யுங்கள், சகயோகி ஆகுங்கள் அப்பொழுது பாபு காந்திஜி அவர்கள் மற்றும் தந்தைக்கு எல்லாம் தந்தை பரமாத்மா அவர்களின் ஆசையையும் பூர்த்தி செய்துவிடுவீர்கள். மிகவும் சுலபமாக நிறைவேறும் நல்லது.

**இரட்டை அயல்நாட்டவர்:** அயல்நாட்டிலும் விதவிதமான சேவை நடந்துக் கொண்டிருக்கிறது. மேலும் நடக்கும். பாப்தாதாவும் பார்க்கின்றார். புது புது திட்டங்கள் வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதையே நடைமுறையில் செய்து கொண்டிருக்கிறார்கள். அயல் நாட்டவர்கள் இந்தியர்களுக்கு தன்னுடைய அனுபவத்தை சொல்லி சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தியர்கள் அயல்நாட்டவருக்குத் தன்னுடைய அனுபவத்தை சொல்லி இப்படி அகிலம் முழுவதும் சேவைக்கான செய்திகள் பரவிச் சென்றுக்

கொண்டே இருக்கிறது இப்பொழுதும் பரவலான முறையில் நிகழ்ச்சி நடந்துக் கொண்டிருக்கிறது. செய்து கொண்டிருக்கிறீர்கள் நல்லது இப்போது இரண்டாவது இடத்தில் நடைபெறுகிறது. (இப்பொழுது சர்வ் இந்தியா -Serve India நிகழ்ச்சி சென்னையில் நடைபெற உள்ளது) பாப்தாதாவிடம் அனைவருடைய ஊக்கம் உற்சாகம் நிறைந்த கடிதங்கள் அன்பு நினைவுகள் எல்லாம் முன்னதாகவே கிடைத்துக் கொண்டிருக்கிறது. யாரெல்லாம் செய்கிறார்களோ ஆரம்பிக்கிறவர்கள் ஆரம்பிக்கும்பொழுது முதலில் சிறியதாக உள்ளது. பிறகு வளர்ச்சி அடைந்து கொண்டே உள்ளது. ஏனென்றால் இப்பொழுதெல்லாம் சமயத்திற்கேற்ப அனைவருக்குமே தேவைப்படுகிறது மூன்று சக்திகள்: அரசியல், ஆன்மீகம், அறிவியல் மூன்று சக்திகள் உள்ளது. மூன்றும் ஒன்று சேர்ந்தால் நினைத்ததை நடத்திட முடியும் ஆனால் இது வரையில் நினைப்பதை நடத்த முடியவில்லை. அப்படியென்றால் எல்லோரும் நினைக்கிறார்கள் குறை யாரிடம் உள்ளது? மூவருமே செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். இருந்தாலும் நாம் விரும்புவது நடக்கவில்லையே ஏன்? அப்படி கேட்கும் பொழுது ஆனால் அதற்கு நேரத்தை ஒரு சாக்காக சொல்கிறார்கள். சமயம் இல்லை, என்ன செய்யக்கூடாது ஆனால் இப்படியே ஒவ்வொரு குழுவையும் தன்னுடைய குழுவாக மாற்றிக் கொண்டால் சகயோகி ஆகிக் கொண்டால் பாப்தாதாவின் வரதானம் ஆன பாரதம் சொர்க்கமாக ஆகியேத் தீரும். இரண்டு தந்தைகளின் ஆசைகளும் பூர்த்தி செய்வது சுலபம் ஆகி விடும். இது நடந்தே தீரும். அயல் நாட்டவரும் மனதால் சேவையில் சகயோகியாக இருக்கின்றார்கள். பாப்தாதாவும் பார்க்கின்றார்: அனைத்து தர்மங்களுமே விருத்தி அடைந்து கொண்டு தான் இருக்கின்றது. ஒரு தர்மத்தில் மட்டும் அல்ல. இந்துவில் மட்டுமல்ல, முஸ்லீம், கிறிஸ்தவ மதம், இப்படி எல்லோருமே மெல்ல மெல்லமாக ஆன்மீகத்தின் ஆர்வத்தை அடைந்து கொண்டே இருக்கிறார்கள். முன்பெல்லாம் பிரம்மா குமாரிகளின் பெயரைக் கேட்டவுடன் பயந்து கொண்டே இருந்தார்கள் விநாசம் விநாசம் என்று சொல்கிறார்களே? ஆனால் இப்போது சொல்கிறார்கள் சொல்லுங்கள் விநாசம் எப்போது வரும். எப்படி நடக்கும். என்ன செய்ய வேண்டும்? என்ன என்று கேட்கிறார்கள் எனவே விநாசம் நடக்கத்தான் போகிறது இது பக்கா உத்தரவாதம் உங்கள் எல்லோருக்குமே உத்திரவாதம் உள்ளது தானே. அயல் நாட்டவரோ உன் நாட்டவரோ யாராக

இருந்தாலும் உங்களுக்கு இதில் உத்தரவாதம் உள்ளது அல்லவா! உங்களுடைய சகயோகம் இருக்கவே இருக்கிறது. நடக்கத்தான் போகிறது. கை தட்டுங்கள். எல்வோருக்கும் உற்சாகம் உள்ளது. நல்லது. நிமித்தமான இருக்கின்ற ஆத்மாக்கள் பாண்டவர்கள் ஆனாலும் சக்திகள் ஆனாலும் எல்லோருக்கும் ஊக்கம் உற்ளகம் நிறைந்துள்ளது. இப்போது பாப்தாதா சொல்வதெல்லாம் ஒன்று தான். முயற்சியை தீவிரப்படுத்துங்கள் என்று இசாரா கொடுக்கிறார். முயற்சி மட்டுமல்ல. முயற்சி செய்யும் காலம் முடிந்து விட்டது. தீவிர முயற்சிக்கான காலம் இது, இன்னும் அவ்வப்போது என்று நின்றுக் கொண்டிருக்காதீர்கள். எப்பொழுதாவது என்று சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். இப்பொழுதே செய்ய வேண்டும். எனவே நடந்தே ஆகும். நல்லது.

கல்கத்தாவைச் சேர்ந்தவர்களுக்கு: இன்று மலரால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது பாப்தாதா பார்க்கின்றார் இவர்கள் மனம் உவந்து செயல்படுகிறார்கள். மனதார செயல்படுகிறார்கள். அலங்காரம் செய்வது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல. உங்களை விட நன்றாக செய்பவர்களும் இருக்கிறார்கள் ஆனால் உங்களுக்கு பாபாவிடம் அன்பு உள்ளது. பாபாவின் அறிமுகம் சற்று அதிகமாகவே உள்ளது. எனவே நீங்கள் செய்யும் அலங்காரத்தில் வேலை மட்டுமல்ல அதில் அன்பும் கலந்துள்ளது. எங்கே அன்பு இருக்குமே அங்கே அன்பு எனும் வாசனை அனைவருக்குமே பிரியமானது மேலும் ஒவ்வொரு வருடம் வருகிறீர்கள் தன்னுடைய கடமை என்று மட்டும் புரிந்து கொள்ளாமல் வேலை என்று புரிந்து கொண்டு செய்கிறார்கள். எனவே உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். எல்லோருக்கும் ஊக்கம் உற்சாகத்தை ஏற்படுத்துவதில் நிமித்தமாக இருக்கின்றீர்கள் மிக நன்றாக செய்கிறீர்கள். நினைவு நாள் வந்தால் கல்கத்தா நினைவு வருகிறது. அவர்களிடம் அந்த விசேஷத் தன்மை உள்ளது வாழ்த்துக்கள். நல்லது.

நாலா புறமுள்ள தீவிர முயற்சி செய்யும் குழந்தைகள் சதா ஊக்கம் உற்சாகத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கின்ற உண்மையான உள்ளத்தோடு செய்கின்ற குழந்தைகள் அவர்கள் நெற்றியில் மின்னுகின்ற வெற்றித் திலகத்தை பாபா பார்த்துக் கொண்டிருக்கிறார். எல்லோருக்குமே நம்பிக்கை உள்ளது. நாம் வெற்றியை அடைந்தே தீருவோம் என்ற அந்த குஷியும் உள்ளது. நீங்கள் வெற்றி

அடைந்தவர்கள் தான், வெற்றி அடைந்து கொண்டே இருப்பீர்கள். எனவே ஒவ்வொருவருடைய நெற்றியிலும் வெற்றித் திலகத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றார். எல்லோருக்கும் நீங்கள் ஸ்நேகியாகவும் உள்ளீர்கள். இன்று அமிர்தவேளை யிலிருந்து மிக அதிகமான அன்பெனும் மாலைகள் பாபாவிடம் வந்து சேர்ந்துக் கொண்டே இருக்கிறது. அதற்கு கைமாறாக பாப்தாதாவும் சதா வெற்றி அடைவதற்கான மாலையை அணிவித்துக் கொண்டிருக்கிறார். எனவே நாலாபுறமும் உள்ள குழந்தைகளும் இந்த நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஏனென்றால் அறிவியல் இந்த சாதனைகளை உங்களுக்காகவே அமைத்துள்ளது. நீங்கள் எங்கே இருந்தாலும் இதனை பார்க்க முடியும், கேட்க முடியும். அவற்றையெல்லாம் பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆங்காங்கே குழந்தைகள் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். எனவே எல்லோருக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் பாப்தாதா நினைவு நாளுக்கான அன்பு நினைவுகளை வழங்கிக் கொண்டிருக்கிறார். பாப்தாதாவின் உள்ளத்தில் ஒவ்வொரு குழந்தைகளும் கலந்துள்ளனர். அதுபோலவே ஒவ்வொரு குழந்தைகளின் உள்ளத்தில் பாப்தாதா கலந்துள்ளார். பாபாவின் உள்ளத்தில் குழந்தைகள் கலந்துள்ளனர். வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்களுடன் நமஸ்காரமும்,

தாதிகளுடன்: மிகச் செல்லமான குழந்தைகள் நடிப்பை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். இதனைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். (மோகினி சகோதரியுடன்) தைரியம் உள்ளவர் நீங்கள். தைரியமே உங்களுடைய விசேஷமான மருந்து.

தாதி ரத்தினமோகினி அவர்களுடன்: இவரும் நன்றாக இருக்கிறார், ஒவ்வொரு காரியத்திலும் சரி, சரி என்று இணைந்து செயல்படுகிறார். மேலும் செயல்பட்டுக் கொண்டே இருப்பார்.

சென்னையில் சர்வ் இந்தியா நடைபெற இருக்கின்றது; அனைவரும் பாபாவிற்கு நினைவுகளை அனுப்பி உள்ளார்கள் - இதில் முக்கியமான விஷயம் கவர்னர் மாளிகை கிடைத்துள்ளது. கவர்னரும் இந்த சேவையில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளார். இது சேவைக்குக் கிடைத்துள்ள பலன். எனவே பாப்தாதா அனைத்துக் குழந்தைகளுக்கும்

பீனாவுடன் நிமித்தமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அனைத்துக் குழந்தைகளுக்கும் லட்சம் மடங்கு பலப் பல மடங்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார். மேலும் சகோதரர் நிஜார் உற்சாகத்தோடு செயல்படுகிறார். மேலும் என்னென்ன செய்ய வேண்டும் என்று ஆர்வத்தோடு திட்டங்களை வகுத்துக் கொண்டு செயல்பட விரும்புகின்றார். அவருக்கும் விசேஷமாக நினைவுகளைத் தரவும். கவர்னர் சகயோகியாக இருக்கின்றார் ஆனால் ஒரு அடி முன்னால் வைக்க வேண்டு மென்றால் முதல் அடி எடுத்து வைக்க வேண்டி உள்ளது. அதன் பிறகுதான் மேலும் பல அடிகள் முன்னேற்றம் ஏற்படுகின்றது. அதுபோல இப்போது முதல் அடி எடுத்து வைக்கப்பட்டுள்ளது. அதாவது சிநேகி சகயோகியாக இருக்கின்றார் ஆனால் இப்பொழுது இந்த நிகழ்ச்சியில் பலனாக மற்ற அடிகள் முன்னேற்றம் அடைந்து உங்களுடன் துணையாக இருந்து செயல்படுவார். இப்போது சிநேகியாக சகயோகியாக இருக்கின்றார். சேவையின் மகிமையை புரிந்துள்ளார். இப்போது மகிமையை புரிந்து கொண்ட வரையில் இருக்கின்றார் இனி மேலும் மேலும் அடுத்த அடிகளை எடுத்து வைத்து முன்னேறி செல்வார்.

மதிப்பிற்குரிய முக்கிய மந்திரி பிரேம் குமார் துமல், இமாச்சல பிரதேசம் மிக நன்றாக செய்துள்ளீர்கள். நினைத்த எண்ணத்தை முழுமையாக செய்து விட்டீர்கள். தன் வீடாக புரிந்து கொள்கிறீர்கள் அல்லவா! ஏனென்றால் இது பாபாவின் வீடு. பாபாவின் வீடு தன்னுடைய வீடு ஆகும். எப்போது வேண்டுமாயினும், சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பினால் தன்னுடைய வீட்டிற்கு வந்து விடுங்கள். நீங்களும் சந்தோஷமாக இருப்பீர்களா. நீங்கள் எப்போதும் வந்துக் கொண்டே இருங்கள். இப்போது நீங்கள் இவரோடு வந்துள்ளீர்கள். அதுமட்டுமல்ல. நீங்கள் எப்போதும் வந்து கொண்டே இருங்கள்.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 30.01.2010 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## நான்கு பாடங்களிலும் கவமான் (சுய மரியாதை) நிலையின் அனுபவி சொரூபமாகி, அனுபவத்தின் அத்தாரிட்டியை (சக்தி) செயலில் ஈடுபடுத்துங்கள்!

இன்று பிராமண உலகின் படைப்பாளரான பாப்தாதா தனது நாலாபுறங்களிலுமுள்ள பிராமண உலகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு பிராமணரும் முழு உலகத்தில் விசேஷமான ஆத்மாக்கள் கோடியில் ஒருவர் தான், ஏனெனில் சாதாரண உடலில் வந்திருக்கிற பாபாவைப் புரிந்து கொண்டீர்கள். பாப்தாதாவின் உள்ளத்தில் இடம் பிடித்திருக்கின்ற குழந்தைகளுக்கு உளப்பூர்வமான அன்பு நினைவுகளைத் தந்து கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு குழந்தையும் தன்னை பாபாவினுடைய அன்பான உள்ளத்தில் இணைந்திருக்கும் அனுபவம் செய்கின்றனர். பாபாவிற்கு ஒவ்வொரு குழந்தையும் மிகவும் அன்பானவர்; மேலும் அனைவருக்குமே அன்பானவர். குழந்தைகளாகிய நீங்கள் அனைத்து ஆத்மாக்களுக்காகவும் ஒரு பெரிய சவாலை அதாவது, தாங்கள் யோகி வாழ்க்கை உடையோர் என்கின்ற சவாலை ஏற்றிருக்கிறீர்கள். வெறும் யோகம் செய்வோர் அல்ல! ஆனால் யோக வாழ்க்கையை உடையவர்கள். வாழ்க்கை என்பது நாள்கு மணி நேரம் உடையதாக இருக்காது. வாழ்க்கை என்பது நிரந்தரமானது. ஆக, போகும்பொழுதும், வரும்பொழுதும் கர்மங்களைச் செய்யும்பொழுதும் யோக வாழ்க்கை உடைய நிரந்தர யோகிகள். யோகத்தில் அமர்ந்திருந்தாலும் சரி ஏதேனும் கர்மங்களை செய்து கொண்டு இருந்தாலும் சரி, கர்ம யோகிகளே! வாழ்க்கையினுடைய லட்சியமே சதா யோகி. இப்படிப்பட்ட யோகி வாழ்க்கையை இயற்கையான வாழ்க்கையாக அனுபவம்

செய்கிறீர்களா பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் பிரகாசிக்கின்ற பாக்கியத்தைப் பார்க்கின்றனர். என்ன பார்க்கின்றனர்? என்னுடைய ஒவ்வொரு குழந்தையும் சுவமான்தாரி, சுயராஜ்ய அதிகாரி ஆவர். ஏன்? எங்கு சுவமான் இருக்கிறதோ அங்கு தேக உணர்வு வர முடியாது. முதலிலிருந்து இறுதி வரை, இப்பொழுது வரை கூட பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் விதவிதமான சுவமான்களைக் கொடுத்து வருகிறார். இப்பொழுது கூட அந்த சுவமான்களை நினைவு செய்யுங்கள். மேலும் ஒவ்வொரு சுவமானத்தின் மாலையை உருட்டிக் கொண்டிருந்தார். அநேக சுவமான்களின் சொரூபமாகி, சுவமானத்தில் அன்பிலே மூழ்கிப் போய் விடுவீர்கள் ஆனால் பாப்தாதாவிற்கு குழந்தைகளின் ஒரு விஷயம் இதுவரை நன்றாகவே படவில்லை. அது என்ன என்று அறிவீர்களா? எவரேனும் குழந்தை எனக்கு சுவமானத்தில் நிலைத்திருப்பதில் அவ்வப்போது மிகவும் கஷ்டப்பட வேண்டி உள்ளது என்று சொல்லும்போது. விரும்புகிறோம் ஆனால் சில சமயம் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டி இருக்கிறது. ஆக, பாபா சர்வ சக்திவானின் குழந்தைகளின் இவ்வாறான கஷ்டப்பட்டு முயல்கின்ற நிலையில் பார்க்க முடிவதில்லை. ஏனெனில் எங்கு அன்பு இருக்கிறதோ அங்கு கஷ்டப்பட்டு முயலும் நிலை ஏற்படுவதில்லை. எங்கு இவ்வாறான கடின உழைப்போ அங்கு அன்பில் குறைவு உள்ளது என்றே கூறமுடியும்.

இன்று அமிர்தவேளையில் பாப்தாதா நாலா புறங்களிலுமுள்ள பிராமணர்களிடம் அது பாரத தேசம் ஆனாலும் சரி, வெளிநாடு என்றாலும் சரி, சுற்றி வரும்பொழுது எதைப் பார்த்தார்? சில குழந்தைகள் சுவமானத்தில் அமர்ந்திருந்தனர். நான் பாப்தாதாவினுடைய உள்ளமெனும் சிம்மாசனத்தில் வீற்றிருப்பவன் என்று சிந்திக்கின்றனர். நினைக்கவும் செய்கின்றனர் அதற்கான முயற்சியையும் செய்து கொண்டிருக்கின்றனர் ஆனால் சில சமயம் எதைப் பார்த்தார்? சுவமான் நினைவு இருக்கிறது. எண்ணுகின்றனர் ஆனால் சுவமானத்தின் சொரூபமாகி அனுபவி மூரத் ஆகி, அனுபவத்தின் அத்தாரிட்டி ஆவதில் சில சமயம் தான் தென்படுகின்றன. ஏனெனில் அத்தாரிட்டி என்பது அதிகமாக உள்ளது. அத்தாரிட்டி என்பது அதிகமாக உள்ளது ஆனால் அனைத்திலும் மிகப் பெரிய அத்தாரிட்டி அனுபவத்தின் அத்தாரிட்டி ஆகும். மேலும் இந்த சுவமானத்தின்

அனுபவம் சர்வ சக்திவான் (ஆல் மைட்டி அத்தாரிட்டி) சர்வ சக்திவானே கொடுத்தது. ஆக முயற்சி செய்கின்றனர் ஆனால் அனுபவ சொரூபமாக ஆகவில்லை. பாப்தாதா பார்க்கின்றார்; அமர்கின்றனர், நினைக்கவும் செய்கின்றனர் ஆனால் அனுபவ சொரூபமாக எவரோ ஒரு சிலரே ஆகின்றனர். அனுபவத்தில் எந்த விதமான தேக அபிமானமும் சிறிது கூட தன் பக்கம் ஈர்க்க முடியாது. அனுபவ சொரூபமாகி விட வேண்டும். சேவைகளைச் செய்து கொண்டே கர்மயோகியின் அனுபவ சொரூபத்தில் மூழ்கிப் போய்விட வேண்டும். தற்போது இது மிக மிக அவசியம் ஆகும். சொரூபத்தில் நிலைத்து விட வேண்டும். ஒவ்வொரு விஷயத்திலும், ஒவ்வொரு பாடத்திலும் அனுபவி சொருடமாகி விட வேண்டும். அது ஞானமாகவோ, யோகமாகவோ, தாரணையாகவோ, அல்லது சேவையாகவோ இருக்கட்டும். நான்கு பாடங்களிலும் அனுபவ சொரூபமாகி விட வேண்டும். அனுபவிகளை மாயா கூட அசைக்க முடியாது. எனவே பாப்தாதா இன்று அனைத்துக் குழந்தைகளையும் அனுபவி சொரூபமாகப் பார்க்க விரும்புகின்றார். கேட்பதிலும், சிந்திப்பதிலும் வித்தியாசம் இருக்கின்றது ஆனால் அனுபவி சொரூபமாவது என்பது எதை சிந்தித்தோமோ, எந்த சுவமானத்தில் நிலைத்திருக்க விரும்பினோமோ அதன் அனுபவ சொரூபத்தில் ஸ்திரமாகி விட வேண்டும் அனுபவத்தை எதுவும் அசைத்து விட முடியாது. ஏனெனில் சுவமானம் மற்றும் தேக உணர்வு, எங்கு சுவமானத்தின் சொரூபமோ, சுவமான அனுபவத்தின் திடமான ஸ்திதி இருக்கின்றதோ அங்கு தேக அபிமானம் வர முடியாது. இருளில் சுவிட்சைப் போடும் பொழுது வெளிச்சத்தால் இருள் தானாகவே மறைந்து போய் விடுகிறது. இருளை அகற்றுவதில், இருளை விரட்டுவதில் மிகுந்த முயற்சி செய்யத் தேவையில்லை. அதுபோன்றே எப்பொழுது சுவமானமெனும் இருப்பிடத்தில் அனுபவத்தின் சுவிட்சை போடும்பொழுது எந்த வித தேக உணர்வோ, விதவிதமான தேக அபிமானங்கள் விலகி, பாபா தந்துள்ள சுவமானங்களும் வருகின்றன. சுவமானத்தை அறிகின்றனர், புருஷார்த்தமும் செய்கின்றனர் ஆனால் அனுபவத்தின் புருஷார்த்தம் செய்வது மற்றும் அனுபவித்தின் சொரூபமாவது இதில் வேறுபாடு உள்ளது. எனவே மிகுந்த முயற்சி செய்ய வேண்டி உள்ளது. ஆக, பாப்தாதாவிற்கு தற்போதைய நேரத்தின் அனுசாரம் பாபாவிற்குச் சமமாக ஆவதின் லட்சியத்தை முழுமையாக்க வேண்டிய இந்த சமயத்தில் கஷ்டப்பட்டு முயற்சி செய்வது நன்றாக

இல்லை. ஒவ்வொருவரும் தன்னை சோதியுங்கள் நான் கர்மயோகி வாழ்க்கை உடையவன் தானா? வாழ்க்கை என்பது இயற்கையாகவும், நிரந்தரமாகவும் இருக்கின்றதா, அல்லது அவ்வப்போது என்று தான் இருக்கின்றதா? இம்மாதிரி அனுபவி சொரூபமாக ஆகுங்கள். லட்சியமே யோக வாழ்க்கை தான் அனுபவி மூர்த்தி ஆவதற்கான லட்சியத்தில் அந்த லட்சியம் சம்பன்னமாக இருக்கின்றதா? சதா நெற்றியிலிருந்து ஜொலிக்கக் கூடிய ஒளி தனக்கும் அனுபவம் ஆக வேண்டும். தானும் கூட அந்த சொரூபத்தில் நிலைத்திருக்க வேண்டும். நினைவு சொரூபமாக இருக்க வேண்டும். நினைவு செய்யக் கூடியவர்களாக அல்ல. நினைவு சொரூபமானவர்களாக இருக்க வேண்டும் மற்றும் நினைவு சொரூபமாக இருக்கின்றீர்களா அல்லது இல்லையா? அதற்கான அடையாளம் இது தான் எங்கு நினைவின் அனுபவி சொரூபமாக இருக்கிறீர்களோ அங்கு தனக்குள் சக்தியானது ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டே இருப்பினும் கூட அனுபவியாக இருப்பீர்கள். காரியங்கள் விதவிதமாக இருப்பினும் கூட, அனுபவி சொரூபம் மற்றும் அனுபவி சொரூபத்தின் ஸ்திதி வேறு வேறு அல்ல. ஆகையால் இன்று பாப்தாதா முயற்சி ஏன் செய்ய வேண்டியதாக இருக்கின்றது என்பதை பார்த்தார். அனுபவி சொரூபம் ஆவதில் வரிசைக்கிரமமான முயற்சியினைப் பார்த்தார். ஆகையால் பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளிடமும் உள்ளார்ந்த அன்பு வைத்திருக்கிறார். அன்புடையவர்களிடம் கஷ்டப்பட்டு முயற்சி செய்யும் நிலையைப் பார்க்க விரும்புவது இல்லை. எந்த ஒரு பாடத்திலும் முயற்சி செய்ய வேண்டியது இருந்தாலும், "எப்பொழுதாவது” என்ற வார்த்தையை பயன்படுத்த, வேண்டியதற்கான காரணம் அனுபவி சொரூபம் ஆவதில் குறை இருக்கிறது. முயற்சியாளர்களாக இருக்கிறீர்கள் ஆனால் சொரூபமானவர்கள் ஆகவில்லை. ஒரு வினாடியில் நான்கு பாடத்திலும் தன்னுடைய சுவமானத்தின் அனுபவி சொரூபத்தின் அனுபவம் இருக்க வேண்டும். அப்போது தேக அபிமானம் அருகில் வரவே முடியாது. எப்படி வெளிச்சத்திற்கு முன்பாக இருள் இருக்க முடியாதோ இயற்கையாகவே எங்கு இருள் இருக்கின்றதோ அங்கு வெளிச்சத்தின் குறைவு இருக்கின்றது. ஆகையால் அனைத்திலும் உயர்ந்ததிலும் உயர்ந்ததான அத்தாரிட்டி அனுபவம் என்ன சொல்லப்படுகின்றது. அனுபவத்தை ஆயிரம் பேர் மாற்ற முயற்சித்தாலும் மாற்ற முடியாது. எவ்வாறு

நீங்கள் அனைவரும் சர்க்கரையின் சுவையை சுவைத்துப் பார்த்திருக்கிறீர்கள். அது இனிப்பானதாக இருக்கின்றது. ஒருவேளை ஆயிரம் பேர் அவ்வாறு இனிப்பு இல்லை என்று உங்களை மாற்ற முயற்சித்தாலும் மாற்ற முடியுமா என்ன? ஆகையால் எந்த ஒரு பாடமாக இருப்பினும் அது ஞானமாக இருக்கலாம் அல்லது யோகத்தினுடையதாக இருக்கலாம் அல்லது தாரணையுடையதாகவோ அல்லது சேவையினுடையதாகவோ இருக்கலாம். இந்த நான்கு பாடத்திலும் ஏதாவது ஒன்றில் முயற்சி செய்ய வேண்டியது இருக்கின்றது. சேவையில் வெற்றி தாரணையிலும் கூட சுபாவத்தில் மாற்றம் அல்லது யோகத்தில் ஸ்திரமாக இருப்பதற்காக யோகி வாழ்க்கையின் அனுபவத்தை செய்வதில் மேலும் மிகுந்த முயற்சி தேவையாக இருக்கின்றது. அல்லது அவ்வப்பொழுது என்று கூறுகிறீர்கள் என்றால் அதன் அர்த்தம் அந்தப்பாடத்தில் நீங்கள் அனுபவி மூர்த்தி ஆகவில்லை என்பது தான். அனுபவம் அவ்வப்பொழுது ஏற்படுவது இல்லை. இயற்கையான சுபாவமாக இருக்கின்றது ஆகையால் இப்போது கேட்டீர்கள் அல்லவா! முயற்சிக்கான காரியம் என்னவென்று? எந்த சமயத்தில் உங்களுக்கு அனுபவம் ஏற்படுகின்றது. எப்போது அனுபவத்தின் ஆசனத்தில் அமர்ந்து விடுகின்றீர்கள் என்றால், எந்த ஒரு வரதானத்தின் சொரூபத்திலும் அனுபவியாகி அனுபவம் செய்கிறீர்கள் எனில் அந்த நேரத்தில் முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கின்றதா? இயற்கையான அனுபவம் ஏற்படுகின்றதா? ஆகையால் இப்போது சமயத்தின்படி அனைத்தும் திடீரென நடக்கும். கூறி விட்டு வருவதில்லை. எப்படி தற்சமயம் இயற்கையினுடைய விளையாட்டு திடீரென நடைபெறுகின்றது. இப்போது ஆரம்பம் ஆகி விட்டது அல்லவா? புதுப்புது விஷயங்கள் திடீரென நிலநடுக்கம் ஏற்படுகின்றது, சிறிது நேரத்திற்குள் லட்சக்கணக்கான ஆத்மாக்கள் இறந்து விடுகின்றனர். அவர்களுக்கு தெரியுமா என்ன, நாளை நாம் இருப்போமா, மாட்டோமா என்று. இவ்வாறு பல விபத்துக்கள் நடக்கின்றது. விதவிதமான இடத்தில் திடீரென ஆரம்பம் ஆகி விட்டது. ஒரே நேரத்தில் அனைவருடைய டிக்கெட் எடுக்கப்பட்டு விடுகிறது. அப்படிப்பட்ட நேரத்தில் நீங்கள் எவரெடியாக இருக்கிறீர்கள் அல்லவா! அல்லது இவ்வாறு கூறவில்லை. நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். எவரெடி என்றாலே எந்த ஒரு வரதானமும்

அல்லது சுவமானத்தின் சங்கல்பத்தை செய்திருக்கிறீர்கள். அதில் அனுபவி சொரூபமாக ஆக முடிகின்றதா? ஆகித்தான் தீர வேண்டும் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன், ஒருவேளை முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது என்றால் இப்போதிலிருந்தே நீண்ட சமயத்திற்கான அப்பியாசம் அந்த நேரத்தில் உதவி செய்யும். முயற்சியாளர்கள் அல்ல அனுபவி. ஏனென்றால் அனுபவத்தின் அதிகாரத்தை உங்கள் அனைவருக்கும் சர்வ சக்திவானே கொடுத்திருக்கின்றார். எவ்வாறு தேக உணர்வின் அனுபவியாக இருந்தோம். தேக உணர்வில் நான் இன்னாறாக இருக்கின்றேன் என்று நினைவு செய்ய வேண்டியதாக இருக்கின்றதா என்ன? உங்களுடைய தேகத்தின் பெயரில் தேக உணர்வு கொண்டவர்களாகி விட்டீர்கள் அல்லவா! நான் இன்னாறாக இருக்கின்றேன். ஆயிரம் பேர் நீங்கள் இன்னார் இல்லை என்று உங்களைக் கூறுகிறார்கள் நீங்கள் அவர் இல்லை என்று உங்களுடைய பெயரையே மாற்றிக் கூறினால் ஏற்றுக் கொள்வீர்களா? உங்களுடைய பெயரை மறந்து விடுவீர்களா! பிறப்பிலிருந்தே எந்த பெயர் இருந்தது அந்த தேக உணர்வு எவ்வளவு உறுதியாக மேலும் இயற்கையாக இருக்கின்றது. பிறர் யாரையாவது உங்களுடைய பெயரோடு அழைத்தால் உங்களை அழைக்கவில்லை, இருப்பினும் கூட உங்களுடைய காதுகள் அந்த பெயரைக் கேட்கும்பொழுது கவனம் செல்கின்றது, என்னைத் தான் அழைக்கிறார்கள் என்று. அந்தளவிற்கு தேக உணர்வு உறுதியாக ஆகி விட்டது. இவ்வாறாக தேகி அபிமானி சுவமான்தாரி சுயராஜ்ய அதிகாரியாக இருப்பதில் உறுதியானவர்களாக இருக்கிறீர்களா? நீங்கள் கூறுகிறீர்கள் எங்களுடைய வாழ்க்கை மாறி விட்டது என்று. அப்போது என்ன மாற்றத்தை செய்திருக்கிறீர்கள்? தேக உணர்விலிருந்து சுவமானம் சுயராஜ்ய அதிகாரி ஆகி விட்டிருக்கிறீர்கள். இப்போது சோதனை செய்யுங்கள் ஞான சொரூபமாக ஆகி விட்டீர்களா? அல்லது ஞானத்தைக் கேட்கக் கூடியவர்களா? மேலும் சொல்லக்கூடியர்களாக ஆகியிருக்கின்றேனா? ஞானம் என்றாலே நாலேட்ஜ்- ஞானமானது. நடைமுறை ரூபத்தில் இருக்கின்றது. ஞானத்திற்காக சொல்லப்படுகின்றது நாலேட்ஜ் இஸ் லைட், நாலேட்ஜ் இஸ் மைட், ஆகையால் ஞான சொரூபம் ஆவது என்றாலே என்ன கர்மத்தைச் செய்கின்றீர்களோ அதில் லைட் மேலும் மைட் உடையவர்களாக இருப்பது, எதார்த்தமாக இருப்பதாகும். இதற்குத்தான் சொல்லப்படுகின்றது ஞான சொரூபம் ஆகுதல்.

ஞானத்தை சொல்லக் கூடியவர்களாக அல்ல. ஞான சொரூபம் உடையவர்களாக வேண்டும். யோக சொரூபத்தின் அர்த்தம் கர்மேந்திரியத்தின் மீது வெற்றியாளர்கள் ஆவது. ஒவ்வொரு கர்மேந்திரியங்களின் மீதும் சுயராஜ்யதாரி என்று இதற்குத்தான் சொல்லப்படுகின்றது யோகம், யுக்த் யுக்த் வாழ்க்கை. அவ்வாறு ஒருவேளை ஞானம், யோகத்தின் சொரூபமாக இருக்கின்றீர்கள் எனில் ஒவ்வொரு குணங்களின் தாரணையும் இயற்கையாகவே இருக்கும். எங்கு ஞானம். யோகம் இருக்கின்றதோ யோக யுக்த்தாக இருக்கின்றீர்கள். அங்கு குணங்களின் தாரணை இயற்கையாகவே இருக்கும். சேவை ஒவ்வொரு சமயத்திலும் இயற்கையாகவே நடைபெறும். நேரத்தின் அனுசாரமாக நீங்கள் மனதின் சேவை செய்யலாம் அல்லது வார்த்தைகளால் சேவை செய்யலாம் அல்லது காமங்களால் சேவை செய்யலாம் அல்லது அன்டான சம்பந்தத்தினால் சேவை செய்யலாம். சேவை கூட ஒவ்வொரு சமயமும் தொடர்ந்து நடந்துக் கொண்டே இருக்கும். சம்பந்தம் தொடர்பிலும் கூட சேவை நடைபெறுகிறது. ஒருவேளை வைத்துக் கொள்ளலாம் உங்களுடைய ஏதாவது சகோதர, சகோதரி பிராமண பரிவாரத்திலிருந்து சிறிதளவு விலகியிருக்கிறார்கள் சிறிது முயற்சியில் தளர்வாக இருக்கிறார்கள்; ஏதாவது சம்ஸ்காரத்தில் வசமாகியிருக்கிறார்கள். இவ்வாறு தொடர்பில் இருக்கக் கூடிய ஆத்மாவிற்கு நீங்கள் ஆர்வம் உற்சாகத்தை ஏற்படுத்தினீர்கள். சகயோகத்தைக் கொடுத்தீர்கள். அன்பு கொடுக்கிறீர்கள் எனில் இந்த சேவையின் புண்ணியம் உங்களுக்கு சேமிப்பு ஆகின்றது. கீழே விழுந்து இருக்கக் கூடியவர்களை உயர்த்துவது இந்த புண்ணியத்தின் புகழ் பாடப்பட்டிருக்கின்றது. ஆகையால் சம்பந்தம் மேலும் தொடர்பினால் கூட சேவை செய்வது இது தான் உண்மையான சேவதாதாரியின் கடமையாக இருக்கின்றது. சேவை கொடுக்கப்பட்டால் அல்லது சேவை கிடைத்தால் தான் சேவை என்பது அல்ல. தானாகவே மனதினால், வார்த்தையினால், செயல்களினால், சம்பந்தம் தொடர்பின் மூலம் சேவையானது இயற்கையாகவே நடைபெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். பல முறை பாப்தாதா பார்த்திருக்கிறார். தொடர்பில் சில சில குழந்தைகளைப் பார்க்கும்பொழுது அவர்களுடைய சுபாவம் அவர்களுடைய சுபாவத்தில் என்ன இருக்க வேண்டுமோ அது இருப்பதில்லை. இருப்பினும் கூட இவர் இப்படித்தான் இவர்

மாறுவதில்லை. இவருக்கு சேவை செய்வது நேரத்தை வீணாக்குவது; இப்படிப்பட்ட சங்கல்பம் செய்வது என்பது எதார்த்தமானதா என்ன நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள் நாங்கள் இயற்கையைக் கூடி சதோபிரதானம் ஆக்கக் கூடியவர்கள், இயற்கையாக இருக்கலாம் அல்லது மனித ஆத்மாக்களாக இருக்கலாம்; பிராமணர்கள் என சொல்லப்படுகிறார்கள் ஆனால் சம்ஸ்காரத்திற்கு வசமாகி இருக்கிறார்கள். இருப்பினும் எப்பொழுது இயற்கையினுடைய சம்ஸ்காரத்தை மாற்றுவதற்கான சவாலை எடுத்து இருக்கின்றீர்கள் அப்பொழுது இயற்கையினால் ஆக்கப்பட்டது தான் மனிதன், ஆத்மா உள்ளது. உங்களுடைய சம்பந்தத்தில் இருக்கிறார்கள். ஆகையால் உண்மையான சேவாதாரி தன்னுடைய சேவையில் புண்ணியத்தை சேமிப்பதற்கான சுப பாவனையை அவசியமாக வைப்பார்கள். இவர் இப்படித்தான் இவரால் மாறவே முடியாது இது சுப்டாவனை அல்ல. இது சூட்சுமமான வெறுப்பின் பாவனையாகும். எப்படியிருந்தாலும் உங்களுடைய சகோதரன், சகோதரியாகத்தானே இருக்கிறார்கள் என்னுடைய பாபா என்று தானே சொல்கிறார்கள். ஆகையால் உண்மையான சேவாதாரி சேவை செய்வது மட்டுமல்லாமல் சுப பாவனை தருவது இந்த சேவையில் கூட புண்ணியத்தை சேமிப்பார்கள்: கீழே விழுந்து இருக்கக்கூடியவர்களை மீண்டும் கீழே விழ செய்யக் கூடாது; தூக்கி விட வேண்டும். சகயோகத்தைத் தர வேண்டும், இதைத் தான் சொல்லப்படுகிறது உண்மையான சேவாதாரி புண்ணிய ஆத்மா என்று. இவ்வாறாக தன்னை தான் சோதனை செய்யுங்கள். அந்தளவிற்கு சேவை செய்வதில் ஆர்வம், உற்சாகம் இருக்கின்றதா இதனைத் தான் அனுபவத்தின் அதிகாரம் உடையவர்கள் என சொல்லப்படுகிறது ஆகையால் இதனைத்தான் பாபா விரும்புகின்றார். அனுபல மூர்த்தி ஆகுங்கள். அனுபவத்தில் அதிகாரத்தைக் காரியத்தில் ஈடுபடுத்துங்கள்.

இவ்வாறு நான்கு பாடத்திலும் யார் தன்னை அனுபவி சொரூபமாகி அனுபவத்தின் அதிகாரத்தை காரியத்தில் ஈடுபடுத்துகிறார்கள். யார் குறைகளைக் கூட நிறைவு செய்கிறார்கள். அந்தளவிற்குத் தன் மீது கவனம் தரக்கூடியவர்கள் கையை உயர்த்துங்கள். மனதின் கையை உயர்த்துகின்றீர்கள் அல்லவா? சரீரத்தின் கையை அல்ல? மனதின் கைகளை உயர்த்துங்கள். உயர்த்துங்கள். மனதின் கைகளை

உயர்த்துங்கள் ஏனென்றால் பாப்தாதா சிவராத்திரியின் போது முடிவுகளைக் கேட்டார். மனதில் எந்த ஒரு குறையினுடைய சம்ஸ்காரம் இருப்பினும் தன்னுடைய சுப பாவனையைக் குறைத்துக் கொள்ள வேண்டாம். அவர்களுடைய சம்ஸ்காரம் தளர்வாக இருப்பினும் கூட அந்தளவு சக்தியுடையவர்களாக இருக்கிறார்கள். உங்களுடைய சுப பாவனை குறைந்து விடுகின்றது ஆனால் பிரம்மாபாபா என்ன பார்க்கவில்லை? என்ன செய்யவில்லை? பொறுப்புகள் இருந்தும் கூட சுப பாவனை. சுபவிருப்பத்தில் மூன்று வார்த்தை அறிவுரையாக கொடுத்து விட்டு சென்றார். நினைவிருக்கின்றது அல்லவா? மூன்று வார்த்தை நினைவிருக்கின்றது அல்லவா? தானும் நிராகரி, நிர்அகங்காரி, நிர்விகாரி இந்த ஸ்திதியில் அவ்யக்த்தமாகினார். பிறர் யாருக்கும் கர்மத்தின் சுமையின் உணர்வைக் காட்டவில்லை, இவருடைய கர்மக் கணக்கு முடிந்து கொண்டு உள்ளது என்று நினைத்தார்களா என்ன? அவ்யக்த்தம் ஆகி விட்டர் அல்லவ? அவ்வாறு பிரம்மாபாபாவிற்கு சமம் ஃபரிஸ்தா பவ என்ற வரதானம் பாபா செய்து காட்டி இருக்கின்றார். அவ்வாறு பிரம்மாபாபாவை பின்பற்றக் கூடியவர்கள் ஆகுங்கள். பிரம்மாபாபாவிடம் அன்பு இருக்கின்றது. பிரம்மாபாபாவிடம் அன்பு இருக்கின்றது அல்லவா? இப்பொழுது சாகாரத்தில் பார்க்கவில்லை ஆனால் அவ்யக்த்த பாபாவின் ரூபத்தில் அனைவருக்கும் அன்பு இருக்கின்றது. பாப்தாதா இருவரையும் அன்பு இருக்கின்றது ஆகையால் அன்பின் பாடத்தில் அதிக எண்ணிக்கையில் தேர்ச்சி பெற்று இருக்கிறார்கள். அன்புதான் நடத்திக் கொண்டு இருக்கிறது தாரணை இல்லாமல் இருந்தாலும் கூட பிற பாடத்தில் குறைவு இருந்தாலும் கூட ஆனால் அன்பினுடைய பாடத்தில் அனைவருமே தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அன்பு வழி நடத்திக் கொண்டிருக்கிறது. நீங்கள் அனைவரும் இங்கு ஏன் வந்திருக்கின்றீர்கள்? என்ன விமானத்தில் வந்தீர்கள். அன்பின் விமானத்தில் வந்து சேர்ந்து விட்டீர்கள் அல்லவா? ஆகையால் பாப்தாதாவிற்கு கூட கடைசி எண்ணில் உள்ள குழந்தை மீதும் அன்பு உள்ளது. எப்படிப்பட்டவர்களாக இருப்பினும் அன்பில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் ஏனென்றால் பாபாவிற்கு ஒவ்வொரு குழந்தைகளின் மீதும் உள்ளார்ந்த அன்பு இருக்கின்றது. எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் என்னுடையவர்களாக இருக்கிறார்கள். எவ்வாறு நீங்கள் கூறுகிறீர்கள் என்னுடைய பாபா,

அவ்வாறு பாபாவும் என்ன கூறுகின்றார் -என்னுடைய குழந்தைகள். இப்படிப்பட்ட சுப பாவனை தங்களுக்குள் பரிவாரத்திலும் கூட அவசியம் இருக்க வேண்டும். சுபாவத்தைப் பார்க்காதீர்கள். பாபாவைத் தெரிந்திருக்கிறார்கள். சுபாவத்தில் வேறுபாடு இருக்கலாம் ஆனால் அன்பை முறித்துக் கொள்ள வேண்டாம். தொடர்பை முறித்துக் கொள்ள வேண்டாம். காரியத்தை குறைத்துக் கொள்வது இது சரியானது அல்ல. எப்படி இருப்பினும் இது குடும்பம். யாருடைய குடும்பம் இது, பிரபுவினுடைய குடும்பம், ஆத்மாவின் குடும்பம். இதில் எந்த ஒரு காரணத்திற்காகவும் அன்பின் குறைவு இருக்க வேண்டாம் அவ்வாறு இருக்கின்றதார்! அன்பில் குறைவு இருக்கின்றதா அன்பு என்றாலே சுப பாவனை உடையவர்களாக அவசியம் இருப்பது, எப்படி இருந்தாலும் கூட இது பரமாத்மாவினுடைய குடும்பமாகும். இதனை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். நான் பிரபுவின் குடும்பத்தினராக இருக்கின்றேன், குடும்பம் என்றாலே அன்பு ஒருவேளை குடும்பத்தில் அன்பு இல்லையென்றால் அது குடும்பம் அல்ல. ஆகையால் இன்று என்ன பாடத்தைப் படித்தீர்கள்?. உறுதிப்படுத்தினீர்களா? ஒவ்வொரு ஆத்மாவின் மீதும் சுப பாவனை, சுப உணர்வு இருக்க வேண்டும். இந்த பரமாத்மா குடும்பம் ஒரு முறை மட்டுமே கிடைக்கின்றது. இவ்வளவு பெரிய பரமாத்மா குடும்பம் வேறு யாருக்குமே கிடைக்க முடியாது. ஆதலால் சோதனை செய்யுங்கள் இது கூட முயற்சியில் தடையை ஏற்படுத்துகின்றதா ஆகவே விக்னங்களிலிருந்து முக்த் எப்பொழுது ஆகுகிறீர்களோ அப்பொழுது அனுபவி ஆகி அனுபவத்தின் அதிகாரத்தின் மூலமாக அனைவரையும் அனுபவி ஆக்க முடியும் நல்லது.

இன்று யார் முதல் முறையாக வந்திருக்கிறீர்களோ அவர்கள் எழுந்து நில்லுங்கள். கைகளை அசையுங்கள். பாப்தாதா முதன் முறையாக வருபவர்களுக்கு விசேஷமாக வாழ்த்துக்களை கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஏனென்றால் நேரம் கடந்து விட்டதற்குப் பிறகு (டூ லேட்) வந்ததற்குப் பதிலாக லேட்டில் வந்து விட்டீர்கள். ஆகையால் பாப்தாதா வரக்கூடிய அனைவருக்குமே இந்த மகிழ்ச்சியான விசயத்தைக் கூறுகின்றார். ஒருவேளை இறுதியில் வரக்கூடியவர்களும் கூட தீவிர முயற்சியாளர்களாக அதாவது பறக்கும் கலைக்கான முயற்சியை செய்து முன்னேறிச் செல்ல விரும்பினால்

கூட தீவிர முயற்சியின் மூலமாக முன்னோக்கி சென்று விட முடியும் ஆனால் தீவிர முயற்சி வேண்டும். சாதாரண முயற்சியாளர்களாக அல்ல. ஒவ்வொரு முறையும் பாப்தாதா முதன் முறையாக வரக்கூடியவர்களைப் பார்த்து குஷியாக ஆகுகின்றார். மேலும் வரக்கூடிய அனைவருக்கும் பரிவாரம் -முழு குடும்பமுமே உங்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றது. வந்து விட்டீர்கள், ஏதாவது ஆஸ்தியை பெறுவதற்கு அதிகாரியாக ஆகி விடுவீர்கள். ஆகையால் பாப்தாதா கூட கூறுகின்றார் நன்றாக வாருங்கள். பாபாவை விட்டுப் பிரிந்து சென்ற குழந்தைகளை வாருங்கள் நல்லது. அமருங்கள். நல்லது.

சேவையினுடைய வாய்ப்பு: ராஜஸ்தான் மற்றும் இந்தூர்: முதலில் இந்தூரிலிருந்து வந்திருக்கக் கூடியவர்கள் கை உயர்த்துங்கள். இப்பொழுது ராஜஸ்தானைச் சேர்ந்தவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. இருவருமே தன்னுடைய சேவையினுடைய நடிப்பை நன்றாக செய்தீர்கள். பாப்தாதா பார்த்தார். இந்த சேவையினுடைய வாய்ப்பை அனைவருமே ஊக்கம், உற்சாகத்தோடு செய்கின்றீர்கள். செய்ய வைக்கின்றீர்கள். சேவையினுடைய இந்த பாகத்தை 10-15 நாளில் விதவிதமான வருமானத்திற்கான சாதனமாக இருக்கின்றது. ஒன்று, சேவையினால் ஒவ்வொருவருடைய புண்ணியமும் சேமிட்டாகின்றது. இரண்டாவது பலனாக இங்கு மதுவனத்தில் ஞானத்தின் வாயுமண்டலம் மிகப் பெரிய குடும்பத்தின் வாயுமண்டலம், அன்பினுடைய புருஷார்த்தத்தில் சக்தி கிடைக்கின்றது. ஏனென்றால் வாயுமண்டலம் அதிர்வலைகள் மற்றும் ஞான ஸ்நானம் ஒரு முறை தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதால் அவர்கள் மிகப் பெரிய புண்ணியமாக நினைக்கின்றார்கள் ஆனால் இங்கே எத்தனை நாட்கள் இருக்கின்றீர்களோ அத்தனை நாள் ஞான ஸ்நானம் ஞானத்தின் வார்த்தைகள் காதுகளில் கேட்டுக் கொண்டே இருக்கின்றது. மேலும் யோகி ஆத்மாக்கள் பிரபுவின் அன்புக்குரிய ஆத்மாக்கள் அதனுடைய அதிர்வலைகள் தானாகவே கிடைத்துக் கொண்டே இருக்கின்றது. ஏகாந்தத்தின் வாயுமண்டலத்தின் லாபம் கிடைக்கின்றது. ஒருவேளை யாரேனும் தன்னுடைய வேலையில் அல்லது படிப்பின் லாபத்தில் தன்னை பிஸியாக வைத்துக் கொள்கிறார்கள் எனில் அவர்களுக்கு குறுகிய நாட்களிலேயே தன்னுடைய உயர்ந்த எதிர் காலத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது. ஆகையால் யக்ஞத்தின்

காரியமும் நடைபெறுகின்றது. மேலும் வரக்கூடியவர்களின் புண்ணியமும் சேமிப்பு ஆகின்றது. இரண்டு மண்டலமும் வந்திருக்கிறீர்கள் ஆனால் பாப்தாதா பார்க்கின்றார். தற்காலத்தில் வாயுமண்டலத்தில் சேவையின் ஆர்வம், உற்சாகம் அனைத்து மண்டலத்திலும் இருக்கிறது. இந்தூர் கூட சேவையின் நிலையங்களை அதிரித்துக் கொண்டு இருக்கிறார்கள். மேலும் செய்தி கொடுத்து பாபாவின் குழந்தையாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். ராஜஸ்தான் கூட இவ்வாறாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது. நிகழ்காலத்தில் சேவையினுடைய அலையில் ஆர்வம் அனைவருக்கும் உள்ளது. மேலும் பாப்தாதா குறிப்புக் கூட கொடுத்துக் கொண்டிருக்கிறார். எந்த ஒரு மண்டலமாக இருப்பினும் எங்கிருந்து வந்திருந்தாலும், சிவராத்திரி தந்தையினுடைய பிறந்த நாளாகவும் இருக்கின்றது சேவையினுடைய ஆரம்பமாகவும் இருக்கின்றது. மேலும் விசேஷ ஆத்மாக்களின் பிறந்த தினமாகவும் இருக்கின்றது. எப்படி இன்றைய நாட்களில் அரசினுடைய புகழ் மிக்கவர்களின் பிறந்த தினம் வருகின்றதெனில் அவர்களுடைய பிறந்த நாளை கோலாகலமாக கொண்டாடுகிறார்கள். எப்படி காந்திஜியினுடைய பிறந்த தினத்தை எவ்வளவு கொண்டாடுகிறார்கள். முயற்சி செய்கிறார்கள் அந்த தினத்தில் ஒவ்வொருவருக்குமே பாரதத்தினுடைய ஞாபகார்த்தமான கொடியைப் பறக்க விட வேண்டுமென்று. அவ்வாறாக இந்த விசேஷ ஜென்மம் மகாரதிகளுடையதாகவும் இருக்கின்றது. பாபாவுடையதாகவும் இருக்கின்றது. பாப்தாதாவினுடையதாகவும் இருக்கின்றது. இப்படிப்பட்ட நாளில் ஒவ்வொருவரும் என்ன கொண்டாட வேண்டும்.? பாப்தாதாவிற்கு இந்த சங்கல்பம் இருக்கின்றது. இந்த சிவராத்திரியின் போது ஒரு வாரத்திற்கு முன்பாக அல்லது ஒரு வாரத்திற்குப் பின்பு தனக்கு பரிட்சையமான தன்னுடைய தொடர்பில் இருக்கக் கூடியவர்கள் தன்னுடைய அலுவலகங்களில் காரியம் செய்யக் கூடிய துணைவர்கள் அவர்கள் அனைவருக்குமே அவசியம் செய்தியைக் கொடுத்து பாபாவிடமிருந்து ஆஸ்தியைப் பெறச் செய்யுங்கள். இந்த செய்தியை அவசியம் கொடுங்கள். உங்கள் நெருக்கத்தில் இருப்பவர்கள் இவ்வாறு சொல்லக்கூடாது. எங்களுக்கு ஏன் இறுதியாக செய்தி கொடுத்தீர்கள். சிறிது முன்பாக கொடுத்திருந்தீர்கள் என்றால் நாங்கள் கூட அவருடைய குழந்தையாகி இருப்போம் அல்லவா! இல்லையெனில் இறுதியில் ஆஹா பிரபுவே

எனக் கூறக்கூடியவர்களாகவே இருந்து விடுவார்கள். நீங்கள் வந்திருந்தீர்கள், ஆனால் நாங்கள் அறிந்து கொள்ளவில்லை, குற்றச்சாட்டுகளைக் கொடுப்பார்கள். ஆகையால் இந்த சிவராத்திரியின் போது ஏதாவது முறையினால் அப்படிப்பட்ட நிகழ்ச்சியை தங்களுக்குள் ஏற்பாடு செய்யுங்கள். உங்களுக்கு அறிமுகம் ஆனவர்களுக்கு செய்திக் கிடைத்து விட வேண்டும் பிறகு அவர்களுடைய அதிர்ஷ்டம் ஆனால் நீங்கள் தன்னுடைய காரியத்தை நிறைவு செய்து விட்டீர்கள். இப்படி, ஒவ்வொருவரும் ஏதாவது விதத்தில் அவர்களுக்கு செய்தியை சேர்த்து விடுங்கள். பின்பு எப்படி சுபாவம் அதன்படி அவரவருடைய விதத்தில் செய்தியை அவசியமாக கொடுங்கள். முக்கியமான நாளாக உள்ளது. உங்களுக்கு மகிழ்ச்சியான செய்தியை சொல்கின்றோம். இப்படிக் கூறுவதால் இந்தக் குற்றச்சாட்டு நீங்கி விடும். இப்பொழுது கூட நிகழ்ச்சி நடத்துகின்றீர்கள் என்றால் என்ன சொல்கின்றார்கள். எங்களுக்கு இப்பொழுது தான் தெரிய வந்தது என்கிறார்கள் அல்லவா? இதற்கு முன்பு நீங்கள் ஏன் செய்யவில்லை. ஆகையால் குழந்தைகளின் மேலும் பாப்தாதாவின் பிறந்த தினமாக இருக்கின்றது. யார் பழையவர்களோ தன்னுடைய பிறந்த தினமாக எந்த நாளை ஏற்றுக் கொள்கிறார்கள். சிவராத்திரியைத் தான் கொண்டாடுகிறார்கள் அல்லவா? ஆகையால் இவ்வளவு பேருடைய ஜென்ம தினத்தில் இந்தசெய்தியை கொடுப்பதற்கான இனிப்பை அளைவருக்கும் வழங்குங்கள் சரிதான் அல்லவா? கொடுப்பீர்கள் அல்லவா? கையை உயர்த்துங்கள். யாரும் வஞ்சிக்கப்பட்டவர்களாக இருந்து விடக்கூடாது. எந்த முறையிலாவது, நிகழ்ச்சிகளை நடத்தலாம் அல்லது போஸ்ட் மூலமாக அனுப்புங்கள் ஆனால் யாரும் விட்டுப்போய் விடக்கூடாது. எந்த ஒரு சாதனத்திலாவது அவர்களுக்கு செய்தியை அவசியம் கொண்டு சேருங்கள். நீங்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்து 3-4 முறைகளை உருவாக்குங்கள். ஒவ்வொரு துறையினரும் தன்னுடைய தொடர்பில் இருக்கக் கூடியவர்களுக்கு சிவராத்திரியின் மகத்துவத்திற்கான செய்தியை அவசியம் கொடுங்கள். பிடித்திருக்கிறதா? நல்லது.

கிராம கிராமத்திலும் கூட, எவ்வாறு சிலர் கிராமத்தில் இருப்பவர்கள் கூட பிராமணர்கள் ஆகியிருக்கிறார்கள். அவர்களும் தன்னுடைய கிரமத்தில் ஏதாவது முறையில் கைப்பிரதிகளைக் கொடுங்கள் அல்லது

நேரில் சென்று செய்தியை அவசியம் கொடுங்கள். ஒவ்வொரு வீட்டிற்கும் தெரிய வரவேண்டும் இந்த சிவராத்திரி என்பது என்ன? இதில் பார்க்கலாம் எந்த ஜோன் முதன்மைப் பெறுகின்றது. எந்த ஜோன் எந்த நம்பரை எடுக்கின்றது. கணக்கு வைத்துக் கொள்ளுங்கள். பாப்தாதா ரிசல்ட் பார்ப்பார் எத்தனைப் பேருக்கு கைப்பிரதிகளை வழங்கினீர்கள். எத்தனைப் பேரை நேரடியாக சந்தித்தீர்கள் இந்த ரிசல்ட்டை எடுங்கள். ஒவ்வொருவருமே பிஸியாக இருங்கள். யார் ஒருவருமே ஓய்வாக இருந்து விடக்கூடாது. நல்லது. இந்தூர் மற்றும் ராஜஸ்தான் இருவருமே விசேஷமாக பிரம்மாபாபாவிற்கு செல்லமானவர்கள். பிரம்மாபாபா மூலமாக இந்தூர்க்கான அஸ்திவாரம் போடப்பட்டது மேலும் ராஜஸ்தானில் பிரம்மாபாபா மேலும் பாப்தாதா மூலமாக முதன்மையாக மியூசியம் உருவாக்கப்பட்டது. ஆகையினால் இருவருமே பாபாவினுடையவர்களாக இருப்பினும் ஆனால் விசேஷமாக பிரம்மாபாபாவிற்குச் செல்லமானவர்கள். பிரம்மாபாபாவினுடைய குடை நிழல் இருவர் மீதும் சதா இருக்கின்றது. அனைத்து மண்டலத்தின் மீதும் இருப்பினும் இருவர்களும் விசேஷமானவர்களாக உள்ளனர். பிரம்மாபாபாவிடம் எப்போது செய்தியைக் கொண்டு வருபவர்கள் செல்கின்றார்கள். மேலும் அட்வான்ஸ் பார்ட்டியினர் வெளிப்படுகின்றார்கள். அவர்களிடம் முதன்மையாக ஆரம்பத்தினுடைய விசயத்தையே அதிகளவு உரையாடல் செய்கின்றார்கள். உங்கள் அனைவருக்கும் மகா ரதியாக யார் ஸ்தாபனைக்கான காரியத்தில் நிமித்தமாக ஆகியிருக்கிறார்களோ அப்படிப்பட்ட அநேகர் அட்வான்ஸ் பார்ட்டிக்கும் கூட நிமித்தம் ஆகியிருக்கிறார்கள். அவர்களுடன் பாப்தாதா ஆரம்பத்தினுடைய விஷயத்தை அதிகளவு உரையாடல் செய்கின்றார். மேலும் பாப்தாதா மற்றும் அட்வான்ஸ் பார்ட்டி இருவருக்குமே ஒரே எண்ணம் தாள் இருக்கின்றது. எப்பொழுது கதவுகளைத் திறக்க வருவார்கள். ஏனென்றால் தனியாக அட்வான்ஸ் பார்ட்டியினர் திறக்க முடியாது. பாப்தாதாவும் திறக்க முடியாது. அனைவருமே ஒன்று சேர்ந்து தான் திறக்க வேண்டும். ஆகையினால் கேட்கிறார் அட்வான்ஸ் பார்ட்டியினர் மேலும் பாப்தாதாவும் கூட கூறுகின்றார் இறுதியில் அனைவரும் நிராகாரி ஃபரிஸ்தா சொரூபத்தில் எப்பொழுது எவரெடியாக இருப்பீர்கள். இன்றைய நாட்களில் இயற்கைக் கூட மிகவும் கூக்குரல் இடுகின்றது. சுமை அதிகளவு அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது.

மனதிலும் கூட சரீரத்திலும் கூட அனைவருமே உங்களை வரவேற்றுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகையால் இப்பொழுது சிறிதளவு தனது எவரெடிக்கான காட்சியைக் காட்டுங்கள். அந்தக் காட்சியை அதிகத்திலும் அதிகமான நேரம் அல்லது ஃபரிஸ்தா ரூபம், அல்லது நிராகாரி ரூபம் நடைமுறையில் நீங்கள் வெளிப்படுத்துங்கள். குப்த முயற்சி செய்கிறீர்கள் ஆனால் இப்பொழுது வெளிப்படையாக தெரிய வேண்டும் உங்களுடைய நெற்றியில் ஒளியினுடைய பிரகாசம் அனுபவம் ஆக வேண்டும். கண்களில் ஆன்மீகத்தினுடைய சக்தி அனுபவம் ஆக வேண்டும். வாயிலிருந்து முகத்திலிருந்து மதுரத்தன்மை மலர்ந்து முகத்தின் அனுபவம் ஏற்பட வேண்டும். தேதியைக் கேட்கும்பொழுது ஒவ்வொருவரும் யோசிப்பீர்கள் ஏனென்றால் குழுவின் ரூபத்தில் யாரெல்லாம் மகாரதிகளாக இருக்கின்றார்கள். தீவிர முயற்சியாளர்களாக இருக்கின்றார்கள் அவர்கள் அனைவரும் குழுவின் ரூபத்தில் செல்ல வேண்டும். முன்னும் பின்னுமாக செல்ல வேண்டாம். முதன்மையாக இங்கே எவரெடி ரூபமாக பிரத்யட்சம் ஆக வேண்டும். பாப்தாதா மற்றும் காரியத்தின் பிரத்யட்சதா ஏற்பட வேண்டும். இப்பொழுது தீவிர புருஷார்த்தம் செய்யுங்கள். ஒருவர் மற்றொருவருக்கு சகயோகத்தைக் கொடுங்கள். முன்னேற்றத்தை அடையச் செய்யுங்கள். பலவீனமானவர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள் இப்படிப்பட்ட குழுவை உருவாக்குங்கள்.

கிராம முன்னேற்றத் துறை, அறிவியல் மற்றும் இஞ்சினியர் துறை மற்றும் ஸ்பார்க்: உங்களுடைய அறிமுகத்தை நன்றாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். மூன்று துறையினரின் செய்தியை பாப்தாதா கேட்டார். ஒவ்வொரு துறையினரும் யாரெல்லாம் வருகிறார்களோ தங்களுக்குள் நன்றாக முன்னேற்றத்திற்கான மீட்டிங்கை செய்கிறார்கள் மேலும் மீட்டிங்கில் அவரவருடைய முன்னேற்றத்திற்கான திட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார் இன்றைய நாட்களில் துறையினர் சேவையில் ஒவ்வொருவரிலும் முதல் எண்ணை எடுக்க விரும்புகின்றார்கள். இந்த தீவிர முயற்சியின் ஆர்வம் உற்சாகத்தைப் பார்த்து பாப்தாதா அனைத்து துறையினருக்கும் குறிப்பாக இந்த மூன்று துறையினருக்கும் பலமடங்கு வாழ்த்துக்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

திட்டங்களை நன்றாக செய்திருக்கிறீர்கள். மேலும் ஆர்வத்துடன் செய்திருக்கிறீர்கள். ஆகையால் பாப்தாதா மூவருக்கும் கூறுகிறார் என்ன திட்டம் போட்டிருக்கிறீர்களோ. அதை நடைமுறையில் கொண்டு வாருங்கள். பாப்தாதாவிற்கு பிடித்திருக்கிறது. இடை இடையே இன்றைய நாட்களின் தொலைபேசியின் முறை இருக்கின்றது தங்களுக்குள் கான்பரன்ஸ் செய்வதற்கு. ஒவ்வொரு துறையிலும் யார் விசேஷமாக நிமித்தமானவர்களாக இருக்கின்றீர்களோ அவர்களுக்கு இடையே போன் கான்பரன்ஸ் செய்து கொண்டே ஆர்வம் உற்சாகத்தை அதிகப்படுத்துங்கள். ஏனென்றால் தன்னுடைய ஆர்வம் உற்சாகத்தை ஏற்படுத்தினீர்கள் என்றால், எவ்வாறு மீட்டிங்கில் விசேஷமாக ஆர்வம் உற்சாகம் வருகின்றதோ அவ்வாறு இடை இடையில் ரிசல்ட் கேட்டு அவர்களுக்கு ஆர்வத்தைக் கொண்டு வாருங்கள். நல்லது. இந்த குழுவை பொது மக்களிடம் செய்யுங்கள். இன்றைய நாட்களில் அனைவருக்கும் இயற்கையின் மீது கவலை இருக்கின்றது. ஆக நீங்கள் விசேஷமாக செய்தியைக் கொடுங்கள். மனதில் சுபாவத்தின் மூலமாக இயற்கையினுடைய சுபாவத்தை எவ்வறு மாற்றி அமைக்க முடியும். திட்டங்களை உருவாக்கியிருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது ஒவ்வொரு இடத்திலும் ஒன்று சேர்ந்து நிகழ்ச்சிகள் மூலமாக ஒளிபரப்பு செய்யுங்கள் ஆனால் செய்தியை பரப்புங்கள். இப்பொழுது என்னவெல்லாம் நிகழ்ச்சிகள் நடைபெறுகிறதோ அனைத்தையும் பாப்தாதா பார்த்தார். ஒவ்வொரு நிகழ்ச்சியினாலும் செய்தி சென்று சேரும் முறை நன்றாக இருக் கின்றது. மேலும் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? அதில் நிமித்தமாக இருக்கக் கூடிய சேவாதாரிகளின் ஆலோசனையை எடுத்துக் கொண்டு மேலும் நிகழ்ச்சியினுடைய ஆர்வத்தை அதிகரியுங்கள். எங்கே சென்றாலும் விசேஷமாக அல்லது சிறிய சிறிய இடத்திலும் கூட சப்தம் எழ வேண்டும். பிரம்மாகுமாரிகள் ஏதோ நிகழ்ச்சியை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அமைதியாக அமர்ந்து விட வேண்டாம்: இப்பொழுது ஆர்வம் உற்சாகத்தோடு செய்தியைப் பரப்புங்கள். இப்பொழுது அருகில் வருவதற்கான நேரமாக இருக்கின்றது. வைராக்கிய உணர்விற்கான வாயுமண்டலத்தில் புதுமையைப் பார்ப்பதில் மேலும் கேட்பதில் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். ஒருவர் பிறருடைய ஆலோசனையை எடுத்துக் கொண்டு மேலும் ஆர்வம் உற்சாகத்தினால் நாலாபுறமும் செய்தியைப் பரப்புங்கள். முக்கியமாக எந்த இடம்

இருக்கின்றது. தேசம் இருக்கின்றது. அதில் நிகழ்கால நேரத்தில் சேர்ந்து செய்தியைக் கொண்டு சேருங்கள். ஒவ்வொரு முக்கியமான இடத்திலும் செய்தித் தாள்கள் மூலமாக தெரிய வேண்டும். இது நடந்தது. இது நடந்தது. இதனை செய்து கொண்டிருக்கிறார்கள். அது ரேடியோ மூலமாக டிவி மூலமாக செய்தியைப் பரப்புங்கள். தன்னுடைய பகுதியில் டிவி மூலமாக ரேடியோ மூலமாக செய்தியைப் பரப்ப முடியும். நல்லது மிக மிக வாழ்த்துக்கள்!. அந்தந்த துறையினர் இன்றைய நாட்களில் உற்சாகத்தோடு செய்து கொண்டிருக்கிறீர்கள் மேலும் செய்து கொண்டே இருக்க வேண்டும். நல்லது.

சிந்தி குரூப்: சிந்தி குரூப்பைச் சேர்ந்தவர்கள் கை உயர்த்துங்கள். இவர்களும் ஆர்வத்துடன் சேவையில் வழி முறைகளை மிகவும் நன்றாக உருவாக்கி இருக்கிறார்கள். பாப்தாதா முக்கியமாக விசேஷமாக நிமித்தமாக இருப்பவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். ஏனென்றால் இவர்கள் மூலமாக அனைவருக்கும் செய்திக் கிடைத்திருக்கிறது. எத்தனைப் பேருக்கு அறிமுகம் கிடைத்தது ஆனால் எத்தனைப் பேர் வந்திருக்கிறார்கள் பாருங்கள். அனைவருக்குமே உங்களுடைய சாதனம் மிக நன்றாகவே பிடிக்கும். சேவையும் நடைபெற்றது ஏற்றுக் கொண்டும் இருக்கிறார்கள். இரட்டைக் காரியம் நடைபெற்றது. யார் உடன் வந்திருக்கிறார்கள் அவர்களுக்கும் ஆசீர்வாதம் கிடைத்து விடும். நல்லது. பாபா, சிவபாபாவிற்கு தன்னுடைய அவதாரத்தின் இடத்தில் எந்த இடம் மிகவும் பிடித்தமானதாக இருந்தது. சிந்து மிகவும் பிடித்தமானதாக இருந்தது அல்லவா! ஆகையினால் பாக்கியமாகி விட்டது அல்லவா! அவதாரத்தின் ஸ்தானத்தின் மகத்துவம் எவ்வளவு இருக்கின்றது என்று பாருங்கள். யாரெல்லாம் தர்ம பிதாக்கள் வந்திருக் கின்றார்கள். அவர்களுடைய ஜென்ம ஸ்தானம் நினைவார்த்தமாக இருக்கின்றது ஆகவேதான் சிந்தி ஜென்ம பூமிக்கும் மிகவும் மகத்துவம் உள்ளது. இப்பொழுது திட்டங்களை உருவாக்கியிருக்கின்றீர்கள். ஜனக் (ஜானகி தாதி) திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். நீங்களும் கூட தனக்கு தெரிந்திருக்கக் கூடியவர்கள் எங்கிருந்தாலும் அறிமுகமாகி இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு செய்தியை சொல்லுங்கள். இந்த இடம் நம்முடையது என. இன்று சிறிய குழு பெரியதாக ஆகி விடும் ஆனால் பாப்தாதா இந்த கவனத்தையும் ஏற்படுத்துகின்றார். எந்த

நேரத்தில் செல்கின்றீர்களோ, அந்த நேரத்தில் வாயுமண்டலத்தை அறிந்து அடி எடுத்து வையுங்கள். ஏனென்றால் அவர்கள் மாறுவதில் நேரம் எடுத்துக் கொள்ளாது. மற்றபடி அனைத்தும் நன்றாக இருக்கின்றது. எங்கே ஜென்ம ஸ்தானம் உள்ளதோ, அங்கு பிரத்யட்சதா அவசியம் ஏற்பட வேண்டும். பிற தர்மத்தினராக இருக்கலாம் ஆனால் ஒரு பாபாவினுடைய குழந்தைகள் தான் பாபாவினுடைய செய்தியைக் கேட்பது அனைவருக்கும் உரிமை உள்ளது. பாப்தாதா உங்கள் திட்டத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார் யாரெல்லாம் வந்திருக்கின்றீர்களோ அவர்களுக்கெல்லாம் வாழ்த்துக்கள் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்!

இரட்டை வெளிநாட்டினர்: பாப்தாதா பார்த்தார் இரட்டை வெளிநாட்டவர் வாய்ப்பை எடுத்துக் கொள்வதில் மிகவும் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். எங்கிருந்தாலும் வந்து சேர்ந்து விடுகிறார்கள். மேலும் தன்னுடைய சேவைக்கான திட்டத்தை மிக நன்றாக செய்து தன்னுடைய குழுவை உறுதியாக்கி விடுகிறார்கள். மிக நன்றாக இடத்தைத் தேடி இருக்கிறீர்கள். பாபாவிடம் சந்திப்பது பரிவாருடன் சந்திப்பது, மேலும் தன்னுடைய முன்னேற்றத்தை செய்வது, இவை அனைத்தும் பாப்தாதாவிற்குப் பிடித்திருக்கின்றது. வெளிநாட்டவர் எடுத்துக்காட்டானவர்களாகிக் காட்டுங்கள். எந்த தேசத்தில் நிமித்தமாகியிருக்கிறீர்கள் அந்த தேசத்தில் எத்தனை சேவை நிலையம் இருந்தாலும் அதனை நிர்விக்னமாக ஆக்குவதற்கான எடுத்துக்காட்டை செய்து காட்டுங்கள். நம்பரை எடுங்கள். இந்தியாவில் இருக்கக் கூடிய மண்டலங்களும் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் இப்பொழுது அறிவிக்கப்படவில்லை ஆனால் நீங்கள் நம்பரை முதன்மையாக எடுத்துக் கொள்ளுங்கள். தைரியம் நன்றாக உள்ளது. மேலும் சகயோகமும் நன்றாக கிடைத்துக் கொண்டிருக்கின்றது பாப்தாதா பார்த்தார். யாரை உருவாக்குகின்றார்களோ அவர்களை நன்றாக உருவாக்குகின்றார்கள். ஏதாவது ஒரு முறையில் தொடர்பில் கொண்டு வந்து முன்னேற்றம் அடையச் செய்கிறார்கள் நல்லது. ஆர்வம் உற்சாகத்தின் அலை பரவிக் கொண்டிருக்கிறது மேலும் ஒவ்வொரு வருடமும் ஏதாவது புதுமையை சேர்த்துக் கொண்டே இருக்கிறார்கள். ஆகையால் பாப்தாதா பலமடங்கு வாழ்த்துக்களை கொடுத்துக் கொண்டே இருக்கின்றார்.

இப்போது இந்தூர் என்ன செய்யப் போகிறீர்கள்? ஏதாவது எடுத்துக் காட்டான முதல் நம்பரை உருவாக்கிக்காட்டுங்கள். இந்தூராக இருக்கலாம் அல்லது ராஜஸ்தானாக இருக்கலாம் முதல் நம்பரை எடுத்துக்காட்டுங்கள். தைரியம் இருக்கிறது அல்லவா பாப்தாதாவை துணையாக ஆக்கிக் கொண்டீர்கள், ஆகவே பாப்தாதாவின் துணையாக நீங்கள் நிமித்தமாக வேண்டும். நல்லது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளின் விசேஷத்தாவைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையிடமும் ஏதாவது ஒரு பாடத்தில் விசேஷத்தா அடங்கியிருக்கின்றது, ஆகவே பாப்தாதா தனிப்பட்டவிதத்தில் ஒவ்வொரு குழந்தையையும் உருவாகி இருக்கக் கூடிய வெற்றி சொரூபமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஏனென்றால் அனைவரையும் துணைவர்களாக ஆக்கி வீடு திரும்ப வேண்டும். உடன் இருக்கிறீர்கள் சேர்ந்தே செல்ல வேண்டும். பிரம்மாபாபாவுடன் சேர்ந்து ராஜ்யம் செய்வீர்கள் நல்லது. நாலாபுறமும் உள்ள குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியுடன் குஷியுடன் பாடுகின்றார் ஆஹா பாபா ஆஹா பாபாவினுடைய உள்ளத்தில் ஒவ்வொரு குழந்தைகளும் இருக்கின்றனர். மேலும் இவ்வளவு பெரிய குடும்பத்தை மதுபன் நிவாசிகள் பார்த்து மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஆஹா மதுபன் ஆஹா அனைவருக்கும் அடைக்கலம் மதுவனத்தில் தான் உள்ளது. ஆகையினால் தான் மதுவனத்திற்கு ஓடி வந்து விடுகிறீர்கள். இப்பொழுது பாபாவிற்கு கூட விரைவில் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற ஆசை இருக்கின்றது. நான்கு பாடத்திலும் அனுபவி சொரூபம் ஆக வேண்டும். பாப்தாதா உள்நாடு, வெளிநாடு நாலாபக்கம் உள்ள குழந்தைகளை இங்கு அமர்ந்தபடியே பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த சாதனங்கள் இந்த விஞ்ஞானம் இந்த நேரத்தில் வளர்ச்சி அடைந்து கொண்டு இருக்கின்றது. புதிய புதிய கண்டுபிடிப்புகள் உங்களுடைய லாபத்திற்காக நன்றாக வெளிப்பட்டுக் கொண்டு உள்ளது. தூரத்தில் இருப்பினும் கூட உடன் இருக்கின்றது. ஆகையினால் விஞ்ஞானிகளுக்கும் கூட வாழ்த்துக்கள், இந்த சாதனங்களை உருவாக்கி இருப்பதற்காக, நல்லது அனைத்துக் குழந்தைகளுக்கும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் மிக மிக உள்ளப்பூர்வமான அன்பு மற்றும் நினைவுகள் உரித்தாகுக மேலும் இப்படிப்பட்ட விசேஷமான குழந்தைகளுக்கு நமஸ்தே!

தாதிகளுடன்: ஆர்வம் உற்சாகம் நன்றாக உள்ளது. ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கிறீர்கள் இந்த சாதனங்கள் உங்களுடைய நேரத்தில் ஏற்பட்டு உள்ளது. உங்களுக்குத் தான் சுகம் கிடைத்துக் கொண்டுள்ளது. அவர்களின் வினாசத்தின் விஷயத்தைப் பேசுகிறார்கள். நீங்கள் லாபத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். நல்லது.

மோகினி சகோதரி: (மும்பை மருத்துவ மனையில் இருக்கிறார்) அவருக்கு விசேஷமான நினைவுகள் அளிக்கப்பட்டது. நன்றாகி வரட்டும். நினைவு வருகின்றது ஆனால் உடல் நிலைகூட நன்றாக இருக்க வேண்டுமல்லவா! பாப்தாதாவையும் நினைவு செய்து கொண்டிருக்கிறார். பாப்தாதாவிடம் அந்நினைவு வந்து சேர்ந்துக் கொண்டிருக்கிறது. அவருக்கு விசேஷமான அன்பு நினைவுகளை கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

தாதி நிர்மல் சந்தாவுடன்: உங்களுடைய தைரியம் சரீரத்தை வழி நடத்திக் கொண்டுள்ளது. பாபா உதவியாளராக இருக்கின்றார். நீங்கள் தைரியமுடையவராக இருக்கின்றீர்கள்.

ரத்தினமோகினி தாதியுடன்: பறக்க வைத்துக் கொண்டிருக்கிறீர்கள், பறந்து கொண்டும் இருக்கிறீர்கள்.

சாந்தா மணி தாதியுடன்: நன்றாக இருக்கிறீர்கள், குஷியாக இருக்கிறீர்கள். மிக நன்றாக திருஷ்டி பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள்.

மூன்று சகோதரர்களுடன்: மூவரும் ஒன்று சேர்ந்து சிவராத்திரியின் திட்டத்தை உருவாக்குங்கள். என்னவெல்லாம் விசேஷ இடம் இருக்கின்றது அதில் ஒரே நேரத்தில் ஒன்று போல தன்னுடைய நிகழ்ச்சியை நடத்துங்கள் ஆனால் முக்கிய இடங்களில் விளம்பரம் செய்யுங்கள். அனைத்து இடங்களில் நடைபெற வேண்டும். முக்கிய இடங்களில் எங்காவது முயற்சி செய்து ஒரே நேரத்தில் மிகப் பெரிய நிகழ்ச்சியை செய்யுங்கள். ஏனென்றால் சிவராத்திரிக்கான நிகழ்ச்சி. எங்கெல்லாம் நடைபெறுகின்றது அங்கு அனைவரையும் ஒன்று சேர்த்து முன்பு செய்தது போல செய்து காட்டுங்கள்.

சென்னையினுடைய நிகழ்ச்சி மிக நன்றாக இருந்தது: ஏதேனும் சேர்க்க வேண்டுமா அல்லது புதுமையைக் கொண்டு வருவது, இதனைக்கூட உங்களுடைய சேவையில் சிறிது சேர்த்துக் கொள்ள வேண்டும். தங்களுக்குள் மீட்டிங் செய்து முன்னேற்றம் அடைய வைக்க முடியும். நிமித்தமாகி நன்றாக காரியத்தை செய்து கொண்டு இருக்கிறீர்கள் இருப்பினும் இதில் ஏதாவது கூடுதலாக சேர்த்துக் கொள்ள முடியுமென்றால் சேர்த்துக் கொள்ளலாம்.

நிஜார் சகோதரரிடம்: நல்லது வாழ்த்துக்கள். நிகழ்ச்சி நன்றாக நடைபெற்றுக் கொண்டுள்ளது இருப்பினும் கூட தங்களுக்குள் ஆலோசனை எடுத்துக் கொண்டு ஏதாவது சேர்க்க வேண்டும் என்றால் கூட சேர்த்துக் கொள்ளுங்கள். நடத்திக் கொண்டே செல்லுங்கள். ஏதாவது அறிவுரை இருந்தால் அதைக் கேளுங்கள். ஒருவேளை நன்றாக இருந்தது என்றால் அதை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள். மற்றபடி நன்றாக உள்ளது. மீட்டிங்கில் என்ன ஆலோசனை கிடைக்கின்றதோ அதை எல்லோரும் ஒன்று சேர்ந்து செய்து காட்டுங்கள்.

டைமன்ட் ஹாலில் புதிய ஸ்கிரீன் இடப்பட்டுள்ளது: அதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைவரும் குஷியில் பறந்து கொண்டிருக்கிறீர்கள் இதனை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரும் குஷியில் பறந்து கொண்டிருக்கிறீர்கள்.

எந்த அளவிற்கு நீங்கள் உங்கள் மீது நிச்சயம் வைப்பீர்களோ அந்த அளவு பாப்தாதா கூட அவசியம் உதவி செய்பவர் ஆகிறார். சிநேகம் உடையவர்களுக்கு அவசியம் சகயோகம் கிடைக்கிறது. எவரொருவரிடமும் சகயோகம் பெற வேண்டும் என்றால் சிநேகி ஆக வேண்டும். சிநேகிக்கு சகயோகம் கேட்டு வாங்க வேண்டி இருக்காது. பாப்தாதாவிற்கு சிநேகி ஆனீர்கள். பரிவாரத்திற்கும் சிநேகி ஆனீர்கள் என்றால் அனைவருடைய சகயோகம் இயல்பாகவே பிராப்தி ஆகும். நிச்சயபுத்தி மற்றும் நஷ்டமோகா என்பவையே முக்கியமான இரு விஷயங்கள்.

எந்த அளவிற்கு தங்களை ஞான ரத்தினங்களால் அலங்கரிப்பீர்களோ அந்த அளவிற்கு விரும்பாவிடினும் கூட உலகத்தின் பார்வை உங்கள் பக்கம் செல்லும் என் பக்கம் பாருங்கள் என்று உலகத்திற்கு நீங்கள் கூற வேண்டிய அவசியம் இருக்காது. இந்த ஞான ரத்தினங்களின் அலங்காரம் தூரத்தில் இருப்பவர்களின் கவனத்தையும் ஈர்த்து விடும். எனவே இந்த ரத்தினங்களின் சிருங்காரத்தை எப்பொழுதிற்குமாக நிலையாக வைத்திருப்போம் என்ற நிச்சயம் செய்ய வேண்டும்.

குழந்தைகளாகிய உங்களது நடத்தை வார்த்தைகளை விட அதிகமான சேவை செய்யும் அவ்யக்த ஸ்திதி இருக்கும்பொழுதே சக்தி ரூபமாக ஆக முடியும். அவ்யக்த ஸ்திதியில் இருந்து பின் வியக்தத்தில் (சரீர உணர்வில்) வருகிறீர்கள் என்றாலும் கூட அது சேவைக்காக மட்டுமே. சேவை முடிந்ததோ இல்லையோ மீண்டும் அவ்யக்த ஸ்திதியில் இருப்பது - இது போன்ற அப்பியாசம் மேற்கொள்ள வேண்டும்.

யார் பலி ஆகிறார்களோ (அர்ப்பணம்) அவர்களுக்கு என்ன கிடைக்கிறது? பலி ஆகுபவர்களுக்கு ஈஸ்வரிய சக்தி நிறைய கிடைக்கிறது. யார் சம்பூரண ஸ்வாஹா ஆகிறார்களோ அவர்கள் சதா சுமங்கலியாக ஆகிறார்கள். அவர்களுடைய சுமங்கலித் தன்மை நீங்கி விடுவதில்லை. யார் சதா சுமங்கலியாக இருக்கிறார்களோ அவர்களுக்கு அவினாஷி திலகம் எப்பொழுதும் இருக்கும், ஆத்ம ஸ்திதியில் நிலைப்பதற்கான பொட்டு சதா சுமங்கலிக்கு ஒவ்வொரு நேரமும் நெற்றியில் நினைவு இருக்கும். அந்த நினைவாவது கட்டுப்பாடு என்ற வளையல், ஒரே ரசனையின் நிலையில் இருப்பதற்கு ஒரே சுத்த சங்கல்பம் கொள்ள வேண்டும். ஒன்று சிநேகி ஆதல் மற்றொன்று சர்விசபிள் ஆவேன். இவற்றைத் தவிர வேறு எந்த சங்கல்பமும் இல்லை. இந்த தேகம் சேவையின் பொருட்டு கிடைத்துள்ளது. கர்மபந்தனத்தின் கணக்கு வழக்கினுடைய வாழ்க்கை முடிந்து விட்டது. பழைய தேகம் மற்றும் தேகத்தின் உலகத்தின் சம்பந்தம் முடிந்து விட்டது. எனவே இதை மறுவாழ்வு உடைய (மர்ஜீவா) வாழ்க்கை என்று கூறுகிறார்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 11.02.2010 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சிவ தந்தையின் பிறந்த நாளில் கோபம் என்ற எருக்கம்பூவை பாப்தாதாவிற்கு அர்ப்பணம் செய்து தூய நிலைக் கண்ணாடியாக (தர்பன்) ஆகுங்கள். தாய்மையான இல்லற வாழ்க்கையின் பிரத்யட்சத்தின் வெளிப்பாடு மூலமாக தந்தையின் பிரத்யட்சத்தை வெகு அருகாண்மையில் கொண்டு வாருங்கள்! (சிவ ஜெயந்தி)

இன்று எதிரில் அமர்ந்துள்ள குழந்தைகள் மற்றும் உள் நாடு அயல்நாட்டில் அமர்ந்துள்ள நாலா புறங்களிலுமுள்ள அனைத்துக் குழந்தைகளும் மிக அதிகமான மகிழ்ச்சியுடன் தந்தை மற்றும் தன்னுடைய பிறந்த நாளை கொண்டாடுமுகமாக, அநேக அநேக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர். நீங்கள் எதிரில் அமர்ந்துள்ளீர்கள் மேலும் அறிவியல் சாதனைகள் மூலமாக வெகு தொலைவிலும் இருக்கின்ற குழந்தைகள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர். இங்கு வந்துள்ள நீங்கள் அனைவரும் தந்தையின் பிறந்த நாளை கொண்டாட, வந்துள்ளீர்களா? அல்லது தன்னுடைய பிறந்த நாளைக் கொண்டாட வந்துள்ளீர்களா? ஏனென்றால் இந்த ஜெயந்தி விசித்திரமான ஜெயந்தி ஆகும். ஏன் விசித்திரமானது? தந்தைக்கும் குழந்தைகளுக்கும் ஒன்றாகவே இணைந்து கொண்டாடும் பிறந்த நாள் ஆகும். முழு கல்பத்திலேயே இப்படிப்பட்ட ஜெயந்தி

நடைபெறுவதில்லை. முழு கல்பத்தையும் சுற்றி வாருங்கள். இதுவே விசித்திரமான ஜெயந்தி எனவே பாப்தாதா அனைத்துக் குழந்தைகளையும் கேட்டுக் கொண்டிருக்கிறார். நீங்கள் அனைவரும் தந்தைக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்க வந்திருக்கிறீர்களா? அல்லது தந்தையிடம் வாழ்த்துக்களைப் பெற வந்திருக்கிறீர்களா? பாப்தாதா தனியாக எதுவுமே செய்வதில்லை. ஏனென்றால் வந்த உடனேயே யக்ஞத்தை படைத்து விட்டார். அப்படியென்றால் யக்ஞத்தில் பிராமணர்கள் தேவை அல்லவா எனவே உங்கள் பிறவியும் பாபாவுடனே நிகழ்கிறது. இதனுடைய நினைவார்த்தமாகத்தான் பக்தி மார்க்கத்தில் சிவ ராத்திரி என்று நன்னாளைக் கொண்டாடுகிறார்கள். அத்துடன் சாலிகிராமங்களுக்கும் பூஜை நடைபெறுகிறது அநேக அநேக சாலிக்கிராம்களை பூஜிக்கிறார்கள். அப்படியென்றால் இந்த ஜெயந்தி அதிசயமான ஜெயந்தித்தானே எனவே தான் இந்த ஜெயந்தியை வைரத்துக்குச் சமமான ஜெயந்தி என்று சொல்லப்படுகிறது பாப்தாதா தன்னுடன் துணையாக இருக்கின்ற அனைத்துக் குழந்தைகளுக்கும் பல பல மடங்கு கரங்களாலேயே மாலைகளுக்கிடையே பல பல மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். இதுவும் தந்தை மற்றும் குழந்தைகளுக்கிடையே உள்ள அளவிடற்கரிய உளமார்ந்த அன்பின் அடையாளமாகும். பாப்தாதா குழந்தைகளிடம் வாக்கு கொடுத்திருக்கிறார். கூடவே இருப்பேன். கூடவே இணைந்து செல்வோம், எனவே சொல்லுங்கள் குழந்தைகளும் அப்படியே பாபாவிற்கு வாக்குக் கொடுத்துள்ளீர்கள் அல்லவா? சங்கமத்தில் பாபாவுடனேயே இருப்போம். பாபாவுடனேத்தான் இருக்க வேண்டும், உலக சேவையும் பாபாவுடனேயே இணைந்து செய்வோம். இருப்பதும் பாபாவுடன், பறப்பதும் பாபாவுடன். சொல்லுங்கள் நீங்களும் வாக்குக் கொடுத்திருக்கிறீர்கள் தானே கூடவே இருப்போம். கூடவே செல்வோம். பிரம்மாபாபாவுடன் உலகத்திலும் ராஜ்யம் செய்வோம். வாய்தா (உறுதிமொழி) உள்ளதா பக்கா வாய்தாவா, இது தான் சிவ ஜெயந்தியின் விசேஷத் தன்மை ஆகும்.

பாப்தாதா அமிர்தவேளையிலிருந்தே பார்த்தார். வித விதமான பல்வேறு இடங்களிலிருந்து குழந்தைகள் மிக அதிகமான மகிழ்ச்சியுடன் வாழ்த்துக்களையும், அன்பினையும் அனுப்பிக் கொண்டிருந்தார்கள். நீங்களோ இப்பொழுது நேருக்கு நேராக

வாழ்த்துக்களையும், அன்பினையும் கொடுத்துக் கொண்டும் பெற்றுக் கொண்டும் இருக்கின்றீர்கள். தருவதும், பெறுவதும் இணைந்தே உள்ளது. எவ்வளவு பாக்கியசாலியான பகவான் குழந்தைகள் நீங்கள். நேருக்கு நேராக பிறந்த நாளைக் கொண்டாடுகிறீர்கள். அனைவருடைய முகமும் மிக மலர்ச்சியுடன் குஷியில் பறந்து கொண்டிருப்பதாக தென்படுகிறது. ஒருபுறம் பாப்தாதா குழந்தைகளின் பாக்கியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். மறுபுறம் பக்தர்களையும் பார்க்கின்றார். அவர்கள் இன்னும் கூக்குரல் செய்து கொண்டிருக்கிறார்கள் வாருங்கள் வாருங்கள் என்று நீங்களோ அவருடனேயே சிவ ஜெயந்தியை கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதா பார்க்கின்றார், பக்தர்களின் அனுபவமும் எந்த வகையிலும் குறைந்தது அல்ல. நடைமுறை வாழ்க்கையில் நீங்கள் செய்து கொண்டிருப்பதை நினைவின் ரூபமாக எவ்வளவு நன்றாக விதி முறைப்படி அவர்கள் நினைவு தினமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் எடுத்த விரதத்தை அவர்களும் நினைவார்த்தமாக விரதத்தை கடைப்பிடிக்கிறார்கள். அவர்கள் ஒரு நாளுக்காகவோ அல்லது சிறிது காலத்திற்காகவோ விரதத்தை எடுக்கிறார்கள் ஆனால் நீங்கள் என்ன விரதம் எடுத்தீர்கள்? நீங்கள் அனைவரும் பாபாவுக்கு முன்பாக வாக்குறுதி என்ற விரதம் எடுத்துள்ளீர்கள் அல்லவா? நீங்கள் பாபாவிடம் குஷி குஷியாக விரதம் எடுக்கின்றீர்கள். பாபா நாங்கள் இந்த ஜென்மம் முழுவதும் பிராமணனாக இருப்போம் என்று. விரதத்தை தாரணை செய்கிறீர்கள் அல்லவா? என்ன விரதம் அது? தூய்மை ஒரு பிறவிக்காக விரதம் எடுப்பீர்கள் ஆனால் ஒரு ஜென்மத்தின் தூய்மை என்ற விரதம் 21-ஜென்மம் வரையிலும் நடைபெறுகிறது. பக்தர்கள் சிறிது காலத்திற்காக அன்ன ஆகாரத்திலும் கண்விழிப்பதிலும் விரதத்தை கடைப்பிடித்து காரியத்தை செய்கிறார்கள் ஆனால் நீங்கள் இன்றைய ஒரு பிறவியின் விழிப்பின் மூலமாக அதாவது இருளிலிருந்து வெளிச்சத்துக்கு வந்துள்ளீர்கள். இந்த விழிப்பும் 21-ஜென்மம் வரையில் உங்களோடு இணைந்தே இருக்கும். முழு உலகிலும் இப்படிப்பட்ட ஒரு விழிப்பு உலகம் முழுவதையுமே என்றென்றும் விழிப்படைய செய்கிறது. எந்த விதமான துக்கம், அசாந்தி இருளே இருக்காது. எனவே சொல்லுங்கள். நீங்கள் உலகம் முழுவதையும் இருளிலிருந்து வெளிச்சத்திற்கு கொண்டு வந்து விட்டீர்கள் தானே. இந்த ஒரு மாபெரும் விரதம் உங்களுக்குப்

பிடித்திருக்கிறதா? கடினமாக இல்லையே? சுலபமாக இருக்கிறதா அல்லது கடினமாக இருக்கிறதா? சுலபமாக இருக்கிறது யாருக்கு இது சுலபமாக இருக்கிறதோ அவர்கள் கை உயர்த்துங்கள். அவ்வப்போது கஷ்டமாக இல்லையே எப்போதாவது கஷ்டமாக தோன்றுகிறதா? இல்லை. ஏனெனில் உங்களுக்குத், தெரியும் தூய்மை என்பது நமது பிறப்புரிமை ஆகும். எனவே தூய்மை என்பது பிரம்மச்சரியம் மட்டுமல்ல ஆனால் மனம் - சொல் - செயல், தொடர்பு உறவு முறைகள் அனைத்திலும் தூய்மையை கையாள்வது ஆகும். தூய்மை என்ற சம்ஸ்காரத்தை சுலபமாக தாரணை செய்பவர்கள். தூய்மையாக இருப்போம் என்று சங்கல்பம் வைத்துள்ளீர்கள் ஆனால் இப்பொழுது உள்ள சமயத்திற்கேற்ப பாப்தாதா சமயத்தைப் பற்றி எச்சரிக்கைக் கொடுத்துக் கொண்டுள்ளார். எனவே எப்படி தூய்மை என்ற விரதத்தை தைரியத்தோடு கடைப்பிடித்து அதையே தன்னுடைய சுய தர்மமாக புரிந்து கொண்டு தாரணை செய்கிறீர்களோ, அப்படியே இன்னொரு பூதம் கோபம் என்பது. இன்று பாப்தாதா இதையும் கேட்கின்றார். ஒரு மகா பூதத்தை விரதம் கடைப்பிடித்து எண்ணத்திலிருந்தும் மாற்றி விட்டீர்கள் ஆனால் இன்னொரு பூதம் கோடம் என்பது அந்த கோடம் என்ற பூதத்தை வெற்றி அடைய வேண்டும். சங்கல்டம் வைப்பீர்களா? அல்லது இரு வேறொரு விகாரம் தானே என்று விட்டுவிடுவீர்களா? ஏனென்றால் கோபம் எல்லோருடைய தொடர்பிலும் வருவது, இன்றைய நாளில் பிறந்த நாளைக் கொண்டாடும்பொழுது ஒவ்வொருக் கொருவர் பரிசும் தருகின்றனர். எனவே இன்று பாப்தாதா இதை தான் விரும்புகின்றார். எப்படி தைரியத்துடனும் பாபாவின் உதவியோடும் முதல் நம்பர் விகாரத்தை பெரும்பாலும் வெற்றியடைந்து சென்றுக் கொண்டிருக்கிறீர்களோ, அதேபோல கோபத்தையும் வெற்றி அடைய முடியுமா? ஏனென்றால் எந்த பூதமாக இருந்தாலும் தொல்லைத் தரும். கோபம் என்ற பூதமோ பிறருடைய தொடர்பில் வருவது உறவுகளிலும் வருவது தன்னுடைய மனதிலும் கோடம் வரும்பொழுது அந்த கோபத்தால் பெரிய துக்கத்தை உணர்கின்றீர்கள். எனவே பாபாவின் பிறந்த நாளை கொண்டாட வந்துள்ள நீங்கள் பாப்தாதா விரும்புகின்றார். பாரதவாசிகளோ, அயல்நாட்டுக் குழந்தைகளோ எல்லோரிடமிருந்தும் கோபத்தையே பரிசாக பெற விரும்புகின்றார். முடியுமா? இன்றைய நாளில் பாபாவிற்கு கோபத்தை பரிசாக தருவோம் என்று மனதால் மட்டுமல்ல களவிலும் கூட இல்லாத அளவிற்கு உறுதியாக கோபத்தை

பரிசாக கொடுத்து விடுகிறோம் என்று தன் மனதில் சங்கல்பம் வைத்துள்ள குழந்தைகளுக்கு தைரியத்தோடு முன்னேறுவதற்கான சக்தியும் உள்ளதா? யார் பாபாவின் தைரியத்தோடு சங்கல்பம் வைக்க முடிகிறதோ செய்வோம் மற்றும் பாபாவிடமிருந்து பரிசு பெறுவோம் பரிசாகக் கொடுங்கள் மேலும் பரிசைப் பெறுங்கள். ஒருவேளை நீங்கள் கோபத்தை வெற்றி அடைந்து விட்டால் பிறரையும் வெற்றி அடைகின்ற அளவிற்கு தைரியம் வந்து விடும். எனவே சொல்லுங்கள் நான் இந்த பரிசை கொடுத்து விட்டு பாபாவிடமிருந்து பரிசைப் பெறுவேன் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது, கொடி அசைக்கிறார்கள். குமாரியும் இருக்கிறார்கள் பாருங்கள். பாப்தாதாவிற்கு குழந்தைகளின் தைரியத்தைப் பார்க்கும்பொழுது மிகவும் பிடித்திருக்கிறது. நீங்களும் காட்சியைப் பார்க்கின்றீர்கள் தானே! போட்டோ பிடியுங்கள் பிறகு கை உயர்த்துங்கள் ஆம் எல்லோரையும் போட்டோ பிடியுங்கள். பாப்தாதா இந்த தைரியத்திற்காக உங்களுக்கு தினமும் அமிர்தவேளையில் சந்திக்க வருகின்றார் அந்த சமயத்தில் விசேஷமாக சுவடமாக அனுபவி ஆத்மா ஆவதற்காக வாழ்த்துக்களைத் தருவார். ஏனென்றால் இவ்வளவு பேர் இருக்கின்றீர்கள் அவரவர் இடங்களில் இருந்தாலும் உலக மக்கள் இவ்வளவு பேர் கூட்டமாக இருப்பதை பார்க்கின்றார்கள். இவர்கள் குடும்பத்தையும் காப்பாற்றி வருகிறார்கள். வீடு வாசல் விட்டு செல்லவில்லை ஆனால் தூய்மையான இல்லற வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார்கள் என்று எல்லோரும் பார்த்தால் அங்கு என்ன நிகழும்? உங்கள் அனைவர் மனதிலும் உள்ள கப்பாவனை ஆத்மாக்களை வரிசையில் கொண்டு வந்து நிற்க வைத்து விடும். அதையும் நீங்கள் பார்ப்பீர்கள் ஏனென்றால் கோபம் வெளிப்படையாக தென்படுகிறது. எப்பொழுது நடைமுறையில் பார்க்கின்றார்களோ, இவர்கள் தூய்மை என்று சொல்வதுமட்டுமல்ல தூய்மையாகவே வாழ்ந்து காண்பிக்கிறார்கள். நீங்கள் விரும்புகின்ற பிரத்யட்சம் இந்த தூய்மையின் பிரத்யட்சத்தின் மூலமாகத்தான் அனைவரையும் கவர்ந்து இழுக்கப்பட்டு தானாகவே வருவார்கள் ஆனால் சொல்லட்டுமா? மேலும் சொல்லட்டுமா? கோடம் வருவதற்கான முக்கிய காரணம் ஆங்காங்கே இருக்கின்ற பொறாமை மற்றும் பிறரைப் பார்த்து நடக்கும் பொழுது வீண் எண்ணம் என்ற விதையும் கோபத்தைக் கொண்டு வருகிறது. ஏனென்றால் வீண் எண்ணம் தான் விதை ஆகும், இந்த விதையால் கோபம் உற்பத்தி ஆகிறது மேலும் இதற்கு ஒரு வார்த்தை

நிமித்தமாக இருக்கிறது. அந்த ஒரு வார்த்தை என்ற விதையை அழித்து விட்டால் சகஜமாகி விடும். அந்த ஒரு வார்த்தை ஏன், இது ஏன்? இது ஏன் நடந்தது? இவர் ஏன் செய்தார்? இவர் ஏன் செய்கிறார்? இந்த ஏன், ஏன் என்ற வார்த்தை மிகப் பெரிய வரிசையாக உள்ளது. மேலும் பாருங்கள் இந்த க்யூ என்ற இங்கிலீஷ் வார்த்தையை எழுதுவது எவ்வளவு கடினமாக உள்ளது. அதே ஏன் என்று எழுதுங்கள் எவ்வளவு சகஜமாக உள்ளது. எனவே பாப்தாதா இதைத்தான் விரும்புகின்றார். இந்த ஏன் என்ற வார்த்தையின் வரிசையை அழித்து விடுங்கள். அப்பொழுது நீங்கள் விரும்புகின்ற மிக விரைவில் பாபாவை பிரத்யட்சம் உங்கள் அனைவரின் விருப்பப்படி ஒவ்வொரு உள்ளத்திலும் பாபாவின் அன்பு என்ற கொடி பறக்க ஆரம்பிக்கும். கொடி பறந்ததும் மனதில் பாடலும் எழும். எல்லோருடைய உள்ளங்களிலும் நமது தந்தை வந்து விட்டார், வந்து விட்டார் என்று பாடுவார்கள். இனிமையான தந்தை வந்து விட்டார். இதைத்தானே நீங்கள் விரும்புகின்றீர்கள். எல்லோருடைய உள்ளங்களிலும் வெகு விரைவில் பிரத்யட்சத்தின் கொடி பறக்க வேண்டும். எனவே இதற்கான காரணம் ஏன்? என்ன? எப்படி நடக்கும் இந்த கே, கே என்ற மொழியை அழித்து விட்டு என்ன சொல்ல வேண்டும் அதிசயம் என்று சொல்லுங்கள். அப்போது விந்தை நடைபெறும். எப்படி ஏன் என்று சொல்லாதீர்கள். பாப்தாதா குழந்தைகளுக்கான விடுதி திறக்கும்பொழுது இது பாகிஸ்தானில் நடைபெற்ற விஷயம், ஆதியில் ஜெகதாம்பா குழந்தைகளுக்கு இதையே சொல்வார் -ஏன்? எதற்கு? எப்படி? என்று சொல்லாதீர்கள். இப்படி அதிகமாக கேள்வி கேட்பவர்கள் யார்? அப்படி கேட்பது நன்றாக இருக்கிறதா? எனவே இப்போது ஏன்? என்ன? என்ற வரிசையை ஏற்படுத்தாதீர்கள். யார் எது சொன்னாலும் ஹான்ஜி, அச்சா ஜி, பகுத் அச்சா, (சொல்லுங்கள், நல்லது, மிக்க நல்லது நாம் அனைவரும் இணைந்தே செய்வோம் புறப்போம் இப்படிப்பட்ட வார்த்தைகளையே பேசுங்கள். இப்படி தன் வார்த்தைகளை மாற்றிக் கொள்ள முடியுமா? ஏன்? ஏன்? கிடையாது. அந்த வரிசையை விட்டு விடுங்கள். அந்த வரிசையை நிறுத்தி விட்டால் இந்த வரிசை ஆரம்பமாகும்.

அனைவரும் பாப்தாதாவிற்கு சிவனுக்கு எருக்கம்பூவை அர்ப்பணிக்கிறார்கள். இன்று சிவராத்திரி கொண்டாடுகிறார்கள் சிவளின்

பிறந்த நாளை கொண்டாடும் நாளில் இந்த கோபம் என்ற எருக்கம்பூவை பாப்தாதாவிற்கு அர்ப்பணம் செய்யுங்கள். நீங்கள் நிலைக்கண்ணாடி (தர்பன்) ஆகி விடுவீர்கள். பிடித்திருக்கிறதா பிடித்துள்ளதா? நல்லது. நீங்கள் அனைவரும் ஹோலி கொண்டாட வருகிறானர். அல்லலா? பாப்தாதாவும் வருவார் அப்பொழுது முடிவு (ரிசல்ட்) பார்ப்பார். களைத்து விட வேண்டாம், மூடியுமா. நிச்சயபுத்தியுடன் செய்யுங்கள். செய்து தான் ஆக வேண்டும். மேலும் கை உயர்த்துனீர்கள். கை உயர்த்துவது என்றால் பாபாவிடம் கொடுத்து விட்டது ஆகும். கொடுத்து விட்டீர்கள் தாளே? மீண்டும் கை உயர்த்துங்கள். தாதிமார்களும் பார்க்கின்றார்கள். பார்க்கின்றீர்கள் தானே? கை தட்டுங்கள். தைரியத்தையும் ஒருபொழுதும் விடாதீர்கள். சிறிதளவும் தைரியம் குறைந்தாலும் அடுத்தடுத்து தைரியமாக முன்னேறிக் கொண்டே இருங்கள் விட்டு விட வேண்டாம் முன்னேறிக் கொண்டே இருங்கள். பாப்தாதா கம்பைண்டாக (இணைந்து இருக்கிறார். சொல்கிறீர்கள் அல்லவா? கூட இருப்பதாக மட்டுமல்ல. இணைந்தே இருக்கின்றார். எனவே அப்படி ஏதாவது நிகழ்ந்து விட்டால் அந்த சமயத்தில் பாப்தாதா கம்ளபண்டாக இருக்கிறார் என்ற நினைவை முன்னால் கொண்டு வந்து நீங்கள் அங்கே அர்ப்பணம் ஆகி விடுங்கள் ஆனால் பாப்தாதா விரும்புகிறார். குழந்தைகள் அனைவருமே நம்பர்-1 ஆக இருக்க வேண்டும். கொடுத்து விட்டப் பொருள் அடுத்தவர் பொருள் ஆகி விட்டது. கை உயர்த்தி விட்டீர்கள் என்றால் கொடுத்து விட்டீர்கள் என்பதாகும். இப்பொழுது அது உங்களுடையது அல்ல, பிறருடைய பொருள் ஆகும். எனவே எண்ணத்தில் வந்தாலும் புரிந்து கொள்ளுங்கள் அடுத்தவர் பொருளில் கை வைப்பது அது தவறு என்றே சொல்லப்படும் கொடுத்தப் பொருளைத் திரும்பப் பெறக் கூடாது. ஏனென்றால் அது என்னுடையது அல்ல.

இன்று பாப்தாதா நாலாபுறமும் உள்ளக் குழந்தைகளைப் பார்க்கின்றார். யாரெல்லாம் ஸ்கிரீன் மூலமாக பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ அங்கே இருந்தபடியே குஷி குஷியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் மேலும் சங்கல்பமும் வைக்கின்றீர்கள், மதுபன் மற்றும் சென்டர் எல்லாமே என்ன ஆவீர்கள்? என்ன ஆவீர்கள்? அனைத்து சென்டரும் நிர்விக்ன பவ (தடைகள் அற்ற நிலை என்ற பேரதானி ஆகி விடுவீர்கள். பிடித்துள்ளதா? ஏளென்றால் பாப்தாதா விரும்புகிறார் இப்பொழுது

எதிர்பாராத விதமாக சூழ்நிலைகள் வரும்பொழுது துக்கம், அசாந்தியின் காரணமாக நீங்கள் அனைத்து ஆத்மாக்கள் மீதும் இரக்கம் காண்பிக்க வேண்டும். ஏனென்றால் நீங்கள் தான் எல்லோருக்கும் மூதாதையர்கள். பூஜைக்குரியவர்களாகவும் நீங்களே இருக்கின்றீர்கள். பூர்வஜ் மூதாதையரும் நீங்களே எனவே மூதாதையராக இருப்பவர்கள் எந்த ஆத்மாவும் துக்கமடைவதையோ தொல்லை அனுபவிப்பதையோ பார்த்திருக்க முடியாது. யாரிடம் அன்பு உள்ளதோ அங்கு இரக்கம் தானே வருகிறது. ஏனென்றால் அவர்கள் படும் துக்கத்தை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே பாபா நினைக்கிறார் சமயம் உங்களை மாற்றுமா, அதற்கு முன்னதாகவே நீங்கள் முயற்சி செய்து பலனை இப்பொழுதிலிருந்தே அனுபவம் செய்ய வேண்டும். ஏனென்றால் உங்களுக்கு கற்பிப்பவர் சமயம் அல்ல, நேரம் உங்களது டீச்சர் அல்ல. எனவே ஹோலி அன்று ஒவ்வொருவரும் தன்னுடைய ரிசல்ட்டை நீளமாக எழுத வேண்டாம். படிப்பதற்குக் கூட நேரம் இருக்காது ஆனால் பாப்தாதா முன்புக்கூட சொல்லி இருக்கிறார். உங்களுக்கு கிடைக்கின்ற வரதான கார்டு எவ்வளவு சிறியதாக உள்ளது. அதில் ஓகே. என்று வார்த்தை மட்டுமே எழுத வேண்டும். அப்படி நீங்கள் முயற்சி செய்யும்பொழுது இடையில் ஒரு கோடு போட்டு விடுங்கள். ஈஸி தானே நிறைய காகிதம் வீண் செய்ய வேண்டாம். அப்படி அதிக முறைத் தவறு நடந்து விட்டால் ஒரு முறை இரண்டு முறை கோடு போட்டுக் கொண்டே இருங்கள். இதனை ஹோலிக்கு முன்னதாகவே மதுபன்னுக்கு அனுப்பி வைக்க வேண்டும். எல்லோருடையதையும் ஒன்றாகவே அனுப்பி வைக்கலாம். டீச்சர் அனுப்பி வைப்பார்கள், பிறகு அதனுடைய ரிசல்ட் பாப்தாதாவிற்கு வந்து சேரும். இதில் நம்பர்-1 யார் என்று தெரியவரும். பிறகு பாப்தாதா உங்கள் அனைவருக்கும் பன்மடங்கு உளமார்ந்த அன்பினை பரிசாகக் கொடுப்பார். நல்லது. இரட்டை அயல்நாட்டவரும் இருக்கின்றீர்கள் தானே கை உயர்த்துங்கள். இதில் நீங்கள் நம்பர் எடுப்பீர்களா? பார்ப்போம் அயல் நாட்டவரா? பாரதவாசிகளா? நம்பர் யர் எடுப்பீர்கள். நல்லது, பாப்தாதா அனைவரையும் நம்பிக்கைக்குரிய வராக பார்க்கவில்லை. பாபாவின் ஆசைகளைப் பூர்த்தி செய்யவராக, பாபாவின் ஆசை தீடங்களாக பார்க்க விரும்புகிறார்.

மதுபன் என்ன செய்வீர்கள்? மதுவனத்தைச் சார்ந்தவர்கள் கை உயர்த்துங்கள். மேலே கீழே உள்ள மதுபன்வாசி அனைவரும். மேலே இருப்பவரும் கையை நீளமாக உயர்த்துங்கள். கையை அசையுங்கள். மதுபன்னும் நம்பர் எடுக்க வேண்டும் தானே மதுபன் தான் நம்பர் எடுக்க வேண்டும். எடுப்பீர்களா, ஏனென்றால் மதுபன்னைப் பார்த்துத்தான் எல்லோருமே வெகு விரைவில் காப்பி செய்வார்கள். நல்லது தானே அது. நல்லது.

இப்பொழுது முதல் முறையாக வந்த கை உயர்த்துங்கள். எழுந்து நில்லுங்கள். அதிகம் பேர் வந்து இருக்கின்றார்கள். பாப்தாதா முதன் முறையாக வந்திருப்பவர்களுக்கு வேகமாக சென்று முதல் நம்பரில் வருவதற்கான வாய்ப்பு தருகின்றார். நன்றாக இருக்கிறதா தைரியம் உள்ளவர்கள் மேலும் உங்களோடு பாபா கம்பைண்டாக இருக்கின்றார். கம்பைண்ட்டு சக்தி மூலமாக எது வேண்டுமானாலும் செய்ய முடியும். அப்படி ஏதேனும் வந்தால் பாபாவிடம் கொடுத்து விடுங்கள். நீங்கள் அதனை பயன்படுத்த வேண்டாம். குழந்தைகளைப் பார்த்திருக்கிறீர்களா தனக்கு பிடிக்காத எந்த ஒரு பொருளையும் சிறு குழந்தைகள் என்ன செய்வார்கள் தனக்கு வேண்டாம் என்று அம்மா, அப்பாவிடம் கொடுத்து விடுவார்கள். இங்கேயோ பாபா உங்களுக்கு உதவி செய்பவர் மேலும் சதா கூடவே இருப்பவர். எனவே முதல் முறையாக வந்திருப்பவர்களுக்கு முதன் முதலில் வந்ததற்காக பல பல மடங்கு வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள். நீங்கள் கை தட்டுவதை உள்நாடு அயல் நாட்டிலுள்ள அனைத்துக் குழந்தைகளும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இது அறிவியலின் அதிசயம் தானே. பாப்தாதா இந்த சேவையில் நிமித்தமாக இருப்பவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். இந்த சமயத்தில் உங்களுக்கு இந்த சாதனங்கள் மிக அவசியமாக உள்ளது. இப்பொழுது மேலும் புது புது சாதனங்கள் உருவாகிக் கொண்டே இருக்கிறது. பக்தர்கள் மீதும் பாப்தாதாவிற்கு கருணை ஏற்படுகிறது. அவர்களும் அதிகமாக முயற்சி செய்கிறார்கள். நீங்கள் எல்லோரும் அன்பில் இருக்கின்றீர்கள் அவர்கள் முயற்சி செய்கிறார்கள். நீங்கள் உழைக்க வேண்டாம். அன்பிலேயே இருங்கள். நல்லது. அமருங்கள்.

ஓம் சாந்தி எனும் மந்திரத்தை ஒரு ஆயுதமாக பயன்படுத்துங்கள். யாரிடம் இந்த சஸ்திரம் இருக்கிறதோ அவர்கள் தன்னை தைரியவானாக உணருவார்கள். போர் படையில் இருப்பவரும் தன்னை தைரியவானாக நினைக்கிறார்கள். நல்லது.

நாலா புறமும் பாபாவிடம் கம்பைண்டாக இருக்கக் கூடிய குழந்தைகளைப் பாபா பார்த்துக் கொண்டிருக்கின்றார். குழந்தைகள் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் இருக்கின்றார்கள் ஆனால் இப்படி எல்லோருமே கேட்பதும், பார்ப்பதும் இல்லை, அப்படி இருப்பவர்களும் முரளி மூலமாக கண்டிப்பாக கேட்டார்கள். எனவே நாலாபுறமும் உள்ள பாபாவின் அன்பான சகயோகி இனிமையிலும் இனிமையான அன்பிலும் அன்பான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் பல பலமடங்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். மேலும் அன்பையும் வழங்குகின்றார். மேலும் பிரத்யட்சம் என்ற கொடியும் வெகு விரைவில் பறக்க விடட்டும் என்ற சங்கல்பமும் செய்கின்றார். சமயத்தையே நினைத்துக் கொண்டு இருக்காதீர்கள். சமயத்தை ஆசிரியராக வைத்துக் கொள்ளாதீர்கள் பாபாவே உங்களுக்கு அப்பாவாக, ஆசிரியராக, சத்குருவாக இருக்கும்பொழுது உங்களுடைய ஜெகதாம்பாவும் அதையே செய்து தான் நம்பரை அடைந்து விட்டார். பாபா சொன்னால் ஜெகதாம்பா செய்வார் அப்படிப்பட்ட தீவிர முயற்சி செய்தார் நம்பரை அடைந்தார். இதை நீங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்கிறீர்கள் தானே. எனவே நீங்களும் தாயாகிய ஜெகதாம்பாவை பின்பற்றுங்கள். நல்லது. அனைவருக்கும் அன்பு நினைவுகள், மிக மிக உளமார்ந்த ஆசிர்வாதங்களையும் சுவீகாரம் செய்யுங்கள். அத்தோடுமட்டுமல்லாமல் குழந்தைகளை தன் எஜமானனாக கருதி நமஸ்காரம் செய்கின்றார்.

<u>சேவைக்கான முறை: போபால் ஜோனை சார்ந்தது</u>: நல்லது மிக்க நல்லது போபால் ஜோன் பெயரே பூபால் பூ என்று சொல்வது எதனை? பூமியை அதனைக் காப்பாற்றுபவர் நீங்கள் மண்ணின் நட்சத்திரங்களாகி ஆத்மாக்களை பறக்க வைப்பவர்கள் நடத்தி செல்பவர்கள் அல்லவே பறக்க வைப்பவர்கள் தானே அனைத்திலும் மிக சுலபமான சாதனம் பறப்பது, மற்றும் பறக்கச் செய்வது. எனவே போபாலைச் சார்ந்தவர்கள் அனைவரும் தானும் பறந்து பிறரையும் பறக்க வைப்பவர்கள்.

சரிதானே. அப்படிதானே செய்கிறீர்கள்? அல்லது முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்களா? இல்லை. பறக்க வைக்கின்றீர்கள். மேலும் பறக்க வைத்துக் கொண்டே இருப்பீர்கள். பாப்தாதாவிற்கு அனைத்து ஜோன் மீதும் அளவு கடந்த அன்பு உள்ளது. பாப்தாதா முன்பு கூட சொல்லி இருக்கிறார். எந்த ஜோனில் அதிகமான வாரிசு குழந்தைகள் இருக்கிறார்களோ அவர்களே நம்பர்-1 வருவார் என்று. சாதாரணமானவர்கள் வந்துக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் வாரிசு தரமான குழந்தைகள் எந்த ஜோனில் கணக்கெடுத்துள்ளீர்கள். வெறும் பெயர் பட்டியல் மட்டும் அனுப்பி விட்டால் போதாது அது இங்கே மிகவும் சரியாக கவனிக்கப்படும். அப்படி பார்க்கும்பொழுது எந்த ஜோனில் வாரிசு தரமான குழந்தைகள் இருக்கிறார்களோ அவர்களுக்கு நம்பர் தரப்படும். நிகழ்ச்சிகளும் அனைவருக்காகவும் செய்து கொண்டிருக்கிறீர்கள் இப்பொழுதும் செய்து கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதாவிடம் அளைத்து செய்திகளும் வந்துக் கொண்டிருக்கின்றன. ஏனென்றால் வாரிசுத்தரமான குழந்தைகள் தான் நமது ராஜ்யத்தில் ராஜ்ய அதிகாரி ஆவார்கள். அப்படி ராஜ்ய அதிகாரி தயாராகி விட்டால் அனைவரும் சேர்ந்து ராஜ்யத்தில் வருவதற்கு நேரம் அதிகம் பிடிக்காது. இப்படி போபால் நம்பர் பெறுவீர்களா? யார் ஒருவர். தானே வாரிசு குழந்தையாக இருக்கின்றாரோ அவர் மிகவும் அதி தீவிரமாக சேவை செய்து (கோர்ஸ்) பிறரையும் தன்னைப் போல் வாரிசாக வெகு விரைவாகவே மாற்றி விட முடியும். சாதாரண கோர்ஸ் அல்ல. வேகம் நிறைந்த கோர்ஸ். ஆரம்பிக்கும் பொழுது பாப்தாதா சிந்தியில் ஒரு வார்த்தை சொல்வார். அந்த சமயத்தில் ஒரு பைசாவிற்கான குல்ஃபி அந்த ஆதியில் சொன்ன வார்த்தை இப்பொழுது நடைமுறைக்கு வந்துள்ளது. சமயத்திற்கும் வரதானம் உள்ளது. நீங்கள் சிறிதளவே திட சங்கல்பம் வைத்தால் போதும் பறந்தே ஆக வேண்டும். நடந்து செல்லக் கூடாது பறக்க வேண்டும். பறக்க வைக்க வேண்டும் போபால் வாய்ப்பை எடுத்துக் கொண்டீர்கள். மிக நன்றாக செய்தீர்கள். இப்பொழுது நம்பர் முதலில் வர வேண்டும். நல்லது.

பாப்தாதா அனைத்து ஜோனிலும் இருக்கின்ற வாரிசு மற்றும் மைக் அதாவது பிரபாவத்தை ஏற்படுத்தக் கூடிய மைக்காக அவருடைய அனுபவத்தைக் கேட்டு பிரேரணை தருகின்ற அளவிற்கு நாமும் இவ்வாறு மாற வேண்டும் என்று யாரையுமே திருப்தி அடையச் செய்ய

வேண்டும். அப்படிப்பட்ட பெயர் பட்டியலை அனைத்து ஜோனிலிருந்தும் அனுப்பி வைக்க வேண்டும். இன்று பாப்தாதா பார்த்தார் டெல்லியைச் சார்ந்தவர்கள் அப்படிப்ட்ட பெயர் பட்டியலை அனுப்பி வைத்தார்கள். அவர்களுக்கு பாப்தாதா வாழ்த்துக்களை தருகின்றார். இப்படியே அனைத்து ஜோனிலிருந்தும் வாரிசுக் குழந்தைகளின் பெயர் பட்டியலை அனுப்பி வைத்தால் ஒட்டு மொத்தமான ரிசல்ட் உங்களுக்கும் தெரிய வரும் இதுவரை எத்தனை வாரிசுகள் தயாராகி உள்ளார்கள் என்று உங்களுக்கு சொல்லப்படும். சோதனை செய்யப்படும். நீங்கள் அனுப்பும் பட்டியலை அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ரகசியமான முறையில் சோதனை செய்யப்படும். நல்லது. ஆரம்பத்திலேயே வாழ்த்துக்களும், அன்பும் கிடைத்தது எல்லோருக்கும். இப்பொழுது பாப்தாதா பெயர் உட்பட ஒவ்வொரு குழந்தைகளுக்கும் மனமார்ந்த பன்மடங்கு வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார். பாபாவிடம் வதனத்தில் அனைத்துக் குழந்தைகளின் சித்திரமும் தென்படுகின்றது. பாப்தாதா இன்று பிறந்த நாளைக் கொண்டாடினார். குழந்தைகளும் பாபாவின் பிறந்த நாளைக் கொண்டாடினார்கள். இருவருக்குமான வாழ்த்துக்கள். நல்லது.

லட்சு தாதியிடம்: நன்றாக செய்கிறார் அலங்காரம் நன்றாக இருக்கிறது.

தாதிகளுடன்: அன்பிலேயேத் தான் இருக்கின்றீர்கள். நீங்கள் அன்பில் இல்லையென்றால் வைப்ரேஷன் எப்படிக் கிடைக்கும்.

மோகினி சகோதரியிடம்: நன்றாக இருக்கிறீர்களா? நன்றாகத்தான் இருப்பீர்கள். சரியாகி விடும். சங்கல்பத்தில் சக்தி உள்ளது. சங்கல்பத்தை நீங்கள் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறீர்கள். பாபாவின் உதவியும் உள்ளது. பாபாவின் உதவி இருக்கிறது ஆனால் அன்பும் இருக்கிறது அல்லவா? எனவே தான் பிறருடைய உதவியும் கிடைக்கிறது. நல்லது. நன்றாக இருங்கள்.

பர்தாதியுடன்: சாலிகிராம் ஆகிய உங்களுக்கு பாபாவுடன் பிறந்த நாள் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்

சாந்தாமணி தாதியிடம்: அன்பு உள்ளதா பாபாவிடம் அன்பு உள்ளதா எல்லோரும் வாழ்த்துக்களை தருகின்றீர்கள் மிக்க நல்லது.

ரமேஷ் சகோதரரிடம்: நல்லது. மேலும் மேலும் முன்னேறிக் கொண்டே செல்கின்றீர்கள். லட்சியம் வைத்து எல்லோரும் ஒருவருக்கொருவர் சகயோகியாக இருந்து முன்னேறி பறந்து செல்வீர்கள்.

இப்பொழுது பறந்து செல்லுங்கள். பறக்க வையுங்கள். நடந்து செல்லும் நேரம் முடிந்து விட்டது. எவ்வளவு லேசாக இருப்பீர்களோ அவ்வளவு பறந்து செல்வீர்கள். பிறரையும் பறக்க வைப்பீர்கள். இப்போது பறக்க வைக்க வேண்டிய சீசன். நல்லது.

(நிர்வையர் சகோதரர் அனைவரது நினைவுகளையும் கொடுத்தார்) அனைவருக்கும் நினைவை வழங்குங்கள். யாரெல்லாம் இங்கு கார்டு அனுப்பி உள்ளார்களோ அனைவருக்கும் அன்பு நினைவுகள். இப்படி ஒருவருக்கொருவர் அன்பு நினைவுகளை அனுப்புவது எழுதுவது இவை எல்லாம் ஒரு பழக்கம் தான். இப்பொழுது நடைபெறும் சீசனோ தானும் பறந்து பிறரையும் பறக்க வைப்பதற்காக எனவே டபுள் லைட்டாக இருங்கள்.

பூபால் சகோதரருடன்: நாலாபுறமும் எல்லாமே நன்றாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது அல்லவா!

அங்கில் ஆண்டி மற்றும் முரளி தாதாவுடைய நினைவும் கொடுக்கப்பட்டது: பாப்தாதாவைச் சந்திக்க அவரைச் சார்ந்தவர்களும் வந்துள்ளார்கள். அவர்கள் இருவருமே நிமித்தமாக இருக்கின்றார்கள்., அவரவர்கள் காரியத்தில் அவர்கள் விசேஷமாக இருக்கின்றார்கள்.

மோகினி சகோதரி மருத்துவருடன்: சேவை மட்டும் செய்ய வேண்டாம் ஆனால் தன்னுடைய பாபாவின் அன்பு கலந்த தைரியத்தையும் உற்சாகத்தையும் தர வேண்டும் நீங்கள் இரட்டை மருத்துவர் அல்லவா? எனவே இரண்டு காரியம் செய்ய வேண்டும்.

பாப்தாதா தன்னுடைய கரங்களால் கொடியேற்றுகின்றார்: இன்று சிவஜெயந்தி நன்னாளில் நீங்கள் மற்றும் பாபாவின் பிறந்த நாளுக்கான நினைவை கொண்டாடும் முகமாக இந்த கொடி பறக்க விடப்படுகிறது. உங்கள் அனைவருக்காகவும் கொடியேற்றப்பட்டுள்ளது. சாலிகிராம் அல்லவா நீங்கள். ஒவ்வொரு சாலிகிராம்மும் பாபாவுடன் துணையாக இருப்பவர்கள். எப்படி பாபாவிற்கு பூஜை நடை பெறுகிறது அப்படியே சாலிகிராமுக்கும் பூஜை நடைபெறுகிறது. இவைகளின் அடையாளமாகத்தான் பிந்து புள்ளி வைக்கப்படுகிறது. ஆகவே சிவராத்திரி நன்னாளில் பிந்துவிற்கு அதிகம் மகிமை உள்ளது. இன்று இந்த கொடி ஏற்றப்பட்டுள்ளது ஆனால் அந்த நாள் வெகு விரைவில் வரப்போகிறது அப்பொழுது எல்லோருடைய மனதிலும் பாபாவின் அன்பெனும் கொடி பறக்க விடப்படும். இப்பொழுது பாபா சைகை செய்தால் உடனே நீங்கள் செய்வீர்கள் அல்லவா? அதுபோலவே பிரத்யட்சமும் வெகுவிரைவில் நடைபெறும், வந்தே வந்து விட்டது. உங்களுக்கு முன்பாகவும் அதே காட்சி அனைவர் வாயிலிருந்தும் இதே வார்த்தை வெளிபடும் எங்கள் தந்தை வந்து விட்டார். இப்பொழுது தீவிர முயற்சி செய்து அந்த சமயத்தை வெகு விரைவாக அருகே கொண்டு வந்தே ஆக வேண்டும். வரத்தான் வேண்டும். நடக்கத்தான் போகிறது. எல்லோரும் சொல்லத்தான் போகிறார்கள். என்னுடைய அப்பா வந்து விட்டார் என்று நல்லது. உங்கள் அனைவருக்கும் பாப்தாதா விசேஷமாக அன்பு எனும் மாலை அணிவிக்கின்றார். முன்னேறிக் கொண்டே இருங்கள். பறந்து கொண்டே இருங்கள். பறக்க வைத்துக் கொண்டே இருங்கள், நல்லது.

இன்டர்நேஷனல் குமாரிகளின் ரிட்ரீட்: குமாரிகளை பூஜிக்கிறார்கள் ஏனென்றால் குமாரிகள் பவித்திரமாக இருக்கின்றார்கள். பவித்திரமாக இருப்பதால் பூஜை நடைபெறுகிறது. நீங்கள் அப்படி தன்னை பூஜைக்குரிய ஆத்மாவாக நினைக்கிறீர்களா? நினைக்கிறீர்களா? பாஷை புரியவில்லையா? தன்னையும் தூய்மை செய்து பிறருக்கும் தூய்மையாக வாழ்வதற்கான படிப்பினை செய்பவர் தான் குமாரி என்பவர். எனவே முன்னேறிக் கொண்டே இருங்கள். களைப்படைய வேண்டாம் யாரையும், பார்க்க வேண்டாம். பாபாவைப் பின்பற்றுங்கள். பின்பற்றி பாபா மூலமாக அநேக சக்திகளை வரதானமாக பெற்று ஆத்மாக்களைப் பறக்க வையுங்கள். ஏனென்றால் குமாரிகள் லேசாக

இருக்கிறீர்கள். பாரம் இல்லை. பிறரையும் அவ்வாறே பறக்க செய்யுங்கள், பாப்தாதாவிற்கு உங்கள் அனைவரையும் பார்த்து மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஏனென்றால் ஒவ்வொரு குமாரியும் 100-பிராமணர்களைக் காட்டிலும் உத்தம் மானவர்கள். அந்தளவிற்கு தன்னுடைய சுயமரியாதையை உணர்ந்து இருக்கிறீர்களா? மற்றபடி நன்றாக செய்துள்ளீர்கள். பயிற்சி எடுத்துள்ளீர்கள். இப்பொழுது தயாராகி பிறருக்கும் பயிற்சி கொடுங்கள். நல்ல ரிசல்ட்டை உருவாக்குங்கள். செய்தி வரும், செய்திக் கொடுத்துக் கொண்டே இருங்கள். இங்கே பாபாவிடம் வந்து சேர்ந்து விடும். நல்லது தைரியம் உள்ளதா இப்பொழுது ஊக்கம் உற்சாகத்தோடு பறந்து செல்லுங்கள் நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋

## 28.02.2010 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தேக உணர்வின் 'நான்' 'நான்' என்ற வார்த்தையை ஹோலியில் எரித்து விட்டு பரமாத்மா தொடர்பு என்னும் வர்ணத்தைப் பூசிக் கொண்டு ஹோலியைக் கொண்டாடுங்கள்!

இன்று ஹோலியஸ்ட் (புனிதமான) பாபா தன்னுடைய ஹோலி குழந்தைகளுடன் ஹோலி கொண்டாட வந்துள்ளார். நாலாபுறமும் உள்ள குழந்தைகள் அனைவரும் வெகு தொலைவில் இருந்தாலும் அன்பினால் உள்ளத்தில் கலந்திருக்கிறார்கள். பாப்தாதா நாலாபுறமும் இருக்கின்ற குழந்தைகளின் நெற்றியில் பாக்கியத்தின் நட்சத்திரம் மின்னுவதை பார்த்துக் கொண்டிருக்கின்றார். இவ்வளவு பெரிய பாக்கியம் முழு கல்பத்திலுமே யாருக்குமே கிடைக்க முடியாது. இந்த சங்கமயுக பிராப்தியின் ஆதாரத்தால் குழந்தைகளான நீங்கள் தான் இவ்வளவு உயர்ந்த தூய்மையை அடைகிறீர்கள். அதனால் எதிர் காலத்திலும் நீங்கள் இரட்டை தூய்மை உடையவர்களாக மாறுகின்றீர்கள். ஆத்மாவும் தூய்மை, அங்கே சரீரமும் தூய்மை முழு கல்பத்திலும் சுற்றிப் பாருங்கள், எந்த ஒரு தர்ம ஆத்மாவும் கூட இரட்டை தூய்மையானவர்களாக இருக்க முடியாது. குழந்தைகளான நீங்கள் இரட்டை தூய்மையும் அடைகின்றீர்கள். மேலும் இரட்டை தூய்மையின் அடையாளமாக இரட்டை மகுடதாரியாகவும் மாறுகிறீர்கள்.

இன்று ஹோலியை அனைவரும் கொண்டாடுகிறார்கள் ஆனால் நீங்கள் இந்த சமயத்தில் இரண்டு விதமான தூய்மையை அடைந்து வாழ்கின்றீர்கள். அதன் நினைவார்த்தமாகத்தான் உற்சவமாகக் ஹோலி யைக் கொண்டாடுகிறார்கள். உங்களுடைய வாழ்வின் ஒவ்வொரு

அடியுமே மகிமைக்குரிய தினங்களாகும். அதையே உற்சவமாக கொண்டாடுகிறார்கள். நீங்கள் இந்த சமயத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அடியிலும் ஊக்கம் உற்சாகத்துடன் இருக்கின்றீர்கள். எனவே உங்களுடைய ஊக்கம் உற்சாகத்தின் நினைவார்த்தமாக இந்த உற்சவத்தை கொண்டாடுகின்றார்கள். ஊக்கம் உற்சாகம் ஏன் இருக்கிறது? ஏனென்றால் நீங்கள் பரமாத்மாவின் தொடர்பில் இணைந்து வர்ணத்தைத் தன்மீது பூசிக் கொண்டு ஹோலியைக் கொண்டாடுகின்றீர்கள். எனவே உங்களுடைய ஒவ்வொரு அடியும் உற்சவமாக கொண்டாடுகிறார்கள். ஹோலியின் போது முதலில் எரிக்கின்றார்கள்: பிறகு கொண்டாடுகின்றார்கள். நீங்களும் சங்கமயுகத்தில் இப்பொழுது உங்களுடைய பழைய சுபாவ சம்ஸ்காரங்களை யோக அக்னியில் எரிக்கின்றீர்கள். ஏனென்றால் தன்னுடைய பழைய சம்ஸ்காரங்களை எரிக்காமல் பரமாத்மாவின் தொடர்பிலான வர்ணம் பூசிக் கொள்ள முடியாது. பரமாத்மா சந்திப்பும் ஏற்பட முடியாது. எனவே தன்னுடைய யோக அக்னியில் சம்ஸ்காரங்களை எரித்து விட்டு பிறகு பரமாதமாவின் தொடர்பு என்னும் வர்ணத்தில் கலந்து விடுகிறீர்கள். இப்பொழுதெல்லாம் எரிக்கவும் செய்கிறார்கள், வர்ணத்தை பூசிக் கொள்ளவும் செய்கிறார்கள் ஆனால் உங்களுடைய ஆத்மீக ரூபத்தைத்தான் ஸ்தூலமான ரூபத்தில் செய்து கொள்கிறார்கள், அவர்கள் ஸ்தூலமான நெருப்பை எரிக்கின்றார்கள், ஸ்தூலமான வர்ணத்தை பூசிக் கொள்கின்றார்கள். ஏனேன்றால் இப்போது தேக உணர்விலான எண்ணங்களே உள்ளது. நீங்கள் தூய்மை அடைகின்றீர்கள், அவர்கள் தூய்மையைக் கொண்டாடுகின்றார்கள். ஹோலி என்ற பெயரில், முழு கல்பத்திலும் வேறு யாருமே ஹோலியை கொண்டாடுவதால் இரட்டை தூய்மை அடைவதில்லை. நீங்கள் அனைவரும் எங்கிருந்து வந்திருந்தாலும் சரி பரமாத்மாவின் தொடர்பு என்ற ஹோலியில் வந்துள்ளீர்கள் பரமாதிமாவுடன் ஹோலியைக் கொண்டாட வந்துள்ளீர்கள். நீங்கள் ஹோலிக்காக சொல்வது என்னவென்றாவ் ஹோ-லி அதாவது முடிந்து போன விஷயம் முடிந்து விட்டது, நாடகப்படி முடிந்துபோன விசயத்திற்குத்தான் ஹோ-லி என்று சொல்லப்படும். அதாவது முடிந்தது முடிந்து விட்டது. எந்த ஒரு விண் விசயங்களையும் மனதில் கொண்டு வராதீர்கள். முடிந்து போய்விட்டது. அப்படிப்பட்ட ஹோலி'யைத்தான் கொண்டாடுகின்றீர்கள். நீங்கள் அனைவரும்

ஹோலி அதாவது தூய்மை அடைவதற்கான முழு முயற்சி செய்து தூய்மைக்கான தாரணை செய்கின்றீர்கள். எனவே தான் எதிர்காலத்தில் உங்களது இரட்டை தூய்மையின் அடையாளமாக இரட்டை மகுடத்தைக் காண்பிக்கின்றார்கள்.

இன்றைய நாளில் நீங்கள் அனைத்து குழந்தைகளுமே ஒவ்வொருவரும் எதை எரித்து விட்டு செல்வீர்கள். பாப்தாதா பார்க்கின்றார். பிறந்த நாளில் சிவஜெயந்தி அன்று பாபா ஒரு வீட்டுப்பாடம் கொடுத்து விட்டுச் சென்றார். கோபத்தை பிறந்த நாள் பரிசாக கொடுத்து விடுங்கள் என்றார். அதற்கான ரிசல்ட்டும் சில குழந்தைகளிடமிருந்து பாப்தாதாவிற்கு வந்து சேர்ந்தது. பாப்தாதா பார்க்கின்றபோது ஆங்காங்கே சில குழந்தைகள் இந்த விசயத்தில் கவனம் வைத்துள்ளார்கள். நீங்கள் அனைவரும் கூட இந்த ரிசல்டை வைத்திருப்பீர்கள். இன்று இங்கே அமர்ந்துள்ள அனைவரும் அதை செய்திருப்பீர்கள். அவர்களும் தங்கள் ரிசல்ட்டை பார்த்தார்கள். யார் தன்னுடைய ரிசல்ட் மீது கட்டுப்பாடு வைத்துள்ளார்களோ, வெற்றி அடைந்துள்ளீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். வெற்றி அடைந்துள்ளர்கள் அவர்கள் பெரியதாக கையை உயர்த்துங்கள், ஆசிரியர்களும் கையை உயர்த்துங்கள். அயல் நாட்டவரும் கையை உயர்த்துங்கள். (அனைவரும் கையை உயர்த்தினார்கள்) நல்லது வாழ்த்துக்கள். இதன் மூலமாக நீங்கள் அனைவரும் உங்களுடைய தைரியத்தைக் காண்பிக்கின்றீர்கள். தைரியத்திற்கான பலனும் கிடைக்கின்றது. இதையும் அனுபவம் செய்துள்ளீர்கள். இப்படிப்பட்ட அனுபவத்திற்கு முன்பாக லட்சியம் வைத்து அடிக்கடி சோதனை செய்து முன்னேற வேண்டும் என்று நினைக்கிறீர்களா? அது முடியுமா? முடியுமா? இனியும் அப்படிச் செய்ய முடியுமா? அப்படி முடியும் என்பவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. செய்ய முடியுமா? ஆசிரியர்கள் செய்ய முடியுமா? பாண்டவர்கள் செய்ய முடியுமா? நல்லது. செய்ய முடியும், இல்லை என்பதேயில்லை. நடந்தே தீரவேண்டும். இதற்காக கைத் தட்டுங்கள். நல்லது. இப்போது அதிக நாட்கள் ஆகவில்லை, ஆனால் ஒவ்வொரு மூன்று மாதத்திலும் இன்றிலிருந்து மூன்று மாதத்திற்கு கவனம் வைத்து கோபத்திற்கான டென்ஷனை அடியோடு அழிக்க முடியுமா? செய்ய முடியுமா? அவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. இந்த மகிழ்ச்சிகரமான செய்தி நல்லது. கோபத்திற்கான காரணம் என்ன? கோபத்திற்கான விதை என்ன என்று

தெரியுமா? நீங்கள் எப்போதும் தங்களுக்கு முன்பாக எதிர்கால சொரூபத்தை வையுங்கள். உங்களுடைய எதிர்கால சொரூபம் எவ்வளவு அலங்கரிக்கப்பட்ட சிரித்த முகத்துடன் உள்ளது? பாப்தாதாவைப் பாருங்கள், மேலும் அதிலும் பிரம்மாபாபாவை எதிரில் கொண்டு வாருங்கள். ஏன்? சிவ தந்தையோ நிராகாரமாக இருக்கின்றார் ஆனால் பிரம்மாபாபா உங்களைப் போலவே சாகார மனிதராகவே இருந்தவர். அவருக்கு பொறுப்பு. என்னும் கிரீடம் இருந்தும் கூட மலர்ந்த முகம் மற்றும் மகிழ்ச்சிகரமான நடத்தை இருந்தது. ஏனென்றால் விகாரங்களை வெற்றி அடைந்தவர். உங்களுக்கு முன்பாக சரீரத்துடனேயே இருந்தாலும் அவர் முன்னுதாரணமாக எல்லாமே செய்து காண்பித்துள்ளார். பிரம்மாபாபாவை விட அதிகமான பொறுப்பு உங்களுக்கு உள்ளதா? பிரம்மாபாபாவின் பொறுப்புக்கு முன்பாக உங்களுடைய பொறுப்பு ஒன்றுமே யில்லை. இறுதிவரையிலும் அவரிடம் கர்மாதீத் நிலையின் சாயல் மற்றும் அவ்யக்த பரிஸ்தா சொரூபமே காணப்பட்டது. இப்போது பாப்தாதாவிற்கு கொடுத்து விட்ட பரிசை திரும்பப் பெற மாட்டீர்கள் தானே? பாப்தாதா நினைக்கின்றார் காரியங்களில் ஈடுபடும் பொழுது ஆங்காங்கே சந்தர்ப்பம் வரும்பொழுது அது மாறி விடுமா? சிலருடைய ரிசல்ட்டில் கூட எழுதியுள்ளார்கள், எனக்கு குரலில் சப்தமே அதிகமாக உள்ளது. மனோநிலை வேகம் அதிகமாகி விடுகிறது ஆனால் உண்மையில் அப்படிப்பட்ட விஷயங்கள் எதிரே வரும் பொழுதுதான் உங்களுடைய வெற்றிக்கான வாய்ப்பும் கிடைக்கிறது. விஷயங்களின் (தடைகள் பிரச்சனைகள்) வேலை வந்து கொண்டிருப்பது, ஆனால் உங்களுக்கு ஞானம் உள்ளது அந்த விஷயங்களை எப்படி கடந்து வெற்றி அடைவது என்று, எனவே இது பிடித்துள்ளதா? கோபத்திற்கு விடை கொடுத்து விடுவீர்களா? சதா காலத்திற்குமா அல்லது 3-மாதத்திற்கு மட்டுமா? எவ்வளவு நேரத்திற்கு விடை கொடுத்து அனுப்ப தைரியம் உள்ளது. யாரெல்லாம் சதா காலத்திற்கும் கோபத்திற்கு விடை கொடுத்து அனுப்புவோம் கடினமில்லை; இதைச் செய்தே தீருவோம் என்று சொல்பவர்கள் கை உயர்த்துங்கள். நடந்தே ஆக வேண்டும். நல்லது பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார் என்? உங்களுடைய கடைசி பிறவியிலும் உங்களைப் பற்றி மகிமையாக (பக்தர்கள்) என்ன பாடுகிறார்கள். உங்களுடைய தேவதா ரூபத்திற்கு முன்னால் சர்வ குண சம்பன்னம் சம்பூர்ண நிர்விகாரி என்றெல்லாம் மகிமை பாடுகிறார்கள் தானே? எனவே இப்படி நீங்கள்

மாறுவதற்கான நேரமும் இதுதான். இட்டொழுது சங்கமயுகத்திற்கே உள்ள மகிமை அது. பாப்தாதாவின் உள்ளத்தில் இருக்கின்ற ஒரு விசேஷமான. ஆசை அது சொல்லட்டுமா? தலையை அசையுங்கள் சொல்லட்டுமா? பாப்தாதா இப்பொழுதிலிருந்தே ஒவ்வொரு குழந்தைகளும் சதா முகமலர்ந்த ரோஜாவைப் போல பார்க்க விரும்புகிறார். குஷியுடையவர்கள் புன் சிரித்த முகம்: விஷயங்களின் வேலை வருவது இதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். விஷயம் வரத்தான் செய்யும் ஆனால் தன்னுடைய லட்சியத்தை லட்சணத்தில் கொண்டு வாருங்கள். பயப்பட வேண்டாம். இப்பொழுது எல்லாம் சொல்கிறார்கள் பிரம்மா குமாரிகள் தூய்மைடைப் பற்றி அதிகமாக பாடம் கற்பிக்கிறார்கள். அவ்வாறே பிரம்மாகுமாரிகள் கோடம் இல்லாதவர்களாக மாற்றுகிறார்கள் என்பதிலும் நீங்கள் பிரபல்யமானவராக ஆக வேண்டும். ஏனென்றால் கோபத்திலிருந்து விடுபட வேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறார்கள். மன அழுத்தம் ஏற்படுகின்றது அல்லவா? மன அழுத்தம் ஏற்படுகின்றது; எனவே தான் எல்லோருமே கோபத்தை விட விரும்புகிறார்கள் ஆனால் அவர்களுக்கு அதற்கான விதி தெரியவில்லை. எப்படி தூய்மையாக வாழ்வது இயலாத காரியம் என்று நினைத்தார்களோ ஆனால் இப்பொழுது உங்கள் அனைவரின் அனுபவத்தின் ஆதாரத்தில் இதுவும் முடியும் என நினைக்கிறார்கள்; அதுபோலவே இந்த ஆண்டில் ஒலி அலையைப் பரப்புங்கள். கோபத்தை வெற்றி அடைவது சகஜம் தான் கடினமல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட முன் உதாரணமான அனுபவசாலிகளை மேடையில் கொண்டு வாருங்கள். பாப்தாதா பார்க்கின்றார்; அநேக குழந்தைகள் காரியங்கள் செய்தாலும் கோபத்தை வெற்றி அடைந்துள்ளார்கள். அப்படிப்பட்ட ஒரு உதாரணம் உங்களுடைய பரிவாரத்தில் பிராமண பரிவாரத்திலும் இருக்கின்றார்கள். எனவே இந்த ஆண்டு என்ன செய்வீர்கள்? ஹோலி கொண்டாட வந்துள்ளீர்கள் தானே அப்படியென்றால் ஹோலி'யில் என்ன செய்வார்கள்? எதையாவது எரிப்பார்கள் தானே நீங்கள் இந்த ஹோலியில் எதை எளிப்பீர்கள்? கோபத்தை விடுவோம் என சொல்லி விட்டீர்கள். இதனை உறுதியாக செய்து ஆக வேண்டும் ஆனால் பாப்தாதா பார்க்கின்றார் மன அழுத்தம் வருவதற்கான காரணம் தேக உணர்வினாலான நான் எனும் வார்த்தை தான். தேக உணர்வின் நான், நான் ஆத்மா, இதுவும் நான் என்ற வார்த்தை தான் ஆனால் தேக

உணர்விலான நான் என்ற வார்த்தை அபிமானத்தைக் குறிப்பதாகும். அவமரியாதைக் காகவும் அந்த சொல் வருகிறது மனமுடைந்து போகும்போதும் நான் என்ற சொல் கீழே விழச் செய்கிறது. எனவே இன்று கோபத்தை வெற்றி அடைவதில் முன்னேறி செல்வதற்காக தேக உணர்விலான நான் என்ற சொல்லை யோக அக்னியில் எரித்து விடுங்கள். அநேக விதமான நாள் நான் என்ற சொல்லை எரித்து விடுங்கள். நான் ஆத்மா இந்த நான் என்ற சொல்லை உறுதியாக்குங்கள் நான் என்ற எண்ணத்தை யோக அக்னியில் எரித்து விட்டுச் செல்லுங்கள். அநேக விதமான நான் என்று பயன்படுத்தப்படுகிறது. எனவே இன்று அதனை எரிப்பதற்கான ஹோலியைக் கொண்டாடுகிறீர்கள்தானே. ஏனென்றால் கோபத்திற்கான காரணம் மன அழுத்தம் அதிகமான உள்ளது. எனவே இந்த நாள் என்ற சப்தத்தை அழிப்பதற்காக இன்று தன் மனதில் சங்கல்பம் வையுங்கள், எரித்து விட வேண்டும் ஏனென்றால் இதுவும் ஒரு வித சுமைதானே! நீங்கள் ரயிலில் சென்றாலும், விமானத்தில் சென்றாலும் இந்த சுமையை இங்கேயே எரித்து விட்டுச் செல்லுங்கள் எரித்து விட முடியுமா? யார் அப்படி நினைக்கின்றீர்கள்? தைரியம் உள்ள குழந்தைகளுக்கு உதவியாளராக பாபா என்றுமே கூடவே இருக்கின்றார். எனவே வெற்றியும் உங்கள் கூடவே இருக்கின்றது. எனவே இப்படி நினையுங்கள் நான் வெற்றி அடைந்தே தீருவேன். அப்படி நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். ஆகியே தீர வேண்டும். நல்லது.

இன்று வந்துள்ள வி.ஐ.பிக்கள் கையை உயர்த்துங்கள். வி.ஐ.பியாக வந்துள்ளவர்கள் எழுந்தநில்லுங்கள். (கையை உயர்த்துகிறார்கள்) அவர்களுக்காக கை தட்டுங்கள். வெற்றி அடைவீர்களா? பாருங்கள் யாரெல்லாம் வெற்றி அடைவீர்களோ அந்த ஒவ்வொருவருக்கும் மாலை அணிவிக்கப்படுகிறது. வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள். நல்லது.

தைரியம் உடையவர்கள் இப்பொழுது யாரெல்லாம் வி.ஐ.பி.யாக வந்துள்ளீர்களோ நீங்கள் அனைவருமே தைரியம் உள்ளவர்கள் தான். எனவே பாப்தாதா வரதானம் தருகிறார். இந்த சமயத்தில் நீங்கள் எந்த காரியத்திற்காக விஜ.பி.யாக வந்திருந்தாலும் இந்த ஒரு பிறவிக்கு நீங்கள் வி.ஐபியாக இருந்தாலும், பாப்தாதா உங்களை வி.ஐ.பி என்று சொல்வதில்லை உங்களை குழந்தை என்றே சொல்கிறார். பாப்தாதா

இந்த வரதானமும் தருகிறார் உத்தரவாதம் தருகிறார் நீங்கள் 21-பிறவிக்கு விஜபியாக இருப்பீர்கள். இந்த எலக்ஷன், செலக்ஷன் எல்லாம் இருக்காது. எனவே நீங்கள் அனைவரும் ஒரு விஷயத்தை விட்டால் போதாது இப்பொழுது நீங்கள் தொடர்பில் சம்பந்தத்தில் வந்திருக்கிறீர்கள். இப்படிப்பட்ட பிராமண குடும்பத்தின் தொடர்பை விட்டு விடக்கூடாது. எவ்வளவு தொடர்பு வைப்பீர்களோ அவ்வளவு உறவு உறுதியாகும். மேலும் பாப்தாதாவின் வரதானத்தை பிராப்தமாக பெற்றே விடுவீர்கள். இது சம்மதமா? தொடர்பு வைப்பது சம்மதமா? கை உயர்த்துங்கள் நல்லது. (பாப்தாதா மலர் மாலையை அணிவிப்பதுபோல் தூக்கி காண்பிக்கிறார்) இந்த மாலையை நீங்கள் அனைவரும் அணிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் அனைவரும் புதிய குழந்தைகள் சுத்த தங்கமான குழந்தைகள் சதா பாபாவின் சொல்லுக்கு கீழ்படிபவர்கள் அல்லவா? எனவே இன்று இந்த நான் என்ற எண்ணத்தை எரித்து விட்டு செல்லுங்கள். முதன் முறையாக வந்தவர்கள் கை உயர்த்துங்கள். எழுந்து நில்லுங்கள் நல்லது. பாப்தாதா முதன் முறையாக வந்திருக்கும் குழந்தைகளுக்கும் முதன் முறையாக வந்ததற்கான பன்மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார் ஆனால் இப்போது நீங்கள் முதன் முறையாக வந்துள்ளீர்கள். அதுபோலவே முதல் நம்பரில் முதல் டிவிஷனில் முதல் இடத்தில் நிச்சயிக்கப்பட்டவர்கள் ஆனால் அந்த முதல் டிவிஷனில் வருவீர்களா! இதற்கு தைரியம் உள்ளதா? கை உயர்த்துங்கள். தைரிடம் உள்ளவர்கள், யோசித்துக் கை உயர்த்துங்கள். நல்லது இந்த லட்சிபத்தை வைத்துக் கொள்ளுங்கள் நாம் கடைசியாக வந்திருக்கிறோம், ஆனால் வேகமாக செல்வோம்: ஏனென்றால் நேரத்தை நம்ப முடியாது. இப்பொழுது என்ன செய்ய வேண்டுமோ அதை தீவிர முயற்சியாளர் ஆகி செய்துவிடுங்கள். ஏனென்றால் நீண்ட கால முயற்சி நீங்கள் அனைவரும் சிறிது காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டும். அந்த அளவிற்கு தைரியம் உள்ளதா? தைரியம் உள்ளதா? கை உயர்த்துங்கள் பாருங்கள்; உங்களை போட்டோ பிடிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட தைரியசாலி குழந்தைகளுக்கு பாபா வாழ்த்துக்களை தெரிவிக்கிறார். தைரியம் உங்களுடையது, உதவி பாபாவுடையது; ஆனால் தைரியத்தை விடக்கூடாது. தனது பாக்கிய நட்சத்திரம் சதா மின்னிக் கொண்டே இருக்க வேண்டும். ஏனென்றால் இப்பிறவியில்

தீவிர முயற்சி, வெறும் முயற்சி அல்ல: தீவிர முயற்சி தீவிர முயற்சி தான் அநேக ஜென்மங்களுக்கு பாக்கியத்தை உருவாக்குவது எனவே தைரியத்தை கை விட வேண்டாம். விஷயங்கள் (தடைகள், எதிர் மறையான) வரத்தான் செய்யும் ஆனால் அந்த விஷயங்கள் மகா வீரர் அல்ல: நீங்கள் சர்வ சக்திமானினுடைய குழந்தைகள் உங்களுக்கு முன்பாக அந்த விஷயங்கள் எம்மாத்திரம். விஷயங்கள் வருகிறது சென்று விடுகிறது. சென்று விடக்கூடிய அந்த விஷயங்களுக்குப் பின்னால் அதிர்ஷ்டத்தை இழக்காதீர்கள் நல்லது. அமருங்கள்.

அனைவருக்கும் பாப்தாதா அன்பு கலந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார் எந்த விஷயத்திற்காக தெரியுமா? தைரியம் வைத்து உள்ளீர்கள்; எனவே பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் தைரியமான சங்கல்பத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். ஹோலி கொண்டாடினீர்களா? எரித்து விடுகின்ற ஹோலியை கொண்டாடினீர்களா? மேலும் பரமாத்மாவின் தொடர்பு எனும் வர்ணத்தை பூசிக் கொண்டு ஹோலிக் கொண்டாடினீர்களா? எரித்து விட்டு ஹோலியை கொண்டாடினீர்கள். மேலும் பரமாத்மா தொடர்பு எனும் வாணத்தை பூசிக் கொண்டும் ஹோலி கொண்டாடினீர்கள். எரிக்கவும் செய்தீர்கள் கொண்டாடவும் செய்தீர்கள்.

இப்போது பாப்தாதா குழந்தைகள் அனைவருக்கும் ஒரு டிரில் செய்ய வைக்க விரும்புகிறார். அந்த டிரில் நாலாபுறமும் இன்னல்களே நிலவுகிறது, ஆங்காங்கே ஒவ்வொரு பிரச்சினை அப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு நடுவே ஒரு வினாடியில் ஒருமுகமாக முடியுமா? அப்படிப்பட்ட பயிற்சியை தன்னுள் அனுபவம் செய்கிறீர்களா?

ஏதேனும் நேரத்தில் காரணம் இருந்தும் இல்லாமலோ வீண் எண்ணம் என்ற புயல் வருகின்றது என்றால் அந்த சமயத்தில் தன்னுடைய மனம், புத்தியை ஒருமுகப்படுத்த முடிகிறதா? அப்படிப்பட்ட நேரத்தில் இந்த ஏகாக்கிரத்தா (ஒருமுகப்படுத்தும்) சக்தியை பயிற்சி செய்து பார்க்கிறீர்களா? மாறாக அப்படிப்பட்ட நேரத்தில் ஒரு வினாடியில் ஏகாக்கிரத்தா சக்தியை காரியத்தில் கொண்டு வர முடியவில்லையென்றால் போகப்போக வரும் காலங்களில் அப்படிப்பட்ட இன்னல்கள் அடிக்கடி வரும். எனவே இன்று பாப்தாதா

ஒரு வினாடியில் முற்றுப்புள்ளி வைத்து ஏகாக்கிரத்தா நிலையில் நிலைபெறும் பயிற்சியின் மீது சுவனத்தை ஈர்க்க விரும்புகின்றார். ஏனென்றால் இயற்கையானது தன்னுடைய பலப்பல வர்ணங்களை காண்பிக்க ஆரம்பித்து விட்டது. நாலாபுறமும் என்னென்ன நடந்து கொண்டிருக்கிறது. அதை நீங்கள் அனைவரும் நன்றாகவே தெரிந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட மனம், புத்தியை அலைய வைக்கின்ற விஷயம் அதிகம் வரும். வரத்தான் போகிறது. எனவே இப்பொழுதிலிருந்தே இந்த பயிற்சி செய்யுங்கள் மனம், பத்தி இரண்டையும் ஒரு வினாடியில் பரந்தாமத்தில் நிலை நிறுத்துங்கள். இப்பொழுது தன்னை ஃபரிஸ்தா ரூபத்தில் நிலை நிறுத்துங்கள். இப்பொழுது தன்னை பிராமணன் மாஸ்டர் சர்வ சக்திவான் நிலையில் இருக்கின்றேன்; இந்த மாஸ்டர் சர்வ சக்திவான் நிலையில் நிலைத்து விடுங்கள். (பாப்தாதா டிரில் செய்ய வைக்கிறார்). இப்படிப்பட்ட பயிற்சியை முழு நாளிலும் நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் அடிக்கடி மனதை ஒருமுகப்படுத்திப் பாருங்கள். எங்கே வேண்டுமோ, என்ன வேண்டுமோ, அங்கே அப்படியே மனதை ஒருமுகமாக்குங்கள். முயற்சியும் ஒரு நிமிடம் ஆகலாம். ஒரு வினாடியில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஏனென்றால் அப்படிப்பட்ட நேரத்தில் பதற்றமான நேரத்திலும் வெற்றி அடைய இப்பொழுதிலிருந்தே மனதை தயார் செய்ய வேண்டும். ஏனென்றால் மனக்கட்டுப்பாடு இருக்க வேண்டும். மனம் என்னுடையது நான் மனம் அல்ல எனது மனம் என்றால் என்னுடைய பொருள் மீது நான் கட்டுப்பாடு வைக்க வேண்டும் தானே! இந்த டிரில் மிக அவசியமானது.

யாரெல்லாம் இங்கு வந்துள்ளீர்களோ பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தையின் மீதும் அன்பு உள்ளது ஏன்? எப்படிப்பட்டவராக இருந்தாலும், பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் கோடியில் ஒருவராகப் பார்க்கின்றார். முயற்சியில் பலவீனமாக இருந்தாலும் பாபா அவர்களை தன் குழந்தையாகப் பார்க்கின்றார், மனதார மேரா பாபா (என்னுடைய பாபா) என்று சொல்கிறார்கள். குழந்தைகள், எனவே பாபாவுக்கும் மிகப் பிரியமானவர்கள். பாப்தாதா ஒரு விஷயத்தை மட்டும் நினைவூட்டுகிறார். தனது முகம் எப்பொழுதுமே புன் சிரித்தபடி மகிழ்ச்சியில் மின்னிக் கொண்டு இருக்க வேண்டும் விஷயங்கள் போகலாம்; ஆனால் குஷி போகக் கூடாது. சங்கம யுகத்தில் மகிழ்ச்சியே

பரமாத்மாவின் பரிசு. எனவே ஹோலி என்றால் எப்படிப்பட்ட விஷயம் வந்தாலும் நினைவில் வையுங்கள். நாம் ஹோலியைக் கொண்டாடிவிட்டு வந்துள்ளோம் எனவே விஷயம் முடிந்து விட்டது ஆனால் குஷி மட்டும் போகவில்லை. பரமாத்மாவின் பரிசுதான் குஷி என்ற பொக்கிஷம்.

பாப்தாதா எப்பொழுதுமே சொல்கிறார். இந்த சுலோகனை சதா நினைவில் வையுங்கள் மகிழ்ச்சியாக இருங்கள் மகிழ்ச்சியையே வழங்குங்கள். எவ்வளவு வழங்குவீர்களோ அவ்வளவு அதிகரிக்கும். நடமாடும். பொழுதெல்லாம் அந்த மலர்ந்த முகமே தானாகவே சேவை செய்து கொண்டிருக்கும். உங்களைப் பார்ப்பவர்கள் எல்லாம் இவருக்கு என்ன கிடைத்தது என்று எண்ணத் தோன்றும். எனவே இன்றைய ஹோலி'யில் தில் குஷ் மிட்டாய் குஷி தான், சதா சாப்பிட்டுக் கொண்டே இருங்கள். இதில் வியாதி வராது. நல்லது.

சேவைக்கான முறை டில்லி மற்றும் ஆக்ரா மண்டலம்: டில்லியைச் சார்ந்தவர்கள் பெரிய மனம் உடையவர்கள்; ஏனென்றால் டில்லி ராஜதானி தான் இன்றும் நாளையும். மேலும் டில்லியில் பாப்தாதாவின் மனப்பூர்வமான ஆசைகளும் உள்ளது. அந்த ஆசைகளைப் பூர்த்தி செய்துள்ளீர்கள். சேவையின் கணக்கில் டில்லியிலும் சேவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பொழுதெல்லாம் குழந்தைகள் சிறிய பெரிய நகரங்களில் ஊக்கம் உற்சாகத்தோடு சேவை செய்கின்றார்கள். அதனுடைய ரிசல்ட்டாக பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகிறார். டில்லி குழந்தைகள் மீது பாப்தாதாவுக்கு மகிழ்ச்சியே! டில்லியைச் சார்ந்தவர்கள் இப்போது ஒரு விந்தை செய்து காண்பிக்க வேண்டும். சொல்லட்டுமா? பாப்தாதாவிற்கு ஒரு விஷயம் ஆரம்பத்திலிருந்தே மீதம் உள்ளது. அதை டில்லியைச் சார்ந்தவர்களோ: அல்லது வேறு யாரோ, ஆனால் இன்று டில்லி உள்ளது. கீதையின் பகவான் யார்? இந்த விஷயத்தை ஏதேனும் விதி மூலமாக ஒரு குழு அமைத்து ஊர்ஜிதம் செய்ய வையுங்கள். பிறகு அவர்களே சொல்வார்கள் கீதையின் பகவான் பரமாத்மா. இப்படி ஒரு சிறிய குழுவை தயார் செய்து காட்டுங்கள். ஏனென்றால் இது பிரசித்தம் அடைய வேண்டும். கீதையின் பகவான் யாரென்று பிரத்யட்சம் ஆக வேண்டும். டில்லியில் எல்லாவிதமானவர்களும் இருக்கின்றார்கள்.

தர்ம ஸ்தலங்கள் எங்கெல்லாம் இருக்கின்றதோ அங்கே சென்று இதை செய்து காட்டலாம். அப்படிப்பட்ட குழுவைத் தயார் செய்யுங்கள்.

பாப்தாதா குழந்தைகளினுடைய முயற்சி மற்றும் தைரியத்தைப் பார்த்து சொல்கிறார்; குழந்தைகள் நாலாபுறமும் சேவையில் ஆர்வத்துடன் ஈடுபடுகிறார்கள்; இதற்காக பாப்தாதா மனமார ஆசீர்வாதம் தருகிறார். குழந்தைகளுக்கு சேவையில் ஊக்கம் உற்சாகம் உள்ளது. இதையே அபிவிருத்தி செய்து கொண்டே இருங்கள். முன்னேறிக் கொண்டே இருங்கள். மேலும் பாப்தாதா செய்தி கேள்விப்பட்டார். இப்பொழுது விதவிதமான நிகழ்ச்சிகள் டில்லியில் நடைபெற்று வருகிறன்றன. பாபாவின் பரிசு குழந்தை களுக்கு கிடைத்துள்ளது. இடம் கிடைத்துள்ளது (ஓஆர்சி) அதனைக் காரியத்தில் பயன்படுத்துகிறீர்கள். இதற்கான விசேஷமான வாழ்த்துக்களை பாபா தெரிவிக்கின்றார். ஊக்கம் உற்சாகம் குழந்தைகளிடம் உள்ளது. சிறிது நேரம் மட்டும் தேவைப்படுகிறது.

டில்லியில் பிரம்மாபாபாவும் சேவை செய்துள்ளார்; ஜெகதாம்பாவும் சேவை செய்துள்ளார். இருவருமே சேவை செய்துள்ளார்கள். யமுனைக்கரையும் டில்லியில் தான் உள்ளது ராஜதானியும் நமது யமுனைக்கரையில் தான் நடைபெறும். எனவே டில்லியைச் சார்ந்தவர்கள் எல்லோருக்கும் இடம் தர வேண்டும். உள்ளம் பெரியதாகத்தானே உள்ளது. பெரிய மனம் உள்ளவர்கள். பாப்தாதா ஒவ்வொரு இடத்திலும் உள்ள குழந்தைகளை மகிமை செய்கிறார். ஆஹா என் குழந்தாய் ஆஹா எனவே டில்லி யைச் சார்ந்த குழந்தைகளுக்கும் அது உரித்தாகும். ஏனென்றால் அவர்களுடைய சேவைக்கான முறை இது. உங்களுக்கு இன்று பாப்தாதா சேவையில் சகயோகம் தருகின்றார். ஸ்நேகத்திற்கான வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள். இப்போது இதனை செய்து காட்டுங்கள். இப்படிப்பட்ட ஒரு குழுவை எந்த மண்டலத்திலிருந்தாவது தைரியத்துடன் ஒரு குழுவை அமைத்துக் கொண்டு வாருங்கள். இந்த முழக்கத்தை அதிகப்படுத்துவதற்கான நிமித்தமான குழுவாக அவர்கள் இருக்கட்டும். மீதம் உள்ள இந்த விஷயத்தை அவர்கள் செய்து காண்பிக்கட்டும். நல்லது பாப்தாதா குழந்தைகளின் சேவையை பார்த்துக் கொண்டிருக்கின்றார். சேவையும் நடந்துக் கொண்டிருக்கின்றது

சேவையுடன் கூடவே சுய ஸ்திதியிலும் முன்னேறுவதற்கான ஊக்கம் உள்ளது. நல்லது. நல்லது.

**இரட்டை அயல்நாட்டவர்:** பாப்தாதா கேள்வியுற்றார்; 90-தேசங்களிலிருந்து வந்துள்ளார்கள். பாப்தாதா சொல்கிறார் ஆஹா, இரட்டை அயல்நாட்டுக் குழந் ஆஹா இப்பொழுது மகிழ்ச்சியில் பறந்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? சேவைக்கான ஊக்கம், தீவிர முயற்சிக்கான ஊக்கம் இரண்டிலும் ஒருவருக்கொருவர் சகயோகியாக இருந்து வழங்கிக் கொண்டிருக்கின்றீர்கள். பாப்தாதாவிற்கு மதுபனில் வந்து ஒவ்வொரு குழுவினரையும் உற்சாகப்படுத்துவது தைரியம் ஊட்டுவது பாபாவிற்கு பிடித்துள்ளது. மேலும் இப்பொழுதெல்லாம் நல்லதொரு அலை வீசுகிறது: சிறப்பான பட்டி நடத்துவது, ஏகாந்தவாசி ஆவது இதுபோன்ற அலை நன்றாக இருக்கிறது. பொதுவாக நிகழ்ச்சி நடந்துக் கொண்டுதான் இருக்கின்றது ஆனால் சிறிய சிறிய குழு அமைத்து சுய முன்னேற்றத்திற்காக நிகழ்ச்சிகளை செய்கிறீகள். இந்த முன்னேற்றத்திற்கான சாதனம் மிக நன்றாக இருக்கின்றது. ஆசிரியர்களும் செய்துள்ளீர்கள் நல்லது. பாண்டவர்களும் செய்கிறீர்கள். ஏனென்றால் இதில் சுய முன்னேற்றத்திற்கான தனி கவனம் செலுத்தப்படுகிறது மதுபனில் புத்துணர்ச்சி பெறுவதற்காக ஊக்கத்தோடு உற்சாகத்தோடு வருகின்றீர்கள். இது பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்துள்ளது. நேரம் ஒதுக்கி வருகின்றீர்கள். அந்த நேரத்தில் முழு லாபத்தையும் பெற்றுச் செல்கிறீர்கள். ஒன்று பொதுவான நிகழ்ச்சிகளின் லாபம் இருக்கிறது பாப்தாதா சந்திப்பதிலும் லாபம்: மேலும் சுய முன்னேற்றத்திலும் தனி லாபம், பாப்தாதாவும் அனைத்து தரப்பினருக்கும் தன் அறிவுரையாக இதையே சொல்கிறார்: அவரவருடைய தரப்பிலும் சிறிய சிறிய குழு அமைத்து சுய முன்னேற்றத்திற்கான வாய்ப்புக் கொடுத்து அனுபவத்தை அதிகப்படுத்துங்கள். சிறிய சென்டராக இருந்தால் 5-பேர் கொண்ட குழு அமைக்கலாம். நிகழ்காலத்தில் முக்கியமாக சுய முன்னேற்றத்திற்கு முதல் கவனம் வைக்க வேண்டும். கட்டுப்பாட்டு சக்தி! பாபா கூறிய ஏகாக்ரதா சக்தியின் மீது கவனம் கொடுத்து டிரில் செய்ய வேண்டும். பாப்தாதா உள்நாடு அயல்நாட்டைச் சார்ந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் சேவைக்கான கவனமும் சுய முன்னேற்றத்திற்கான கவனமும் வைத்துள்ளீர்கள் ஆனால் மேலும் அதை

அதிகப்படுத்துங்கள், ஏனென்றால் பாப்தாதாவும் இந்த இரண்டு விஷயங்களின் மீது அடிக்கடி கவனத்தை திருப்புகின்றார். ஒன்று திடீரென (அச்சானக்) இரண்டாவது நீண்டகால முயற்சியை சேமிக்க வேண்டும். நடந்து விடும் என்று இருக்கக் கூடாது. நடந்துக் கொண்டுதான் இருக்கின்றது என்று சொல்லக் கூடாது. தீவிரமாக இருக்க வேண்டும். இப்பொழுது எந்த தாரணையிலும் தீவிரம் இருக்க வேண்டும். மாற்றம் செய்து கொண்டே இருக்க வேண்டும். எல்லாம் என்னிடம் இருக்கின்றது என்று இருக்கக் கூடாது. இப்பொழுதே செய்ய வேண்டும். நடந்து விடும் பார்க்கலாம் என்று இல்லாமல் இப்பொழுதே அமுல் படுத்த வேண்டும். மேலும் பாப்தாதா இரட்டை அயல்நாட்டவரின் அபிவிருத்தியைப் பார்த்து குஷி அடைகின்றார். ஒவ்வொருவருமே முயற்சி செய்கின்றனர். எங்கெல்லாம் ஏரியா சேவை செய்யாமல் இருக்கின்றதோ அங்கெல்லாம் செய்து முழுமை பெற வேண்டுமென்று அயல் நாட்டவரும் நினைக்கின்றனர். கடைசியில் அயல் நாட்டில் கூட புகார் செய்யக் கூடாது. நடந்துக் கொண்டுதான் இருக்கின்றது. பாப்தாதாவுக்கும் மகிழ்ச்சிதான். ஆயினும் இன்னும் எங்காவது மூலை முடுக்கில் சேவை செய்யாமல் இருந்து விடுகிறதா அதையும் கவனம் கொடுத்து பூர்த்தி செய்து விட வேண்டும் எப்பொழுதாவது செய்யலாம் என்று இல்லாமல் இப்பொழுதே செய்ய வேண்டும். பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தை மீதும் மகிழ்ச்சி உள்ளது. அமிர்தவேளையில் அயல் நாட்டிலும் வலம் வருகிறார். மதுபனிலும் பாரதத்திலும் மட்டுமல்ல? அயல் நாட்டிலும் பாபா வலம் வருகின்றார். பாப்தாதாவிற்கு வலம்வர எவ்வளவு நேரம் வேண்டும். ஒவ்வொரு குழந்தையின் சார்ட்டையும் பாபா பார்க்கின்றார். குழந்தைகளின் மீது அன்பு உள்ளது. தந்தையின் மீதும் அன்பு உள்ளது. எனவே கண்டிப்பாக வலம் வர வேண்டும் அல்லவா? அனைத்து இடங்களுக்கும் செல்கிறார். லண்டன், அமெரிக்கா மட்டுமல்ல, அனைத்து இடங்களுக்கும் செல்கின்றார். பாப்தாதாவின் ஒவ்வொரு சீசனிலும் அயல்நாட்டவர் கலந்து வருவதில்லை. இப்பொழுது அமைக்கப்பட்டுள்ள விதி முறை நன்றாக உள்ளது அழகாகவும் உள்ளது. பாப்தாதா என்றுமே சொல்கின்றார்; குழந்தைகள் மதுபன்னின் அலங்காரம். இரட்டை அயல்நாட்டவர் வருவதால் மதுபன் அலங்கரிக்கப்படுகிறது. ஆம் கைதட்டுங்கள்! உங்களுக்கும் நன்றாக உள்ளது அல்லவா? இரட்டை அயல்நாட்டவர் ஒவ்வொரு முறையும்

வருகின்றீர்கள். தைரியம் வைக்கின்றீர்கள். இன்று 90-தேசங்களிலிருந்து வந்துள்ளனர். பாப்தாதாவிற்கு குழந்தைகளின் அன்பை பார்த்து எதுவானாலும் எப்படி இருந்தாலும் சந்தர்ப்பத்தைப் பார்க்காமல் அன்பையே பார்க்கின்றனர். இந்த 90-தேசத்திலிருந்தும் எப்படி வந்தீர்கள்? அன்பினால் தானே? பாப்தாதா இரட்டை அயல்நாட்ட வருக்காகவே விசேஷமாக சொல்கிறார்: மேலும் ராஜதானியையும் நமது 100-மடங்கு வாழ்த்துக்களும் ஆசீர்வாதமும் தருகின்றார் நல்லது. அமருங்கள்.

**ஐ.டி. குரூப்:** நல்லது பாப்தாதா பார்க்கின்றார் ஐ.டி குழு மூலமாக குழந்தைகளுக்கும் வாடம். கிடைக்கின்றது தூரத்தில் இருப்பவர்களும் எதிரில் பார்க்கின்றனர். மேலும் சேவையும் டிவி மூலமாகவும் செய்திகள் நன்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றது. இந்த துறையினர் மூலமாக மட்டுமே உள் நாட்டிலும் டி.வி குழுவினரை இப்படி ஊக்கம் உற்சாகத்தில் கொண்டு வர வேண்டும். அதன் மூலம் உள் நூல அடல் நாட்டிலும் சேவை நடக்க வேண்டும். இப்பொழுது ஒரு மாணவர் மூலமாக சேவை ஆங்காங்கே நடப்பது போல ஒவ்வொரு ஜோனிலும் பெரிய இடங்களிலும் செய்திகள் சென்று சேர வேண்டும். அங்கிருப்பவர்களும் இதனுடைய பலனைப் பெற வேண்டும்.

அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளையும் காண்பிக்க வேண்டும். அவரவர் ஏரியாவில் இருந்தபடியே பார்க்க வேண்டும். அவரவர் ஏரியாவிலும் சாதனங்கள் உள்ளது. நல்ல முறையில் இவற்றைப் பரப்பு வதற்கு அதையும் ஒவ்வொரு தேசத்திலும் செய்து கொண்டிருக்கின்றனர். செய்கிறார்களா, இல்லையா என்பதையும் சோதிக்க வேண்டும். இந்த சாதனம் நல்லது தான். செய்து கொண்டும் இருக்கின்றீர்கள் . மேலும் அதை அதிகப்படுத்தி செல்லுங்கள். இப்படி உள்ளத்தைக் கவருகின்ற வகையில் நிகழ்ச்சிகள் செய்து கொண்டு இருங்கள். நாலாபுறமும் அந்த செய்திகள் பறந்து கொண்டே இருக்கும். மற்றபடி பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி தான் நாளுக்கு நாள் அனைத்து துறையிலும் சில விதி முறைகள் கொண்டு வரப்படுகிறது. இது மேலும் முன்னேற்றம் அடையும். இது பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி தான் நல்லது. ஒருவருக்கொருவர் கூட்டம் போட்டு ஊக்கம் உற்சாகத்தை அபிவிருத்தி செய்வது இப்படியே செய்திகளை ஒருவருக்கொருவர்

பரிமாறிக் கொண்டு முன்னேற்றம் அடைந்து கொண்டே இருங்கள். முன்னேறவும் செய்யுங்கள். நல்லது வாழ்த்துக்கள். நல்லது.

பாப்தாதா மீண்டும் சமிக்ஞை தருகிறார், சுய முயற்சியால் சுய முன்னேற்றம் சேவையின் முன்னேற்றம் இருபுறமும் கவனம் கொடுத்துக் கொண்டே இருங்கள். முன்னேறிக் கொண்டே இருங்கள். சதா பறந்து கொண்டே இருங்கள். பறக்க வைத்துக் கொண்டே இருங்கள். நல்லது.

நாலாபுறமும் பாப்தாதாவின் அன்பில் மூழ்கி இருக்கின்ற நினைவு மற்றும் சேவையில் முன்னேறிக் கொண்டே பிறரையும் முன்னேற வைக்கின்ற குழந்தைகளைப் பார்த்து அமிர்தவேளையில் மிக நன்றாக. சக்திசாலியாக அமைக்கின்ற குழந்தைகளைப் பார்த்து மனதின் சேவை மூலமாக இறக்க மனதுடன் கருணை உள்ளத்துடன் உதவிகரமாக இருக்கும் ஆத்மாக்களுக்கு ஏதாவது அஞ்சலியை தருவதற்கான விதியையும் உருவாக்கி முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். பாப்தாதா பார்க்கின்றார்; ஒவ்வொரு குழந்தையிடமும் ஊக்கம், உற்சாகம் உள்ளது ஆனால் எதை சேர்த்துக் கொள்ள வேண்டும்? சதா என்ற வார்த்தையை சேர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வப்போது என்ற வார்த்தையை அகராதியிலி ருந்தே நீக்கி விட வேண்டும். நாலாபுறமும் உள்ள குழந்தைகள் ஹோலியைக் கொண்டாடினீர்கள் எரித்தும் விட்டீர்கள் தொடர்பின் வர்ணமும் பூசிக் கொண்டீர்கள். முடிந்ததற்கு முற்றுப் புள்ளி வைத்து ஹோலியும் கொண்டாடினீர்கள்; எனவே பாப்தாதா நாலாபுறமும் உள்ள குழந்தைகளை தனக்கு முன்பாக பார்க்கின்றார்; பாப்தாதாவின் பன்மடங்கு அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

தாதிகளுடன்: பாபாவின் குழந்தை நீங்கள் நாடகத்தின் கட்டுப்பாட்டில் கட்டப்பட்டவர்கள், ஒருவருக்கொருவர் வழிகாட்டி ஆமாம், சரிங்க. (ஹான்ஜி) என்று தானும் பறந்து பிறரையும் பறக்க வைத்துக் கொண்டே இருங்கள். நல்லது.

**மோகினி சகோதரியுடன்:** அன்பின் காரணமாக முன்னேறிக் கொண்டே இருக்கிறீர்கள் (இடை இடையே உடல் நிலை சௌகரியம் இல்லாமல்

போய் விடுகிறது) அது தவறுதலாக நடைபெறுகிறது. தன்னுடைய நேரப்படி சற்று ஏற்றத் தாழ்வுடன் ஏற்படுகிறது. மற்றபடி பாப்தாதா உதவியாளராக இருக்கின்றார். நடந்து முடிந்தவைகள் அது மாற்றம் அடைவதற்கு நேரம் ஆகிறது. இது பழைய உடல் அல்லவா? நடந்து விடும். தினசரி மருந்து மாத்திரைகள் மட்டும் சரியான முறைப்படி எடுத்துக் கொண்டே இருங்கள். ஏனென்றால் இப்பொழுது சிறிது காலத்திற்கு மருந்து மாத்திரைகளின் ஆதாரத்தைப் பெற வேண்டும். நடந்து விடும். அனைவர் தலை மீதும் கை உள்ளது. இது ஒருவர் மீது வைக்கப்பட்டது ஆனால் உங்கள் அனைவர் மீதும் பாபாவின் கை உள்ளது.

பரதாதியுடன்: இந்த பிராமண வாழ்வில் இவருக்குக் கிடைத்த பரிசே சதா சிரித்த முகத்துடன் இருப்பதுதான், எது நடந்தாலும் சரி ஆனால் சிரித்த முகத்துடன் இருக்கிறார். பறந்து கொண்டே இருக்கிறார். ஆடிக் கொண்டே இருக்கிறார். இவர் நோயாளி அல்ல? ஆனால் பறக்கும் கலையில் இருக்கின்றார்.

நிர்வையர் சகோதரர்: உங்களுக்கும் சதா காலத்திற்கும் ஒவ்வொரு வினாடிக்கும் வாழ்த்துக்கள்

பிரிஜ் மோகன் சகோதரருடன்: சேவையில் பிஸியாக இருக்கிறீர்கள் நல்லது.

ரமேஷ் சகோதரருடன்: நல்லது அரசாங்கம் சட்டம் மாற்றம் அடைகின்றது; ஆனால் நீங்கள் தங்களுடைய பிராமண பரிவாரத்தில் எதையெல்லாம் சுலபமாக்க முடியுமோ மிக சுலபமாக்கிக் கொண்டே செல்லுங்கள். தன்னுடைய துறையில் சுலபமாக்கிக் கொண்டே செல்லுங்கள். அப்பொழுது அனைவருமே குஷி குஷியுடன் சகயோகி ஆவார்கள். ஏன் என்றால் யக்ஞும் ஆதாரம் உங்கள் துறையையே ஆதாரமாகக் கொண்டுள்ளது. அந்த அளவிற்கு சகஜம் ஆக்கி விடுங்கள். கஷ்டமாக இருந்தாலும் கூட அரசாங்கம் கஷ்டமாகத்தான் மாற்றி விடும் ஆனால் கடினத்தையும் சகஜமான விதி மூலமாக கண்டு பிடித்து மிக சுலபமாக மாற்றி விடுங்கள், மற்றபடி அரசாங்கம் தன் வேலையை செய்யட்டும், நீங்கள் தன் வேலையை செய்யுங்கள். (பட்ஜெட்டில்) அது

வரத்தான் செய்யும் அவர்கள் வேலையை அவர்கள் செய்யத்தானே செய்வார்கள். நாம் நமது வேலையைச் செய்ய வேண்டும். அவர்கள் தன்னுடைய வேலையில் சரியாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் பிரச்சினைகள் இருக்கும் அல்லவா? பாண்டவ அரசாங்கத்தில் பிரச்சினைகள் இல்லை. குஷி குஷியுடன் செய்யுங்கள்.

பூபால் சகோதரருடன்: காரியங்கள் சரியாக நடைபெறுகிறதா? (தண்ணீர் தட்டுப்பாடு உள்ளது) இந்த தண்ணீர் கொண்டு வரும் வண்டிகளை அதிகப்படுத்துங்கள். இப்பொழுது உள்ள சீசன் அப்படி உள்ளது. மற்றபடி ஸ்டாக் வைத்துக் கொள்ளுங்கள்; ஸ்டாக்கை அதிகப்படுத்துங்கள். இடத்தையும் நீர் லாரிகளையும் அதிகப்படுத்தினால் சகஜமாகும். எனவே இடத்தையும், லாரிகளையும் அதிகப்படுத்துங்கள். மற்றும் இருப்பையும் அதிகப்படுத்துங்கள்.

அயல்நாட்டு மூத்த சகோதரிகளுடன்: நன்றாக குழு அமைத்து முயற்சியில் முன்னேறிக் கொண்டே இருக்கின்றீர்கள். பாப்தாதாவிற்கு மதுபனின் இந்த சீசன் நன்றாக பிடித்திருக்கிறது. ஒரு ஆண்டிற்கான டோஸ் நன்றாக கிடைத்து விடுகிறது. இந்த பட்டிக்கான அனுபவம் நன்றாக உள்ளது. தங்களுக்குள் குழு அமைத்திருப்பது நன்றாக உள்ளது ஒவ்வொரு ஆண்டும் புதிது புதிதாக ஏதாவது செய்து கொண்டே இருங்கள். (பகரைன்'ல் நன்றாக சேவை நடந்துக் கொண்டிருக்கிறது) அமைதியின் பக்கம் கவனத்தை ஈர்க்கச் செய்வது நல்லது (சகோதரி ஜெயந்தியுடன்) நன்றாக செய்து வந்துள்ளீர்கள். வாழ்த்துக்கள்.

ஜதராபாத் சாந்தி சரோவரில் புதிய ஹால் கட்டப்பட்டது. அதற்கான திறப்பு விழா பாப்தாதா பட்டனை அழுத்தி செய்தார். இந்த ஸ்தானத்தின் சேவை அதிகரிக்கும். அனைவருக்கும் செய்தி கிடைக்கும் தங்களுக்குள் விரைவாக மீட்டிங் செய்து கொண்டே இருங்கள். இப்போது என்ன செய்ய வேண்டும். இப்போது என்ன செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டுக் கொண்டே இருங்கள். நடைமுறையில் செய்து வாருங்கள். பாண்டவர்கள் சக்திகள் எல்லோருமே சேர்ந்தே திட்டம் தீட்ட வேண்டும் இனி என்ன செய்ய வேண்டும்? இனி என்ன செய்ய வேண்டும் என்று ஒன்றுக்கு பின்னால் ஒன்று செய்து கொண்டே இருங்கள். பிறகு இந்த இடத்தில் நன்றாக சேவை நடைபெறும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋

## 15.03.2010 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பரமாத்மா அன்பிற்கு பாத்திரமான ஆத்மாக்களே! துக்கமானவர்களுக்கு சுகத்தின் அஞ்சலியைத் தாருங்கள், விணானவைகளை முடித்து விட்டு சக்தி வாய்ந்தவர்களாக ஆகுங்கள், சமயத்தை அருகாமையில் கொண்டு வாருங்கள்!

இன்று பாப்தாதா தனது நாலாபுறங்களிலுமுள்ள பரமாத்மாவின் நினைவின் அன்பு நிறைந்த குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இம்மாதிரி பரமாத்மாவிடம் அன்பு நிறைந்த குழந்தைகள் கோடியில் ஒருவர் தான் இருப்பர். ஏனெனில் இச்சமயத்தில் பரமாத்மாவின் அன்பின் அனுபவத்தை செய்ய முடியும் முழு கல்பத்தில் ஆத்மாக்களின் அன்பு மகாத்மாக்களின் (சன்னியாசி) அன்பு தர்மாத்மாக்களின் அன்பு ஆகியவற்றை அனுபவம் செய்துள்ளீர்கள் ஆனால் பரமாத்மாவின் அன்பு இப்பொழுது சங்கமயுகத்தில் மட்டுமே கிடைக்கிறது. அதனை நீங்கள் அனைத்து குழந்தைகளும் அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள். பராமாத்மா எங்கிருக்கிறார். என்று உங்களிடம் எவரேனும் கேட்டால், நீங்கள் என்ன பதில் தருவீர்கள்? எங்கள் கூடவே இருக்கிறார். என்னுடைய உள்ளத்தில் இருக்கிறார், இம்மாதிரி அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள். அல்லவா? நீங்கள் தான் அறிவீர்கள். உங்களுக்குத்தான் இந்த அனுபவம் உண்டு, நமது உள்ளத்தில் பாபா இருக்கிறார் மற்றும் பாபாவின் உள்ளத்தில் நாம் இருக்கிறோம். இந்த பரமாத்மாவினுடைய அன்பின் போதையின் அனுபவத்தை செய்வதற்கு நமக்குத்தான் பாக்கியம் பிராப்தியாகியுள்ளது என்பதை அறிவீர்கள். எவரோடும் அன்பு ஏற்பட்டுவிட்டால் அதனுடைய அடையாளம்

எப்படியிருக்கும்? அதன் அடையாளம், அவர்மீது பலியாகிக் கிடப்பது, ஆக, பரமதந்தை பரமாத்மா குழந்தைகளாகிய உங்களிடம் என்ன விரும்புகிறார்? அதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். என்னுடைய ஒவ்வொரு குழந்தையும் பாபாவுக்குச் சமமாக ஆக வேண்டும் என்பதே ஒவ்வொரு குழந்தைகள் மீதும் பாபாவின் விருப்பமாகும் எப்படி பாபாவோ அப்படியே குழந்தைகளின் ஸ்திதியும் (நிலை) சிரேஷ்டமாக இருக்க வேண்டும். அந்த சிரேஷ்ட ஸ்திதி என்ன? முழுமையான தூய்மையின் ஸ்திதி அம்மாதிரி தூய்மை என்றால் சொப்பனத்தில் கூட தூய்மையின்மை வரமுடியாது. இம்மாதிரி முழுமையான சம்பூர்ண ஸ்திதியை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்களா? அந்த முழுமையான தூய்மையில் தூய்மையின்மையின் (அபவித்திரத்தா) பெயர் அடையாளமே இருக்க முடியாது.

தற்போது சமயம் அருகாமையில் வந்து கொண்டிருக்கும் காரணத்தால் பாப்தாதா இப்பொழுது இதனை ஜாடையாக கொடுத்துக் கொண்டிருக்கிறார், சமயத்தினுடைய அருகாமையின் அனுசாரம் வீனான சங்கல்பம் வருகிறது என்றால் அதுகூட அபவித்திரத்தாவின் அடையாளமாகும். முழு நாளில் எந்த விதமான வீணான சங்கல்பம் -அபிமானத்தின் அல்லது அவமானத்தின் ஈர்ப்பு தனது பக்கம் ஈர்க்கவில்லை தானே என்று சோதனை செய்யுங்கள். ஏனெனில் போகப்போக பாபாவின் மூலம் தரப்பட்ட விசேஷத்தன்மைகளை தனது விசேஷம் என்று அபிமானத்தில் வருகின்றனர் என்றால், இதுவும் கூட வீணான சங்கல்பம் ஆகிறது எனது என்பதின் அசுபமான சங்கல்பம் அதாவது நான் ஒன்றும் குறைந்தவனில்லை, நானும் அனைத்தையும் அறிவேன், என்னுடைய சங்கல்பமே உண்மையானது, உயர்ந்தது என்கிற இந்த எனது என்பதின் அபிமானத்தின் சங்கல்பம் -இது கூட சூட்சும அபவித்திரத்தாவின் அம்சமாகும். ஆகையினால் உங்களை சோதித்துப்பாருங்கள். எந்தவிதமான அபவித்திரத்தாவின் வீணான சங்கல்பத்தின் எவ்வித அம்சமும் இருந்து விடவில்லையே? ஏனெனில் தற்போது தூய்மையான உலகின் ஸ்தாபனத்தின் சமயத்தை அருகாமையில் கொண்டுவரக்கூடிய பரமாத்மாவின் குழந்தைகளாகிய நீங்கள் நிமித்தமானவர்கள் (காரணமானவர்கள்). ஆக, நிமித்தமான ஆத்மாக்களின் வைப்ரேஷன் உலகம் முழுவதும் பரவுகிறது. எனவே சோதனைச் செய்யுங்கள், எந்தவிதமான வீண் எண்ணங்களும்

தன்பக்கம் கவர்ந்து இழுக்காமல் இருக்கின்றதா? ஏனென்றால் இப்பொழுது பவித்திரமான உலகம், பவித்திரமான ராஜ்யம் அருகே வந்து கொண்டிருக்கிறது. துக்கம் மற்றும் அசாந்தி உலகம் முழுவதும் விதவிதமான ரூபங்களில் அதிகமாகிக் கொண்டேயிருக்கின்றது. அதற்காக தூய்மையின் வைப்ரேஷன் (அதிர்வலைகள்) அவசியமாகின்றது. துக்கம் அசாந்திக்கான காரணம் தூய்மையில்லாமல் போனது தான். எனவே தூய்மையற்ற ஆத்மாக்களுக்கும், பக்த ஆத்மாக்களுக்கும் இப்பொழுது இரண்டு விதமான சேவை தேவைப்படுகிறது. வார்த்தைகள் மூலமாக செய்கின்ற சேவையை பாப்தாதா பார்க்கின்றார். உலகெங்கிலும் கோலாகலமாக நடந்து கொண்டிருக்கிறது. தன்னுடைய குறைகளையும், வெளியிடுகிறார்கள் ஆனால் இப்பொழுது ஆத்மாக்களுக்கு அதிகமான சக்தி தேவைப்படுகிறது. அது என்னவென்றால், மனசேவை மூலமாக சக்தி தருவது, தைரிய மூட்டுவது, ஊக்கம் உற்சாகம் தருவதாகும். இப்படிப்பட்ட இரண்டு சேவை இந்த சமயத்தில் தேவைப்படுகிறது. இதற்காக பாப்தாதாவும் சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையும் தன்னை உலகிற்கே மூதாதையர் நான் (பூர்வஜ்) என்று புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் இந்த கல்ப விருட்சத்திற்கே அஸ்திவாரமாக இருப்பவர்கள். பூர்வஜ் மற்றும் பூஜைக்குரிய ஆத்மாக்கள் நீங்களே. பாப்தாதாவிற்கு துக்கப்படுகின்ற குழந்தைகளின் அழுகுரல் கேட்டுக் கொண்டேயிருக்கிறது. அந்த குரல் குழந்தைகளாகிய உங்களையும் வந்தடைய வேண்டும். எந்தளவிற்கு சம்பூர்ண தூய்மையான ஆத்மாவாக ஆகிறீர்களோ, ஆகிக் கொண்டு தான் இருக்கிறீர்கள், ஆகியும் உள்ளீர்கள்; ஆனால் அதோடு மட்டுமல்லாமல் மனதின் சேவையை அதிகரிக்க வேண்டும்.

இன்றைய உலகில் சுகம், சாந்தி, சந்தோஷம் ஆத்மாக்களிடம் குறைந்து கொண்டே செல்கின்றது. பரமாத்மாவின் அன்பிற்கு பாத்திரமான ஆத்மாக்கள் நீங்கள் இப்பொழுது அன்பு, திருப்தி, மகிழ்ச்சி என்ற அஞ்சலி தருவது அவசியமானதாகும். துக்கப்படுகின்றவர்களுக்கு சுகம் என்ற அஞ்சலியைத் தரவேண்டும். ஒன்று மனசேவையின் மூலமாக சக்தி கொடுங்கள். இன்னொன்று தன்னுடைய முகம் மற்றும் நடத்தைகள் மூலமாக பாபாவை பிரத்யட்சம் செய்யுங்கள். இப்போது நீங்கள் செய்கின்ற சேவையைப் பார்த்து, நடக்கின்ற சேவையைப்

பார்த்து பாப்தாதா மகிழ்ச்சியடைகிறார். சேவையில் எல்லோருமே ஊக்கம் உற்சாகத்தோடு செயல்படுகின்றனர் ஆனால் இப்போது ஒரு சேவை மீதமாக உள்ளது. இதுவரையில் பிரம்மா குமாரிகள் மனித ஆத்மாக்களை நல்லவர்களாக மாற்றி விடுகிறார்கள் என்ற சப்தம் தான் வந்திருக்கிறது. தீய பழக்கம் உள்ளவர்களை தீய பழக்கத்திலிருந்து விடுவிக்கிறார்கள், இளைஞர்களுக்காக அரசாங்கம் என்ன எதிர்பார்க்கிறதோ அந்த சேவையை இவர்கள் மிக நன்றாக செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற வார்த்தை வெளிவந்துள்ளது ஆனால் இப்போது பாபா வந்துள்ளார், பரமாத்மா வந்து விட்டார். பரமாத்மா ஞானத்தை இவர்கள் தருகின்றார்கள், என்னுடைய தந்தை ஆஸ்தி தர வந்து விட்டார். இப்போது தந்தையின் பக்கம் பார்வை சென்றால் அவர்களையும் கூட பரமாத்மாவின் அன்பு பரமாத்மாவின் கவர்ச்சியானது தன்பக்கம் கவர்ந்திழுக்கும். நன்றாக உள்ளது. நன்றாக உள்ளது என்பதெல்லாம் நடந்தேறி விட்டது, ஆனால் பரமாத்மா தந்தையின் பிரத்யட்சம் கவர்ந்திழுத்து நல்லவர்களாகவே மாற்றி விடும். எனவே இப்போது தந்தையின் பக்கம் அறிமுகம் வேண்டும். யாரை நினைக்கிறார்களோ, அவரது ஞானம், அவருடைய ஆஸ்தி கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனவே இப்பொழுது மனதின் மூலமாக பாபாவிற்கு அருகாமையில் கொண்டு வாருங்கள். தன்னுடைய முகம், மற்றும் நடத்தை மூலமாக தன்னுடைய கண்களிலும் தந்தையை பிரத்யட்சம் செய்யுங்கள். இதற்காக தங்களுக்குள் திட்டம் தீட்டுங்கள்.

பாப்தாதா பார்க்கின்றார். பாப்தாதா கொடுத்துள்ள திட்டத்தை சமயத்திற்கேற்ப குழந்தைகள் மிகவும் விதிப்படி ஊக்கம் உற்சாகத்தோடு செய்து காண்பிக்கிறீர்கள், செய்து கொண்டும் இருக்கிறீர்கள். அதற்காக பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் பல பல மடங்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றார். இப்போது ஒரு விஷயத்தை பகவான் ஆஸ்தி தருகிறார் என்பதையும் சேர்த்துக் கொள்ளுங்கள். இப்போது ஆஸ்தி பெறவில்லை என்றால் எப்போது பெறுவார்கள். தந்தைக்கு இரக்கம் ஏற்படுகிறது. குழந்தைகள்படும் துக்கம், அசாந்தியான சூழ்நிலையை பார்க்கும் பொழுது பாபாவுக்கும் உங்களுக்கும் தெரியும், இவையெல்லாம் இன்னும் அதிகரிக்கத்தான் போகிறது. உச்சக்கட்டத்தை அடையாமல் முடிவு என்பது வராது. இப்படிப்பட்ட சமயத்தில் ஆத்மாக்களுக்கு இதனை அனுபவம் செய்ய

வையுங்கள். வாய் வார்த்தையால் சொன்னால் மட்டும் போதாது. பகவான் ஆஸ்தி தருகிறார் என்பதையும் அனுபவம் செய்ய வையுங்கள். நீங்கள் எல்லோரும் கூட இப்பொழுது பாபாவின் பிரத்யட்சம் எப்பொழுது எப்படி நடக்கும்? என்று தானே கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். பிரம்மா குமாரிகள் வரையிலும் பெயர் வந்துள்ளது ஆனால் பிரம்மா குமாரிகளுக்கு கற்பிப்பவர் யார்? பிரம்மா குமாரிகள் மற்றும் பிரம்மா குமாரர்களின் வள்ளலாக இருப்பவர் யார்? இப்பொழுது அந்த நேரத்தை அருகாமையில் கொண்டுவர வேண்டும். அதை முடிவு செய்ய வேண்டும். அந்த முடிவினை அருகாமையில் கொண்டு வருபவர்கள் யார்? அதற்கு நாள் நிமித்தமாக இருப்பவன் என்று ஒவ்வொரு குழந்தையும் புரிந்து கொள்கிறீர்கள் தானே? தந்தை இந்த ஒரு பொறுப்பை தன்னோடு குழந்தைகளுக்கும் கொடுத்துள்ளார். தந்தை இவர் என காட்ட வேண்டிய குழந்தைகள் நீங்கள். சில குழந்தைகள் பாபாவை தெரிந்துள்ளார்கள், அப்படி நீங்களும் கூட தந்தையை தெரிந்து கொள்ளும் போது என்ன செய்தீர்கள்? அறிமுகம் கிடைத்தது. தெரிந்து கொண்டீர்கள், குழந்தையாகவும் மாறிவிட்டீர்கள், ஆஸ்திக்கு அதிகாரியாக மாறி விட்டீர்கள். இப்போது ஆஸ்தியை பெறுகின்ற ஆத்மாக்களின் வரிசை நிற்க வேண்டும். அந்த வரிசை இன்னும் ஏற்படாமல் தடையாக இருப்பது ஏன்? ஏனென்றால் இன்னும் சில குழந்தைகள் வீணான எண்ணங்கள் என்ற வரிசையில் நின்று கொண்டிருக்கிறார்கள்? ஏன்? என்ன எப்படி? இதை முடிக்கவே நேரம் ஒதுக்க வேண்டியுள்ளது ஆனால் வீணான எண்ணங்கள் இன்னும் முடிவு பெறவில்லை. அந்த வீணான எண்ணங்கள் சக்திசாலியாக மாற விடாமல் தடையாக இருக்கிறது.

இன்று பாப்தாதா வீணான எண்ணங்களை முடிவு கட்டுவதற்காக நாலாபுறமும் உள்ள குழந்தைகளுக்கு தைரியம் வழங்குகின்றார். இப்போதிருந்தே வீணான எண்ணங்களை முடித்து விட்டு எப்பொழுதுமே சக்திவாய்ந்தவராக மாறி பிறரையும் சக்தி வாய்ந்தவராக மாற்றுங்கள். செய்தி மட்டும் கொடுத்தால் போதாது, சக்தி வாய்ந்தவராகவும் மாற்ற வேண்டும். சக்தி வாய்ந்தவராக மாறுங்கள், சக்தி வாய்ந்தவராக மாற்றுங்கள். வீணான எண்ணங்களை முடிவு செய்யும் நாளை கொண்டாடுங்கள். இதை செய்ய முடியுமா? இந்த வீணான எண்ணங்கள் தனக்கு கூட நஷ்டத்தைத் தருகிறது.

நேரத்தை வீணாக்குகிறது, முகத்தில் எப்பொழுதுமே மகிழ்ச்சியாக, அதிர்ஷ்டவானாக இருக்க விடாமல் அந்த அனுபவத்தை குறைத்து விடுகிறது. என்று நினைக்கிறீர்கள் தானே எனவே இப்பொழுது அதற்கான முடிவு நாளை அருகாமையில் கொண்டு வர வேண்டும். யார் அதை செய்ய வேண்டும்? நீங்கள் தானே செய்ய வேண்டும். இப்பொழுது அந்த முடிவு நாளை அருகாமையில் கொண்டு வரவேண்டும். அதற்காக வீண் எண்ணங்களை முடித்தே ஆக வேண்டும். முடிக்க வேண்டும் என்பதல்ல, முடித்தே ஆக வேண்டும். கனவிலும் கூட வரவிடக் கூடாது. எண்ணத்தில் வருவதை விடுங்கள், ஆனால் கனவிலும் கூட வரக்கூடாது. அந்தளவிற்கு தைரியம் வைக்கின்ற குழந்தைகள் கை உயர்த்துங்கள். மனதார உயர்த்துகின்றீர்களா? வெளிமுகமாக கை உயர்த்துவது மிக சுலபம் தான் ஆனால் மனதார கை உயர்த்துகின்றீர்களா? யார் மனதார உயர்த்துகின்றீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள், மனம் என்ற கையை நல்லது.

இன்று வந்துள்ள வி.ஐ.பி.கள் எழுந்திருங்கள். இன்று விசேஷமாக வந்துள்ள வி.ஐ.பி. அவர்கள் எழுந்திருங்கள். இங்கே அமர்ந்துள்ளீர்கள் அல்லவா? நல்லது. பாப்தாதா வந்துள்ள விஜபிகளுக்காக -வி.ஐ.பி. என்றாலே அன்பு, சகயோகமும் செய்பவர்கள் மற்றும் இப்போது நடைபெறுகின்ற சேவையில் அன்பு கொண்டவர்கள், சகோதரிகள் மற்றும் சகோதரர்கள் அன்பாக இருப்பவர்கள். அப்படிப்பட்டவர்களைத்தான் சினேகமும், சகயோகமும் உள்ள வி.ஐ.பி. என்று சொல்லப்படும். இப்போது என்ன ஆக வேண்டும். வி.ஐ.பி.கள் தான் நீங்கள்! பாப்தாதாவிற்கும் மகிழ்ச்சி தாள் உங்களை பார்க்கும் பொழுது. இப்பொழுது என்ன ஆவீர்கள்? ஒரே ஒரு சின்ன விஷயம்; சொல்லட்டுமா? சொல்லலாமா? பாப்தாதா சொல்கிறார், உங்களது அன்பு மிக நன்றாகவே இருக்கிறது. நினைவும் செய்கிறீர்கள். பாபா வார்த்தையும் மனதிலிருந்து எழுகிறது. இன்னும் ஒரே ஒரு விசயத்தை சேர்த்துக் கொள்ள வேண்டும்? அது எந்த விசயம்? சகஜயோகி என்ற பெயர் பட்டியலிலும் வர வேண்டும். ஒரு அடி எடுத்து வைத்து விட்டீர்கள், ஆனால் முன்னேறுவதற்காக என்ன செய்ய வேண்டும்? அடுத்த அடியும் எடுத்து வையுங்கள், அப்படி வைத்தால் முன்னேறுவீர்கள்; இரண்டாவது அடியும் எடுத்து வைக்க வேண்டும். எனவே பாப்தாதாவின் விருப்பம் இது தான். சினேகி மற்றும் சகயோகி

குழந்தைகள் மீது தந்தையின் விருப்பம் இது தான். எனவே இதோடு சகஜயோகியாகவும் மாறிவிடுங்கள். சகஜயோகி ஆக முடியுமா? ஆகமுடியுமா? இதில் கடினம் ஒன்றும் கிடையாது. எதையும் விட வேண்டியதும் இல்லை. இதில் மேலும் யோக சக்தியின் உதவி கிடைக்கும். உங்களின் செயலிலும் அபிவிருத்தி ஏற்படும். பாப்தாதாவிற்கு சகயோகி குழந்தைகளின் நினைவு வருகின்றது. ஏன் நினைவு வருகின்றது? ஏனென்றால் நீங்கள் உதாரணமாக விளங்குபவர்கள். ஏனென்றால் ஒரு விஷயத்திற்காக மக்கள் பயப்படுகிறார்கள், அங்கு சென்றால் வீடு வாசலை விட்டு சென்று விட வேண்டி வருமோ? ஆனால் நீங்கள் அனைவரும் வீட்டிலேயே இருக்கின்றீர்கள், அன்பாகவும், ஒத்துழைப்பாகவும் நடந்து கொள்கிறீர்கள், உங்களைப் பார்த்து அவர்களிடம் ஊக்கம் உற்சாகம் வரக்கூடும். உங்கள் மூலமாக சேவையும் நடைபெறும். அனேகருக்கு அதிர்ஷ்டத்தின் பூட்டைத் திறக்க முடியும். இது பிடித்துள்ளதா? இது பிடித்துள்ளது என்றால் கை உயர்த்துங்கள். நல்லது. இப்போது பாப்தாதா ஒரு வரதானம் தருகின்றார். நீங்கள் தைரியம் வைத்தீர்கள், தைரியத்திற்கு கிடைத்த பழம் மிக இனிமையானது. பாப்தாதா இந்த வரம் தருகிறார், நீங்கள் அனைவரும் வரயிருக்கின்ற புது உலகில் 21-ஜென்மத்திற்கு சதா குஷியாக இருப்பீர்கள். உலகின் இடையூறுகளின் சிக்கிக் கொள்ள மாட்டீர்கள். வாழ்க்கைக்கு தேவைப்படுகின்ற உடல், மனம், பொருள் எல்லாமே அங்கு கிடைத்து விடும். ஆரோக்கியமான உடல், மகிழ்ச்சி நிறைந்த மனம், அளவில்லா செல்வம். இது உங்களுக்கு 21-பிறவிகளுக்காக உத்திரவாதம். பாப்தாதாவிற்கு சம்மதம். நீங்கள் ஒரு விசயத்தை மட்டும் சேர்த்துக் கொண்டால் போதும் தினசரி ஆசிரமத்திற்கு வர முடியாவிட்டாலும் சரி தொலை பேசி மூலம் தொடர்பு கொள்ளுங்கள். இந்த காது என்ற தொலை பேசி உள்ளது அல்லவா? அதை செய்யுங்கள். உங்கள் தொடர்பில் உள்ள ஆசிரியை, சகோதரிகள் யார் இருக்கின்றார்களோ அவர்களோடு நேரத்தை குறித்துக் கொள்ளுங்கள். நான் இந்த நேரத்தில் போன் செய்வேன். அப்பொழுது முரளி என்று சொல்லப்படும் மகா வாக்கியம் ஆரம்பத்தில் வருகின்ற வார்த்தைகள் மற்றும் வரதானம் அதைக் கேளுங்கள். ஏன்? பாப்தாதா ஏன் சொல்கிறார்? இதை செய்வோம் என்றால் கை உயர்த்துங்கள். நல்லது. இன்றைய உலகில் பார்க்கும் பொழுது விசயங்கள் மிகவும் மாறிக் கொண்டே செல்கின்றது.

அரசாங்கத்தின் சட்ட திட்டங்களும் மாறிக் கொண்டிருக்கின்றன. இன்னும் மாறத்தான் போகின்றது. மனிதர்களின் உள்ளுணர்வுகளும் மாறுகின்றது. இதனால் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் விசயங்களும் வரத்தான் போகிறது. வீண் எண்ணங்களும் வரத்தான் செய்யும். அந்த வீண் எண்ணங்களை அழிப்பதற்காக சக்தி வாய்ந்த எண்ங்களை உருவாக்க வேண்டும். வீணாவற்றை (Waste) அழிப்பதற்கு நல்ல சிரேஷ்டமான (Best) சங்கல்பம் வேண்டும். அந்த வரதானத்தை தினசரி கேட்க வேண்டும். வரதானம் என்பது சிரேஷ்ட சங்கல்பம் ஆகும். வீண் எண்ணங்கள் வருகின்ற போது சிரேஷ்ட சங்கல்டம் மனதிற்கு தேவைப்படுகிறது. மனதை காலியாக வைக்க முடியாது. மனதிற்கு ஏதேனும் ஒரு சங்கல்பம் தேவைப்படுகிறது. எனவே வீணானவற்றை நல்லதாக்குவதற்காக உங்களுக்கு இந்த வரதானம் மற்றும் சுலோகன் முரளியின் ஆரம்ப வார்த்தைகள் மனதை மாற்றுவதற்காக தேவைப்படுகிறது. இதை செய்ய முடியுமா? செய்ய முடியுமா? சிலர் செய்து கொண்டும் இருப்பீர்கள். ஏனென்றால் பாபாவிற்கு இப்பொழுது இந்த அனுபவத்தை செய்து பிறரையும் அனுபவசாலி யாக மாற்றுவதில் அதிகமான சேவை செய்து காட்ட முடியும். இப்போது நேரம் வெகு வேகமாக சென்று கொண்டிருக்கிறது. இந்த வேகமான நேரத்தில் உங்களது சேவையும் வேகமாக நடைபெறும். எனவே பாப்தாதாவிற்கு வந்திருக்கும் உங்களை பார்க்கும் பொழுது மகிழ்ச்சி ஏற்படுகின்றது. எப்பொழுதாவது வருகின்றவர்களும் குழந்தைகள் தானே குழந்தைகளைப் பார்க்கும் பொழுது மகிழ்ச்சி ஏற்படுகின்றது. எனவே நீங்கள் சிறிது நேரம் மட்டும் அமிர்த வேளையில் எழுந்து படுக்கையில் கிடந்தபடியே கூட கண்களை விழித்து முதன் முதலாக சிவபாபாவிற்கு குட்மார்னிங் என்று காலை வணக்கம் செய்யுங்கள், செய்ய முடியுமா இதை? பாருங்கள் உலகில் ஒரு விசயம் சொல்வார்கள், காலையில் நல்லவர் முகத்தில் விழித்தால் நாள் முழுவதும் நன்றாக கழியும் என்று யாராவது தீயவர்களை பார்த்து விட்டால் என்ன சொல்வர்கள் தெரியுமா? சொல்கிறார்கள், தெரியவில்லை இன்று யார் முகத்தில் விழித்தேனோ, இன்றைய நாள் முழுவதும் சரியேயில்லை. அப்படியானால் நல்லவரிலும் மிக நல்லவர் யார்? சிவபாபா தானே! சிவபாபாவிடம் அன்பு உள்ளது தானே! எனவே கண்விழித்தவுடனே சிவபாபாவுக்கு குட்மார்னிங், பிறகு கண் உறங்கும் பொழுது இரவில் படுக்கைக்கு

செல்லும் பொழுதும் சிவபாபா குட்நைட் இதை சொல்வது சுலபம் தானே இப்படி செய்தால் நாள் முழுவதும் உங்களுக்கு நன்றாகவே இருக்கும். ஏனென்றால் வரதானம் என்ற சுப சங்கல்பமும் பெற்று விட்டீர்கள். இப்படியே செய்து பாருங்கள். உங்கள் மீது பாப்தாதாவிற்கும் அன்பு உள்ளது அல்லவா? இதையும் நீங்கள் செய்து விட்டால் மேலும் மேலும் முன்னேறிக் கொண்டேயிருப்பீர்கள். தன்னுடைய இந்த வாழ்க்கையிலேயே கூட குஷியை அனுபவம் செய்வீர்கள். ஒருபோதும் துக்கத்தின் அலை கூட உங்களை வந்து தொட முடியாது. சம்மதமா? சகஜயோகி ஆனாலே போதும். நான் ஆத்மா, சிவபாபாவின் குழந்தை இதை செய்தாலே போதும் நீங்கள் சகஜயோகி ஆகி விட்டீர்கள். போகும்போதும் வரும்போதும் கூட இதையே நினைவு செய்யுங்கள். நான் ஆத்மா, சிவபாபாவின் குழந்தை. இதை நினைவு செய்ய முடியும் தானே? மிக்க நல்லது. இது தான் இந்த குழந்தைகளோடு செய்த ஆன்மீக உரையாடல்!

நீங்கள் அனைவரும் வாரிசு குழந்தைகளாயினும், வாரிசு ஆகக்கூடியவர் ஆயினும் சரி, யாரெல்லாம் தன்னை பாப்தாதாவின் உறுதியான வாரிசு என நினைக்கிறீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். வாரிசா? வி.ஐ.பி.க்களும் எல்லோருமே கை உயர்த்துகிறார்கள். கை தட்டுங்கள். நல்லது இப்பொழுது வாரிசு தரமானவர்கள் இன்று இந்த சங்கல்பத்தை தங்களுக்குள் உறுதி செய்து கொள்ளுங்கள். பாப்தாதாவிற்கு இப்படி உறுதி செய்வீர்களா? நாங்கள் இப்போதிருந்தே வீண் எண்ணங்களை அழித்து விடுவோம். சம்மதமா? சம்மதமா? ஆம் என்றால் கை உயர்த்துங்கள். நல்லது. உறுதியான சங்கல்பம் உள்ளது என்பவர்கள் மனதார சொல்லுங்கள். வெறும் கை தூக்கினால் போதாது. மனம் உவந்து கை தூக்க வேண்டும். அந்த கையை உயர்த்துங்கள். நல்லது. எல்லோருமே வா? பின்னால் இருப்பவர்களும் கை உயர்த்துகின்றீர்கள். யார் உறுதியாக சொல்கின்றீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். இன்று என்ன நாள்? வீணானவற்றை அழித்து விடும் நாள். அதாவது சக்திவாய்ந்தவராக மாறும் நாள். எப்பொழுதுமே சக்தி வாய்ந்தவர். அடுத்து என்ன செய்ய வேண்டும் துக்கம் அசாந்திக்கான முடிவை அருகே கொண்டு வர வேண்டும். இரண்டு வேலை செய்ய வேண்டியுள்ளது. ஒன்று எப்போதுமே சக்தி வாய்ந்தவராக இருப்பது, இரண்டாவது சக்தி வாய்ந்தவராக மாறுவதற்கான சமயத்தை அருகே

கொண்டு வருவது சரியா? இந்த இரண்டு வேலையும் செய்ய வேண்டும் சரியா? தலையசையுங்கள். ஏனென்றால் பாப்தாதாவிடம் துக்கத்தின் புலம்பல் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. உங்களுக்கு மட்டும் அது ஏன் கேட்கவில்லை. பாப்தாதா இந்த புலம்பலைக் கேட்டுக் கொண்டிருக்கும்பொழுது யாரெல்லாம் தன்னை வாரிசு என நினைக்கிறீர்களோ, ஆஸ்தி பெறுகின்றவர்களுக்கு பிறருக்கும் அதை நினைவூட்டுவதற்கான இரக்கம் வர வேண்டுமல்லவா? இரக்கம் ஏன் வருவதில்லை. வைராக்கியம் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கியம் மற்றும் இரக்கம் வர வேண்டும். சிறிய சிறிய விசயங்களிலெல்லாம் ஏன்? என்ன? என்ற வரிசையில் சென்று நேரத்தை இழக்கக்கூடாது. இப்பொழுது பாப்தாதாவின் தேடித்தேடி கண்டெடுக்கப்பட்டுள்ள பல பல மடங்கு வரதானங்களால் நிரம்பியுள்ள வரதானி குழந்தைகளே! இப்போது சங்கல்பம் வையுங்கள். அதனை உறுதி செய்யுங்கள். உறுதி என்ற சாவி போடுங்கள். கர்மயோகி ஆகுங்கள். கர்மயோகி வாழ்க்கை உள்ளவர்கள் தானே நீங்கள். வாழ்க்கை என்பது சதா காலத்திற்கானது. எப்பொழுதாவது என்பதில்லை. எனவே இப்பொழுது தன்னுடைய கருணை, பரிவு துக்கம் நீக்கி சுகம் தரும் சொரூபத்தை வெளிப்படுத்துங்கள். பாப்தாதாவும் திடீரென (அச்சானக்) என்ற வார்த்தையை வெகுகாலமாக சொல்லிக் கொண்டிருக்கிறார். எனவே திடீரென ஏதேனும் நடந்து விடுவதற்கு முன்னதாகவே பக்தர்களின் கூக்குரலை பூர்த்தி செய்யுங்கள். துக்கத்தின் இருப்பவர்களின் துக்கமான புலம்பலை கேளுங்கள், இப்போது சிறியவர் பெரியவர் யாராயினும் உலகை மாற்றுபவர்கள் உலகில் உள்ள துக்கத்தை மாற்றி சுகமயமான உலகை கொண்டு வருவதற்கான பொறுப்பானவர்கள் என்பதை உணருங்கள்.

பாப்தாதாவின் இந்த வருகையும் எதுவரையில்? எல்லாமே திடீரென்று நடைபெறும். எனவே இப்போது நடைபெறும். வாரிசு தரமானவர்கள் ஆஸ்தியை நினைவூட்ட வேண்டும். இரக்க மனம் உடையவராக ஆக வேண்டும். இது இன்னும் எவ்வளவு நாள் வரை நடைபெறும் என்று யோசிக்க வேண்டாம். எதிர்பாரதவிதமாக எப்போது வேண்டுமானலும் ஏற்படலாம். எனவே வீண் எண்ணத்தை முடித்தே ஆக வேண்டும். முடிக்க வேண்டும் என்பதல்ல முடித்தே ஆக வேண்டும். பாப்தாதா ரிசல்ட்டைப் பார்த்தார். எல்லோருடைய கர்மத்தின் முடிவை சோதனை

செய்தார். முயற்சியின் வேகத்தையும் சோதனை செய்தார். பொக்கிஷங்களின் சேமிப்புக் கணக்கையும் சோதனை செய்தார். அப்போது ரிசல்ட்டில் என்ன தென்பட்டது சேமிட்பு செய்வதற் கான முயற்சி நன்றாக செய்தீர்கள் ஆனால் செய்த சேமிப்பின் சதவீதம் விதவிதமாக இருந்தது. எவ்வளவு சேமிக்க வேண்டும் என நினைக்கிறீர்களோ சேமித்தீர்கள் ஆனால் சதவீதம் தான். சிறிதே சேமிப்பானது சதா காலத்திற்மான சேமிப்பாகயில்லை. எவ்வளவு சேமித்தீர்களோ அது சதா காலத்திற்காக வேண்டிய சேமிட்பில் வித்தியாசமாகவே இருந்தது. எனவே பாப்தாதா இப்போது ஒவ்வொரு விசயத்திலும் திட சங்கல்பம் செய்ய வைக்கின்றார். கோபத்திற்காக செய்ய வைத்தார் ஆனால் மனதளவில் கூட எவர் பொருட்டும் பதட்டம் கூடாது, ஏன் என்ன என்பதே கிடையாது. வாய் வரையிலும் கட்டுப்பாபாக இருக்கிறீர்கள். சில சில குழந்தைகள் நன்றாகவே செய்துள்ளீர்கள். ஆனாலும் மனதில் சிறிதளவு நடைபெறுகிறது. அதையும் அகற்றுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். அந்தளவிற்கு கவனம் வைத்ததைப் பார்த்து பாப்தாதாவும் மகிழ்ச்சியடைகின்றார். இப்படி கோபப்படுவதால் எனக்குத் தான் நஷ்டம் என்பதை புரிந்துள்ளீர்கள் புரிந்தா? நல்லது.

சேவைக்கான வாய்ப்பு ஈஸ்டன் ஜோன் (பெங்கால், பிஹார், ஒரிசா, அஸ்சாம்).: நேபாள் மற்றும் தமிழ்நாடு: ஹாலில் முக்கால் பாகம் இந்த மண்டலத்தை சார்ந்தது தான். நல்லது. சேவாதாரிகள். சேவாதாரிகள் மட்டும் எழுந்திருங்கள். அவர்களோடு வந்திருப்பவர்கள் அமருங்கள். அனேகர் வந்துள்ளீர்கள். நல்லது. இப்போது விசேஷமாக ஈஸ்டன் ஜோன் (மண்டலம்). ஈஸ்டனில் கூட பல்வேறு பிரிவுகள் உள்ளது. ஈஸ்டன் மண்டலத்துக்குரிய விசேஷத்தன்மை அதிலும் விசேஷமான கல்கத்தா. அங்கே ஞான சூரியன் உதயமானது. ஞான சூரியன் உதயமான அந்த பூமி எவ்வளவு உயர்வான (மகான்) பூமி. மற்றும் உள்ள பெங்கால், பீஹார், பீஹாரும் குறைந்ததல்ல. ஏனென்றால் பாப்தாதா பார்க்கின்றார். பீகாரில் சேவைக்கான சாதனங்கள் மிக நன்றாகவே உள்ளது. ஏன் நன்றாக உள்ளது? ஏனென்றால் பீகாரை சார்ந்தவர்கள் நல்ல விருட்டம் வைக்கிறார்கள். இப்பொழுதும்கூட பீகாரில் கலவரம் நடந்தது. அதில் பீகாரைச் சார்ந்த சகோதர சகோதரிகள் செய்த காரியம், மக்களுக்கு தேவையாக

இருந்தது தான். வாழ்க்கைக்காக பெற வேண்டியது, ஞானம் சொல்வது மனதிற்கும் உணவு, உடலுக்காக வேண்டிய பராமரிப்பு இதனால் பீகாரில் பெயர் நன்றாக பரவியுள்ளது. அன்போடு கேட்கின்றார்கள், இவர்களும் மனதார சேவை செய்துள்ளார்கள், பொருட்கள் மட்டும் அல்லாமல், சென்டரும் திறந்திருக்கிறார்கள். அப்படி செய்துள்ள இரட்டை சேவையைப் பார்த்து விசேஷமாக அந்த குழந்தைகளுக்கு பாப்தாதா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றார். பொதுவாகப் பார்க்கும்பொழுது மற்ற இடங்களிலும் சேவை செய்கிறார்கள், செய்தும் இருக்கிறார்கள். அவர்களின் பெயர் சொல்லவில்லை, ஆனால் செய்து கொண்டேயிருக்கிறார்கள். அயல் நாட்டிலும் செய்கிறார்கள். இந்தியாவிலும் செய்துள்ளார்கள். பீகாரின் விசேஷம் என்னவென்றால் அங்கே ஆங்காங்கே ஞான மழை நன்றாக பொழிந்துள்ளது. எத்தனை சென்டர் திறந்திருக்கிறார்கள்? (ஒரே வருடத்தில் 12-மாவட்டங்களில் 12-சென்டர் திறந்துள்ளார்கள்) கீதா பாடசாலையும் திறந்திருக்கிறார்கள். (அதுவும் திறக்கப்பட்டுள்ளது) பாப்தாதாவிற்கு இந்தசேவை மிக நன்றாக பிடித்திருக்கிறது. எங்கெல்லாம் அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறதோ அங்கே இதுபோன்ற இரட்டை சேவை செய்ய வேண்டும். சென்டர் திறப்பதில் நீங்கள் நிமித்தமாக இருக்க வேண்டும். ஏனென்றால் அங்குள்ள நிலவரம் மிக மோசமாகிக் கொண்டிருக்கிறது. இருப்பினும் இன்னும் சிறிது காலத்தில் உங்களுக்கு நல்ல சகயோகியாக அமைவார்கள். மேலும் பாப்தாதா பார்க்கின்றார். இப்போது இந்த மண்டலத்திலும் சேவை மிக நன்றாக விஸ்தாரம் அடைந்து கொண்டிருக்கிறது. பெங்காலாக இருந்தாலும், பீகாராக இருந்தாலும் அவர்களுடைய துணையாக இருந்து செயல்படுபவர்களாக இருந்தாலும் நேப்பாளும் இருக்கிறது. ஒரிசா, அஸாம் மற்றும் தமிழ்நாடு, இவர்களுடைய துணையாக இருப்பவர்கள் அதிகம். ஏனென்றால் ஞான சூரியன் உதயம் ஆகியுள்ளது அல்லவா? எனவே சென்டரும் அதிகம், துணையும் அதிகம் உள்ளது. மேலும் இதுவரையில் பாப்தாதா பார்க்கின்றார்; ஒவ்வொரு ஏரியாவிலும் பெரிய ஜோனாக இல்லா விட்டாலும் சிறியதாக இருந்தாலும் சிறியவர்களிடம் சேவைக்கான ஊக்கம், அதிகமாக உள்ளது. மேலும் மிகவும் ஆர்வத்துடனும் செய்திருக்கிறார்கள், செய்து கொண்டும் இருக்கிறார்கள். எனவே இப்போது பெயர் சொன்னால் அனைத்து மண்டலத்திலும் எல்லோருடைய பெயரும் மிகவும் உயர்வு அடைந்திருக்கிறது. மேலும்

ரிசல்ட்டில் தென்பட்டது தினசரி மாணவர்களும் வந்திருக்கிறார்கள். செய்த நிகழ்ச்சிகள் சிறியதோ, பெரியதோ எதுவாகிலும் ஊடகங்களின் (பத்திரிகை துறை) துணையும் உள்ளது. ஊடகங்களும் துணையாக இருக்கிறது ஆனால் இப்போது பாபா கூறியப்படி முடிவு நேரத்தை வெகு அருகே கொண்டு வர வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை வெகு விரைவில் செய்ய வேண்டும். நல்லது. பாப்தாதா பெங்கால் மற்றும் பீகாரிலிருந்து வந்த அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார். யக்ஞ சேவை என்னும் புண்ணிய காரியம் அதை நன்றாக பராமரித்து வருகின்றீர்கள். கூட்டம் சற்று அதிகமாக உள்ளது ஆனால் பாப்தாதா ஒரு விசயத்தைப் பார்க்கின்றார். எல்லோருக்குமே குறைவான கூட்டத்தில் வருவதை விட பெரும் கூட்டத்தில் வருவது தான் பிடித்துள்ளது. நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு தான் இருக்கிறது கூட்டம். இருப்பினும் கும்பமேளாவை விட (இங்கு) தூய்மையான உணவு கிடைக்கிறது, தங்குவதற்கும் கூடாரமாவது கிடைக்கிறது அல்லவா? ஆனால் வந்திருக்கும் அனைவரிடமும் பாப்தாதா அவர்களின் அன்பை பார்க்கின்றார். ஏனென்றால் அன்பில் எதை செய்தாலும், எதை பார்க்க நேரிட்டாலும் அது ஒன்றும் பெரிதாக தென்படவில்லை. மிகவும் சந்தோஷமாகவே செய்கிறார்கள். பெங்கால், பீகார் மண்டலமும் சேவைக்கான பங்கை நன்றாகவே செய்துள்ளார்கள். நல்லது. இங்கே அமர்ந்திருப்பவர்களின் யாருக்காவது தங்கும் இடவசதியிலோ, உணவுக்கான ஏற்படிலோ ஏதாவது கஷ்டம் இருந்தால் கை உயர்த்துங்கள், யாருக்காவது உணவு மற்றும் தங்கும் இடவசதியில் கடினம் இருந்தால் கை உயர்த்துங்கள். உயரமாக உயர்த்துங்கள். நல்லது.

தமிழ்நாடு: இப்பொழுது தமிழ்நாட்டிலும் சேவைக்கான ஊக்கம் உற்சாகம் அதிகமாகவே உள்ளது. பாப்தாதா செய்தியிலும் கேள்விப்பட்டார். இவர்கள் சிவனின் மேளா (12-ஜோதிர் லிங்கம்) நடத்துகின்றார்கள். பல்வேறு இடங்களுக்கும் சென்று அந்த சேவை செய்து வருகின்றார்கள். அந்த சேவையின் பலனை பிற இடங்களுக்கும் கொண்டு செல்கிறார்கள். இது மிக நன்றாக உள்ளது. ஏனென்றால் இதில் முக்கியமாக சிவபாபாவின் அறிமுகம் இருக்கிறதல்லவா? அதில் சிவபாபாவின் அறிமுகம் கிடைக்கிறது. இது நல்ல சேவை. மற்ற மாநிலங்களுக்கும் சென்று சேவை செய்கிறார்கள். பாப்தாதாவிற்கு

அந்த சேவை பற்றிய நல்லதொரு செய்தி கிடைத்தது. செய்து கொண்டேயிருங்கள். மேலும் இவர்களுக்கிடையே உள்ள ஒற்றுமை இந்த மண்டலத்தில் நன்றாக உள்ளது. இந்த ஒற்றுமையானது தானாகவே புண்ணிய செயலை செய்விக்கிறது. ஊக்கம், உற்சாகத்தை அதிகப்படுத்துகிறது. பாப்தாதாவும் பார்க்கின்றார் மண்டலத்தில் உள்ள அனைவருமே சேர்ந்து ஹால் கட்டியிருக்கிறார்கள். எல்லோருடைய சகயோகமும் சேர்ந்து ஹால் கட்டியிருக்கிறார்கள். மண்டலத்தில் ஒருவருக்கொருவர் சகயோகம் என்ற விசயமே மிக நன்றாகவே உள்ளது. ஏனென்றால் மண்டலம் ஒன்றாக உள்ளது. எனவே தான் செய்ய முடிகிறது. ஒருவருக்கொருவர் அருகே இருப்பதால் ஒருவருக்கொருவர் சகயோகம் தருவதும் சுலபமாகிறது. இதுவும் சகயோகி ஆவதாகும். என்னுடைய ஏரியா என்பதல்ல, அனைத்தும் என்னுடையது தான். எங்கு தேவையுள்ளதோ அது எனதாகும். மண்டலத்தின் பெயர் வெவ்வேறாக இருக்கலாம், ஆனால் எங்கே தேவையுள்ளதோ, தேவைப்படும் நேரத்தில் சகயோகம் தருவது இது மகா புண்ணியமாகும். தன்னுடைய புண்ணிய கணக்கை சேமிக்க வேண்டும் என்றால் சகயோகி ஆகுங்கள், சேவைக்கு நான்கு கரம் கொடுங்கள். இது பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்துள்ளது. இப்படிப்பட்ட குழுவை பெருக்கிக் கொண்டே செல்லுங்கள். அதிகரிப்பீர்கள் அல்லவா? கை உயர்த்துங்கள். அனைவருமே கை உயர்த்தினார்கள். நல்லது. நாம் அனைவருமே ஒன்று தான் சேவையின் காரணமாக பராமரிப்பு செய்வதற்காக மண்டலமாக பிரிக்கப்பட்டுள்ளது. மற்றப்படி எல்லோரும் ஒன்று தான். ஒன்றாகவே இருப்போம், ஒருவருக்காகவே இருக்கின்றோம் -ஒருவருக்காகவே இருப்போம். நல்லது.

நேபாள்: நேபாளத்தின் சேவை செய்திகளும் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். அங்கே உள்ள சூழலுக்கு ஏற்ப யுக்தியாக சேவையின் அபிவிருத்தியும் நன்றாக செய்து கொண்டிருக்கிறார்கள். பாப்தாதா நேபாளத்தின் சேவை செய்தியினைக் கேட்டு மகிழ்ச்சியடைகின்றார். எது நடந்தாலும் இந்த ஆன்மீக சேவை குறைந்து விடுவதில்லை. மேலும் மேலும் அதிகரிக்கிறதே தவிர குறைவடைவதில்லை. சென்டரும் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. கலவரத்தின் நடுவே இருந்தாலும் உறுதியாக இருக்கின்றார்கள். எனவே பாப்தாதாவிற்கு நேபாளத்தின் சேவை மீது பெருமையுள்ளது. மிக

நல்லது. நேபாளத்தை சேர்ந்த அனைவரும் எழுந்து நின்றுள்ளார்கள். நேபாளத்தைச் சார்ந்தவர்கள் கை உயர்த்துங்கள். ஒவ்வொரு மண்டலமாக சந்திக்கும் விதம் நன்றாக இருக்கிறது. மண்டலம் முழுவதும் வந்திருக்கிறார்கள். சேவையும் செய்கின்றார்கள். இதனால் எல்லோருக்கும் ஆதரவும் கிடைக்கின்றது. நல்லது.

**இரட்டை அயல் நாட்டவர்:** இரட்டை அயல் நாட்டவருக்கு இரட்டை முயற்சியாளர் என்று பாப்தாதா டைட்டில் கொடுத்திருக்கிறார். சொல்லுங்கள் நீங்கள் இரட்டை முயற்சியாளர் தானே கை உயர்த்துங்கள். இரட்டை அயல் நாட்டவர் அல்ல, இரட்டை முயற்சியாளர். மிக்க நல்லது. பாப்தாதா எப்போதுமே சொல்லிக் கொண்டிருக்கிறார். அயல் நாட்டு சேவை மூலமாக பாபாவிற்கு உலக சேவாதாரி என்பதை நிரூபணம் செய்துள்ளார்கள். முதலில் பாரதத்திற்கு மட்டும் சேவாதாரியாக இருந்தவர்கள் இப்போது ஒவ்வொரு முறையிலும் 80-90 தேசங்களிலி ருந்து இரட்டை அயல் நாட்டவர் வருகின்றனர். பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஒவ்வொரு சீசனிலும் அயல் நாட்டில் சேவை அதிகரித்துக் கொண்டே செல்கிறது? மேலும் எவ்வளவு உற்சாகத்துடன் வந்து விடுகிறார்கள். எவ்வளவு தான் முயற்சி எடுக்க வேண்டியிருந்தாலும் பாப்தாதாவிற்கு தெரிகிறது. முன்பெல்லாம் ஆரம்பத்தில் ஒருமுறை வந்து விட்டு சென்றால் அடுத்த ஆண்டு வருவதற்காக டிக்கெட்டுக்கான பணத்தை உண்டியல் வைத்து சேமிப்பார்கள். எப்படியாவது வந்து விடுகிறார்கள் ஆனால் இப்பொழுதெல்லாம் உடல் மனம் பொருள் அனைத்திலுமே முன்னேறிக் கொண்டே செல்கிறார்கள். மேலும் பாப்தாதா முன்பு கூட சொல்லி யிருக்கிறார் மதுபனில் வந்து புத்துணர்ச்சி பெற்று செல்கிறார்கள், ஒவ்வொரு குழந்தைக்கும் புத்துணர்ச்சி கிடைக்கிறது. அவரவரும் தன்மீது கவனம் தருகிறார்கள். இது பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்துள்ளது. மேலும் இந்த முறைக்கான ரிசல்ட்டும் பாப்தாதா கேள்விப்பட்டார். ஒருவருக்கொருவர் சிநேகி சகயோகியாக இருந்து ஒருவருக்கொருவர் ஏதேனும் அறிவுரை தருவதில், முயற்சியின் வேகத்தை அதிகரிப்பதில் ஏதேனும் குறைவு காணப்பட்டால் ஒருவருக்கொருவர் மனதார பகிர்ந்து கொள்கிறார்கள். இது பற்றிய செய்தி பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்திருந்தது. ஏனென்றால் எதுவரையில் தன்னுடைய குறையை தெரிந்து கொள்ளவில்லையோ,

புரிந்து கொள்ளவில்லையோ அதுவரையில் மாற்றம் வரமுடியாது. எனவே பாப்தாதா விற்கு முயற்சி இந்த விதி நன்றாக பிடித்திருக்கிறது. சிறிய சிறிய குழுவாக இணைந்து மீட்டிங் செய்வது, அதில் கவனம் அதிகம் செல்கிறது. எனவே இரட்டை அயல் நாட்டவர். இரட்டை முயற்சியாளர்கள், மதுபனின் பாப்தாதா இந்த செய்தியை அதிகமாகப் பார்த்தார். மற்றப்படி வந்துள்ள அனைவரும் இப்பொழுது தன்னை தடைகளற்றவராக புரிந்துள்ளீர்களா? தன்னை தடையில்லாதவர் நிர்விக்னமானவர்கள் என்று புரிந்தவர்கள் கை உயர்த்துங்கள். நிர்விக்னமாக இருக்கின்றீர்களா? நல்லது. பெரும்பான்மையானவர்கள் இருக்கின்றீர்கள். சிலர் இல்லாதவர்களும் இருக்கின்றார்கள். பெரும்பான்மையானோர் இருக்கின்றீர்கள். இன்று பாப்தாதா இரட்டை அயல் நாட்டவருக்கு இரண்டு வரதானம் தருகின்றார். ஒன்று சேவை செய்து சென்டரின் எண்ணிக்கையை அதிகப்படித்திக் கொண்டே செல்லுங்கள். தினசரி மாணவர்களையும் அதிகப்படுத்திக் கொண்டே செல்லுங்கள். அதிகப்படுத்துவீர்களே? மேலும் ஒருவருக்கொருவர் முயற்சி செய்து பிறரையும் முயற்சி செய்ய வைப்பதற்காக மீட்டிங் செய்து வருகின்றீர்கள். ஒவ்வொரு ஆண்டும் செய்கின்றீர்கள். அதன் மூலமாக எவ்வளவு பயன் அடைய வேண்டுமோ அந்தளவிற்கு அடைந்து கொண்டே செல்லுங்கள் மற்றப்படி தங்களுக்குள் செய்கின்ற இந்த விதியும் நன்றாக உள்ளது. இதன் மூலமாக நல்ல முன்னேற்றம் ஏற்பட முடியும். இதில் கவனம் கொடுத்து முன்னேற்றினால் முன்னேறுவீர்கள். கேட்டீர்களா? பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி. மேலும் மனதில் என்ன நினைவு செய்கிறார் பாபா? ஆஹா குழந்தைளே! ஆஹா! நல்லது.

முதல் முறையாக வந்திருப்பவர்களுடன்: இப்போதைய சீசனில் பெரும்பாலும் வகுப்பு முழுவதிலும் பாதிக்கு மேலானோர் முதல் முறையாக வந்திருப்பவர்கள் தான். ஏனென்றால் ரெகுலராக வந்திருப்பவர்கள் வெளியில் அமர்ந்திருக்கிறார்கள். வகுப்பறையில் புதியவர்கள் அமர்ந்துள்ளார்கள். நல்லது எல்லோரும் பார்த்தீர்களா? எவ்வளவு பரிவாரம் (குடும்பம்) அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. பாப்தாதா சொல்கின்றார் ஆஹா பரிவாரமே ஆஹா இப்போது நீங்கள் எந்த இடத்தை அமைத்தாலும் அது சிறியதாகத்தான் ஆகும். அதற்காக திட்டம் போட வேண்டும் அல்லவா? ஏனென்றால் உங்கள் அனைவரது

கவனமும் செய்தி தருவதில் நல்ல விதமாக சென்றுள்ளது. இவ்வளவு சேவை நடந்துள்ளது என்றால் அதனால் அபிவிருத்தியும் அகும் அல்லவா? முதன் முறையாக வந்திருப்பவர்களுக்கு பாப்தாதா முதன் முறையாக வந்தற்கான பல மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். இப்பொழுது தடைகளற்றவராக மாறி வருகின்ற இன்னல்களில் தானாகவோ பிறரின் சகயோகத்துடன் வெகு விரைவாக இன்னல்களை முடித்து விட்டு பறந்து செல்லுங்கள். இப்பொழுது நடந்து செல்வதற்கான நேரம் முடிவடைந்து விட்டது. நீங்கள் வந்துள்ள நேரம் பறப்பதற்கானது. பறக்க வேண்டிய சமயத்தில் நடந்து செல்லக் கூடாது. பறந்து கொண்டே செல்லுங்கள். முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். பாப்தாதாவின் விசேஷமான வரதானம் இது அபரிமிதமான உதவி முதல் முறையாக வந்திருக்கும் குழந்தைகள் உங்களுக்கு. நல்லது.

இப்பொழுது நாலாபுறமும் இருக்கின்ற பரமாத்மாவின் அன்பில் மூழ்கிய குழந்தைகளுக்கு யாரெல்லாம் பாபாவின் அன்பில் பறந்து கொண்டு இருக்கின்றீர்களோ, தீவிர முயற்சி செய்கின்றீர்களோ மேலும் சேவையில் தடைகளற்ற உண்மையான சேவாதாரியாக உள்ளீர்களோ அப்படிப்பட்ட குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கின்றர். அதுதோடு மட்டுமல்லாமல் வெகு தொலைவில் இருப்பவர்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். இங்கே சாந்திவனத்திலும் கூட ஆங்காங்கே திரையில் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் இப்படி அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா சதா காலத்திற்கும் மகிழ்ந்து கொண்டிருங்கள் மகிழ்வையே பிறருக்கும் வழங்கிக் கொண்டிருங்கள் என்று வரதானம் தருகின்றார். முகம் என்றுமே மலர்ந்திருக்க வேண்டும் உங்கள் முகத்தை பார்க்கின்றவரும் பார்த்தவுடனேயே மகிழ்ச்சியடைய வேண்டும். யார் எப்படி இருந்தாலும் சரி, உங்களுடைய மலர்ந்த முகத்தைப் பார்த்தவுடனே தானும் மகிழ்ச்சியடைய வேண்டும். இந்த வரதானம் நாலாபுறமும் இருக்கின்ற அனைத்து குழந்தைகளுக்கும் மற்றும் எதிரில் அமர்ந்துள்ள குழந்தைகளுக்காகவும் இந்த ஒன்றையே வரதானமாகத் தருகின்றார். ஒருபொழுதும் முகம் வாடி விடக்கூடாது, அப்படி நீங்கள் வாடிப்போனால் உலகத்தின் நிலமை என்னவாகும்? நீங்கள் எப்பொழுதுமே மலாந்த முகத்தோடு மகிழ்ச்சியான நடத்தையோடும் இருக்க வேண்டும். பிறரையும் அப்படியே இருக்கச்

செய்ய வேண்டும். அப்படிப்பட்ட தீவிர முயற்சி செய்யும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் இனிமையிலும் இனிமையான குழந்தைகளுக்கு நமஸ்காரங்கள்.

<u>நிர்மல் சாந்தா தாதி அவர்களுடன்:</u> இவர் நன்றாக இருக்கிறார். கணக்கு வழக்கு எதுவாக இருந்தாலும் அதனை முடிப்பதில் சாட்சியாகவும் விலகியும், அன்பாக இருந்து செயல்படுவதில் நல்ல ஒரு முன்னுதாரணமாக இருக்கின்றார். நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 31.03.2010 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மூதாதையர் (பூர்வஜ்) மற்றும் பூஜிக்கத்தக்கவர்களின்(பூஜ்யர்) சுவமானத்தில் இருந்து அனைவரையும் பாலனை (வளர்ப்பு) செய்யுங்கள். முழு மரத்திற்கும் மனதின் மூலம் சக்தியை (சகாஷ்) வழங்குங்கள்!

இன்று பாப்தாதா நாலா புறங்களிலுமுள்ள தன்னுடைய பூர்வஜ் (மூதாதையர்) மற்றும் பூஜ்ய (பூஜைக்குரிய) ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பூர்வஜ் ஆத்மாக்களாக தங்களைப் புரிந்து கொள்கிறீர்களா? பூஜ்ய ஆத்மாக்கள் வசிக்கும் இடம் எங்கே? தங்களுடைய நான்கு காலங்களையும் எதிரில் கொண்டு வாருங்கள். அதில் பாருங்கள். உங்களுடைய இடம் எங்கிருக்கிறது? தெரியுமா உங்களுக்கு? பூர்வஜ் ஆத்மாக்களாகிய உங்களுடைய இடம் வேரில் இருக்கிறது. வேர் மூலம் மரத்திற்கும் பாவனை கிடைக்கிறது. நீங்கள் இந்த முழு மரத்தின் கிளைகள் மற்றும் இலைகளுக்கு பாலனை செய்யக் கூடியவர்கள், சக்தி கொடுக்கக் கூடியவர்கள், பூர்வஜ் ஆத்மாக்கள். பூர்வஜின் கூடவே பூஜ்யமாகவும் இருக்கிறீர்கள். தண்டு பாகம் மூலமாக முழு இலைகளுக்கும் சக்தி கிடைக்கிறது. ஆக உங்களை முழு மரத்திற்கும் சக்தி கொடுக்கக் கூடிய அனுபவம் செய்கிறீர்களா? போதை இருக்கிறதா? நாம் பூர்வஜ் அனைத்து ஆத்மாக்களுக்கும் அதாவது, கிளைகளுக்கும் மற்றும் இலைகளுக்கும் சக்தியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எப்படி பிரம்மாபாபாவிற்கு "கிரேட் கிரேட் கிராண்ட் பாதர்" என்று சொல்கிறார்கள் அல்லவா? ஆக நீங்கள் அவருடைய துணைவர்களாக இருக்கிறீர்கள், "மாஸ்டர் கிரேட் கிரேட் கிராண்ட் பாதர்", முழு மரத்தின் ஆத்மாக்களுக்கு பூர்வஜ்

ஆத்மாக்களாகிய உங்கள் பக்கம் கவர்ச்சி இருக்கிறது. நீங்கள் பூர்வஜ் ஆத்மாக்கள் அவர்களுக்கு சக்திகள் மூலமாக பாலனையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், எப்படி பூர்வஜ் ஆத்மாக்களாகிய உங்கள் அனைவருக்கும் பாலனை பாபா கொடுத்திருக்கிறாரோ, பாபா எப்படி சக்திகள் மூலமாக பாலனை செய்தாரோ, அதேபோன்று நீங்களும் பூர்வஜ் ஆத்மா என்ற சம்பந்தத்தில் சக்திகள் மூலமாக அவர்களுக்கு பாலனை செய்யக்கூடியவர்கள். இன்றைய காலங்களில் பார்க்கின்றீர்கள், எல்லா ஆத்மாக்களும் துக்கத்தில் இருக்கிறார்கள், அவர்கள் கூக்குரலிடுகிறார்கள், தங்கள், தங்களுடைய தேவி தேவதைகளை வாருங்கள், எங்களைக் காப்பாற்றுங்கள், எங்களுக்கு சாந்தி கொடுங்கள், சக்தி கொடுங்கள், பூர்வஜ் ஆத்மாக்களாகிய உங்களின் காதுகளில் கேட்கிறதா?

இதை அனுபவம் செய்துள்ளீர்கள், அதாவது நாம் தான் பூர்வஜ் ஆத்மாக்கள். முழு மரத்தையும் பாருங்கள். மற்ற மதங்களைச் சேர்ந்த ஆத்மாக்களும் கூட மரத்தில் கிளை பாகங்களாக இருக்கிற காரணத்தினால் அவர்களும் கூட உங்களை அதே பார்வையில் பார்க்கிறார்கள், அவர்களுக்கும் பூர்வஜ் நீங்கள் தான். எந்த தர்மத்தைச் சேர்ந்த ஆத்மாக்களை நீங்கள் சந்தித்தாலும் இவ்வாறு புரிந்து கொள்கிறீர்களா? அதாவது இவர்கள் கூட எங்களுடைய மரத்தின் கிளை பாகங்கள் என்று. அவர்களும் எப்பொழுது உங்களை சந்திக்கிறார்களோ. புரிந்து கொள்கிறார்கள். இவர்கள் நம்முடையவர்கள், எங்களுடைய என்ற அனுபவம் அந்த ஆத்மாக்களுக்கும் கூட ஏற்படத்தான் வேண்டும். ஆக. இவ்வளவு போதை, அவ்வளவு உள்ளுக்குள் உங்களுக்கு, உங்களின் பக்கம் இரக்கம் வருகிறதா? அவர்கள் கதறுகிறார்கள். இரக்கம் காட்டு என்று, ஆக, இப்பொழுது நேரத்திற்குத் தகுந்தாற்போல் நீங்கள் அனைவரும் பூர்வஜ் ஆத்மாக்கள், மனதின் மூலம் சக்திகளின் பாலனை செய்ய வேண்டும். அது அவர்களுக்குத் தேவைப்படுகிறது. ஆக எவ்வளவு நீங்கள் தங்களது பூர்வஜ் போதையில் இருப்பீர்களோ அந்தளவுக்கு உங்கள் மூலம் அவர்களுக்கு பாலனை ஏற்படும். அதே போல் பாருங்கள், எவருக்கேனும் லௌகீகத்தில் கூட பெரியவர்களிடம் இருந்து தான் கிடைக்கிறது. அவர்களுக்கு உடலுக்கான உணவு படிப்பு அவர்களுடைய வருமானத்தின் மூலம் ஏற்பாடு செய்கிறார்கள். அது போன்று குழந்தைகளாகிய உங்களுக்கு வெவ்வேறு விதமான சக்திகள்

மூலம் பாலனை செய்யப்பட்டுள்ளதோ, அவ்வாறே உங்களுடைய காரியம் நடந்து கொண்டிருக்கிறது. முழு மரத்திற்கும் கிளை பாகங்களும், இலைகளுக்கும் பாலனை செய்ய வேண்டும். அப்படிப்பட்ட ஊக்கம், உற்சாகம் பூர்வஜ் ஆதிமாக்களாகிய உங்களுக்கு வருகிறதா? போதை இருக்கிறதா? பூஜ்யமாகவும் இருக்கிறீர்கள், பாருங்கள் முழு நாடகத்திலும் எவ்வளவு ஆத்மாக்களாகிய உங்களுக்கு விதிப்படி பூஜை ஏற்படுகிறதோ அப்படிப்பட்ட பூஜை எந்த ஒரு மகாத்மாக்களுக்கும் நடப்பதில்லை. உங்களுடைய பூஜை நியமப்படி, ஆரத்தி எடுத்தல், பிரசாதம் படைத்தல், அப்படி வேறு யாருக்கும் நடப்பதில்லை. பாடல் கூட பாடப்பட்டுள்ளது பாருங்கள். உங்களுக்கு விதிப்பூர்வமாக கீர்த்தனைகள் கூட பாடப்படுகின்றது. எவருக்கும் அப்படிப்பட்ட பாடல் பாடப்படுவதில்லை. ஆக, நீங்கள் பூர்வஜ்வின் கூடவே பூஜைக்குரியவர்களாகவும், இருக்கின்றீர்கள். நாடகத்தில் உங்களைப் போன்று பூஜைக்குரிய புகழ் பாடக்கூடிய நிலை வேறு யாருக்கும் கிடையாது. ஆக பாப்தாதா அப்படிப்பட்ட பூஜ்ய ஆத்மாக்களைப் பார்த்து எவ்வளவு மகிழ்ச்சி அடைகின்றார். பாபாவின் மனதில் அடிக்கடி இந்த பாடல் ஒலிக்கிறது. ஆஹா என்னுடைய முழு மரத்தின் பூர்வஜ் மற்றும் பூஜ்ய ஆத்மாக்களே! ஆஹா இன்றைய நாட்களில் பாப்தாதா குழந்தைகளாகிய உங்கள் அனைவருக்கும் எது உங்களுடைய சுவமானமாக இருக்கிறதோ அதாவது பாப் சமான் ஆவது சம்பன்னம் (முழுமை) மற்றும் சம்பூர்ணம் (நிறைவு) ஆவதற்கான அந்த ரூபங்களைப் பார்க்க விரும்புகிறார். அதற்காக ஒரு விசயம் குழந்தைகளுடைய சுவனத்தில் இருக்க வேண்டும். பாப்தாதா பார்த்தார், அனைத்து குழந்தை களும் முயற்சி மிகவும் நல்ல முறையில் செய்கிறார்கள், ஆனால் (சதா) எப்பொழுதும் என்ற வார்த்தையை ஒவ்வொருவரும் தங்களது முயற்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டும். கவனம் செலுத்த வேண்டும். பாப்தாதா, குழந்தைகளிடம் கேட்கின்றார். எப்படி பாப்தாதா குழந்தைகளாகிய உங்கள் அனைவருக்கும் சிரேஷ்ட சுவமான்தாரிகளாக ஆத்மாவின் ரூபத்தில் பார்க்கின்றாரோ அதுபோல் நீங்கள் உங்களை அப்படியே சுவமான்தாரி, புரிந்திருக்கிறீர்களா? பாப்தாதா பார்க்கின்றார். பதில் கூறுகிறார், இருக்கிறீர்கள். லட்சியமும் இது தான், கையையும் உயர்த்து கிறீர்கள். பின்னர் மெதுவாக அவ்வப்போது.... என்றாகி விடுகிறது. ஆக பாப்தாதாவும் கூட அவ்வப்பொழுது என்ற வார்த்தையை சமாப்தி (முடிவு) செய்ய

விரும்புகிறார். ஏனென்றால் சமமாக ஆக வேண்டிய நேரம் வந்து விட்டது. சமயத்தை அருகாமையில் கொண்டு வரக்கூடியவர்கள் யார்? குழந்தைகள் பாபாவிடம் கேட்கிறார்கள். பாபா நீங்களே நேரம் சொல்லுங்கள். 20-வருடமா. 16-வருடமா, 10-வருடமா? என்று சொல்லுங்கள் என்று கேட்கிறார். அதற்கு பாபா குழந்தைகளிடம் கேள்வி கேட்கிறார், சமயத்தை அருகாமையில் கொண்டு வரக்கூடியவர்கள் யார்? தனியாக பாபா கொண்டு வருவாரா? பாபா ஸ்தாபனம் செய்தார், தனியாக செய்தாரா? யக்ஞத்தைப் படைத்தார். பிராமணர்கள் இல்லாமல் யக்ஞத்தைப் படைத்தாரா? பாபா குழந்தைகளின் கூட, குழந்தைகளும் கூட சொல்கிறார்கள். இப்பொழுதும் நீங்கள் எங்கள் கூட தான் இருக்கிறீர்கள். போகும் போதும் உங்கள் கூட தான் என்று பாபா குழந்தைகளிடம் கேட்கின்றார். சமயத்தை அருகாமையில் கொண்டு வரக்கூடிய குழந்தைகள் நீங்களே தேதியை உறுதிப் படுத்துங்கள். யார் தேதியை உறுதிப்படுத்த வேண்டும், பாபாவா? பாபாவின் குழந்தைகளா? இருவரும் சேர்ந்தா?

ஆக இன்று இந்த ஆண்டின் சந்திப்பின் கடைசி வாய்ப்பு ஆகவே பாப்தாதா பார்க்கின்றார். குழந்தைகளும் விரும்புகிறார்கள், இப்பொழுது எங்களுடைய ராஜ்யத்திற்கு செல்லலாம், இப்பொழுது வீட்டிற்குச் செல்ல வேண்டும். இது கூட பாட்டுப் பாடுகிறீர்கள், மனதில் இப்பொழுது வீட்டிற்குச் செல்ல வேண்டும்... இப்பொழுது வீடு திரும்பும் பயணம் செய்ய வேண்டும். இதற்காக பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கிறார். முழு நேரமும் தங்களை ஏதாவது ஒரு சேவையில் பிஸியாக வைத்துக் கொள்ளுங்கள். பாப்தாதா கூட பார்த்தார். சேவையின் ஆர்வம், உற்சாகம், இப்பொழுதும் கூட குழந்தைகளிடம் இருக்கிறது. நல்ல நல்ல சேவையின் செய்திகளைக் கூட பாப்தாதா கேட்டுக் கொண்டிருக்கிறார் ஆனால் பாப்தாதா தீவிர வேகத்தில் முன்னேறுவதற்காக குழந்தைகளுக்கு சிறப்பாக கவனம் செலுத்த வைக்கிறார். வெறும் வார்த்தையில் மட்டும் சேவை கிடையாது, சேவை செய்யும் பொழுது மூன்று விதமான சேவைகளை ஒன்றாகச் செய்ய வேண்டும். மனதின் மூலமாக சக்திகள் கொடுங்கள். வார்த்தைகள் மூலம் ஞானம் கொடுங்கள், செயல் மூலம் அதாவது தங்களுடைய தொடர்பு மூலம், சம்மந்தம் மூலம், முகத்தின் மூலம் அப்படிப்பட்ட சேவை செய்யுங்கள், அதனுடைய பிரபாவம் சேவையின் கூடவே ஏற்பட வேண்டும். ஒரே

நேரத்தில் மூன்று சேவைகளையும் சேர்த்து செய்ய வேண்டும். ஏனென்றால் இப்பொழுது ஆத்மாக்கள் சேவைக்காக விரும்புகிறார்கள். ஏதாவது மாற்றம் ஏற்பட வேண்டும் என்று. ஆக ஒரே நேரத்தில் மூன்று சேவைகளையும் செய்ய முடியுமா? செய்ய முடியுமா? எந்த சமயத்தில் வார்த்தைகள் மூலம் சேவை செய்கிறீர்களோ அந்த சமயத்தில் மனதின் மூலமாக, சம்மந்தம் தொடர்பு மூலமாக சேவை செய்ய முடிகிறதா? அதுவும் கூடவே ஏற்படுகிறதா? ஒரே சமயத்தில் மூன்று சேவையும் செய்கிறவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. முதல் வரிசையில் குறைவாகத் தான் கை உயர்த்துகிறார்கள் ஏன்? ஏனென்றால் முதல் வரிசையில் இருப்பவர்கள் யோசிக்கிறார்கள், இது மதுபன் செய்கிறீர்களா? செய்கிறீர்கள் என்றால் கை உயர்த்துங்கள். ஒரே சமயத்தில் மூன்று சேவைகள். ஆகவே இப்பொழுது அட்டென்ஷன் ப்ளீஸ் (தயவு செய்து கவனம் செலுத்துங்கள்) அவ்வப் பொழுது என்பது கிடையாது. என்ன ஏற்படுகிறது? சேவை செய்கிறீர்கள் தான், ஆனால் சேவையின் கூடவே தன்னுடனும், உடன் இருப்பவர்களுடனும் திருப்தியாக இருப்பது அவசியம். ஏனென்றால் சேவையின் பலன் திருப்தி மற்றும் குஷியாகும். ஆகவே சோதனை செய்துப் பாருங்கள். சேவை செய்தோம், ஆனால் ஏற்கனவே சொல்லியிருக்கிறோம், சேவையின் குஷி எப்பொழுது ஏற்படும் என்றால், எப்பொழுது உடன் இருப்பவர்களும், தானும், திருப்தியின் அதிர்வலையில் (வைப்ரேஷன்) இருந்தால் தான் சேவையின் வெற்றி மூன்று விசயத்தில் விசேஷமாக சொல்ல வேண்டும். முதலாவது, சேவா என்றால் நிமித்த பாவனை, இரண்டாவது நிர்மாண் (பணிவு) பாவனை, மூன்றாவது, நிர்மலமான வார்த்தை. பாவனை சுபாவம், இந்த அனைத்தும் கூடகூடவே சேவையில் இருக்கிறதா? அப்பொழுது சுயம் திருப்தி உடன் இருப்பவர்களும் திருப்தி, மேலும் யாருக்கு சேவை செய்தீர்களோ அவர்களும் முன்னேறிக் கொண்டிருக்க வேண்டும். நிமித்த பாவனை உடையவர்கள் பாபாவின் பக்கம் உறவை ஏற்படுத்தச் செய்வார்கள். ஒருவேளை நிமித்த பாவளை இல்லையென்றால் பாபாவின் அருகில் அவ்வளவு வர மாட்டார்கள். எப்பொழுது சேவை செய்தாலும் இதை சோதனை செய்து பாருங்கள். பாவ் மற்றும் பாவனை மற்றும் சுபாவம், இந்த மூன்றும் சரியாக இருந்ததா? மேலும் இன்றைய நாட்களில் பாப்தாதா தனது முக்கியமானதொரு விசயத்தைப் பார்த்தார். பிறர் ஒவ்வொருவருக்காகவோ, தனக்காகவோ அல்லது எங்கெல்லாம்

சேவைக்காக போகின்றீர்களோ இதை சோதனை செய்துப் பாருங்கள், அதாவது உடன் இருப்பவர்கள் (என்மீது) திருப்தியாக இருக்கின்றார்களா? ஏனென்றால் சேவையின் வெற்றி திருப்தியாகும். அதன் பலன் பிராப்தி குஷி. அடைய வேண்டும். கூடவே ஒரு சமயம் பாப்தாதா சைகை காட்டினார். போகும்பொழுதும் வரும் பொழுதும், குழுவில் ஒன்றாகவும் இருக்கிறீர்கள். கூடவே யாராவது இருக்கத்தான் செய்வார். அச்சமயம் ஒருவர் மற்றவரை ஆத்மா என்று பாருங்கள், ஆத்மா என்ற ரூபத்தில் பார்க்கிறீர்கள், பயிற்சியும் செய்கிறீர்கள் ஆனால் எப்பொழுது ஆத்மா என்று பார்க்கிறீர்களோ அப்பொழுது ஆத்மாவின் ஒரிஜினல் சம்ஸ்காரத்தைப் பார்க்கிறீர்களா? அல்லது கலந்து இருக்கக்கூடிய சம்ஸ்சாரத்தைப் பார்க்கிறீர்களா? ஆத்மாவைப் பார்ப்பதில் வெற்றி அடைந்து விட்டீர்கள், ஆனால் ஆத்மாவின் ஒரிஜினல் சுபாவத்தைப் பார்க்கிறீர்களா? மற்றவர்களின் தொடர்பில் வருகின்றீர்கள். தற்சமயத்தின் சம்ஸ்காரம் எதிரில் வருகிறதா? பாபா சொல்கிறார். இன்றிலிருந்து யாரைப் பார்த்தாலும் ஒன்று ஆத்மா ரூபத்தில் பாருங்கள், ஆனால் ஆத்மாவினுடைய ஒரிஜினல் சுபாவம் எதுவோ அந்த ரூபத்தைப் பாருங்கள். அப்பொழுது உங்களிடையே அவ்வப்போது என்னென்ன பிரச்னைகள் ஏற்படுகிறதோ அது ஒருபொழுதும் ஏற்படாது, இப்பொழுது ஆத்ம ரூபத்தில் பார்க்கின்றீர்கள், ஆனால் கூட கூடவே அதுவும் சேர்ந்து வந்து விடுகிறது (தற்கால Nகலப்பட சம்ஸ்காரம்) உங்களுக்குள் என்ன சம்பூர்ண ஸ்திதி வர வேண்டுமோ அது கொஞ்சம் தூரம் சற்று தள்ளிப் போய் விடுகிறது. எனவே ஒரிஜினல் சம்ஸ்கார ஆத்மாவாகப் பாருங்கள். இப்பொழுது குழுவில் என்னென்ன தடங்கல் வருகிறதோ அது எல்லாம் நீங்கி விடும்.

இந்த பிராமண குடும்பம் சிரேஷ்டமான குடும்பமாகும். குடும்பத்திற்கு மகிமை இருக்கின்றது. இது ஈஸ்வரிய குடும்பம் ஆகும். இது அடிக்கடி கிடைக்காது. முழு கல்பத்தில் ஒரே ஒரு முறை தான் இந்த ஈஸ்வரிய குடும்பம் கிடைத்திருக்கின்றது. இவ்வளவு பெரிய குடும்பம் முழு கல்பத்திலும் ஒருபொழுதும் கிடைக்காது. குடும்பத்தின் விசேஷத்தை உணர்ந்து குடும்பத்தாருடன் இணைந்து செல்வது ஒரு பெரிய மகான் சப்ஜெட் ஆகும். ஏற்கனவே பாபா புரிய வைத்தார். இந்த ஞானத்தின் பவுண்டேசன் (அடித்தளம்) நம்பிக்கை ஆகும். மேலும் நான்கு விசயங்கள்: பாபாவிடம் நம்பிக்கை, பாப்தாதா எப்பொழுதும் கூடவே

இருக்கின்றார். மேலும் ஞானத்தில், நாடகத்தில் பரிவாரத்தில் அனைத்திலும் நம்பிக்கை இருக்க வேண்டும். நிச்சய புத்தியுடன் சிரேஷ்டமான முயற்சி செய்ய வேண்டும். எப்படி பாப்தாதாவிடம் நம்பிக்கை இருக்கிறதோ அப்படியே பரிவாரத்திலும் (குடும்பம்) கூட நிச்சயப் புத்தி வைக்க வேண்டும். நம்பிக்கை அவசியம் வேண்டும். எப்படி பாருங்கள், நான்கு விசயத்திலும் ஏதாவது ஒன்றில் நம்பிக்கை குறைவாக இருந்தால் ஏதாவது ஒரு விசயம் செய்யும் பொழுது நான்கு புறமும் இருக்கமாக கட்டுவீர்கள். அதே போன்று பாபா ஞானம், ஞானத்தில் கூட விசேஷமாக டிராமா மற்றும் பரிவாரம். ஆக, நான்கு விசயத்திலும் உறுதியில்லை என்றால் தடங்கல் வரும். தடங்கலைக் கடந்து செல்வதற்கு கவனம் செலுத்த வேண்டியிருக்கும். ஆகவே பரிவாரத்தினைப் புரிந்து கொள்ளுதல், பரிவாரத்தினர் மீது அன்பு கொள்ளுதல், ஒருவர் மற்றவரை புரிந்து கொள்ளுதல், இது மிகவும் தேவைப்படுகிறது.

ஆக நீங்கள் மூதாதையர்கள், பூஜைக்குரியவர்கள் இந்த விசயங்களிலும் கூட தங்களுக்குள்ளும் உடன் இருப்பவர்களுடனும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும். அவர்கள் எப்படியிருந்தாலும் சரி, பாபாவின் பரிவாரம், ஆனால் பிராமண பரிவாரத்தின் விசேஷமான காரியம் ஆசீர்வாதம் கொடுத்தல், ஆசீர்வாதம் எடுத்தல். அனேக குழந்தைகள் கூறுகிறார்கள்: அடுத்தவர் கோப்படுகிறார் என்றால் ஆசீர்வாதம் எவ்வாறு பெறுவார். எப்படி ஆசீர்வாதத்தைப் பெறுவார்? கோபம் கொள்வார். பாப்தாதா கூறுகிறார் நல்லது. சம்ஸ்கார வசப்பட்டு அவர்கள் சாபம் கொடுக்கின்றார்கள் ஆனால் வாங்குபவர் யார்? வாங்கக் கூடியவர்கள் நீங்கள் தானே? அவர்கள் கொடுத்த சாபத்தை நீங்கள் பெற்று விட்டீர்கள். ஒருவேளை ஆத்மாவின் ஒரிஜினல் சுபாவத்தைப் பாருங்கள். உங்களுக்கு இரக்கம் வரும். தானும் கூட பாதுகாப்பாக இருங்கள், சாபத்தைப் பெறாதீர்கள், பெறக்கூடியவர்கள் நீங்கள் தான். சாபம் கொடுக்க வேண்டாம். வாங்கவும் வேண்டாம்.

எனவே இப்பொழுது பாப்தாதா இன்றைய அல்லது இனி மேல் எப்போது பாபா வரப்போகிறாரோ அது வரை ஹோம் ஒர்க் (வீட்டுப்பாடம்) தரப்போகிறார். அனைவரையும் ஆத்மா ரூபத்தில் பாருங்கள், தற்சமய சம்ஸ்காரத்தின் கலப்பட ரூபத்தில் பார்க்காதீர்கள். ஆத்மாவின்

ஒரிஜினல் சம்ஸ்காரத்தைப் (சுபாவத்தை) பாருங்கள், அந்த உண்மையான சம்ஸ்கார ரூபத்தில் உறவிலும் வாருங்கள். திருஷ்டியிலும் அதே பார்வையோடு பார்ப்பதால் புருஷார்த்தத்தைத் தீவிரப்படுத்த முடியாமல் தடையாக நிற்கிறதே, அவையெல்லாம் விருத்தி. திருஷ்டி மாறும்போது இல்லாமல் போய் விடும். எவரிடம் எதைப்பார்த்தாலும் பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கிறார். எப்பொழுதும் பிராமண பரிவாரத்தில் ஒவ்வொருவருக்கும் கடமை யிருக்கிறது, சுப பாவனை, சுப ஆசைகளைக், கொடுக்க வேண்டும். பெறவும் வேண்டும். அந்த ஒரு சுபாவத்தின் மூலம் பாருங்கள், மேலும் செல்லுங்கள். மேலும் வேறு ஒரு விசயம் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே சொன்னது தான். நீங்கள் கூட்டாக குழுவில் இருக்கும்போது அவ்வப்போது பரதரிசனம், (மற்றவரைப் பார்ப்பது) பரசிந்தன், (வீண் சிந்தனை) பரமத் (மற்றவர் வழி) அதன் பக்கம் கவரப்படுகிறீர்கள், தற்பொழுது இந்த மூன்று பர என்பவைகளை நீக்கி விடுங்கள். ஒரு பர (மற்றவர்) அது தான் பர உபகார், (உதவி செய்வது) பர உபகார் செய்ய வேண்டும். பர உபகாரி என்பது தான் பிராமணர்களின் உண்மையான சுபாவம் ஆகும். பரதரிசன் கிடையாது. இந்த மூன்றும் நஷ்டம் தரக்கூடியது. சுவமானத்தை நினைவில் வையுங்கள். பிராமண ஆத்மாவாகிய என்னுடைய உண்மையான சுவமானம் பரஉபாகாரி. அடுத்த வருட சீசனில் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையிடமும் இந்த மாற்றத்தைப் பார்க்க விரும்புகிறார். முடியுமா? முடியுமா? கையை உயர்த்துங்கள். கையை உயர்த்துவது எல்லாம் சரி தான். ஆக என்ன செய்ய வேண்டும்? நல்லது. பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். ஒருவருக்கொருவர் கவனம் செலுத்திக் கொண்டேயிருங்கள். என்ன செய்ய வேண்டும்? தினசரி இரவில் தூங்குவதற்கு முன்பாக பாப்தாதாவிற்கு குட் நைட் சொல்வதற்கு முன்பாக முழு நாளின் சார்ட்டைக் கொடுக்க வேண்டும், நல்லது செய்தோமா, தவறு செய்தோமோ அந்த கணக்கை பாபாவிடம் கொடுத்து விட்டு தங்களது புத்தியை காலி செய்து விட வேண்டும். பின்னர் குட் நைட் சொல்ல வேண்டும். பிறகு பாபாவின் நினைவில் தூங்க வேண்டும். புத்தியில் எந்த விசயத்தையும் வைத்துக் கொள்ளக் கூடாது. இப்படி பாபாவிடம் உண்மையான மனம் மூலம் சார்ட் வைக்கும்பொழுது உங்களுக்கு தர்மராஜ்புரி செல்ல வேண்டிய அவசியமே இராது. உண்மையான மனதினால் சாஹிப் (பாபா)

திருப்தியாகி விடுவார். வீட்டு வேலை கிடைத்ததா? ஒன்று பூர்வஜ் மற்றும் உங்களுடைய பூஜ்ய சொரூபத்தின் சேவை, நடக்கும்போது, போகும் போது வரும்போது சுயமரியாதையில் மூன்று சேவைகளையும் செய்ய வேண்டும். இந்த ஜானகி குழந்தை உடம்பு சரியில்லாத நேரத்திலும் கூட, முக்கியமாக கராச்சியில் மனதில் மூலமாக சேவை செய்தார்கள். இவர்கள் நடைமுறையில் செய்து காணபித்தார்கள், அங்குள்ள ஆத்மாக்களுக்கு சக்தி போய் கிடைத்தது. ஊக்கம் உற்சாகத்தில் முன்னேறிக் கொண்டிருந்தார்கள். அதே போன்று நீங்கள் அனைவரும செய்வீர்களா? துக்கத்தில் இருக்கும் உங்களுடைய பக்தர்கள் உங்களை அழைக்கிறார்கள், எங்கள் தேவி தேவதா எப்பொழுது வருவீர்கள், இந்த ஒலி உங்களுக்குக் கேட்கவில்லையா? எனக்கு கேட்கிறது. ஒவ்வொரும் தங்களுடைய இஷ்ட தேவதையைக் கூப்பிடுகிறார்கள். உங்கள் பக்தர்கள் உங்களைத் தெரிந்து உங்களை அழைக்கிறார்கள். ஒவ்வொரு பிராமண ஆத்மாக் களுக்கும் பக்தர்கள் உள்ளார்கள், சதாரண முயற்சி செய்தாலும் கூட பக்தர்கள் உள்ளார்கள். இப்பொழுது மன சேவையை அதிகரியுங்கள். எவ்வளவு பிஸியாக இருந்தாலும் அவ்வளவு நிர்விக்கனமாக (தடைகளற்று) இருக்கலாம். இது உங்களால் செய்ய முடியும் தானே? மன சேவை செய்யத் தெரியும் தானே? கை உயர்த்துங்கள். இடையிடையே செய்பவர்கள் கை உயர்த்துங்கள். இது நியமப்படி செய்கிறீர்களா? அவ்வபோது செய்கிறீர்களா? ஒருவேளை அவ்வப்பொழுது செய்கிறீர்கள் என்றால் அதை ரெகுலராக செய்யுங்கள். இன்னும் அதிகப்படுத்துங்கள். ஏனென்றால் முழு கல்பத்தின் ஆதாரம் இப்பொழுது செய்யும் சேவையின் அடிப்பையில் தான். இராஜ்ய அதிகாரி ஆவதும், இப்பொழுது நீங்கள் செய்ய கூடிய சேவையின் அடிப்படையில் தான். சேவை சம்மந்தம், தொடர்பின் மூலமாகத்தான். ஆகவே பாப்தாதா இதைத்தான் விரும்புகிறார். அடுத்த முறை பாபா வரும் பொழுது. (சீசனின்) முதல் முறை எதுவரை இப்படியே செய்து கொண்டிருப்பீர்கள் என்று பாபா கேட்டுள்ளார். (பரவாயில்லை. இன்னும் நேரம் உள்ளது என்று) என நீங்கள் நினைக்கலாம் ஆனால் இதன் பொருள் சதா எவரெடியாக இருக்க வேண்டும் என்பதே. எனவே அடுத்த சீசனில் முதல் முறை வரும்போது எல்லோருடைய ரிசல்ட்டையும் கேட்பார். எவ்வளவு சதவீதம் இப்பொழுது இருக்கிறதோ அதை அதிகரிக்க வேண்டும். பாப்தாதா ஏற்கனவே சொல்லியிருக்கிறார். எதைச் செய்ய

வேண்டுமோ அதை இப்பொழுதே செய்யுங்கள். எப்பொழுதாவது இல்லை. பாப்தாதாவிற்கு அவ்வபொழுது என்ற பாட்டைப் பாடிக் காண்பிக்கிறார்கள். பாபாவிற்கு அவ்வப்பொழுது என்பது விருப்பம். இல்லை, உடனடி தானம் மகாதானமாகும். புரிந்துள்ளீர்களா? அடுத்த வருடத்திற்காக என்ன செய்ய வேண்டும்? நல்லது. இப்பொழுது என்ன செய்ய வேண்டும்.

சேவையின் வாய்ப்பு மகாராஷ்டிரா: இந்த காட்சியை அனைவருக்கும் காண்பியுங்கள். வகுப்பில் முக்கால் பாகம் மகராஷ்டிராவே இருக்கிறது. பாருங்கள். பழையவர்களோ, புதியவர்களோ? ஆனால் மகாராஷ்டிவினர். எழுந்து நிற்பவர்களில் வழக்கமாக வரும் மாணவர்கள், சேவை செய்யக்கூடியவர்கள், சென்டர்களை பராமரிக்கக்கூடியவர்கள் அமர்ந்து கொள்ளுங்கள். அப்படிப்பார்த்தாலும் எவ்வளவுபேர் புதியவர்கள் புதியவர்கள் எழுந்திருங்கள். மற்ற அனைவரும் அமர்ந்து கொள்ளுங்கள். நல்லது, புதியவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது, <u>பாப்தாதா மிகவும் மகிழ்ச்சி அடைகிறார். மிகவும் காலம் கடந்து விட்ட நிலைக்கு (Too Late) வந்திருக்கின்றனர்.</u> எனவே வந்திருக்கிற அனைவருக்கும் வாழ்த்துக்கள்! இம்மாதிரி வந்திருப்பவர்களுக்கு பாப்தாதா இந்த வரதானத்தையே தருகிறார். குறுகிய காலத்தில் மிக வேகமாக தீவிர புருஷார்த்தம் செய்து முன்னேறிச் செல்ல முடியும். ஒவ்வொரு நேரத்திலும் கவனம் வைத்தால் நாள் முழுவதும் தனது படிப்பு மற்றும் பிராப்தியையும் சேர்ந்து மாற்றத்தைக் கொண்டு வருவதில் செய்து கொண்டிருந்தால் நீங்களும் முன்னேறிச் செல்ல முடியும், நல்ல வாய்ப்பு உள்ளது. இப்பொழுது மிகவும் காலம் கடந்து விடவில்லை. தாமதம் தான். எனவே நீங்கள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு நான்கு பாடங்களிலும் கவனம் வைத்துக் கொண்டே வாருங்கள். பாபாவும் பார்த்துக் கொண்டிருக்கிறார். யார் யார் கடைசியில் வந்து மிக வேகமாக செல்கிறார்கள். என்று, யாரும் அவ்வாறு வேகமாக போகாமல் இல்லை. போகத்தான் செய்கிறார்கள். ஒவ்வொரு குழந்தை மீதும் பாபாவிற்கு இந்த ஆசைத்தான் இருக்கிறது. அதாவது ஒவ்வொரு குழந்தையும் முன்னேறி முன்னால் வந்து கொண்டேயிருக்க வேண்டும்.மேலும் தனது சுயராஜ்யம் மற்றும் பாபாவினுடைய உள்ள சிம்மாசனத்தையும் அடைய வேண்டும். நல்லது.

மகாராஷ்டிராவின் பெயரே மகான் தன்மை அது. முதலில் மகா என்று வருகிறது அல்லவா? ஆக மகான் ஆத்மாக்கள் தான். மேலும் மகான் ஆத்மாக்களில் மகா உற்சாகம், ஆர்வம் தீவிர புருஷார்த்தம் சதா பாபாவின் ஆசைகளை நடைமுறையில் கொண்டு வருவதில் லட்சியம் மற்றும் லட்சணம் கூட இருக்கிறது. இரண்டும் இருக்கிறது அல்லவா? லட்சியம் இருக்கிறது, லட்சணமும் இருக்கிறது. சரிசமமாக இருக்கிறதா? அல்லது வித்தியாசமாகவா? எவ்வளவு மிகப் பெரிய லட்சியம் இருக்கிறதோ அவ்வளவு லட்சணமும்கூட வேகமாக இருக்கிறதா? அல்லது வித்தியாசம் உள்ளதா? லட்சியம் உயர்வாக இருக்கிறது, அதே அளவு லட்சணத்தின் பக்கமும் கவனம் இருக்கிறது என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். லட்சியம் மற்றும் லட்சணம் அந்த அளவு உள்ளதா? சிலரே கை உயர்த்தினார்கள். தற்போது மகாராஷ்டிராவினர் ஒவ்வொரு ஆத்மாவும் அமிர்தவேளை பாப்தாதாவைச் சந்தித்தப்பிறகு இன்றைய நாளை லட்சணம், மற்றும் லட்சியம் இரண்டையும் ஒன்றாக்க வேண்டும் என்று கவனம் கொடுங்கள். இதைச் செய்ய முடியும் தானே? இரவில் பாப்தாதாவிற்கு இன்றைய தினம் லட்சியம் மற்றும் லட்சணம் சமமாக இருந்ததா? அல்லது வித்தியாசமாக இருந்ததா? என்ற செய்தியையும் தாருங்கள். அடுத்த நாள் முக்கியமாக கவனம் வைத்து என்னென்ன குறைவு இருந்ததோ அவைகளை நிரப்ப வேண்டும். மூன்றாவது நாள் அந்த குறையை நிரந்தரமாக நீக்கி விட வேண்டும். இவ்வாறு முன்னேறிச் சென்றுக் கொண்டேயிருக்க வேண்டும். ஆக மகாராஷ்டிரா அனைத்திலும் நம்பர்-1 ஆகி விடுமல்லவா? நான்கு பாடங்களில்! ஞானம், யோகம், தாரணை.... தாரணையை முதல் நம்பரில் வைக்க வேண்டும். தாரணையில் நம்பர்-1 ஆக முடியுமா? ஆகி விடுவீர்களா? டீச்சர்கள், இது நடக்கக் கூடுமா? கை உயர்த்துங்கள். செய்யத்தானே வேண்டும் என்று அப்படிக் கிடையாது. யார் செய்வார்களோ அவர்கள் கை தூக்குங்கள். நல்லது. எவ்வளவு எண்ணிக்கை உள்ளதோ. டீச்சர்களும் கை உயர்த்தியுள்ளனர். ஆக பாப்தாதாவும் அதிகப்படியான உதவியை செய்யும் வரதானத்தைத் தருகிறார். ஏனென்றால் மகாராஷ்டிரம்! அற்புதத்தை செய்து காண்பிக்க வேண்டும்! பாபா கூறிவிட்டார் அதிகப்படியான சக்தியை அனுபவம் செய்வீர்கள். பாபா அதிகப்படியான உதவி நிச்சயம் அனுபவம் ஆகும் என்று

உள்ளப்பூர்வமாக கூறுங்கள். பாப்தாதாவின் கவனமும் அப்போது இருக்கும். நல்லது. நீங்கள் செய்வீர்கள் தானே! நடைமுறையில் வருவது என்பது அனைவருக்கும் உற்சாகத்தைத் தரும். ஏதேனும் விசயம் வந்தால் நீங்கள் செய்ய முடியாது. தைரியம் சற்று குறைவாக இருக்கிறது என்றால் தனது தைரியத்தை குறைக்கும் அந்த வேலையை பாபா என்னால் இதைச் செய்ய முடியாது. 'பாபா. நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்' என்று பாபாவிடம் ஒப்படைத்து விடுங்கள். நான் இதை சங்கல்பத்தில் கூட கொண்டு வர மாட்டேன். அந்த சங்கல்பத்தை முற்றிலும் வரவிட வேண்டாம். கொடுத்து விடுங்கள், அப்படி திரும்ப வந்தால் அதை உள்ளத்தில் வைத்துக் கொள்ளாதீர்கள். திரும்ப கொடுத்து விடுங்கள். எனது ஒவ்வொரு குழந்தையும் என்ன விரும்புகிறதோ அதை செய்து காண்பிக்க வேண்டும். என்று பாப்தாதா விரும்புகிறார். அனைவருமே நன்றாகத்தான் நினைக்கின்றனர். அப்படியானால் செய்ய வேண்டும் பாண்டவர்களும் செய்வீர்கள் தானே? பாண்டவர்கள் செய்வீர்களா? கை உயர்த்துங்கள். நல்லது நீங்கள் செய்து முடித்த பிறகு பாப்தாதா ஒரு நல்ல விஷயத்தைக் கூறுவார். நல்லது. மற்றப்படி சேவையெல்லாம் நன்கு செய்து கொண்டிருக்கிறீர்கள், நீங்கள் என்ன சான்றிதழ் கொடுத்தீர்கள். நன்கு சேவை நடந்து கொண்டிருக்கிறது அல்லவா?

இரட்டை வெளி நாட்டினர்: இரட்டை வெளி நாட்டினருக்கு பாப்தாதா ஒரு விஷயத்திற்காக வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். எந்த விஷயத்திற்காக? அவர்களிடம் ஒரு விசேஷத்தைப் பார்த்தார். முதலில் தங்களது கலாச்சாரத்தை மாற்றிக் கொள்வது கடினமாக இருந்தது, இந்திய கலாச்சாரம் கஷ்டமாக இருந்தது ஆனால் இந்த பிரச்சனை தற்போது பெரும்பாலும் நீங்கி விட்டது. தற்போது வெளிநாட்டினராக இருக்கக்கூடிய அநேக ஆத்மாக்கள் புருஷார்த்தத்தில் மிக நன்றாக உள்ளனர். நாம் பாபாவினுடையவர்கள், என்ற ஆழ்ந்த அனுபவ உணர்வு அவர்களுக்கு வருகிறது. சேவையின் பொருட்டு வெளி நாட்டில் இந்த பிறவி எடுத்துள்ளோம், இவர்கள் இந்த மாற்றத்தைப் பார்த்து பாப்தாதாவிற்கு மிகவும் மகிழ்ச்சி. நாம் இந்தியாவைச் சார்ந்தவர்கள். சேவைக்காகவே அங்கு பிறவி எடுத்துள்ளோம். நாலாபுறத்தின் சேவைக்காக என்று தன்னை உணர்பவர்கள் கை தூக்குங்கள். இங்கு தான் இருந்தோம். மேலும்

இங்கேயே இருப்போம். ஏனென்றால் பாப்தாதா இருக்கிறார். பிரம்மாபாபாவோடு பாப்தாதாவோடு செல்வோம். இது மிக உறுதி, கூடவே செல்வோம், அப்படி எண்ணுபவர்கள் தலை அசையுங்கள். சத்தியுகத்திலும் கூடவே வருவோம். தலை அசையுங்கள். நல்லது. மேலும் துவாபரயுகத்தில் பக்தி காலத்தில் கூடவே இருப்பீர்கள் தானே? அவர்கள் ஒரு சிலரே இருப்பர். முழு கல்பத்திலும் பிராமண குடும்பத்தில் எவரது தொடர்பிலாவது இருப்பீர்கள். இந்த அழிவற்ற உறவு விதவிதமான ரூபங்களில் சற்று தூரமாகவோ அல்லது அருகாமையிலோ அநேகருக்கு இருக்கும். ஆக இரட்டைவெளிநாட்டினரிடம் இந்த ஒரு விசேஷம் மிகவும் அற்புதமானது. விசயம் நன்கு புரிந்து விட்டால், அவ்வாறு புரியக்கூடியவர்கள் கீழ்மேல் ஆவதில்லை. மிக உறுதியாக இருக்கிறார்கள். நன்கு புரிந்து விட்டால் அசைவது குறைவாகிறது. எதுவரை கேள்வி குறியிருக்கிறதோ அதுவரை புரிந்து கொள்வதும் ஏற்படாது. அப்பொழுது லேசாக ஆடுவது, அசைவது இருக்கும் ஆனால் நன்றாக புரிந்து கொண்டு விட்டால் மிக உறுதியாக நடந்து கொண்டேயிருப்பார். ஆடாது அசையாத அம்மாதிரி அநேக குழந்தைகள் பாபாவின் கண்களில் நிலைத்திருக்கின்றனர். பறக்கக்கூடியவர்கள் அவர்கள். பாப்தாதா சதா வெளி நாடுகளிலும் உலா வருகிறார். அமிர்தவேளையில் வருகிறார், ஆக என்ன பார்க்கிறார்? (ரிசல்ட்) முடிவில் கொஞ்சம் கொஞ்சம் தவறுதலும் ஏற்படுகிறது. வேறு சிலர் நன்கு முயற்சி செய்கின்றனர். விட்டுவிடுவதில்லை. முயற்சி செய்து அமர்கின்றனர். மேலும் முயற்சியின் நடுநடுவே வெற்றியும் கிடைக்கிறது ஆனால் என்னென்ன நியமங்கள் உண்டோ அதில் பெரும்பாலோர் நன்றாக உள்ளனர். பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி. என்ன வீட்டு வேலை (ஹோம் ஒர்க்) அதை செய்தீர்களா? யார் செய்தனரோ அவர்கள் கை உயர்த்துங்கள். கோபத்தை விட்டீர்களா? தேவையற்ற கோபம் செய்யவில்லையே? மனதளவில் பாஸ் மார்க் எடுக்க வேண்டும். குழந்தைகளின் கவனம் உள்ளது. கோபம் செய்கின்றபோது நடுவே நினைவு வருகிறது. கோபம் செய்யக்கூடாது என்று தங்களை சோதிக்கவும் செய்கின்றனர். இவ்வாறு பாப்தாதா ஒட்டு மொத்த ரிசல்ட்டைப் பார்த்தார். இருப்பினும் கொஞ்சம் மனதில் கோபம் வந்து விடுகிறது. வாயை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்கின்றனர் ஆனால் மனதில் வந்து விடுகிறது. எப்படியோ உறுதியாகக் கடைப்பிடித்தே ஆக

வேண்டும். கடைப்பிடிக்க வேண்டுமல்லவா? உறுதி தானே? அனைவரது இந்த ரிசல்ட்டை அனைவருக்கும் பாப்தாதா கூறினார். அது இந்தியர்களானாலும்சரி, வெளிநாட்டினாரக ஆனாலும் சரி, ஆனால் கூடவே செல்ல வேண்டும் என்றால் பாபாவிற்குச் சமமாக ஆகித்தானே தீரவேண்டும். விசயங்கள் (தடைகள்) வரும், ஆனால் அந்த விஷயங்கள் வந்து திரும்பிச் சென்றுவிடும். உங்களது உறுதிமொழி சென்றுவிடக்கூடாது. மற்றப்படி வெளிநாட்டில் (சேவையின்) அதிகரிப்பு என்பது மிக நன்றாக நடந்து கொண்டிருப்பதை பாப்தாதா பார்த்தார். நள்கு முன்னேற்றம் செய்கின்றனர். யார் பொறுப்பில் இருக்கிறார்களோ அவர்கள் புருஷார்த்தம் பிறரை செய்விப்பதற்காக நன்கு கவனம் செலுத்துகின்றனர். நன்கு உழைக்கின்றனர். நல்லது. யார் சதா மகிழ்ச்சியாக இருக்கிறார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். குஷியாக இருக்கிறீர்களா? குஷி மறைந்து விடுவ. தில்லையே? குஷி மறைந்து விடக் கூடாது. ஏனெனில் குஷி என்பது பரமாத்மாவின் பரிசாகும். பரமாத்மாவின் அந்த பரிசை கவனமாக வைத்திருக்க வேண்டும். விசயங்கள் வரலாம். போகலாம், குஷி ஏன் மறைய வேண்டும்? அந்த விசயங்கள் சச்தி வாய்ந்தவையா? அல்லது பரமாத்மாவின் பரிசா? ஆக குஷியை இழக்கக்கூடாது என்ற முயற்சியும் செய்யுங்கள். சதா முகமானது மலர்ச்சியுடன் இருக்க வேண்டும். மலர்ந்த முகம் இவ்வாறு குஷி இருக்க முடியுமா? தலை அசையுங்கள். கவனம் கொடுத்தால் இது நடக்கக்கூடும். ஆகி விடுமா? பின்னால் இருப்பவர்கள். பாப்தாதா அனைவருக்காகவும் கூறுகிறார். ஒரு மாதத்திற்குப் பிறகு இந்த சார்ட்டை கேட்டுப் பார்ப்பார். ஒரு மாதத்தில் குஷி இருந்ததா என்று? இன்றைய இந்த நாளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அனைவருக்குமே கூறுகின்றார். வெறும் வெளிநாட்டவருக்கு மட்டுமல்ல. ஒரு மாதத்திற்கு சோதனை செய்துப் பாருங்கள். ஏதேனும் விசயம் வந்தால் மனதில் வைத்துக் கொள்ளாதீர்கள். அந்த விசயம் சரியானதா? அல்லது தவறா? என்ன செய்ய வேண்டும் என்று யோசியுங்கள் ஆனால் உள்ளத்தில் எடுத்துக் கொள்ளாதீர்கள். அவ்வாறு உள்ளத்தில் வைக்கும்பொழுது தான் குஷி மறைந்து போகிறது. புரிந்து கொள்பவர் குஷியாக இருப்பார். விசயத்தைப் புரிந்து கொண்டு அதை செய்து முடிப்பார். ஆக ஒரு மாதத்திற்கான தேர்வு இது. குஷியாக இருக்க வேண்டும். இது முடியுமா? அனைவரும் கை தூக்குங்கள். இது நடக்குமா? ஆக பாப்தாதா இந்த ஒரு மாதத்திற்காக உங்கள்

அனைவருக்கும் மொத்தமாக வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். ஏனென்றால் செய்தே ஆக வேண்டும். ஆகி விடும், நடந்து விடும் என்ற பாட்டு கிடையாது. செய்தே ஆக வேண்டும். புதியாக வந்தவர்களானாலும் சரி, பழையவர்களானலும் சரி, பிராமண குடும்பத்தினர் தானே? ஆக அனைவருக்குமே இது உண்டு. பிராமண குடும்பம் உலகத்தைப் பொருத்த அளவில் உலகத்தை மாற்றுபவர்கள். மாற்றக்கூடியவர்கள் மாறாவிட்டால் உலக மாற்றம் எவ்வாறு நிகழும்? உங்கள் பொறுப்பை உணருங்கள். கவனக்குறைவை, அலட்சியப் போக்கை விடுங்கள். நடந்து விடும், ஆகி விடும் என்பது கிடையாது. செய்தே ஆக வேண்டும். ஏனென்றால் நீங்கள் தடுப்பதாலேயே நேரம் தாமதமாகின்றது என்பதை பாப்தாதா அறிவார். சமயத்தை அருகாமையில் கொண்டு வரக் கூடியவர்கள் நீங்களே! ஆக தீவிர முயற்சி செய்யுங்கள். திட சங்கல்பம் செய்தால் ஆகி விடும். தினமும் இந்த பாடலை நினைவு செய்யுங்கள். இப்பொழுது வீடு திரும்ப வேண்டும். சரியா! நல்லது.

பாப்தாதா அனைத்து நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளைப் பார்த்து குஷியும் அடைகிறார். ஏனெனில் பாப்தாதா குழந்தைகள் இல்லாமல் தனியாக எதுவும் செய்ய விரும்புவது இல்லை. இனிமையான குழந்தைகளே, அன்பான குழந்தைகளே இப்பொழுது செல்லுங்கள். நன்கு முன்னேறுங்கள். நல்லது.

நாலா புறங்களிலுமுள்ள, குழந்தைகளை பாப்தாதா பார்த்தார், அவர்கள் எதிரில் இருந்தாலும் சரி, அல்லது எங்கு அமர்ந்திருந்தாலும் சரி அனைவரது நினைவும் பாபாவின் மீதே மேலும் பாபாவிற்கும் யாருடைய நினைவு உள்ளது? நாலாபுறங்களின் குழந்தைகளின் நினைவு உள்ளது. ஏனென்றால் பாபா ஒவ்வொரு குழந்தையின் மீதும் பாப்சமமாக ஆக வேண்டும் என்ற ஆசையை வைத்துள்ளார். பாப்தாதாவினுடைய ஆசை ஒவ்வொரு குழந்தை மீதும் உள்ளது. அவர்கள் நம்பர் பிரகாரம் தான் என்பதையும் அறிவார். இருப்பினும் தனது நம்பர் பிரகாரமாவது சம்பன்னம் (முழுமை) ஆக வேண்டும் அல்லவா? ஒவ்வொரு புருஷார்த்தியும் என்னென்ன செய்து கொண்டிருக்கின்றனர் என்று பார்க்கிறார். பாபாவிற்கு மிக அன்பு ஏற்படுகிறது. மிகுந்த முயற்சி செய்கின்றனர் அல்லவா? அப்பொழுது

மிக அதிகமான அன்பு ஏற்படுகிறது. எப்படி அந்த மாதிரி கஷ்டப்படுவதிலிருந்து விடுபட வேண்டும் என்று அன்பிலே அவர்கள் மூழ்கி விட வேண்டும் என்று எவ்வளவு அன்பிலே மூழ்குகின்றனரோ அவ்வளவு கஷ்டப்பட்டு முயற்சி செய்வது குறையும். பாபா மீது அன்பு இருக்கிறதா என்று கையை தூக்கச் சொன்னால் அனைவரும் மிக நன்றாக பெரிய கையாக உயர்த்துகின்றனர். பாபா மீது அன்பு இருக்கிறது என்பதை பாபாவும் ஒத்துக் கொள்கின்றார். அன்பிலே பெரும்பாலோர் பாஸ்தான் ஆனால் விசயங்களில் (பிரச்சனைகள் மற்றும் வீணான விசயங்கள்) வரும்பொழுது. மறந்து விடுகின்றனர்.

நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு பாப்தாதாவின் பலகோடி மடங்கு அன்பு மற்றும் உள்ளத்து நேசத்தையும் ஏற்றுக் கொள்ளுங்கள். அனைவருக்கும் எஜமான குழந்தைகளுக்கு பாபா லட்சக்கணக்கான வாழ்த்துக்களைக் தெரிவித்துக் கொள்கிறார். பறந்து கொண்டே செல்லுங்கள். நல்லது.

<u>நீலு சகோதரியிடம்</u>: சேவையை உளப்பூர்வமாக செய்கிறார். சேவை செய்வது என்றால் உள்ளத்தில் இடம் பிடிப்பவர். பாபாவின் உள்ளத்தில் அமர்ந்திருக்கிறீர்களா? சேவை வீணாவது இல்லை. பல மடங்கு அதிகரித்து பலனைத் தருகிறது. நல்லது, பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்.

<u>ஜானகி தாதியுடன்</u>: உங்களது சேவை இரட்டைசேவையாகும். வெளிநாட்டிலும் பொறுப்பு உள்ளது. இந்தியாவிலும் உள்ளது. (இரண்டையும் கண்களில் வைத்துள்ளார்) கண் என்ன, உள்ளத்திலேயே வைத்துள்ளார். கவனம் கொடுத்தே ஆக வேண்டும். தாதிகளுடன்: யார் நிமித்தமாக இருக்கிறார்களோ, சகோதரர்களாக இருந்தாலும் சரி (பாண்டவர்கள், மற்றும் சக்திகள், அவர்கள் நன்கு தமது காரியங்களை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை பாப்தாதா பார்த்தார். ஒவ்வொருவரும் தமது பொறுப்பை காப்பாற்றி வந்து கொண்டிருப்பதைப் பார்க்கும்போது பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. தங்களிடையே ஒன்றாக இணைந்து ஒருவர் செய்தால், பத்து பேர் அதற்கு உதவி செய்கின்றனர். நன்கு நடந்து கொண்டிருக்கிறது, அவ்வாறே நடக்கும். யக்ஞம் எப்பொழுதுமே

வெற்றியுடையது. நீங்களும் வெற்றி சொரூபமனாவர்களே! அனைவரும் நன்றாக இருக்கிறீர்களா? பாப்தாதாவிற்கு யாரும் அவ்வாறு (குறையுடன்) தென்படவில்லை. அனைவருமே நன்றாகவே தென்படுகின்றனர். யார் யார் யாருக்கு நிமித்தமாக ஆகி உள்ளனரோ அவர்கள் நன்றாகவே கவனமாய் காத்து வருகின்றனர். பாப்தாதா சம்பூரணத்தைப் பற்றிய விசயத்தைத் தான் கூறிப்பிடுகிறார். மற்றபடி காரியங்கள் எல்லாம் சரியாக நடந்து வருகின்றன.

மோகினி சகோதரியுடன்: சக்கர நாற்காலியிலேயே வந்து விட்டீர்கள் இல்லையா? விட்டு விடுவீர்களா என்ன? இப்படியே தான் இருக்கும். தற்போது முடிவுக்கு கொண்டு வர வேண்டும். நடப்பது நடந்து கொண்டேயிருக்கும்.

பரதாதியுடன்: நல்லது. நீங்கள் யக்ஞத்தில் தரிசனத்திற்கு தகுதியான ஒரு மூர்த்தியாகியுள்ளீர்கள். உங்களது முகத்தைப் பார்த்து அனைவரும் மகழ்ச்சி அடைகின்றனர்.

நிர்வயர் சகோதரருடன்: பாண்டவர்களானலும் சரி. சக்திகளானலும் சரி நிமித்தமாகி காரியம் செய்வதில் அனைவருமே மிக நன்றாக செய்து கொண்டிருக்கின்றனர். இன்னும் போகப்போக யக்ஞத்தின் மகிமை, யக்ஞத்தின் சேவையும் அதிகரிக்கும். பாபாவை பிரத்யட்சம் செய்வது, இவைகளைப் பற்றியும் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறீர்களா? பாபாவுடைய வெளிப்பாடு (பிரத்யக்ஷதா) நிறைவேற வேண்டும் என்னும் லட்சியத்தை வையுங்கள். இந்த காரியத்தை செய்யக்கூடியவர் யார் என்று அனைவருமே கூறவேண்டும். பகவான் வந்து விட்டார், நமது பாபா வந்து விட்டார். இந்த ஒரு அதிர்வவை ஏற்பட வேண்டும். இந்த முயற்சியை செய்யுங்கள். பிரம்மா குமாரிகள் வரை வந்துள்ளனர். பிரம்மா குமார், குமாரிகள் நல்லவர்கள் ஆனால் கூடவே பாபாவின் வெளிப்பாடும் ஏற்பட வேண்டும் அல்லவா? அந்தமாதிரி ஏதேனும் சிறப்பான தவ முயற்சி செய்யுங்கள். சேவையினுடைய திட்டம் தீட்டுங்கள். அதில் இந்த ஒரு முடிவு ஏற்பட வேண்டும். மற்றப்படி இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ அது சரியாக நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரும் தம் தம் சேவையை நன்கு செய்து

கொண்டிருக்கின்றனர். மற்றபடி என்ன மாற்றத்தை கொண்டு வர வேண்டுமோ அது அனைவரது கவனத்திலும் இருக்கிறது.

ரமேஷ் சகோரர் மற்றும் உஷா சகோதரியுடன்: பாப்தாதாவின் ஒவ்வொரு அடியிலும் வரதானம் உள்ளது. இருவரும் உங்களது உடல் ஆரோக்கியத்தில் கவனம் வைத்துக் கொண்டு வருகிறீர்கள். நல்லது நாளை (யக்ஞத்தின் கணக்கு வழக்கின் புது வருஷம் ஆரம்பம் ஆகிறது) நல்லது. புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 24.10.2010 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நேரத்தின் வேகத்திற்கு ஏற்ப இப்போது சுபாவ சம்ஸ்காரத்தை மாற்றுவதில் தீரத்தன்மையைக் கொண்டு வாருங்கள்; மனதின் மூலமாக ஆத்மாக்களுக்கு விதவிதமான ஒளிக்கதிர்களை வழங்குங்கள்!

இன்று நாலாபுறமும் உள்ள பரமாத்மாவின் இதயசிம்மாசனம், புருவமத்தி எனும் சிம்மாசனம் மற்றும் உலக இராஜ்ய சிம்மாசனத்திற்கு அதிகாரியான குழந்தைகளைப் பார்த்து பாபா புன்முறுவல் செய்கிறார். இந்த பரமாத்மாவின் இதய சிம்மாசனம் பிராமணர்களாகிய உங்களுக்காக மட்டுமே ஆனது, புருவமத்தி எனும் சிம்மாசனம் அனைவரிடமும் உள்ளது ஆனால் பரமாத்மாவின் இதய சிம்மாசனம் பிராமண ஆத்மாக்களாகிய உங்களின் பாக்கியத்தில் மட்டுமே உள்ளது. இந்த பரமாத்மாவின் இதய சிம்மாசனம் தான் உலக இராஜ்ய சிம்மாசனத்தை பெற்றுத் தருகிறது. எனவே மூன்று விதமான ஆசனங்களுக்கும் அதிகாரியான ஆத்மாக்கள் பிராமணர்களாகிய நீங்கள் மட்டும் தான். இந்த பரமாத்மாவின் இதய சிம்மாசனம் எவ்வளவு சிரேஷ்டமானது. மேலும் வேறு எந்த யுகத்திலுமே இந்த பரமாத்மா சிம்மாசனம் பிராப்தம் (கிடைப்பது) ஆவதில்லை. இந்த பரமாத்மாவின் சிம்மாசனம் மகிமைக்குரியது. பரமாத்மாவின் இதய சிம்மாசனத்திற்கு அதிகாரி ஆனவர்களை பக்தி மார்க்கத்திலும் கூட மாலையின் மணி எனும் ரூபத்தில் மகிமை செய்யப்படுகிறது. பூஜை செய்யப்படுகிறது. கோடியில் ஒருவராக பாடப்படுகிறது. மிக உயர்ந்த பாவனையுடன் ஒவ்வொரு மணியையும் எவ்வளவு உயர்ந்த பார்வையில்

பார்க்கின்றார்கள். அப்படியிருக்கும் பொழுது உங்கள் அனைவருக்கும் அந்த பெருமை உள்ளதா பெருமையுள்ளதா? நம்மைத்தவிர வேறு யாருமே இந்த ஆசனத்தை அனுபவம் செய்ய முடியாது, ஆனால் பிராமணர்களாகிய உங்கள் அனைவருக்கும் இது பிறப்புரிமையாக கிடைத்துள்ளது. உங்களைப் பொறுத்தவரையில் இந்த ஆசனம் கழுத்தின் மாலையாகி விட்டது. பகவானின் இதய சிம்மாசனத்தின் அதிகாரியாகி விட்டோம் என்ற போதை உள்ளதா? இந்த போதையும், மகிழ்ச்சியும் எல்லோருக்கும் எப்பொழுதும் நினைவில் இருக்கிறதா? நாம் யார்? இதைப்பற்றிய நிச்சயமும் போதையும் உள்ளதா?

பாப்தாதாவும் இப்படி மூன்று ஆசனத்திற்கு அதிகாரியான குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். ஆஹா என்னுடைய சிரேஷ்ட அதிகாரி குழந்தைகளே ஆஹா குழந்தை களும் சொல்கிறார்கள் ஆஹா! பாபா ஆஹா பாபாவும் சொல்கின்றார் ஆஹா குழந்தைகளே ஆஹா சுயம் தந்தையே அப்படிப்பட்ட குழந்தைகளின் மகிமைப் பாடுகின்றார். எனவே நாம் யார் என்ற அந்த போதையுள்ளதா? எந்த அளவிற்கு நிச்சயம் உள்ளதோ அந்த அளவிற்கு போதையும் இருக்கும். அந்த நம்பிக்கைக்கான போதை உங்களின் முகம் மற்றும் நடத்தையின் மூலமாகத் தென்படுகிறது. யாருக்கு நிச்சயம் இருக்குமோ அவர்களுக்கு போதை கண்டிப்பாக இருக்கும். பாப்தாதாவும் தற்சமயம் ஒவ்வொரு குழந்தை மூலமாகவும் முகம் மற்றும் நடத்தையால் ஆத்மாக்களுக்கு அனுபவம் செய்ய வைக்க விரும்புகின்றார். சொல் மூலமாக அனுபவம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இப்போது அனுபவம் செய்யும் காரியம் ஆரம்பமாகி விட்டது. முன்பெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார்கள். யோசித்துக் கொண்டிருந்தார்கள், இப்பொழுது பிராமண ஆத்மாக்களாகிய உங்களுடைய மனோநிலையின் பிரபாவம் அனுபவம் செய்ய வைத்து விட்டது. எனவே தன்னைத்தானே சோதனை செய்துப் பாருங்கள். முழு நாளில் எவ்வளவு நேரம் பரமாத்மாவின் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கின்றேன்? ஏனென்றால் இந்த இதய சிம்மாசனம் தான் உலக இராஜ்ய சிம்மாசத்தை பிராப்தம் செய்விப்பதற்கான ஆதாரமாகும். ஏனென்றால் இந்த இதய சிம்மாசனத்தின் ஆதாரத்தால், எவ்வளவு நேரம் நீங்கள் இதய சிம்மாசனத்திற்கு அதிகாரியாக இருப்பீர்களோ அந்த அளவிற்கு அதிகமான நேரம் நாளை இராஜ்ய

குலத்திலும் அதிகாரியாக இருப்பீர்கள். எனவே சோதனை செய்துப் பாருங்கள்? நான் எப்போது பிராமணன் ஆனேனோ அன்று முதல் எவ்வளவு நேரம் இதய சிம்மாசனத்தில் இருக்கின்றேன். இதன் ஆதாரத்தில் தான் அன்றைய ஆசனத்திலும் நம்பர்வாராக அமர்வீர்கள், ஆனால் சதா இராஜ குடும்பத்தில், இராஜ குலத்தில் அதிகாரியாக இருப்பீர்கள், இதை எப்பொழுதாவது சோதனை செய்ததுண்டா? இதய சிம்மாசனத்தில் இருந்து இறங்கி விடுவது இல்லையே? தன்னைப் பற்றி கணக்குப் பாருங்கள், ஏனென்றால் இதன் ஆதாரத்தால் தான் நீங்கள் சதா காலத்திற்கும் இராஜ குலத்தில் வருவீர்கள். சோதனைச் செய்யுங்கள். ஆசனத்தை விட்டு எப்பொழுதாவது மண்ணில் கால் வைப்பதில்லையே! 63-பிறவிகளின் சம்ஸ்காரத்தால் தேக உணர்வு என்ற மண்ணில் கால் வைத்திருந்தீர்கள். ஒன்று தேக உணர்வு, மற்றொன்று தேக அபிமானம். தேக அபிமானத்தின் மண் என்பது மிக ஆழமானது ஆனால் தேக உணர்வு இதுவும் மண் போன்றது தான். மக்களும் சொல்வார்கள். மனிதன் இறந்து விட்டால் மேலும் எரிக்கும் பொழுது மண்ணோடு மண்ணாகி விட்டார் என்று, எனவே சோதனை செய்யுங்கள். மண்ணில் கால்படுவதில்லையே தேக உணர்வில் வருவது என்றாலே மண்ணில் கால் வைப்பதாகும்.

பாப்தாதா சிரேஷ்ட ஆத்மாக்களாகிய உங்களுக்காக மூன்று விதமான சிம்மாசனத்தைக் கொடுத்துள்ளார். ஏனென்றால் செல்லக் குழந்தைகள் அல்லவா நீங்கள். தேடி கண்டெடுக்கப் பட்டவர்களும் நீங்கள் தான், செல்லமான குழந்தைகளும் நீங்களே தான். செல்லக் குழந்தைகளை ஊஞ்சலிலோ அல்லது மடியிலோ தான் வைத்திருப்பார்கள். மண்ணில் கால் வைக்க விடுவதில்லை. எனவே பாப்தாதா இந்த மூன்று ஆசனத்திற்கும் அதிகாரியான குழந்தைகளுக்கு எத்தனை விதவிதமான ஊஞ்சல் கொடுத்துள்ளார். சில சமயம் அமைதி என்னும் ஊஞ்சலில் ஆடுங்கள். சில சமயம் சுகம் எனும் ஊஞ்சலில் ஆடுங்கள், சில சமயம் அன்பு எனும் ஊஞ்சலில் ஆடுங்கள். ஆசனத்திலும் ஊஞ்சலிலும் இதில் மட்டுமே கால் வையுங்கள். சில குழந்தைகள் கேட்கின்றார்கள், நாங்கள் எதிர்காலத்தில் எங்கே வருவோம்? என்னவாக மாறுவோம்? பாபா சொல்கின்றார். அதற்கு நீங்கள் வந்த நாளில் இருந்து சோதனை செய்துப் பாருங்கள். இவ்வளவு நாளாக என்னுடைய பாதம் எவ்வளவு நேரம் ஊஞ்சலிலும், ஆசனத்திலுமே இருந்தது, அந்த அளவிற்குத்தான்

எதிர்காலத்தில் கௌரவமான குலத்தில் வருவீர்கள். ராயல் பிரஜையாக கூட வரமாட்டீர்கள், ராயல் குலத்திலேயே வருவீர்கள். எனவே ஒவ்வொருவரும் தன்னைத்தானே இப்படி கணக்குப் பாருங்கள், பிறரைப் பார்க்க வேண்டாம், தன்னைப்பற்றிய கணக்குப் பாருங்கள். ஒவ்வொருவரும் என்ன விரும்புகின்றீர்கள். ராயவ் குலத்தில் ராஜகுலத்தில் வரவேண்டும் என்று தானே? அப்படியென்றால் இப்பொழுது கூட எவ்வளவு நேரம் கிடைக்கின்றதோ இதனை சோதனைச் செய்யுங்கள். ஏனென்றால் முடிவு நேரம் எதிர்பார விதமாக நடைபெறும். ஆகவே எதுவரையில் அந்த முடிவு நேரம் வரவில்லையோ அதுவரையில் இப்போது கூட சோதனை செய்யுங்கள். எவ்வளவு நேரம் அதிகபட்சமாக பாபாவின் மடியிலும், ஆசனத்திலும், ஊஞ்சலிலும் இருப்பிர்களோ அவ்வளவு தேரமே ராயல் குடும்பத்திலும், ராயல் குலத்திலும் வருவதற்கான பாக்கியத்தை பிராப்தமாக அடையப் பெறுவீர்கள்,

பாப்தாதா என்னவோ ஒவ்வொரு குழந்தைக்கும் 21-ஜென்மம் முழுவதுமே ராயல் குலத்திலேயே சூரிய வம்சம் ஆனாலும் சரி, சந்திர வம்சம் ஆனாலும் சரி இரண்டு யுகத்திலுமே ராயல் குடும்பத்தில் வருவதற்கான அதிகாரத்தை கொடுத்துக் கொண்டிருக்கின்றார் ஆனால் அதிகாரத்தை பெற்றுக் கொள்வது இது ஒவ்வொரு குழந்தைகளின் அதிகாரத்தின் மீதே உள்ளது. பிரம்மாபாபாவின் மீது அன்பு உள்ளது. எனவே பிரம்மாபாபாவிற்கும் குழந்தைகளாகிய உங்கள் மீதும் அன்பு உள்ளது. பிரம்மாபாபா குழந்தைகளாகிய உங்களை தன்னுடனேயே ராயல் குலத்தில் பார்க்க விரும்புகின்றார். நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? பிரம்மாபாபாவுடன் நெருக்கத்தில் ராயல் குலத்தில் இருப்பவர்களா? அல்லது சிறிது காலத்திற்கு மட்டும் வருபவர்களா? பிறகு தூரமாக விலகிச் செல்ல விரும்புவதில்லையே? இதைக் கேட்டீர்களா? அதற்கான ஆதாரம் சங்கமயுகம் தான். பாப்தாதாவிற்கு குழந்தைகள் மீது அந்த அளவிற்கு அன்பு உள்ளது. இப்பொழுது நீங்களே சொல்கின்றீர்கள், உங்களுடனே இருப்போம். உங்களுடனேயே செல்வோம். இப்போது பிரம்மாபாபாவும் பிராமணர்களும் உடன் இருக்கின்றீர்கள். அவ்யக்த ரூபத்தில் இருந்தாலும் உடன் தான் இருக்கின்றீர்கள்.

பாப்தாதாவும் தற்சமயம் பார்க்கின்றார். குழந்தைகளை மாயாவும் இதுவரையில் விடுவதே யில்லை. அதற்கும் கூட உங்கள் மீது அன்பு உள்ளது. மேலும் இப்பொழுதெல்லாம் இரண்டு ரூபங்களில் விசேஷமாக மாயாவும் வாய்ப்புகளை தேடிக் கொள்கின்றது. இரண்டு ரூபங்களில் வருகின்றது. ஒன்று வீணான சங்கல்பம், மற்றொன்று எங்காவது எப்பொழுதாவது இப்படி நினைக்க வைக்கின்றது, நான் செய்தது. நான் நினைத்தது. அது தான் சரி. நான் சாதாரணம் கிடையாது, இந்த அலை வீசுகின்றது. நான் தான் சரி, ஆனால் தொடர்பில் வருபவர்கள், மற்றும் நிமித்தமாக இருப்பவர்களும் உங்கள் கருத்திற்கு துணை தருகின்றார்கள். பிறரிடமிருந்தும் அதற்கான தெளிவு கிடைக்க வேண்டும். இந்த வீணான சங்கல்பம் நேரத்தை வீண் செய்கிறது. எனவே பாப்தாதா தினமும் முரளியை சிந்தனை செய்வதற்காக, சேவை செய்வதற்காக, வீட்டுப் பாடமாக தினசரி தருகின்றார். அப்படி சிந்தனை செய்யுங்கள், சிந்தனை செய்து செய்து அதிலேயே மூழ்கி விடுங்கள். இப்படி தினசரி செய்கின்ற வீட்டுப்பாடம் தான் மனதை சுறுசுறுப்பாக வைப்பதற்கான சாதனம் ஆகும். கேட்பது அதனை சிந்திப்பது அதிலேயே மூழ்கி விடுவது இதற்காகத்தான் தினசரி பாப்தாதா வீட்டுப்பாடம் தருகின்றார். குழந்தைகளுக்குக் கூட எவ்வளவு அதிகமான வீட்டுப்பாடம் கொடுக்கின்றார்களோ அந்த அளவிற்கு அவர்கள் புத்தியானது அதைச் செய்வதிலேயே மும்முரமாக ஈடுபடுகிறது. அவ்வாறே தினமும் முரளியில் நான்கு பாடங்களுக்குமான வீட்டுப்பாடம் உள்ளது. மனதிற்காகவும். சொல்லிற்காகவும் செயலுக்காவும், கவனம் தருவது மற்றும் தெய்வீகத்தன்மைக்கான சமிக்ஞை (ஜாடை மாடையாக) இவைகளே வீட்டுப்பாடம் ஆகும். இவ்வாறு வீட்டுப்பாடம் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தால் வீண் சங்கல்பம் வருவதற்கான இடைவெளியே இருக்காது. இந்த விதிமுறையை கையாண்டு வந்தால் வீண் சங்கல்பம் தானாகவே விடைபெற்றுச் சென்று விடும். ஏனென்றால் பாப்தாதாவும் பார்க்கின்றார், நினைவு யாத்திரையில் அனைவருக்குமே நம்பர் வாராக (வரிசைக்கிரமமாக) கவனம் உள்ளது, சொல் சேவையிலும், கவனம் உள்ளது ஆனால் இப்பொழுது தன்னுடைய சம்ஸ்காரம், மற்றும் பிறரின் சம்ஸ்காரங்களை மாற்றம் செய்வது, இந்த சுபாவ சம்ஸ்காரத்தை நீங்கள் கௌரவமான ரூபத்தில் சொல்கின்றீர்கள் நேச்சர், என்னுடைய நேச்சர். என்னுடைய மனதில் அப்படியில்லை. என்

நேச்சர் அப்படியுள்ளது, இப்படிப்பட்ட தாரணை என்ற பாடத்தில் இப்பொழுதும் கூட ராயல் ரூபத்தில் வந்து கொண்டேயிருக்கின்றது. எனவே பாப்தாதா நிகழ்காலத்தில் இதற்காகவே சுட்டி காண்பிக்கின்றார். என்னவெல்லாம் தாரணைகளில் குறைவு காணப்படுகிறதோ அதன் மீது விசேஷமாக கவனம் வையுங்கள்,

பாப்தாதாவும் முன்பு கூட சொல்லியிருக்கின்றார், தாரணையிலும் இப்பொழுது முக்கியமாக இந்த தாரணையில் கவனம் வையுங்கள். ஏதாவது விசயம் நிகழ்ந்து விட்டாலும் உடனேயே அதற்கு முற்றுப்புள்ளி வைக்கமுடிகிறதா என்பதை சோதனைச் செய்யுங்கள். வைக்க விரும்புவது முற்றுப்புள்ளித்தான்; ஆனால் கேள்விகுறியாக ஆவதில்லையே, முற்றுப்புள்ளி வைப்பதில்லை, அரைப்புள்ளி(;), கமாவாக மாறி விடுகின்றது. போகப்போக வரயிருக்கின்ற சூழ்நிலைகளில் நீங்கள் ஒரு வினாடியில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய அவசியம் இருக்கும். அந்த நேரத்தில் கேள்விக்குறி, ஆச்சரியக்குறியை சரி செய்வதில் ஈடுபடும் அளவிற்கு நேரம் கிடைக்காது. ஒரு வினாடியில் முற்றுப்புள்ளியின் அவசியம் ஏற்படும். அதற்கான பயிற்சி நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே செய்திருக்க வேண்டும். அப்போது தான் அந்த சமயத்தில் வெற்றி அடைய முடியும். எனவே குழப்பமான சமயத்தில் சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்தின் அடிப்படையில் சோதனைகள் வருகின்றபோது அதற்காக இப்போதிலிருந்தே பயிற்சி செய்யுங்கள். இந்த நீண்டகால பயிற்சிதான் வருகின்ற சோதனைக் காலங்களில் உங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

பாப்தாதா அமிர்தவேளையில் வலம் வருகின்றார். ஒவ்வொருவரின் முயற்சியையும் சோதனை செய்கின்றார். நான்கு பாடங்களிலுமே குழந்தைகள் செய்யும் முயற்சி தீவிர வேகத்தில் உள்ளதா? அல்லது சாதாரணமாக உள்ளதா? என்ன பார்த்தார் தெரியுமா? சமயத்தின் வேகத்திற்கு ஏற்ப இப்பொழுது முயற்சியில் சதா காலத்திற்கும் தீவிர முயற்சி செய்ய வேண்டியது அவசியமாகின்றது. எனவே பாப்தாதா சமிக்ஞை காண்பிக்கின்றார், சமயமானது மிகத் தீவிரமான நேரத்தில் முடிவு நாட்களின் அருகே சென்று கொண்டிருக்கின்றது, அந்த கணக்கின்படி இப்பொழுது விசேஷமாக சுபாவம் மற்றும்

சம்ஸ்காரத்தின் மாற்றத்தில் தீவிரமான வேகத்தைக் கொண்டு வரவேண்டும்.

இப்பொழுது பாப்தாதா அனைத்துக் குழந்தைகளையும் தனக்குச் சமமாக மாற்ற விரும்புகின்றார். உங்கள் லட்சியமும் அது தானே? அதற்காக மிக சுலபமான சாதனம் பிரம்மாபாபாவைப் பின்பற்றுவது தான். ஒப்பிட்டுப்பாருங்கள், எந்த செயல் செய்தாலும் முதலில் ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். பிரம்மாபாபாவின் செயல், சொல், மற்றும் சங்கல்பம் இப்படியிருந்ததா? பொதுவாக சொல்லப்படுகின்றது. முதலில் சிந்தித்து பிறகு செயல்பட வேண்டும் என்று பேசுவதற்கு முன்பு, அதை சீர்தூக்கிப் பாருங்கள், பிறகு பேசுங்கள். எனவே கேட்டீர்களா பாப்தாதா இப்பொழுது என்ன விரும்புகின்றார். நீங்களும் விரும்புகின்றீர்கள். ஆன்மீக உரையாடல் செய்யும் பொழுது பாப்தாதா மிகவும் இனிமையிலும் இனிமையான விசயங்களை கேட்கின்றார். உற்சாகத்தோடு மிக் நல்ல விசயங்களைக் பேசுகின்றீர்கள், இதை செய்து காண்பிப்போம், இதை செய்தே தீருவோம். இது நடந்தே தீரும். சங்கல்பம் என்னவோ மிகவும் உற்சாகத்தோடு எழுகிறது ஆனால் செயலில் வருவதற்குள் சிறிது மாற்றம் ஏற்பட்டு விடுகிறது. மற்றபடி பாப்தாதா நீங்கள் விதவிதமான சேவைக்காகப் போடும் திட்டங்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். நிகழ்ச்சிகளும் ஆங்காங்கே மிகவும் நன்றாக நடைபெற்று வருகின்றது. இப்பொழுது சொல் மூலமாக எந்த அளவிற்கு விதவிதமான விதிமுறையின் மூலமாக செய்து கொண்டிருக்கின்றீர்களோ அதற்கான வெற்றியும் கிடைக்கிறது. பாப்தாதாவும் அதில் மகிழ்ச்சி அடைகிறார். இப்பொழுது செய்ய வேண்டியதெல்லாம் ஒன்று மட்டும் தான். மனதின் மூலமாக அனேக ஆத்மாக்களுக்கு சுகத்தின் கதிர்கள், அமைதியின் கதிர்கள், குஷியின் கதிர்கள், அன்பின் கதிர்களை சென்றடையச் செய்ய வேண்டும். இந்த சேவையும் இணைந்தே செய்ய வேண்டும். தன்னுடைய சம்ஸ்கார மாற்றம் மற்றும் பிறருடைய சம்ஸ்கார மாற்றத்திற்காக சகயோகம் செய்வது இதிலேயே அநேகருக்கு நேரம் அதிகமாக செலவாகிறது. எனவே மன சேவையால் விதவிதமாக ஒளிக்கதிர்களை ஆத்மாக்களுக்குத் தருவது. இதில் கவனம் மிக அவசியம். இது தான் போகப்போக அதிகமாக தேவைப்படும். எனவே இதன் மீதும் அதிக கவனம் வைத்துக் கொண்டேயிருங்கள். எந்த குழந்தைகள் இந்த

சேவையை நான் ஏற்கனவே செய்து கொண்டிருக்கின்றேன் என்று சொல்கிறீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. செய்து கொண்டிருக்கின்றீர்களா, அவர்களுக்கு வாழ்த்துக்கள்! செய்யாதவர்கள் இப்பொழுது செய்ய வேண்டும். ஏனென்றால் போகப்போக சூழ்நிலைகள் அப்படி வர இருக்கின்றது, சொல்பவர் மற்றும் கேட்பவர் இருவருக்குமே ஒத்துபோவது என்பது சற்று கடினமாக இருக்கும். எனவே இரண்டு விதமான சேவையும் இப்போதிலிருந்தே எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். மனதும் பிஸியாக இருக்கும். அப்பொழுது மன்மனாபவ நிலையில் இருப்பதும் சுலபமாகி விடும். மனம் பிஸியாகி விட்டால் சம்ஸ்காரம், சுபாவத்தை சுலபமாக மாற்றுவதில் உதவிகரமாக இருக்கும்.

இன்று முக்கியமாக இரட்டை அயல் நாட்டவரை சந்திக்கும் நாள். பாப்தாதாவிற்கு மகிழ்ச்சியுள்ளது. ஆஹா! அயல் நாட்டு குழந்தைகளே ஆஹா! பாப்தாதாவிற்கு குஷி ஏற்படுகிறது. உலகில் மூலை முடுக்கெல்லாம் மறைந்திருந்த குழந்தைகளை கல்பத்திற்கு முன்பிருந்த அதே குழந்தைகளைக் கண்டெடுப்பதில் இரட்டை அயல் நாட்டவர் நிமித்தமாக இருக்கின்றீர்கள். பாப்தாதாவும் கேள்விப்பட்டார். ஒவ்வொருவரும் அவரவருடைய ஏரியாவில் கிராமம் கிராமமாகவும், நகர்புறத்திலும், எங்கெல்லாம் இருக்கின்றீர்களோ அந்த எல்லா இடங்களுக்கும் செய்தி சென்றடையச் செய்வதற்காக திட்டங்களைப் போட்டுக் கொண்டேயிருக்கின்றீர்கள். அதற்காக வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! இல்லையென்றால் முடிவு காலம் வரும்பொழுது, சூழ்நிலைகள் மாறும்பொழுது நீங்கள் யாராக இருந்தாலும் சரி, பாரதவாசியோ அயல் நாட்டவரோ மிகமிக அதிகமான புகார் செய்வார்கள், எங்களுடைய தந்தை வந்திருக்கின்றார். நீங்கள் எங்களுக்கு சொல்லவேயில்லையே? செய்தியை என்னவோ கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்; கூடவே அதிகமாக புகாரும் ஏற்படும். எனவே இப்போது செய்து கொண்டிருக்கின்றீர்கள், மேலும் இனி எந்த ஒரு இடத்திலும் செய்தி செல்லாமல் இருந்து விடக்கூடாது. அதற்காக முயற்சி செய்யுங்கள். மற்றப்படி பாப்தாதா இரட்டை அயல்நாட்டவர் மற்றும் பாரத தேசத்தைச் சார்ந்தவர்கள் இரு தரப்பு குழந்தைகளும் நாலாபுறமும் தம்தம் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். மிக்க மிக்க மகிழ்ச்சி. ஏன் மகிழ்ச்சி

தெரியுமா? இப்பொழுது உள்நாடு மற்றும் அயல் நாட்டில் இந்த திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதாவிற்கு இது மிகவும் பிடித்துள்ளது. ஏதேனும் சாதனத்தின் மூலமாக செய்தி சென்றடைய வேண்டும். இந்த அறிவியல் உண்மையில் உங்களுக்காகவே தக்க சமயத்தில் மிகவும் உதவி செய்கின்றது. இன்னும் நாளுக்கு நாள் சாதனங்கள் புதுப்புதுவிதமாக உருவாகிக் கொண்டேயிருக்கும். அவற்றை தடைகளற்ற வண்ணம் காரியத்தில் பயன்படுத்திக் கொண்டே செல்லுங்கள். எங்கெல்லாம் சேவை அபிவிருத்தி செய்வதற்காக மீட்டிங் செய்வீர்களோ, அதைக்கேட்டு பாப்தாதா மிகவும் மகிழ்ச்சி அடைகிறார். குழந்தைகளின் புத்தியானது சாதனங்களை சேவையில் ஈடுபடுத்துவதற்காக (ஆல்ரவுண்டு) எல்லாவிதங்களிலும் சென்றடைந்துக் கொண்டிருக்கின்றது. எனவே நீங்கள் போடும் சேவைக்கான திட்டங்களை எல்லாம் பாபா கேட்கின்றார். பாபா வலம் வருகின்றார் அல்லவா? நீங்கள் எங்கு வேண்டுமாயினும் மீட்டிங் வையுங்கள், டில்லியிலோ உள்நாட்டிலோ, எந்த நகரத்திலோ, அயல் நாட்டிலோ எல்லாவற்றையும் பாப்தாதா கேட்டுக் கொண்டிருக்கின்றார். பாப்தாதாவிடமும் சாதனம் உள்ளது. இதற்காக பாப்தாதா அயல் நாட்டிலிருந்து வந்துள்ள ஒவ்வொருவருக்கும் பாபா என்ன தருகிறார், மிகமிக அன்பைத் தருகின்றார். இப்பொழுது சிறிதளவு தீவிரத்தன்மையை மட்டும் கொண்டு வாருங்கள். திட்டத்தை நடைமுறை செய்வதில் புதுப்புது விஷயங்களை கையாளுங்கள். இவற்றையெல்லாம் பாருங்கள், உங்களுடைய இந்த யக்ஞம் ஆரம்பிப்பதற்கு சில வருடங்களுக்கு முன்பிருந்து தான் இந்த கண்டுபிடிப்புகள் எல்லாம் ஆரம்பமாயிற்று. அறிவியலும் உங்கள் சேவையில் உதவிகரமாக உள்ளது. அதனை நன்கு பயன்படுத்தி லாபத்தை எடுங்கள். உங்களுக்காகத்தான் உருவாகியுள்ளது. நாளுக்கு நாள் பாருங்கள், எவ்வளவு புதுப்புது விசயங்கள் இப்போதும் கூட வெளி வந்து கொண்டிருக்கின்றது. டிராமாவும் உங்களுக்கு சகயோகம் தருகின்றது. சாதனங்களும் உங்களுக்கு சகயோகம் தருகின்றது. நல்லது.

எல்லோரும் எப்போதும் குஷியாக இருக்கின்றீர்களா? எப்பொழுதும் குஷியா? எப்போதும் குஷியாக இருப்பவர்கள் கை உயர்த்துங்கள். எப்போதுமே குஷியா? ஏதாவது சம்பவம் நடந்தாலும் குஷியாக

இருப்பீர்களா? விசயங்கள் வருகிறதல்லவா? அப்பொழுதும் குஷியாக இருக்கின்றீர்களா? இருக்கின்றீர்களா? நன்றாகக் கை உயர்த்துங்கள். அப்படி விசயங்களை வரவேற்கின்றீர்கள் இல்லையா? பயப்படுவதில்லையே? வரவேற்கின்றீர்களா? அனுபவி ஆக்குகின்றன. இந்த தடைகள் அனுபவத்தின் அத்தாரிட்டியை அதிகப்படுத்துகின்றன. மாயாயை வந்து விட்டது, வந்து விட்டது என்று சொல்வதில்லையே? இப்படி சொல்லாதீர்கள். அது சோதனைத்தாள் தான். மாயை மாயை என்று சொல்லி மாயாவை முன்னேற்றி விடாதீர்கள். அது ஒரு சோதனைத்தாள். மாயா பற்றி உங்களுக்குத் தெரியும். அது எப்படியெல்லாம் வரும் என்று எத்தனை ஆண்டுகளாக பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். அதுவும் உங்களுக்குத் தெரியும். மாயா என்றால் என்ன? எனவே மாயையிடம் பயப்பட வேண்டாம். சோதனைத்தாள் என புரிந்து கொண்டு மகிழ்ச்சியாக சோதனையை அணுகுங்கள். அதன் மூலம் அனுபவம் என்னும் வகுப்பில் முன்னேறுங்கள். இந்த வகுப்பில் முன்னேற வேண்டும். குழம்பி விட வேண்டாம். என்ன செர்வது? எப்படி செய்வது? இப்படியெல்லாம் யோசிப்பது பிராமணர்களின் வேலையில்லை. திரிகாலதரிசிகளான உங்களுக்கு ஏன்? என்ன? எப்படி என்ற கேள்வி எழமுடியாது சோதனை வந்தது. அனுபவத்தால் வகுப்பில் முன்னேறுங்கள். முன்னேறிவிட்டீர்கள், குஷியாக இருங்கள், இப்பொழுது அனுபவி ஆகி விட்டீர்கள். மேலும் ஆகிக் கொண்டேயிருப்பீர்கள், நல்லது.

அயல் நாட்டு ஆசிரியர்கள் (டீச்சர்) கை உயர்த்துங்கள். நிமித்தமாக இருக்கின்ற அனைவரும். பாப்தாதா ஆசிரியர்கள் என்றாலே பாப்சமான் என்று சொல்கின்றார். ஏனென்றால் பாபாவைப் போலவே தினசரி முரளி வாசிக்கின்றீர்கள். நீங்களும் முரளி வாசிக்கின்ற சிம்மாசனத்தை அடைந்துள்ளீர்கள். எனவே பாபாவின் துணையாக இருப்பவர்கள் தானே? துணைவர் என்ற முறையில் பாப்தாதா அயல் நாட்டைச் சார்ந்த ஆசிரியர்கள் ஆனாலும் சரி, இந்தியாவைச் சார்ந்தவர்கள் ஆனாலும் சரி. உங்கள் அனைவருக்குமே பாப்தாதா என்ன தருகின்றார்? சபாஷ் குழந்தாய் சபாஷ் நல்லது. இப்போது இங்கு ஹாலில் யாரெல்லாம் அமர்ந்துள்ளீர்களோ, எங்கிருந்து வந்திருந்தாலும் சரி, மறுமுறை மதுபன் வரும்பொழுது பாபாவைச் சந்திக்கும்பொழுது பாப்தாதா என்ன பார்க்கவிரும்புகின்றார், சொல்லட்டுமா? ஏதாவது ஒன்று தன்னுடைய

முயற்சியில் உங்களுக்குத்தெரியும், இப்படிச் செய்யக்கூடாது எதையெல்லாம் இப்படியிருக்கக்கூடாது என்று கூறுவீர்களோ, அதையெல்லாம் மாற்றிக் கொண்டு வர வேண்டும். செய்வீர்களா? இதில் தன்னைத்தானே பாருங்கள் ஏனென்றால் பிறர் இதைப் பார்க்க முடியாது இப்படி செய்ய யார் தயாராக இருக்கின்றீர்கள். இரண்டு கைகளையும் உயர்த்துங்கள். முற்றுப்புள்ளி வைத்து விட்டீர்களா? அப்படி வைத்து விட்டவர்களுக்கு பிறகு பாப்தாதா சிறிதாகவோ, பெரிதாகவோ பரிசு வழங்குவார். மாற்றம் செய்வதற்கான விழாவைக் கொண்டாடுவார். பிடித்துள்ளதா? பிடித்துள்ளதா? அவரவர் வகுப்பில் உள்ளவர்களுக்கும் சொல்லுங்கள். எந்த அளவிற்கு மாற்றம் செய்வீர்களோ அந்த அளவிற்கு. நல்லது. இறுதி நேரத்தை அருகே கொண்டு வருவீர்கள். நல்லது.

**80-தேசங்களிலிருந்து 2200-அயல் நாட்டு குழந்தைகள் வந்துள்ளனர்**. ஒவ்வொரு குழந்தைகளுக்கும் பாப்தாதா மனமார்ந்த அன்பை பரிசாக வழங்குகின்றார். முதன் முறையாக வந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். உங்கள் அனைவருக்கும் உங்களது ஆன்மீகப் பிறந்த நாளுக்கான வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், ஏனென்றால் நீங்கள் ஒவ்வொருவரும் இந்த குடும்பத்தில் அழகு சேர்ப்பவர்கள். அலங்காரம். எனவே பாப்தாதா நீங்கள் லேட்டாக (தாமதமாக) வந்திருந்தாலும் டூலேட்டாக (மிகவும் தமதமாக) ஆவதற்கு முன்னதாக வந்து விட்டீர்கள் என்று சந்தோஷப்படுகிறார். இதிலும் முக்கியமாக நீங்கள் வந்ததால் பரிவாரத்திற்கும் குஷியுள்ளது. வந்து விட்டார்கள், நம்முடைய குடும்பத்தில் இருந்து பிரிந்து போனவர்கள் வந்து விட்டார்கள். இப்பொழுது சமயத்திற்கு ஏற்ப நீங்கள் தன்னுடைய முயற்சியை தீவிரமாகச் செய்ய வேண்டும். மெதுவாக முயற்சி செய்யக்கூடாது. தீவிர முயற்சி செய்தால் தான் கடைசியில் வந்திருந்தாலும் விரைவாக முதலில் வந்தடைய முடியும். செய்வீர்கள் அல்லவா? செய்வீர்களா? நல்லது. ஈஸ்வரிய குடும்பத்தின் சார்பாக, பாப்தாதாவின் சார்பாக மிக மிக அதிகமான அன்பு நினைவுகளைப் பெற்றுக் கொண்டேயிருங்கள், முன்னேறிக் கொண்டேயிருங்கள். நல்லது.

**மீடியா துறையைச் சார்ந்தவர்கள்**: நல்லது. மீடியா ஒரு சாதனமாக உள்ளது. சாதனங்களை சேவையில் ஈடுபடுத்துவது உங்களது வேலை.

மற்றப்படி பாப்தாதா கேள்விபட்டார். நன்றாக மீட்டிங் செய்துள்ளீர்கள், மேலும் பாப்தாதாவும் விரும்புகின்றார். மீடியா மூலமாக மூலை முடுக்கெல்லாம் செய்தி சென்று சேர வேண்டும். புகார் வரக்கூடாது, நன்றாக செய்துள்ளீர்கள். செய்து கொண்டேயிருப்பீர்கள். மேலும் நாலாபுறமும் உள்ள ஆத்மாக்களுக்கு தன்னுடைய தந்தையின் செய்தி கிடைத்துக் கொண்டேயிருக்கும். பாப்தாதாவும் பார்க்கின்றார். என்னவெல்லாம் நிகழ்ச்சிகள் நடத்திக் கொண்டிருக்கிறீர்களோ, இவரும் நடத்துகின்றார், (சகோதரர் நிஷார் அவர்கள்) இதுவும் நன்றாக இருக்கிறது. மேலும் நிகழ்காலத்தில் ஆங்காகங்கே எதிர்காலத்திற்கான செய்தியைத் தரும் சேவையை செய்து கொண்டிருக்கிறீர்கள், அதுவும் நன்றாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஏதாவது ஒரு கைமாறு (பதில்) கிடைத்துக் கொண்டிருக்கின்றது. வாழ்த்துக்கள், நல்லது.

யாரெல்லாம் கடிதம் மூலமாக, தொலைபேசி மூலமாக, பாப்தாதாவிற்காக அன்பு நினைவுகளும் செய்திகளும் அனுப்பியிருக்கின்றீர்களோ, அந்த அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா கண்களுக்குள் வைத்தப்படி அன்பு நினைவுகளைத் தருகின்றார். அன்பு நினைவுகளையும், சேவையின் செய்திகளையும், மனதின் முயற்சி பற்றிய செய்திகளையும் கொடுத்துள்ளீர்கள், அவை அனைத்தையும் பாப்தாதா ஏற்றுக் கொண்டு மனதின் மூலமாக எதிரில் வெளிப்படுத்தி எல்லோருக்குமாக சுகம், சாந்தி குஷியின் ஒளிக்கதிர்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார். சிலர் செய்திகளை அனுப்பாமல் இருக்கலாம் ஆனால் மனதில் சங்கல்பம் வைத்திருப்பீர்கள் அல்லவா? அந்த சங்கல்பம் கூட பாபாவை வந்தடைந்தது. நாலாபுறமும் உள்ள தைரியசாலி குழந்தைகளுக்கு பாபாவின் உதவி. இனிமையிலும் இனிமையான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் வழங்கிக் கொண்டிருக்கின்றார். மேலும் இந்த ஆண்டில் தனக்காகவும், சேவை நிலையத்திற்காகவும், உலகில் உள்ள ஆத்மாக்களுக்காகவும் அப்படி ஏதாவது திட்டம் தீட்டுங்கள். அந்த சேவையின் பலனும் பலமும் அனைத்து ஆத்மாக்களுக்கும் பிராப்தம் ஆக வேண்டும். நாலாபுறமும் உள்ள குழந்தைகளுக்கு பாப்தாதா விசேஷமாக, மனமார்ந்த அன்பு நினைவுகளை சுவீகாரம் ஏற்றுக் கொள்ள வைக்கின்றார். ஓம் சாந்தி.

சகோதரி முன்னியுடன்: நல்லது. இந்த பிறந்த நாளை சேவைக்காக கொண்டாடினீர்கள். சேவைக்காகத்தானே கொண்டாடினீர்கள். சேவைக்கான கைமாறாக எல்லா இடங்களிலிருந்தும் உங்களுக்கு அந்த சேவைக்கான பலனும், பலமும் கிடைத்துக் கொண்டேயிருக்கும். இப்போது முடித்து விடுங்கள். முடிந்து விட்டது நன்றாக கொண்டாடினீர்கள்!

ஜானகி தாதியிடம்: பாபா ஆட்டுவித்துக் கொண்டிருக்கின்றார்; நீங்கள் ஆடிக் கொண்டிருக்கின்றீர்கள். தக்க நேரத்தில் பாபா எழுப்பிவிடுகிறார் அல்லவா?

மோகினி சகோதரியிடம்: ஒவ்வொருவருமே மிக நன்றாகவே இருக்கின்றீர்கள். (பாபா இந்த உடலில் கணக்குவழக்கு எதுவரையில்). விரைவாக முடிந்து கொண்டிருக்கின்றது. முடிந்து விடும். சிறிது நேரம் ஆகும். முந்தைய கணக்கு வழக்கு அல்லவா? இப்போதைய கணக்கு கிடையாது. முந்தைய கணக்கு. முந்தைய கணக்கை முடித்துக் கொண்டே செல்லுங்கள்.

தாதிமார்களுடன்: அனைவரும் மகாரதிகள். நன்றாக இருக்கின்றீர்கள். மேலும் நன்றாக இருப்பீர்கள். ருக்குமணி தாதியிடம் (தாதி) ஆரம்பித்தீர்கள், நிமித்தமாக இருக்கின்றீர்கள்.

பரதாதியிடம்: நல்லது. எல்லோருக்கும் முன்பாக கணக்கு வழக்கை மகிழ்ச்சியோடும் குஷியுடனும் முடிப்பதில் நீங்கள் ஒரு உதாரணமாக இருக்கின்றீர்கள், நோய்வாய்ப்பட்டவர். அல்ல நீங்கள், எல்லோருக்கும் ஒரு முன் உதாரணம் நீங்கள், உங்களைப் பார்ப்பதால் எல்லோருக்கும் தைரியம் வந்து விடுகிறது. அந்த அளவிற்கு நீங்கள் முன் உதாரணமாக உள்ளீர்கள்.

சகோதரர் ரமேஷ் அவர்களிடம்: தன்னுடைய உடலையும் கவனித்துக் கொள்ள வேண்டும் அப்படியே விட்டுவிடக் கூடாது. சிறிது கவனம் கொடுத்து நேரம் ஒதுக்கி உடலை சரிசெய்து கொள்ளுங்கள். இந்த உடலை வைத்து ஓட்ட வேண்டும். சிறிது ஓய்வெடுத்து உடலை சரிசெய்து கொள்ளுங்கள். வேலையில் முன்னேறிசெல்லுங்கள்.

மேலும் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். யக்ஞத்தை நடத்த வேண்டும். எனவே உடலை சரி செய்து கொள்ளுங்கள். முக்கியமாக கவனம் வையுங்கள். பழைய உடல் தான் இது. (சகோதரர் நிர்வயருடன்) உங்களுக்கும் கவனம் இருக்கிறது தானே. கவனம் வைக்க வேண்டும் ஆனால் சேவையில் எந்த குறையும் வைக்கக் கூடாது. அந்த அளவிற்கு நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும். சரியா? பிரிஜ்மோகன் அவர்களிடம் மூவர்களும் நிமித்தமானவர்கள். மூவரும் நிமித்தமாக இருக்கின்றீர்கள் தன்னை பொறுப்புள்ளவர்கள் என்று புரிந்துள்ளீர்களா? (ரமேஷ் சகோதரருடன்) சோதனை எதிர் கொண்டீர்கள் (உஷா சகோதரி சரீரம் விட்டது) அதற்கு வாழ்த்துக்கள். நல்ல முறையில் கடந்து வந்துள்ளீர்கள்.

இரட்டை அயல்நாட்டு சகோதர சகோதரிகள்: பாப்தாதாவிற்கு பூச்செண்டும், மாலையும் அணிவித்தார்கள். இங்கேயே இருந்தீர்கள், இங்கேயே வந்து சேர்ந்து விட்டீர்கள். மிக நல்லது. நன்றாக நடித்துக் கொண்டிருக்கின்றீர்கள். அனைவரும் அவரவர் நடிப்பை நடித்துக் கொண்டிருக்கின்றீர்கள். நல்லது.

அயல்நாட்டு முக்கியமான மூத்த சகோதரிகளுடன்: இந்த குழுவும் நன்றாக இருக்கிறது. நிமித்தமாக இருந்து ஒருவருக்கு ஒருவர் ஒத்துழைப்பாக இருந்து முன்னேறிக் கொண்டு இருக்கிறீர்கள். பாரதத்தின் பக்கா குழந்தைகள் அல்லவா? அனுபவிகள் எனவே நிமித்தமாக உள்ளீர்கள். தடைகள் இன்றி நடந்து கொண்டிருக்கிறதல்லவா? கஷ்டம் எதுவும் இல்லையே? செட்டாகி விட்டீர்களா? சட்டதிட்டங்களும் செட்டாகி விட்டதா? {சக்கரதாரி சகோதரியுடன்) இவர்களுடையதும் நடந்து கொண்டிருக்கிறது. மிக்க நல்லது. பாரதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் எங்கே சென்றாலும் அங்கே இருப்பவர்களுடன் கலந்து விடுகின்றார். பாரதம் மற்றும் அயல் நாடு என்று வேறுபாடு கிடையாது. இவரும் நன்றாக இருக்கின்றார். மேலும் பாரதத்தின் அனுபவி ஆன காரணத்தால் கையாளும் முறையும் நன்றாக கிடைத்துள்ளது. பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். (பாரதத்திலும் சேவைக்கான வாய்ப்புகள் கிடைக்கின்றது) சேவைக்கான வாய்ப்பு கிடைக்கிறது விசயம் ஒன்று தான். எங்கு வேண்டுமானாலும் சேவை செய்யுங்கள், பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார், முன்னேறிக்

கொண்டேயிருக்கின்றீர்கள். கிராமம் கிராமமாக சென்று கொண்டிருக்கின்றீர்கள் மிக்க நல்லது. எங்கே சென்டர் இல்லையோ அங்கே ஏதேனும் ஒரு முறையில் செய்தியை சென்றடையச் செய்யுங்கள். நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 15.11.2010 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சுயமாற்றத்தின் வேகத்தை அதிகரித்து சுபாவ சம்ஸ்காரத்தை முடித்து விடுகின்ற விழாவைக் கொண்டாடுங்கள். ஒவ்வொரு எண்ணத்திலும், சொல்லிலும் செயலிலும் பிரம்மாபாபாவைப் பின்பற்றுங்கள்!

இன்று பாப்தாதா அனைவரின் நெற்றியிலும் மூன்று விதமான பாக்கியத்தின் மின்னுகின்ற அடையாளங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒன்று பாபா மூலமாக கிடைக்கின்ற பராமரிப்பு (பாலனை), மற்றொன்று ஆசிரியர் எனும் ரூபத்தில் படிப்பினை என்ற பாக்கியம், மூன்றாவதாக சத்குருவாக வரதானங்களின் பாக்கியம். இப்படி மின்னுகின்ற மூன்றுவிதமான பாக்கிய ரேகைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொருவர் நெற்றியிலும் இந்த மூன்று பாக்கியங்களாலும் ஜொலிப்பு மின்னிக் கொண்டே இருக்கின்றது. இப்படிப்பட்ட ஒரு பாக்கியம் வேறு எவருடைய நெற்றியிலும் தென்படுவதில்லை ஆனால் உங்கள் அனைவருடைய நெற்றியிலும் பாக்கியத்தின் ரேகை மின்னிக் கொண்டிருக்கின்றது. நீங்கள் அனைவரும் கூட தன்னுடைய பாக்கிய ரேகையை பார்க்கின்றீர்கள் அல்லவா? பாப்தாதா பார்க்கின்றார் பாக்கியம் என்பது எல்லோருக்கும் கிடைத்துள்ளது; ஆனால் அந்த பாக்கியத்தின் பளபளப்பு எல்லோருக்கும் ஒன்று போல் இருப்பது இல்லை. சிலருடைய பளபளப்பு மிக அதிகமாக உள்ளது. சிலருடைய பளபளப்பு சிறிது குறைவாகத் தென்படுகிறது பாப்தாதா அனைவருக்கும் ஒரே சமயத்தில் ஒரே மாதிரியான பாக்கியம் தான் கொடுத்திருக்கிறார். படிப்பும் ஒரே படிப்புத்தான் கற்பிக்கின்றார். பாலனையும் ஒரே மாதிரிதான் தருகின்றார்; மேலும் வரதானமும் ஒரே மாதிரிதான் வழங்கி இருக்கிறார். ஆதி ரத்தினங்கள் மற்றும் பின்னால் வருபவர்கள் எல்லோருக்கும் ஒரே முரளி மூலமாகத்தான் பாலனை

கிடைத்து வருகிறது; படிப்பும் கிடைக்கிறது, வரதானமும் அனைவருக்கும் ஒன்று போலவே கிடைத்து வருகிறது. ஆதி ரத்தினங்களுக்கான முரளி வேறுபட்டது அல்ல. ஒன்றுதான் ஆனால் பாக்கியம் வரிசைக்கிரமமாக மின்னுவது தென்படுகிறது. பாபாவின் பாலனை அனைவருக்கும் ஒரே மாதிரி கிடைத்துவருகிறது. ஒவ்வொருவர் வாயிலிருந்தும் இதுதான் வெளிப்படுகிறது "மேரா பாபா" முன்னால் வந்திருந்தாலும் சரி பின்னால் வருபவர்களாக இருந்தாலும் சரி; ஆனால் ஒவ்வொருவரும் தன்னுடைய அதிகாரத்துடன் சொல்லுகிறீர்கள் மேரா பாபா. யாரையாவது கேளுங்கள் பாபாவிடம் அன்பு கிடைத்துள்ளதா என்று உடனடியாக சொல்வார்கள் எனக்கு பாபாவின் அன்பு எல்லோரையும் விட அதிகமாகவே கிடைக்கிறது. “மேரா பாபா” என்று உளப்பூர்வமாக சொல்பவர்கள் உடனடியாக என்ன சொல்கிறார்கள். எனக்கு அன்பு மிக அதிகமாக உள்ளது. பாபாவிற்கு முதலில் என் மீதுதான் அன்பு உள்ளது. ஏனென்றால் அன்புதான் பாபாவின் பாலனை. இப்படி மேரா பாபா என்று சொல்வதால் நீங்கள் பாபாவின் குழந்தை ஆகி விட்டீர்கள். பாபாவும் உங்களுடையவர் ஆகி விட்டார்.

இன்று நீங்கள் அனைவரும் அன்பு எனும் விமானத்தின் மூலம் வந்துள்ளீர்கள். அன்பு உங்கள் அனைவரையும் இங்கே கவர்ந்து வந்துள்ளது. எல்லோரும் அன்போடும் எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு மிக ஓய்வுடனும் வந்து சேர்ந்துள்ளீர்கள். இந்த பரமாத்மாவின் அன்பு சங்கமயுகத்தில் மட்டுமேதான் பிராப்தம் ஆகிறது. தேவ ஆத்மாக்களின் அன்பு பிராப்தம் ஆகும் ஆனால் பரமாத்மாவின் அன்பு இந்த ஒரே ஒரு பிறவியில் மட்டுமே பிராப்தம் ஆகிறது. எனவே பாப்தாதாவும் அப்படிப்பட்ட அன்பிற்குப் பாத்திரமான ஆத்மாக்களைப் பார்த்து என்ன சொல்கிறார் ஆஹா குழந்தாய் ஆஹா! நீங்கள் மட்டும் தான் கோடியில் ஒருவராக இறைவன் அன்புக்கு பாத்திரமாகியுள்ளீர்கள். மேலும் ஒவ்வொரு கல்பத்திலும் நீங்கள் மட்டுமேதான் பாத்திரமாகின்றீர்கள். இதுப்போல நஷா நடமாடும் பொழுதெல்லாம் இருக்கிறது அல்லவா! உங்களுடைய மனதில் இதே பாடலைப் பாடுகிறீர்களா ஆஹா என்னுடைய பாக்கியம், இந்த பாடலைப் பாடிக் கொண்டே இருக்கிறீர்கள் தானே! பாபாவுக்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. இந்த அனைத்துக் குழந்தைகளும் அதிகாரி

குழந்தைகள். தன்னை யாருமே பரமாத்மாவின் அன்பில் குறைந்தவராக நினைப்பதில்லை. அன்பில் அனைவருமே பாஸ். பாப்தாதா கேட்கின்றார். அபரிமிதமான அன்பு யாருடையது? என்ன சொல்வீர்கள்? யார் சொல்வீர்கள்? எல்லோருக்கும் தெரியும் எனது (உங்களது) அன்பு குறைந்தது அல்ல, பாபாவும் சொல்கின்றார் அன்பு எனும் பாடத்தில் எல்லோரும் பாஸ். எனவேதான் மேரா பாபா என்று சொல்கின்றீர்கள். எவ்வளவு அன்பு உள்ளது என்று ஒவ்வொருவருக்கும் தெரியும். பாப்தாதா பார்க்கின்றார். அன்பில் அனைவருமே பாஸ்; ஆனால் இப்பொழுது சமயத்திற்கு ஏற்ப சுயமாற்றம், அதுவும் மிக அவசியமாகிறது. சுயமாற்றம் என்பது விசேஷமாக முக்கியமாக சொல்லப்பட்டு இருக்கின்றது. இப்பொழுது சுயமாற்றத்தில் முக்கியமாக சம்ஸ்காரம் மாற்றம், சுபாவ மாற்றம் இதனுடைய தேவை அதிகம் உள்ளது.

இப்பொழுது புதிய வருடம் ஆரம்பமாகின்றது. எனவே சுய மாற்றத்தின் வேகமும் தீவிரமாக இருக்க வேண்டும். செய்து கொண்டுதான் இருக்கின்றீர்கள். கவனமும் உள்ளது ஆனால் வேகம் இன்னும் தீவிரம் அடைய வேண்டும். பாப்தாதாவிற்கு நினைவு உள்ளது. முன்பு கூட பாபாவிடம் வாக்கு (உறுதிமொழி) கொடுத்துள்ளீர்கள். புத்தாண்டில் சுயமாற்றம், சம்ஸ்காரமாற்றம் செய்தே ஆக வேண்டும் ஆனால் பாப்தாதா பார்க்கின்றார் சம்ஸ்கார மாற்றத்தில் எந்தளவு தீவிரமான முயற்சி தேவையோ அந்தளவிற்கு வேகத்தை இன்னும் அதிகரிக்க வேண்டும். நீங்கள் அனைவரும் என்ன நினைக்கிறீர்கள். சமயத்திற்கேற்ப எந்தளவிற்கு தீவிரமாக இருக்க வேண்டுமோ அந்தளவிற்கு இருக்கிறதா அல்லது இனிமேல் தான் தீவிரமாக்க வேண்டுமா? ஏனென்றால் சமயத்திற்கேற்ப நேரத்தில் மாற்றம் மிகத் தீவிரம் அடைந்து கொண்டே இருக்கின்றது. அதே போல நீங்களும் சங்கல்பம் வைத்தவுடன் நடந்தது என்று செயல்படும்போது தான் உங்களுடைய தீவிரமான மாற்றமும் நிகழும். எதார்த்தத்திற்கு மாறான எண்ணங்கள் அழிந்தே போக வேண்டும். ஒரு காகிதத்தில் முற்றுப் புள்ளி வைப்பதுப் போல. காகிதத்தில் முற்றுப் புள்ளி வைக்க எவ்வளவு நேரம் எடுக்கும். எதார்த்தத்திற்கு மாறானது என்றால் வீண் எண்ணம் அந்தளவிற்கு தீவிரமாக மாற்றம் அடைய வேண்டும். பாப்தாதா விரும்புகின்ற அளவிற்கு உங்களுடைய வேகத்தை அதிகப்படுத்த

முடியுமா? தைரியம் உள்ளதா? இப்பொழுதிலிருந்தே அந்தளவிற்கு வேகமாக முற்றுப் புள்ளி வைக்க முடியும் என நினைப்பவர்களுக்கு, தைரியம் வைக்கும் குழந்தைகளுக்கு தந்தையின் உதவி இருக்கும். அவர்கள் கை உயர்த்துங்கள். பாப்தாதா குழந்தைகளின் திட சங்கல்பத்தைப் பார்த்து வாழ்த்துக்கள் தெரிவிக்கின்றார். பாப்தாதா முன்பு கூட சொல்லியிருக்கின்றார். திடமான சங்கல்பம் வைத்துள்ளீர்கள் செய்தே தீருவேன் என்று. இன்றைய சபையிலும் அனைவரும் அதே திட சங்கல்பம் செய்துள்ளீர்கள் அல்லவா? நீங்கள் பார்த்தீர்களா? தாதிமார்களும் பார்த்தீர்களா? எல்லோருமே பெரும்பான்மையானோர் கை உயர்த்தி உள்ளீர்கள். பார்த்தீர்களா? எனவே நாளை முதல் சுபாவ சம்ஸ்காரத்தை முடித்து விடுவதற்கான நிறைவு நாளைக் கொண்டாட வேண்டும். கொண்டாடுவீர்களா? யாரெல்லாம் கை உயர்த்தினீர்களோ அவர்கள் மீண்டும் கை உயர்த்துங்கள். நிறைவு விழா கொண்டாடுவீர்களா? இதனுடைய விழாவை மிகவும் கோலாகலமாகக் கொண்டாட வேண்டும். எப்படி தைரியமாக லட்சியம் வைக்கிறீர்களோ அப்படியே தைரியமாக லட்சணத்தையும் வைத்தால் எதுவும் பெரிய விஷயமே இல்லை. உங்கள் லட்சியமே பாப்சமான் ஆக வேண்டும் என்பதுதானே! எனவே இப்பொழுது லட்சியத்தையும், லட்சணத்தையும் ஒன்றாக்குங்கள். தந்தை பிரம்மாபாபாவைப் பின்பற்றுங்கள். என்னவெல்லாம் சங்கல்பம் சொல், செயலோ அவை அனைத்தையும் முதலில் பிரம்மாபாபாவுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அப்படியே அதனைப் பின்பற்றுங்கள். உலகில் காப்பி அடிப்பது என்பது தடை செய்யப்படும் ஆனால் பாப்தாதா சொல்கின்றார். பிரம்மாபாபாவைக் காப்பி அடியுங்கள். நிராகார், பாபாவை சொல்வீர்கள் அவருக்கு தேகம் இல்லை, அவருக்கு தேகபானம் என்றால் என்ன தெரியும் ஆனால் பிரம்மாபாபா தேகதாரியாக இருக்கின்றார். உண்மையில் நீங்கள் சரண்டர் ஆகியுள்ளீர்கள் சரண்டர் ஆனவர்கள் கை உயர்த்துங்கள். யாரெல்லாம் சுரண்டரோ அவர்கள் கை உயர்த்துங்கள். நீங்கள் சரண்டர் ஆகும்பொழுது என்ன சங்கல்பம் வைத்தீர்கள். உடல், மனம், பொருள் அனைத்தும் பாபா உங்களுடையது. இப்படித்தானே செய்தீர்கள். செய்தீர்களா? செய்தீர்கள் தானே. இதில் கை உயர்த்துங்கள். இப்பொழுது எனது இல்லை என்று சரண்டர் செய்து விட்டீர்கள். உடலும் எனது இல்லை, பொருளும் எனது இல்லை எப்படி பிரம்மாபாபா,

பாபாவிற்கு சேவைக்காக இந்த உடலைக் கொடுத்து விட்டார். எனவே பிரம்மாபாபா இந்த உடல் எனது இல்லை சேவைக்காகத் தான் என்பதைப் புரிந்து கொண்டார். அவ்வாறே நீங்களும் உடல், மனம், பொருள் மூன்றையும் அர்ப்பணம் செய்துள்ளீர்கள் என்றால் உங்களுடைய தேகமும் பாபாவின் சேவைக்காகத்தான் நிமித்தமாக உள்ளது. எப்படி பிரம்மாபாபாவின் சரீரம் சேவைக்காக இருந்ததோ அப்படியே உங்கள் சரீரமும் உங்களுடையது அல்ல. சேவைக்காகத்தான் உள்ளது. அப்படி என்றால் சொல்லுங்கள். இந்த சம்ஸ்காரம், தேகாபிமானம் மற்றும் தேகாபானம் இவையெல்லாம் இருக்க வேண்டுமா? இதை நினைவில் வையுங்கள். இந்த உடல் உலக சேவைக்காக அர்ப்பணிக்கப்பட்டது எனது அல்ல. பாபா உங்களுக்கு சேவைக்காக கொடுத்து இருக்கிறார். இந்த தேகபானம். தேகபிமானம். தேகபிமானம் அதிகமான நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. தேகபானம் அதைவிட சற்று லேசானது ஆனால் இரண்டையும் எப்பொழுது கொடுத்து விட்டீர்களோ, விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யும்பொழுது அதில் என்ன எழுதுகின்றீர்கள்? டீச்சர்கள் படிவம் பூர்த்தி செய்யும்பொழுது அதில் என்ன எழுதுகின்றீர்கள். எனது இந்த வாழ்க்கையை சேவைக்காக அர்ப்பணிக்கின்றேன். யாரெல்லாம் பிராமணர்களாக மாறியுள்ளீர்களோ அவர்கள் அனைவருமே பாபாவிடம் வாக்குக் கொடுத்துள்ளீர்கள். உடல், மனம், பொருள் எல்லாமே பாபாவுடையதுதான் எனது அல்ல. ஆகவே இந்த சம்ஸ்காரம் அதாவது தேகபானம் மற்றும் தேகாபிமானம் உற்பத்தி ஆகிறது. எனவே இன்று கூட நீங்கள் வாக்கு கொடுக்கின்றீர்கள் சம்ஸ்காரத்தை முடித்து விடுவதற்காக. ஏனென்றால் பாபாவைப் பிரத்யட்சம் செய்வதில் தடையாக இருக்கின்றது. அனைவருக்கும் ஊக்கமும் இருக்கிறது. பாப்தாதாவும் கேட்டுக் கொண்டே இருக்கின்றார். நீங்களும் சொல்லிக் கொண்டே இருக்கின்றீர்கள் பாபாவை பிரத்யட்சம் செய்ய வேண்டுமென்று; ஆனால் இதுவரையிலும் பிரம்மாகுமாரிகளும் பிரம்மாகுமாரர்களும் பிரத்யட்சம் ஆகியுள்ளீர்கள். பகவான் தந்தை வந்து விட்டார். இந்த விஷயம் மட்டும் குப்தமாகவே (ரகசியமாகவே) உள்ளது. முயற்சி செய்து கொண்டே இருக்கின்றீர்கள் ஆனால் வெளிப்படையான சப்தம் பரவ வேண்டும். நமது தந்தை வந்து விட்டார். பகவான் வாக்கு இது பிரம்மாகுமாரிகளின் வாக்கு அல்ல. இதுதான் பிரத்யட்சம் ஆக வேண்டும். இந்த சுபாவ சம்ஸ்கார மாற்றம் ஏற்பட

வேண்டும். உங்கள் ஒவ்வொருவருடைய முகத்திலும் நடத்தையிலும் வெளிப்பட வேண்டும். பாபாவை பிரத்யட்சம் செய்ய வேண்டும். செய்து கொண்டுதான் இருக்கின்றீர்கள் ஆனால் அனைவருடைய காதுகளிலும் இந்த சப்தம் ஒலிக்க வேண்டும். பகவான் வந்து விட்டார்! தந்தை வந்து விட்டார்! இது ஏற்பட வேண்டுமல்லவா? கை உயர்த்துங்கள். இது ஏற்பட வேண்டும், ஏற்பட வேண்டும்தானே? கை என்னவோ நன்றாக உயர்த்துகின்றீர்கள். பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகின்றார். எல்லோர் மனதிலும் இந்த ஆர்வம் உள்ளதைப் பார்த்து பாபா மகிழ்ச்சி அடைகிறார். இருக்கத்தான் வேண்டும். இதற்காக நாளை முதல் சம்ஸ்கார சுபாவத்தில் மாற்றம் செய்வீர்கள். அதுபோலவே அதற்கான சாதனமும் உள்ளது. யாரெல்லாம் பிராமணர்களாக இருக்கின்றீர்களோ ஒவ்வொரு பிராமணரும் தன்னுடைய அட்டவணையில் (சார்ட்) நல்லாசை மற்றும் நல் எண்ணத்தில் (சுபபாவனை சுபகாமனை) விசேஷமாக கவனம் வைக்க வேண்டும். உலக மக்களுக்காக ஒரு வேலை கொடுத்தீர்கள் எவ்வளவு நல்லாசை, நல்லெண்ணம் வைக்கிறீர்கள் என்பதை கணக்கிட வைத்தீர்கள். அவர்கள் வைக்க முடியும் என்றால் நீங்களும் வைக்க முடியும் தானே? எப்பொழுதாயினும் யாருடைய சுபாவ சம்ஸ்காரம் எதிர்கொண்டு வந்தால் சுப பாவனை, சுபகாமனை அந்த ஆத்மாவிற்காக வைக்க முடியாதா? எனவே நீங்களும் அதிகாலை அமிர்தவேளை முதல் இந்த எண்ணம் வையுங்கள். நான் ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் சுப பாவனை மற்றும் சுபகாமனை (சுபமான ஆசை) வைத்தே ஆக வேண்டும். என்ன என்ன வைத்தேனோ அதை மாற்றியே தீருவேன். அதை முழுமையாக செய்து காட்ட முடியும். பல விஷயங்கள் (தடைகள், எதிர்மறைகள்) வரத்தான் செய்யும், விஷயங்களின் வேலை வருவது, அது மாயை அல்லவா? ஆனால் உங்கள் வேலை வெற்றியடைவது. எனவே நாளை முதல் தங்களுக்குள் நிமித்தமானவர்கள் ஒன்று சேர்ந்து குழு அமைத்து இதைப் பற்றி ஆன்மீக உரையாடல் செய்து என்ன சங்கல்பம் (எண்ணம்) வைத்தீர்களோ அதை எப்படி நடைமுறையில் கொண்டு வருவது என்பதைப் பற்றி விளக்கம் காணுங்கள். முடிந்ததற்கு முற்றுப்புள்ளி வைத்து விட வேண்டும். கை உயர்த்தினீர்கள் தானே! முன்னால் இருப்பவர்கள் கை உயர்த்தினீர்கள். எனவே நீங்கள் இதற்கு முன்னோடியாக இருக்க வேண்டும். பிரம்மாபாபாவிற்கு முன்பாக

எத்தனை விதமான சம்ஸ்காரம் உள்ளவர்கள் எதிர் கொண்டு வந்தார்கள். ஆதியில் பிரம்மாபாபா எத்தனை விதமான சம்ஸ்காரங்களின் விளையாட்டைப் பார்த்தார் ஆனால் சிவபாபாவின் சகயோகத்தால் தானும் முன்னேறி பிறரையும் முன்னேறச் சென்றார். அதன் விளைவாகத்தான் இன்று இவ்வளவு குழந்தைகளின் கூட்டம். அதிகரித்துள்ளது. அசைத்து விடும் அளவிற்கு விசயங்கள் வந்தாலும் உறுதியாக ஆடாமல் அசையாமல் இருந்தார். அதன் விளைவாக எத்தனை சென்டர்கள் திறக்கப்பட்டு உள்ளது. எவ்வளவு நிகழ்ச்சிகள் நடந்துக் கொண்டிருக்கின்றன.

இப்பொழுதெல்லாம் எத்தனை நிகழ்ச்சிகள் நடந்துக் கொண்டிருக்கின்றது. நடக்கின்றது அல்லவா? இந்த அனைத்து ரிசல்ட்டும் பிரம்மாபாபாவின் தைரியத்தால் வந்தது. முதலில் பிரம்மாபாபா மட்டுமே தனித்திருந்தார். நீங்கள் எல்லோரும் பின்னால் வந்தவர்கள் ஆனால் பிரம்மாபாபா மட்டுமே தனித்திருந்து முன்னேறினார். ரிசல்ட்டில் பார்க்கும் பொழுது நடை முறையில் பிராமணர்கள் நீங்கள் அனைவருமே துணையாக இருந்துள்ளீர்கள். ஆனாலும் தைரியம் வைத்தார் அல்லவா? பிரம்மாபாபா தனித்திருந்து தைரியம் வைத்தார். நீங்கள் அனைவரும் அவரோடு துணையாக இருந்தீர்கள். எனவே தந்தையைப் பின்பற்றுங்கள். நீங்கள் அனைவரும், தன்னை பிரம்மாபாபா குழந்தைகள், துணையாக இருக்கின்ற குழந்தைகள் என்று நினைக்கின்றீர் களா? உடனிருந்தோம். பாபா உடனே செல்வோம். மேலும் பிரம்மாபாபாவுடனே ராஜ்யத்தில் திரும்ப வருவோம். எனவே இது தான் சமயம் எப்படி பிரம்மாபாபா தைரியம் வைத்தாரோ அதற்கேற்ப ரிசல்ட்டும் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். அவ்வாறே நீங்கள் அனைவரும் குழுவாக இணைந்து தைரியம் வைத்தால் என்னதான் செய்ய முடியாது. கல்ப கல்பமாக நடந்ததுதான். இப்பொழுதும் நடக்கத்தான் போகிறது. ஏற்பட வேண்டுமல்லவா? கை உயர்த்துங்கள். இது ஏற்பட வேண்டும், ஏற்பட வேண்டும்தானே? கை என்னவோ நன்றாக உயர்த்துகின்றீர்கள். பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகின்றார். எல்லோர் மனதிலும் இந்த ஆர்வம் உள்ளதைப் பார்த்து பாபா மகிழ்ச்சி அடைகிறார். இருக்கத்தான் வேண்டும். இதற்காக நாளை முதல் சம்ஸ்கார சுபாவத்தில் மாற்றம் செய்வீர்கள். அதுபோலவே அதற்கான சாதனமும் உள்ளது. யாரெல்லாம் பிராமணர்களாக

இருக்கின்றீர்களோ ஒவ்வொரு பிராமணரும் தன்னுடைய அட்டவணையில் (சார்ட்) நல்லாசை மற்றும் நல் எண்ணத்தில் (சுப பாவனை சுபகாமனை) விசேஷமாக கவனம் வைக்க வேண்டும். உலக மக்களுக்காக ஒரு வேலை கொடுத்தீர்கள் எவ்வளவு நல்லாசை, நல்லெண்ணம் வைக்கிறீர்கள் என்பதை கணக்கிட வைத்தீர்கள். அவர்கள் வைக்க முடியும் என்றால் நீங்களும் வைக்க முடியும் தானே? எப்பொழுதாயினும் யாருடைய சுபாவ சம்ஸ்காரம் எதிர்கொண்டு வந்தால் சுப பாவனை, சுபகாமனை அந்த ஆத்மாவிற்காக வைக்க முடியாதா? எனவே நீங்களும் அதிகாலை அமிர்தவேளை முதல் இந்த எண்ணம் வையுங்கள். நான் ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் சுப பாவனை மற்றும் சுபகாமனை (சுபமான ஆசை) வைத்தே ஆக வேண்டும். என்ன என்ன வைத்தேனோ அதை மாற்றியே தீருவேன். அதை முழுமையாக செய்து காட்ட முடியும். பல விஷயங்கள் (தடைகள், எதிர்மறைகள்) வரத்தான் செய்யும், விஷயங்களின் வேலை வருவது, அது மாயை அல்லவா? ஆனால் உங்கள் வேலை வெற்றியடைவது. எனவே நாளை முதல் தங்களுக்குள் நிமித்தமானவர்கள் ஒன்று சேர்ந்து குழு அமைத்து இதைப் பற்றி ஆன்மீக உரையாடல் செய்து என்ன சங்கல்பம் (எண்ணம்) வைத்தீர்களோ அதை எப்படி நடைமுறையில் கொண்டு வருவது என்பதைப் பற்றி விளக்கம் காணுங்கள். முடிந்ததற்கு முற்றுப்புள்ளி வைத்து விட வேண்டும். கை உயர்த்தினீர்கள் தானே! முன்னால் இருப்பவர்கள் கை உயர்த்தினீர்கள். எனவே நீங்கள் இதற்கு முன்னோடியாக இருக்க வேண்டும். பிரம்மாபாபாவிற்கு முன்பாக எத்தனை விதமான சம்ஸ்காரம் உள்ளவர்கள் எதிர் கொண்டு வந்தார்கள். ஆதியில் பிரம்மாபாபா எத்தனை விதமான சம்ஸ்காரங்களின் விளையாட்டைப் பார்த்தார் ஆனால் சிவபாபாவின் சகயோகத்தால் தானும் முன்னேறி பிறரையும் முன்னேறச் சென்றார். அதன் விளைவாகத்தான் இன்று இவ்வளவு குழந்தைகளின் கூட்டம். அதிகரித்துள்ளது. அசைத்து விடும் அளவிற்கு விசயங்கள் வந்தாலும் உறுதியாக ஆடாமல் அசையாமல் இருந்தார். அதன் விளைவாக எத்தனை சென்டர்கள் திறக்கப்பட்டு உள்ளது. எவ்வளவு நிகழ்ச்சிகள் நடந்துக் கொண்டிருக்கின்றன.

இப்பொழுது பாபா என்ன எதிர்ப்பார்க்கின்றார். அதை சொல்லட்டுமா? நீங்கள் அனைவரும் ஒரு விஷயம் மட்டும் செய்தால் போதும். அந்த ஒரு விஷயம் சாதாரண முயற்சியை தீவிரமான முயற்சியாக மாற்ற வேண்டும். பாப்தாதா பார்க்கின்றார். ஆங்காங்கு கவனக்குறைவு அதிகம் உள்ளது. செய்யத்தானே போகிறோம். வெற்றியே நமது பிறப்புரிமையாகும். இப்படி ஞானத்தின் அடிப்படையில் நிச்சய புத்தியோடு இருக்கின்றீர்கள் ஆனால் கூடவே கவனக்குறைவுடன் இந்த வார்த்தையும் வருகிறது நமக்கு வெற்றி என்பது இருக்கவே இருக்கிறது. அது கிடைக்கத்தானே போகிறது, எந்த வேலையும் தடை படவில்லையே, நடந்தே தீரும். ஒன்று முயற்சியின்போதும் இதே வார்த்தைதான்; மற்றொன்று சோம்பலின்போதும் இதே வார்த்தைதான். எந்த வேலையும் நிற்கவா போகிறது, நடக்கத்தானே போகிறது என்ற கவனக்குறைவு, (நாடகத்தில் நடந்தே தீரும், உலகம் மாறும்) இது கவனக்குறைவு. இதுபோன்ற சம்ஸ்காரத்தையும் சோதனை செய்யுங்கள். கவனக்குறைவின் அடையாளமாக அவர்களுடைய வாழ்க்கையில் சிறிய சிறிய விசயங்களால் களைட்டத் தென்படுகிறது. முகத்தில் அந்த மகிழ்ச்சியின் பொலிவு தென்படுவதில்லை. சேவையால் புண்ணியத்தை செய்கிறீர்கள் என்றால் முகத்தில் குஷி தெரிய வேண்டும் இல்லையா? ஏதேனும் ஒரு களைப்பின் காரணத்தால் ஏதாவது ஒரு விசயத்தில் சோர்வு ஏற்பட்டு விடுகிறது. செய்துதான் ஆக வேண்டும் என்றபிறகு அதை மகிழ்ச்சியோடு செய்யலாமே? உங்களுடைய முகம் சேவை செய்ய வேண்டும். நடத்தையும் சேவை செய்ய வேண்டும். இன்று பெரும்பான்மை யான குழந்தைகள் சம்ஸ்காரத்தை முடித்து விடுவோம் என்று கை உயர்த்தினீர்கள். அதைப் பார்த்து பாப்தாதா பல பல மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்.

இந்த குழுவில் முதன் முறையாக வந்திருப்பவர்கள் எழுந்து நில்லுங்கள். எத்தனை பேர் பார்த்தீர்களா? நிறைய பேர் வந்திருக்கின்றீர்கள் கை அசையுங்கள். யார் முதன் முறையாக வந்துள்ளீர்களோ அவர்களுக்கு தன் தந்தையை சந்திப்பதற்கான வாழ்த்துக்கள் முக்கியமாக இப்பொழுது சமயத்திற்கேற்ற வகையில் உங்களுடைய முயற்சியை தீவிரமாக்க வேண்டும். பாப்தாதா சொல்வது எல்லாம் இதுதான். யார் தீவிர முயற்சி செய்வாரோ அவர்

சோர்ந்து தொய்வடைந்து போக மாட்டார். அவர் கடைசியில் வந்தாலும் வேகமாகச் சென்று முதலில் வந்து விடுவார். இப்படி ஒரு அற்புதத்தை செய்து காட்டுங்கள். வாய்ப்பு உள்ளது. நாம் வந்ததே கடைசி தானே என்று நினைக்காதீர்கள். கடைசியாக வந்தாலும் வேகமாகச் சென்று முதல் நம்பரில் வந்து காட்ட முடியும் ஆனால் ஒவ்வொரு சமயமும் தீவிர வேகத்தில் முயற்சி செய்தே ஆக வேண்டும். பார்க்கலாம், செய்யலாம், யோசிக்கலாம் இந்த லாம் லாம் என்று செய்யக் கூடாது. நல்லது. உங்களுடைய வீடு வள்ளலின் வீடு. நன்றாக இருக்கிறது தானே! எனவே உங்களுடைய சகோதர சகோதரிகள் அனைவரும் உங்களை வரவேற்பு செய்கிறார்கள் நல்லது.

இப்பொழுது நாலாபுறம் உள்ள பிராமண குழந்தைகளுக்கு பாப்தாதா அன்பு நிறைந்த அன்பு நினைவுகளை சுவீகாரம் செய்விக்கின்றார். பாப்தாதா தெரிந்துள்ளார். தூரத்தில் அமர்ந்திருந்தாலும் சில குழந்தைகள் பார்த்துக் கொண்டும் இருக்கின்றீர்கள்; சந்தித்துக் கொண்டும் இருக்கின்றீர்கள். அந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் பாப்தாதா இதையே சொல்கிறார். இப்பொழுது பெரும்பான்மையானோர் கை உயர்த்தினீர்கள் சம்ஸ்காரத்தை முடித்து விடுவோம் என்று இப்பொழுது அனைவரும் இணைந்து ஒரே சங்கல்பம் என்ற கை உயர்த்துங்கள். நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து முடிவு அந்த பழைய சம்ஸ்காரத்தை அழித்து விட்டு முடிவு நேரத்தை மிக அருகே கொண்டு வருவதற்கான சங்கல்பம் வைக்கின்றோம். மேலும் நாலாபுறமும் சமயம் சம்பூர்ணம் அடையும்பொழுது பிரம்மாபாபா மற்றும் சிவபாபா இருவரும் பிரத்யக்ஷம் (வெளிப்பாடு) ஆவார்கள். எங்களது பாபா வந்து விட்டார் அனைவர் வாயிலிருந்தும் பாபா என்ற சொல் வெளிப்படும். இப்பொழுது இந்த ஆண்டில் பாபாவைப் பிரத்யக்ஷம் செய்தே ஆக வேண்டும் என்ற திட சங்கல்பம் வையுங்கள். பாதி வேலை செய்து விட்டாயிற்று குழந்தைகளை பாபா உலகத்திற்கு முன்பாக பிரத்யட்ஷம் செய்து விட்டார். இப்பொழுது குழந்தைகளின் காரியம் பகவான் வந்து விட்டார். இந்த சொல் உலகத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தைகளின் வாயிலிருந்தும் வர வேண்டும். எல்லோரையும் சென்று அடைய வேண்டும். அனைவரையும் பாப்தாதா பார்த்து ஒவ்வொருவருக்கும் உளமார்ந்த அன்பு சினேகம், ஊக்கம், உற்சாகம் நிறைந்த அன்பு நினைவுகளை வணங்குகின்றார். நல்லது.

சேவைக்கான முறை கர்நாடகா மண்டலம்: சேவைக்கான வாய்ப்பைப் பெறுவது என்றாலே தந்தைக்கு அருகாமையில் வருவதற்கான வாய்ப்பைப் பெறுவதாகும். பாருங்கள். சேவையின் காரணமாக எவ்வளவு பேருக்கு வருவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. அனைவருடைய வாழ்த்துக்களும் ஆசீர்வாதங்களும் உங்களால் ஆசிரியர்களுக்குக் கிடைக்கிறது. ஏனென்றால் சேவைக்கான தைரியம் வைத்தார்கள். எனவே இத்தனைப் பேருக்கு வாய்ப்புக்கிடைத்தது. பாப்தாதா பார்க்கின்றார் புது புது குழந்தைகளும் முதன் முறையாக அதிகம் வந்துள்ளீர்கள். யார் முதன் முறையாக வந்திருக்கின்றீர்களோ கர்நாடகாவிலிருந்து அவர்கள் நன்கு கை உயர்த்துங்கள். முதன் முறையாக அதிகம் பேர் வந்துள்ளீர்கள். நல்லது. கர்நாடகாவின் வளர்ச்சி நன்றாக உள்ளது. இப்பொழுது எப்படி வளர்ச்சி அடைந்துள்ளதோ அதே போல தீவிரமான முயற்சி இந்த விதியின் அடிப்படையிலும் வளர்ச்சியை நாலாபுறமும் பரவச் செய்யுங்கள். நம்பர் முதலில் வரவேண்டும் சம்ஸ்காரத்தை முடிவு செய்வதில் நம்பர் எடுத்துக் காட்டுங்கள். எடுக்க முடியுமா? முதல் நம்பர் எடுக்க முடியும் என நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. இப்படியே அனைவரும் குழுவாக ஒன்று சேர்ந்து நிகழ்ச்சியை அமையுங்கள். எல்லோரும் ஒன்றுதான். வெவ்வேறு இடங்களிலும் சேவை செய்தாலும் எல்லோரும் ஒன்றுதான். இந்த ஒரு அதிசயத்தை செய்து காட்டுங்கள். தைரியம் உள்ளதா? தைரியம் உள்ளதா? பாப்தாதாவிடம் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றது. மதுபன்னில் ஒவ்வொரு மாதம் தன்னுடைய மாற்றம் பற்றிய செய்திகளை எழுதி அனுப்ப வேண்டும். எழுதுவீர்களா? ஒவ்வொரு மாதத்திற்கும், முடிந்தது முடிந்தது. இப்பொழுது முதல் நம்பரில் வந்துக் காட்டுங்கள். நல்லது. பாப்தாதா பார்க்கின்றார் சேவை நன்றாக செய்துள்ளீர்கள். இப்பொழுது நல்லதொரு குழுவைப் பார்க்க விரும்புகின்றார். உதாரணமாக இருந்துக் காட்டுங்கள். தயாரா? தயாரா? கை உயர்த்துங்கள். நீங்கள் பாருங்கள். ஒரு மாதத்தில் ரிசல்ட் வரும். நல்லது. மிக மிக விசேஷமான அன்பு நினைவுகள்.

இதய சிகிச்சையாளர்கள் குரூப்: நல்லது. பெயரே உங்களுக்கு இதயத்தில் இருப்பவர்கள் அப்படியென்றால் சதா நீங்கள் தந்தையின்

இதயத்தில் இடம் பெற்றவர்கள். நன்றாக செய்துள்ளீர்கள். நீங்கள் இதய சிகிச்சையில் நிமித்தமாக இருந்து பிறருக்கும் உதாரணமாக மாறியுள்ளீர்கள் ஆனால் எந்தளவிற்கு உயர்ந்த பாக்கியத்தை உருவாக்குவதிலும் நிமித்தமாக உள்ளீர்கள். பாப்தாதாவிற்கும் பிடித்திருக்கின்றது இதய சிகிச்சை மூலமாக அனைவருக்கும் நன்றாக சேவை செய்து வருகின்றீர்கள். நிமித்தமாக இருப்பவர்கள், தன்னுடைய செய்திகளைக் கூறி பிறரையும் பாபாவின் குழந்தையாக மாற்றுவதில் நிமித்தமாக இருந்து அதற்கான வாய்ப்பை அடைந்ததால் பாப்தாதாவும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். அனைவருக்கும் இதே வாழ்த்துக்கள். முன்னேறிக் கொண்டே இருங்கள். வியாதியஸ்தர்களுக்கு மட்டுமல்ல, பரமாத்மாவின் இதயத்தில் குடிக் கொள்வதற்கான வாய்ப்பும் கிடைத்துள்ளது. எனவே முன்னேறிக் கொண்டே இருங்கள் பிறரையும் முன்னேறச் செய்யுங்கள். பிறரையும் முன்னேறச் செய்யுங்கள். மற்றபடி பாப்தாதாவிற்கு இந்த சேவை பிடித்திருக்கின்றது.

இரட்டை அயல்நாட்டவர்: பாப்தாதாவிற்கு பிடித்திருக்கிறது; ஒவ்வொரு முறையும் அயல்நாட்டவர் வந்துக் கொண்டே இருக்கின்றனர். பாப்தாதா பார்க்கின்றார். இரட்டை அயல்நாட்டவருக்கு பெயரைப் போலவே இரட்டை அன்பும் கிடைத்துள்ளது. பாபா என்று சொன்னதுமே குஷியில் மிதக்கின்றார்கள். சேவையும் செய்கின்றார்கள். இரட்டை சேவை செய்கின்றார்கள். அந்த அரசாங்கத்திலும் செய்கின்றார்கள். இந்த ஆல்மைட்டி அரசாங்கத்திலும் செய்கின்றார்கள். அதுபோலவே பாபாவிடமும் அதிகமான அன்பு வைத்துள்ளார்கள். நல்ல நல்ல மாற்றங்களும் வந்து கொண்டே இருக்கின்றது. இப்பொழுது அனைவருமே பரமாத்மாவின் பண்புகளை உடையவராக மாறி விட்டார்கள். அயல்நாட்டவரின் கலாச்சாரம் அல்ல பரமாத்மாவின் கலாச்சாரம் கலபமாகி விட்டது. முன்பெல்லாம் யோசிப்பார்கள் எப்படி நமது கலாச்சாரத்தை மாற்றிக் கொள்வது என்று ஆனால் இப்பொழுது பாபா பார்க்கின்றார், குழந்தைகள் இப்படித்தான் நினைக்கின்றார்கள் நாம் முதலில் இருந்த கலாச்சாரம் இதுதான். இப்பொழுது அதே கலாச்சாரத்திற்கு வந்து விட்டோம். சுலபம் ஆகி விட்டது, கடினம் இல்லை ஏன்? ஏனென்றால் ஒவ்வொரு கல்பமும் நீங்கள் பாபாவின் குழந்தையாகி உள்ளீர்கள். அந்த கல்பம் முன்பு வந்த

குழந்தைகளே உரிமையைப் பெற்றுக் கொண்டிருக்கின்றீர்கள். மிக நல்லது. முயற்சியிலும் முன்னேறிக் கொண்டே இருக்கின்றீர்கள். பாபாவுக்கு மிகுந்த மகிழ்ச்சி நீங்களும் இரட்டை மகிழ்ச்சியில் இருக்கின்றீர்கள் தானே? இரட்டை மகிழ்ச்சி உள்ளதா? கை உயர்த்துங்கள். நன்றாக இருக்கின்றீர்கள். எல்லையில்லாத தந்தை எல்லையில்லாத குழுவாகி விட்டது (பாரதவாசி மற்றும் அயல்நாட்டவர்). பாபாவிற்கு மகிழ்ச்சி உள்ளது. ஆங்காங்கே பல்வேறு இடங்களிலிருந்து எல்லாம் குழந்தைகள் தன்னுடைய எல்லையில்லாத வீட்டில் வந்து சேர்ந்து விடுகிறார்கள். நல்ல ரிசல்ட் கிடைத்துள்ளது. இனியும் நல்ல ரிசல்ட் கிடைத்துக் கொண்டே இருக்கும். அது நிச்சயம். எனவே வந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள். நல்லது.

சகோதரி மோகினியுடன்: கணக்கை முடித்துக் கொண்டிருக்கின்றீர்கள். நன்றாக முடிந்து விடும்.

தாதி ஈஷுவுடன்: இவர்கள் நன்றாக இருக்கின்றார்கள்; ஆனந்தத்தில் பறந்து கொண்டிருக்கின்றார்கள்.

தாதி ஜானகிஜியுடன்: உங்களுக்கு இரக்கம் அதிகம் உள்ளது. (சீக்கிரம் சீக்கிரமாக முடிய வேண்டுமென்று) முடிந்து விடும். உங்களுடைய எண்ணம் நாலாபுறமும் சென்று கொண்டே இருக்கின்றது. இப்பொழுது மதுபனில் அயல்நாட்டு நினைவு வரும். இப்பொழுது சிறிது சேவை அதிகமாகவே செய்துள்ளீர்கள். நடந்து விடும். தாதியும் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அனைவருடனும் அனுபவம் செய்கின்றார்கள். நல்லது.

**சகோதரி ஜெயந்தி உடன்:** (சகோதரி ஜெயந்தி அவர்கள் அயல்நாட்டின் சமாச்சாரம் கூறினார்கள்) நல்லது. இதுவும் மீதமுள்ளக் கணக்கு உங்களுடைய சொல்லைக் கேட்டு அவருக்கு குஷி கிடைக்கின்றது. அந்த குஷி ஒருவரிடமிருந்து புறப்பட்டு அநேக ஆத்மாக்கள் வரையிலும் சென்றடைகிறது. நல்ல பாகம் கிடைத்துள்ளது. சேவையில் வலம் வந்துக் கொண்டே இருங்கள் செய்து கொண்டே இருங்கள். இந்த முறை அயல்நாட்டவர்கள் இந்தியாவிலும் நன்றாக

சேவை செய்துள்ளார்கள். வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். நன்றாக செய்துள்ளார்கள்.

சகோதரர் ரமேஷ் உடன்: உடல் நலமாக இருக்கிறதா? அனைவருக்கும் நினைவிற்கான கைமாறு கொடுக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் சொல்லுங்கள் உங்கள் அனைவருக்கும் லட்சம் மடங்கு அன்பு நினைவுகள்!

முக்கிய சகோதரர்கள் மூவருடன்: நல்லது. நீங்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து யக்ஞத்திற்காக இனி எதிர்காலத்தில் என்னென்ன செய்ய வேண்டும். என்னென்ன அபிவிருத்தி செய்ய வேண்டும் இதற்கான திட்டம் தீட்டுங்கள். ஒரு குறிப்பிட்ட துறையில் மட்டுமல்ல. முழு யக்ஞத்திலும் நாலா புறமும் என்னென்ன அபிவிருத்தி செய்ய வேண்டும். தடைகள் இல்லாமல் எல்லோரும் விகல்பம் இல்லாமல் எப்படி இருப்பது. இதைப்பற்றிய திட்டம் சிந்தனை செய்யங்கள். இனி என்ன செய்ய வேண்டும். இப்பொழுது எந்த பாதையில் சென்றுக் கொண்டிருக்கின்றீர்களோ அது சரிதான் ஆனால் இனி அடுத்து என்ன செய்ய வேண்டும். இதைப் பற்றி மீட்டிங் செய்ய வேண்டும். நல்லது.

பரதாதியுடன்: உங்களைப் பார்த்து அனைவரும் மகிழ்ச்சி அடைகிறார்கள் ஏன்? (பாபாவின் மகள் நான்) நல்லது உடல் நலம் எப்படி இருந்தாலும் மகிழ்ச்சியுடன் இருக்கின்றீர்கள்; இந்த மகிழ்ச்சியைப் பார்த்து அனைவரும் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 30.11.2010 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஒவ்வொரு நொடியும் மனதிற்குப் பயிற்சி செய்து அதனை சக்திசாலியாக மாற்றுங்கள். பாபாவே உலகம் (சன்சார்) என்று இருக்கும்பொழுது சுபாவத்தையும் (சம்ஸ்கார்) பாபாவைப் போலவே மாற்றிக் கொள்ளுங்கள்!

இன்று பாப்தாதா, அனைத்து குழந்தைகளையும் உண்மையான தேசமாகிய ஒரே தேசத்தைச் சார்ந்த குழந்தையாக பார்க்கின்றார். ஒரே தேசத்தைச் சார்ந்தவர்கள் எவ்வளவு அன்பாக இருப்பார்கள். தெரியும் அல்லவா? பாப்தாதாவும் அதே தேசத்திலிருந்துதான் அனைத்துக் குழந்தைகளையும் சந்திக்க வந்துள்ளார். குழந்தைகளுக்கு தந்தையை சந்திக்கின்றோம் என்ற குஷி உள்ளது. தந்தைக்கும் குழந்தைகளை சந்திக்கின்றோம் என்ற குஷி உள்ளது. இன்று பாப்தாதா அனைத்துக் குழந்தைகளின் சொரூபங்களில் விசேஷமாக ஐந்து சொரூபங்களைப் பார்க்கின்றார். எனவே, ஐந்து முகம் கொண்ட பிரம்மாவும் புகழுக்குரியவராக இருக்கின்றார். அந்த ஐந்து சொரூபங்கள் தன்னைப் பற்றியது. தெரியும் அல்லவ? முதலாவது அனைவருடைய ஜோதி பிந்து ரூபம், அது உங்கள் அனைவருக்கும் முன்பாக வந்து விட்டதா? எவ்வளவு பளபளப்பான அன்பான ரூபம் அது. இரண்டாவது தேவதா ரூபம். அந்த ரூபமும் எவ்வளவு அழகானது மற்றும் வித்தியாசமானது. மூன்றாவது ரூபம் மத்தியத்தில் பூஜைக்குரிய ரூபம். நான்காவது ரூபம் பிராமண ரூபம் சங்கம்வாசி, அதுவும் மிகவும் மகான் தன்மைக் கொண்டது மற்றும் ஐந்தாவது ரூபம் ஃபரிஸ்தா ரூபம். இந்த ஐந்து ரூபங்களுமே எவ்வளவு பிரியமானது. பாப்தாதா இன்று குழந்தைகளுக்கு மனதிற்கான பயிற்சியைக் கற்பிக்கின்றார்.

ஏனென்றால் மனம் குழந்தைகளை அவ்வப்போது தன் பக்கம் கவர்ந்து இழுத்து விடுகின்றது. எனவே இன்று பாப்தாதா, மனதை ஒரே ரசனையில் (ஏக்ரஸ்) இருக்கச் செய்வதற்காக பயிற்சியைக் (எக்சைஸ்) கற்பிக்கின்றார். முழு நாளிலும் இந்த ஐந்து ரூபங்களின் பயிற்சி செய்யுங்கள். அனுபவம் செய்யுங்கள். நீங்கள் எந்த ரூபத்தை நினைப்பீர்களோ அதுவே மனதில் அனுபவம் செய்ய வேண்டும். ஜோதிர் பிந்து என்ற உடனேயே அந்த பளபளப்பான ரூபம் வந்து விட்டது அல்லவா? அது போலவே ஐந்து ரூபங்களையும் கொண்டு வாருங்கள். அந்த ரூபத்தை அனுபவம் செய்யுங்கள். ஒவ்வொரு மணி நேரத்திலும் ஐந்து நொடிகள் இந்தப் பயிற்சியில் ஈடுபடுத்துங்கள். ஐந்து நிமிடம் இல்லையா, ஐந்து விநாடியாவது ஈடுபடுத்துங்கள். ஒவ்வொரு ரூபத்தையும் தனக்கு முன்பாகக் கொண்டு வாருங்கள், அதனை அனுபவம் செய்யுங்கள். மனதை இந்த ஆன்மீகப் பயிற்சியில் இடைவிடாது செயல்படுத்திக் கொண்டே இருங்கள். அப்பொழுது மனம் இந்தப் பயிற்சியால் சதா சரியாக இருக்கும். எப்படி உடல் பயிற்சி மூலமாக உடலை ஆரோக்கியமாக வைக்கின்றீர்களோ அதுபோலவே இந்தப் பயிற்சியால் மனதை சக்திவாய்ந்ததாக வைக்க முடியும். ஒரு நிமிடமாவது ஒரு விநாடியாவது மனதில் அந்த ரூபத்தைக் கொண்டு வாருங்கள். இது சுலபம் என நினைக்கிறீர்களா, கடினம் என நினைக்கிறீர்களா? இது கடினமாக இருக்காது. ஏனென்றால் இந்தப் பயிற்சியை நீங்கள் அநேக முறை செய்துள்ளீர்கள். ஒவ்வொரு கல்பமும் செய்துள்ளீர்கள். தன்னுடைய ரூபத்தைத்தான் முன்னால் கொண்டு வர வேண்டும். இது கஷ்டமாக இருக்காது. ஒவ்வொரு ரூபத்தையும் முன்னால் கொண்டு வந்தவுடனேயே அந்த ரூபத்தின் விசேஷத்தன்மை அனுபவம் ஆக வேண்டும். சில சமயம் சில குழந்தைகள் சொல்கிறார்கள். நாங்கள் இந்த ரூடங்களை அனுபவம் செய்ய விரும்புகிறோம் ஆனால் மனம் வேறு பக்கம் சென்றுவிடுகிறது. எவ்வளவு நேரம் மனதை எங்கே வைக்க விரும்புகின்றோமோ அவ்வளவு நேரம் இருப்பதற்கு பதிலாக வீணான மற்றும் எதார்த்தமற்ற எண்ணங்களும் வந்து விடுகின்றன. சில சமயம் மனதில் சோம்பலும் வந்து விடுகிறது. எனவே பாப்தாதா ஒவ்வொரு மணி நேரமும் ஐந்து நிமிடம் அல்லது ஐந்து விநாடி இந்த பயிற்சியில் அனுபவம் செய்ய வைக்க விரும்புகின்றார். ஐந்து நிமிடம் செய்து விட்டு மனதை இந்தப் பக்கம் செல்ல விடுங்கள். இப்படி செய்வது நல்லது தானே. பிறகு

தன்னுடைய வேலையில் ஈடுபடுங்கள். ஏனென்றால் காரியங்கள் செய்யத்தான் வேண்டும். காரியங்கள் இல்லாமல் இருக்க முடியாது. யக்ஞ சேவை, உலக சேவை, எல்லோருமே செய்து கொண்டு இருக்கின்றீர்கள். மேலும் செய்யத்தான் வேண்டும். இந்த ஐந்து நிமிடம் பயிற்சி செய்து விட்டு பிறகு தன்னுடைய காரியத்தில் ஈடுபடுங்கள். அப்படி யாராவது ஐந்து நிமிடம், ஐந்து விநாடி செயல்படுத்த விரும்புகிறோம், ஆனால் அந்தளவிற்கு நேரம் கிடைப்பதில்லை என்று சொல்கிறீர்களா? அப்படியிருந்தால் கை உயர்த்துங்கள். யாருக்கு ஐந்து நிமிடம் கூட இல்லையோ அவர்கள் கை உயர்த்துங்கள். யாருமே இல்லை. யாராவது இருக்கின்றீர்களா? அப்படியென்றால் எல்லோருமே நேரம் ஒதுக்க முடியும். எனவே அடிக்கடி இந்த பயிற்சி செய்து காரியத்தில் ஈடுபடும்போது அந்த போதை இருக்கும். ஏனென்றால் பாபாவின் மந்திரமும் இதுதான். மன்மனாபவ. இந்த மந்திரத்தினை மனதால் அனுபவம் செய்யும்பொழுது மாயாவை வெற்றி அடைவதற்கு மனம் ஒரு எந்திரமாக மாறிவிடும். ஏனென்றால் பாப்தாதா சொல்லிவிட்டார் எவ்வளவு நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறதோ போகப் போக அந்த நேரத்திற்கு ஏற்ப ஒரு விநாடியில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். எனவே, இந்தப் பயிற்சி செய்வதால் மன்மனாபவ நிலையில் இருப்பதற்கு உதவி கிடைக்கும். ஏனென்றால் பாப்தாதா பார்க்கின்றார். சொற்பொழிவு செய்பவர்களும் பிறருக்கு செய்தி தரும்பொழுது என்ன சொல்கிறீர்கள்? நாம் உலகை மாற்றுபவர்கள், அப்படியென்றால் உலகை மாற்றுவதற்கு முன்னதாக தன்னுடைய மனதை அந்த அளவிற்கு சக்திவாய்ந்ததாக மாற்றிக் கொள்ளுங்கள். அதாவது அந்த மனதில் எந்த நேரத்தில் எந்த எண்ணத்தை உருவாக்க நினைக்கிறீர்களோ அதே எண்ணத்தை உருவாக்க வேண்டும். இந்த உடலின் கர்ம இந்திரியங்களுக்கு கட்டளை இடுவதைப் போல ஒரு விநாடியில் கட்டளையிடுங்கள். மேலும் கீழும் தன் எண்ணப்படி (உடற்பகுதிகளை) அசைக்கிறீர்கள் அல்லவா? அதுபோலவே மனமும் வீணானது மற்றும் எதார்த்தமற்றது போன்ற விஷயங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும், மனதிற்கு நீங்கள் எஜமானன். என் மனம் என்றுதானே சொல்கிறீர்கள்! அப்படியென்றால் என் மனம் அந்தளவிற்கு என்னுடைய கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும், அதற்காக இந்த மனப்பயிற்சி சொல்லப்பட்டுள்ளது.

பாப்தாதா பார்க்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் நான் மனதையும் வென்று உலகையும் வென்றவராக (மன்ஜீத், ஜெகத் ஜீத்) வேண்டும் என்று தான் விரும்புகிறீர்கள். எனவே வர இருக்கின்ற நாட்களுக்கு முன்பாகவே இந்த பயிற்சியை செய்து, தான் விரும்பிய வண்ணம் எங்கு வேண்டுமோ அங்கு மனதை சுலபமாக நிலை நிறுத்த வேண்டும். எனவே இன்று பாப்தாதாவும் இதைத்தான் விரும்புகின்றார். ஒவ்வொரு குழந்தையும் அந்தளவிற்கு சக்திவாய்ந்தவராக மாற வேண்டும். அதாவது என்ன எண்ணத்தில் கட்டளை இடுவீர்களோ அதிலேயே மனம், புத்தி சம்ஸ்காரம் ஈடுபட வேண்டும். யாருக்கு இந்த பயிற்சி இருக்குமோ அவர் கண்டிப்பாக உலகை வென்றவராவர். பாப்தாதாவிடமும் பரிவாரத்திடமும் அனைவருக்கும் அன்பு உள்ளது. எந்தளவிற்கு குழந்தைகளுக்கு அன்பு உள்ளதோ அதனை விட அதிகமாகவே தந்தைக்கு குழந்தைகளின் மீது அன்பு உள்ளது. குழந்தைகள் மிக புத்திசாலித்தனமாக நடந்துக் கொள்கிறார்கள். மேரா பாபா, மேராபாபா என்று சொல்லி என்னுடையவரென்றே ஆக்கிக் கொண்டார்கள். ஒவ்வொரு குழந்தையும் மிக நிச்சய புத்தியுடன் இதையே சொல்கிறார்கள் மேரா பாபார் மேலும் பாபாவும் சொல்கின்றார் என்னுடைய குழந்தாய் (மேரா பச்சா) இந்த எனது என்ற வார்த்தை விந்தைகள் செய்து விட்டது. ஒவ்வொரு உள்ளத்திலும் எந்தளவிற்கு ஊக்கம் வருகிறது மேரா பாபா, பியாரா பாபா என்று சொல்லும்பொழுது மேலும் பாபாவும் அடிக்கடி சொல்கிறார் மேரே பச்சே மாயாவுடைய ஏதாவது போர் நிகழும். ஏனென்றால் அரை கல்பமாக மாயாவைத் தனதாக்கி வைத்திருந்தீர்கள் அல்லவா? எனவே மாயாவிற்கும் கூட உங்கள் மீது அன்பு இருக்கும் அல்லவா? எனவேதான் அது மீண்டும் மீண்டும் வர முயற்சிக்கிறது ஆனால் யார் உளமார மேரா பாபா என்று சொல்கிறீர்களோ அவர்களுக்கு பாபாவின் சகயோகம் கிடைக்கிறது.. ஒரு முறை மனதார மேரா பாபா என்று சொல்லிவிட்டால் 1000-முறை சக்திவாய்ந்த சகயோகம் தருவதற்கு பாபா கட்டுப்பட்டவராகிறார். அனுபவம் இருக்கிறது அல்லவா? தக்க சமயத்தில் மட்டும் நீங்கள் இந்த அனுபவத்தை நடைமுறையில் கொண்டுவந்தால் போதும்.

பாப்தாதா, குழந்தைகளின் ஒரு விசயத்தைப் பார்த்து தன் மனதிற்குள்ளே புன்முறுவல் செய்கிறார். தெரியுமா அது என்ன விசயம்

என்றூ? அனைவருமே சொல்கிறீர்கள் 'பாபா மட்டுமே தான் என் உலகம்'. சொல்கிறீர்கள் அல்லவா? பாபா தான் என்னுடைய உலகம் என்று சொல்கிறீர்களா? பாபாதான் உலகம் என்று சொல்பவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. பாபா: தான் உலகம் வேறொரு உலகம் இல்லை அல்லவா? உலகம் வேறொன்றுமில்லை, ஆனால் வேறொன்று என்ன இருக்கின்றது? சன்ஸ்கார், எப்பொழுது பாபாதான் என் உலகம் வேறொரு உலகம் இல்லை. உலகம் வேறு இல்லை. அப்படியானால் சம்ஸ்காரம் வேறொன்று எப்படி உருவாகி விடுகிறது? இப்பொழுதெல்லாம் நிகழ்காலத்தில் பாப்தாதா சமயத்திற்கேற்ப சம்ஸ்காரம் என்ற சொல்லை அழித்து விட விரும்புகின்றார். அழிக்க முடியுமா? அழிக்க முடியுமா? எனது சம்ஸ்காரம் தடையாக இருக்க முடியாது என்று உணருபவர்கள் இதனையே திடமான சங்கல்டமாக வைக்க முடியுமா? திடமான முயற்சி மூலமாக இன்று கூட திடமான முயற்சி செய்ய முடியும். அதனை அழித்தேத் தீருவேன். செய்யலாம் யோசிக்கலாம், பார்க்கலாம் இப்படி இருக்கக் கூடாது. செய்தே ஆக வேண்டும். சம்ஸ்காரத்தின் வேலை வருவது. குழந்தைகளின் வேலை அதனை அழித்து விடுவது. அதனை அழித்தே ஆக வேண்டும், தைரியம் உள்ளதா? தைரியம் உள்ளதா? முன்பு கூட கை உயர்த்தினீர்கள்! ஆனால் சோதனை செய்து பாருங்கள். நீங்கள் நினைத்தது. நடக்கிறதா? பாபா சொல்கிறார் என்றால் பாபாவின் காரியம் லட்சியம் தருவது குழந்தைகளின் காரியம் பாபா சொன்னதை செய்தே காண்பிப்பது. இப்படி உணர்கிறீர்களா? இதற்காகவும் ஒரு தேதியை நிச்சயம் செய்யுங்கள். எப்படி பக்தர்கள் கூட சிவராத்திரி கொண்டாடுவதற்காக தேதி குறிக்கிறார்கள். எனவே நீங்களும் இதற்காக ஒரு தேதியைக் குறியுங்கள். சரி எல்லோரும் சேர்ந்து ஒரே தேதியைக் குறிக்கவில்லை என்றாலும் சரி. முதலில் ஒவ்வொருவரும் அவரவருக்கென தேதி குறிக்க முடியும் அல்லவா? குறிக்க முடியுமா? யார் இதைச் செய்வீர்களோ கை உயர்த்துங்கள். செய்வீர்களா? செய்ய முடியும் என்றால், செய்வீர்களா? இரட்டை அயல் நாட்டவர் தேதி குறித்தீர்களா? நல்லது. எதிரில் உள்ளவர்கள் குறித்தீர்களா? எந்த தேதி குறித்து உள்ளீர்களோ அதனை பாப்தாதாவிற்கு எழுதி அனுப்புங்கள். பாப்தாதாவும் குழந்தைகளின் பேப்பரில் வெற்றி அடைவதற்கான பலம் தருவார் அல்லவா? பிறகு ஆஹா எனது குழந்தைகளே ஆஹா! எனப்பாடலும் பாடுவார். விழாவும் கொண்டாடுவோம். யாரெல்லாம்

எண்ணம் வைத்தீர்களோ அதையே நடைமுறையில் செய்து காட்டினீர்களோ அதற்கு விழாவும் கொண்டாடுவோம். ஏனென்றால் வித்தியாசம் வந்துக் கொண்டே இருக்கின்றது அல்லவா? யாரெல்லாம் தேதி குறித்தீர்களோ அதன்படி முன்னேற்றம் அடைவதற்காக அருகே வந்து கொண்டே இருக்கிறீர்கள் அல்லவா? வித்தியாசம் ஆரம்பம் ஆகி விடும். எனவே யர் அந்த குறித்த நேதியில் சம்பன்னம் அடைவார்களோ அவர்களுக்கு பாப்தாதா விழா கொண்டாடுவார். அந்த வேறுபாட்டைக் கொண்டு. வந்தால் அதனை பார்ப்பவர்களை வைத்து சரி செய்யப்படும் (வெரிஃபை) ஏனென்றால் தொடர்பில் வருவார்கள் அல்லவா? சம்ஸ்காரம் என்பது எவருடனாவது வெளிப்படும் அல்லவா? ஏனென்றால் பாப்தாதா, பார்க்கின்றார் ஒவ்வொரு குழந்தைக்கும் நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற சுத்தமான போதை உள்ளது. மாஸ்டர் தானே அல்லவா? சர்வ சக்திவானாக இருக்கும்பொழுது அந்த சங்கல்பத்தைப் பூர்த்தி செய்வது இதுவும் ஒரு சக்திதான் அல்லவா? நல்லது.

யாரெல்லாம் இன்று முதன் முறையாக வந்துள்ளீர்களோ அவர்கள் எழுந்து நில்லுங்கள். டாருங்கள் எத்தனை பேர் வந்துள்ளார்கள். பாப்தாதா, வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். மதுபனில் வந்தமைக்கு வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள் பாப்தாதா நினைக்கின்றார். டூலேட் என்ற பலகை போடுவதற்கு முன்னதாகவே வந்து விட்டீர்கள். எனவே முழு பரிவாரம் மற்றும் பாப்தாதாவிற்கும் இருக்கவே இருக்கிறது இந்த சுப் பூசை மற்றும் பரிவாரத்தில் உள்ள எல்லோருக்கும் இதே சுப எண்ணம்தான் சதா இரட்டை முயற்சி செய்து கடைசியில் வந்தாலும் விரைவாகச் செல்ல முடியும். தைரியம் உள்ளதா? இன்று வந்திருப்பவர்களில் இந்த தைரியம் உள்ளதா? கடைசியில் வந்திருந்தாலும் வேகமாகச் சென்று முதலில் வந்து விடுங்கள். முதல் நம்பரில் முதல் என்பது ஒன்று மட்டுமல்ல. முதல் வகுப்பில் வாருங்கள். முடியுமா? நாங்கள் விரைவாகச் சென்று முதல் நம்பரில் வர முடியும் என்பவர்கள் கை உயர்த்துங்கள். தன் மீது நம்பிக்கை உள்ளதா? நல்லது. பின்னால் இருப்பவர்கள் கை உயர்த்துங்கள். முடியுமா? முடியும் என்றால் நல்லது மிகக் குறைந்தவர்களே இருக்கிறார்கள். இருப்பினும் முழு பரிவாரமும் பாப்தாதாவும் உங்களுக்கு சகயோகம் கொடுத்து முன்னேற்ற

விரும்புகிறார்கள். எனவே எந்த சென்டர் சார்பாக வந்திருந்தாலும் வந்திருப்பவர்கள் இந்த வாக்கை மீண்டும் மீண்டும் நினைவு செய்து பார்க்க வேண்டும். இயலாது என்பது கிடையாது. முடியும் ஆனால் இரட்டை கவனம் வைக்க வேண்டும். அப்படி கடைசியாக வந்து முதன்மையான இடத்தைப் பிடித்துக் காட்டி விட்டால் உங்கள் சென்டரிலேயே உங்களுடைய தீவிர முயற்சிக்கான நாளை கொண்டாடுவோம். விழா செய்யலாம். எல்லோர் மனதிலும் உற்சாகம் இருக்கிறது. வெகு விரைவாக பாப்சமான் ஆகியே காண்பிக்க வேண்டும். பாப்தாதாவும் அமிர்த வேளையில் குழந்தைகள் பாபாவுடன் பேசுகின்ற போது மகிழ்ச்சி அடைகின்றார் ஆஹா என் குழந்தை ஆஹா என்று பாபா பழைய குழந்தையாக இருந்தாலும் புதிய குழந்தையாக இருந்தாலும் ஒவ்வொரு குழந்தைக்கும் மிக மிக அதிகமான அளவில் உளமார்ந்த ஆசீர்வாதங்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார். ஒரு அடி உங்களுடையது 1000-அடி பாபாவினுடைய உதவி என்பது ஏனென்றால் இப்போது நேரத்தின் மாற்றம் வெகு வேகமான நிலையில் சென்று கொண்டிருக்கின்றது. நல்லது.

சேவைக்கான முறை: டெல்லி, ஆக்ரா ஜோன், பாப்தாதா கேள்விட்பட்டார் டெல்லி ஆரம்பத்திலிருந்தே சேவைக்காக புதுப்புது விசயங்கள் செய்து வந்துள்ளீர்கள், செய்கிறீர்கள் அல்லவ? டெல்லியில் செய்துள்ளீர்களா? அப்படியென்றால் இப்பொழுது வேறொரு புதுமையான சேவை செய்து காண்பியுங்கள். என்னவெல்லாம் சொற்பொழிவு செய்கிறீர்களோ நிகழ்ச்சிகள் நடத்துகிறீர்களோ அதெல்லாம் சரிதான். ஏனென்றால் அதன் மூலமாக விருத்தி அடைகிறது. மேலும் தொடர்பில் அநேகர் வருகிறார்கள். இப்பொழுது நடைபெறுவது யாவும் நன்றாகவே நடந்துக் கொண்டு இருக்கிறது. இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் நீண்ட காலமாகவே நடந்துக் கொண்டுதான் வருகின்றது, இப்பொழுது ஏதாவது ஒரு புதுமையை உருவாக்குங்கள். அதனால் சேவை செய்பவர்களுக்கும் புதிய ஊக்கம், புதிய உற்சாகம் வரட்டும் செய்வீர்களா? நல்லது. எல்லோரையும் ஊக்கத்தில் கொண்டு வந்து எல்லோரையும் அதில் ஈடுபடுத்துங்கள். இப்பொழுது நடைபெறுகின்ற பெரிய நிகழ்ச்சிகளில் சொற்பொழிவு செய்பவர் பிஸிடாக இருக்கின்றார் ஆனால் மற்றவர்கள் துணையாக மட்டுமே இருக்கிறார்கள். அதுவும் தேவைதான் ஆனால் இப்போது அப்படி

ஏதாவது ஒரு சேவையை, காரியத்தை உருவாக்குங்கள், அதில் எல்லா தரம் வாய்ந்தவர்களும் தானாகவே அதில் வந்து பிஸியாக ஈடுபட வேண்டும். ஏனென்றால் டெல்லிதான் இராஜதானி ஆக வேண்டும். எனவே டெல்லியைச் சார்ந்தவர்கள் அப்படிப்பட்ட ஒரு புதுமையைக் கண்டுப்பிடிக்க வேண்டும். சரியா? சரியா? எல்லோரும் செய்வீர்களா? கை உயர்த்துங்கள். நல்லது. யார் வேண்டுமானாலும் அதை உருவாக்கலாம். புதிய குழந்தைகளும் உருவாக்க முடியும். அப்படி வேறு யாருக்காவது ஏதேனும் ஒரு சங்கல்பம் இது குறித்து வந்தால் அவர்களும் இங்கே தலைமை அலுவலகத்தில் மதுபன் அலுவலகத்திற்கு எழுதி தெரிவிக்கலாம். அனைவருக்குமே வாய்ப்பு உள்ளது. நல்லது. டெல்லி டைச் சார்ந்தவர்கள் பற்சியிலும் முதல் நம்பர் பெற வேண்டும் பாப்தாதாவும் வெகுகாலமாகவே சொல்லிக் கொண்டு இருக்கின்றார். எந்த ஒரு சென்டர் ஆனாலும் சரி உள்நாடோ, வெளி நாடோ எந்த தேசத்திலிருந்தாலும் சரி, அவர்களுடைய தொடர்பில் உள்ள சென்டர் தடைகளற்ற நிலையில் இருக்க வேண்டும். இங்கு 5-மாதத்தில் எந்த ஒரு தடையும் வரக்கூடாது. நிர்விக்னமாக இருக்க வேண்டும். அப்படி நம்பர்-1 வந்து காண்பித்தால் அதற்காகவும் நிர்விக்ன பவ என்று நாளைக் கொண்டாடலாம். இப்பொழுது 6-மாதத்திற்குச் சொல்லப்படுகிறது. இந்த 5-மாத பயிற்சி இருந்தால் போகப்போக அது பழக்கமாகி விடும் ஆனால் இனாம் பெறுவதற்காக 6-மாத காலம் கொடுக்கப்பட்டுள்ளது. டெல்லி என்ன நம்பர் எடுப்பீர்கள். முதல் நம்பர். பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி மூழு பரிவாரத்திற்கும் மகிழ்ச்சி. திருப்திபடுத்தியதற்காக சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும் சேவையில் ஆகட்டும், செய்து வைத்த நியமங்கள்படி நடப்பதிலாகட்டும் பார்ப்போம்! பாப்தாதா சொல்லியிருக்கின்றார் ஆனால் இதுவரையில் பெயர் வரவில்லை. ஜோன் அல்ல. மற்றும் உள்ள பெரிய சென்டர் அதனுடைய தொடர்பில் உள்ள சென்டர் இதைச் செய்தாலும் கூட பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். இப்போது இன்னும் விரைவாக முன்னேறிச் செல்ல வேண்டும். ஏன்? எதிர்ப்பாராத விதமாக எதுவேண்டுமானாலும் நடக்கலாம். தேதி சொல்வதில்லை. சரி நல்லது. டெல்லியைச் சார்ந்தவர்கள் அமருங்கள்.

ஆக்ரா துணை மண்டலம்: ஆக்ராவைச் சார்ந்தவர்கள் அப்படி ஏதாவது ஒரு காரியம் சேவை செய்ய வேண்டும். அரசாங்கத்தில் பெயர்

பட்டியலில் ஆக்ரா முதன்மையாக இருப்பதுபோல ஆக்ராவைச் சார்ந்தவர்களும் பெயர் பட்டியலில் இடம் பெறும் அளவிற்கு ஏதேனும் ஒரு புதுமையான சேவையை செய்ய வேண்டும் கண்டுபிடியுங்கள். எப்படி ஆக்ராவில் கிரீடம் இருக்கின்றதோ அதுபோல செய்து காட்டுங்கள். உள்ளதா? நம்பிக்கை உள்ளதா? நம்பிக்கை வைத்துள்ளீர்கள் அதற்கு வாழ்த்துக்கள் என்ன செய்வீர்கள்? ஆனால் எவ்வளவு சமயத்திற்குள் செய்வீர்கள் (மேளா செய்வோம், மெகா ப்ரோகிராம் செய்வோம்) மெகா ப்ரோகிராம் எல்லாம் எல்லோருமே செய்து கொண்டுதான் இருக்கிறீர்கள் ஆனால் இதுவரையில் எந்த மண்டலமும் செய்யாத சேவைபை, புதியதாக ஒரு சேவையை நீங்கள் செய்து காட்டுங்கள். ஏனென்றால் ஆக்ரா எல்லோருக்குமே பார்வைக்குரிய பிரியமான இடமாக உள்ளது. இப்போதைய அரசாங்கத்தின் கிரீடமும் அங்கே தாள் உள்ளது. அப்படி நீங்கள் செய்தியைப் பரப்பினால் ஆக்ரா சேவையிலும் புகழிடம் ஆகும். அல்லவா? அப்படி ஏதேனும் ஒரு செயல் செய்து காட்டுங்கள். சிந்தனை செய்யுங்கள், அமிர்த வேளையில் அமர்ந்து அப்பொழுது யோசித்தால் ஏதேனும் ஒரு டச்சிங் கிடைக்கும். ஆசிரியர்கள் கை உயர்த்துங்கள். அதிகம் பேர் இருக்கிறீர்கள். எனவே விந்தை செய்து காட்ட வேண்டும். மற்றும் பாப்தாதா அளைத்துக் குழந்தைகளுக்கும் இதையே சொல்கிறார் ஏதேனும் ஒரு பதுமையைச் செய்து காட்டுங்கள். இப்பொழுது நடைபெற்றிருப்பது எல்லாம் சமயத்திற்கேற்ப புதுமைதான் ஆனால் இப்பொழுது இன்னும் புதுமையைக் கண்டுபிடியங்கள். எந்த மண்டலமாக, இருந்தாலும் செய்யாலாம் ஆனால் புதுமையை உருவாக்க வேண்டும் மற்றபடி பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தையும் அன்பான குழ்ந்தைதான். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் விசேஷ குணத்தையும் தெரிந்திருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையிடமும் கண்டிப்பாக விசேஷத்தன்மை உள்ளது ஆனால் சிலர் காரியத்தில் பயன்படுத்துகிறார்கள். சிலருடையது மறைந்து போகின்றது எனவே பாப்தாதா சொல்கின்றார் ஒவ்வொரு குழந்தையும் பாபாவிற்கு அன்பான குழந்தை தான் செல்லமான குழந்தைகள். மேலும் பாபா இதையே விரும்புகிறார். பறந்து கொண்டே இருங்கள் பறக்க வைத்துக் கொண்டே இருங்கள்.

மீட்டிங்காக வந்திருக்கும் சகோதர சகோதரிகளுடன்: மீட்டிங்காக வந்திருப்பவர்கள் என்றாலே பொறுப்பில் உள்ள நிமித்தமான ஆத்மாக்கள். நிமித்தமான ஆத்மாக்கள் பக்கம் எல்லோருடைய அன்பும் உள்ளது. மேலும் நீங்கள் அனைவருக்கும் ஆதாரமாக இருப்பவர்கள். நிமித்தமாக இருப்பவர்களின் முயற்சிக்கான வேகத்தின் அலைகளை பிறரும் பின்பற்றுவர்கள். எனவே இப்பொழுது நிமித்தமானவர்கள் மீது பாப்தாதாவிற்கு ஒரு ஆசை உள்ளது மற்றும் எல்லோருமே ஆசை தீபங்கள் தான். இருப்பினும் பாப்தாதா ஒரு ஆசை வைத்துள்ளார். தனது முகம் மற்றும் நடத்தை மூலமாக மற்ற எல்லா ஆத்மாக்களுக்காகவும் இவர்கள் முன்னுதாரணமாக இருக்கிறார்கள் என்பது தெரிய வர வேண்டும். இப்பொழுது கூட எல்லோருமே ஏற்றுக் கொள்கிறீர்கள். அடி மீது அடி வைக்க வேண்டுமென்றால் பிரம்மாபாபாவை கட்டிக் காண்பிக்கின்றீர்கள். அதுபோலவே நிமித்தமாக இருப்பவர்களை கட்டிக் காட்ட வேண்டும். அப்படி பின்பற்ற வேண்டுமா? பார்க்க வேண்டுமா? இந்த ஆத்மாவைப் பாருங்கள். பாபாவைப் போலவே மாறி உள்ளார் என்று எல்லோரும் சொல்ல வேண்டும். முடியுமா? முடியுமா' நேரம் வேண்டுமா? எனவே பாப்தாதாவிற்கு இந்த குழுவினர் மீது இந்த ஆசை தான் உள்ளது. ஏனென்றால் முதலில் லட்சியம் வையுங்கள். பாப்சமான் ஆவதற்காக, பாப்தாதா இப்படிப்பட்ட ஒரு முன் உதாரணமானவரைப் பார்க்க விரும்புகிறார். முடியுமா? செய்தே ஆக வேண்டுமல்லவா? எனவே இந்த குழுவினர் இதையே லட்சியமாக வைத்துக் கொள்ளுங்கள். நாம் என்ன செய்வோமோ அதையே எல்லோரும் செய்வார்கள். இந்த ஆசீர்வாதம் பெற வேண்டும். இதில் நிமித்தமாக இருக்க வேண்டும்.

இரட்டை அயல் நாட்டு சகோதர சகோதரிகளுடன்: இரட்டை அயல் நாட்டவர் எப்பொழுதுமே அனுபவம் செய்கிறார்கள். நாம் பிராமண பரிவாரம் என்று மேலும் பாப்தாதாவிற்கு விசேஷமான பிரியமான குழந்தைகள். ஏன்? எந்தளவிற்கு தேசத்தின் கணக்கில் வெகு தொலைவாக இருக்கின்றார்களோ. அந்தளவிற்கு பாப்தாதாவின் உள்ளத்தில் வெகு அருகாமையிலிருக்கின்றார்கள். இந்த விசேஷம் உள்ளது. பாபா என்று சொல்லும் பொழுது எல்லோருடைய முகமும் அன்பில் லயித்துப்போய் (லவ்லீன்) விடுகின்றது அதனைப் பார்த்து பாபாவும் மகிழ்ச்சி அடைகிறார். மேலும் ஒரு விசயத்தில் விசேஷமாக

இருக்கின்றார்கள். பாரதத்தின் நியமங்களை தானும் கடைப்பிடிப்பதில் தைரியம் வைக்கின்றார்கள். ஆரம்பத்தில் பாரதத்தின் பண்பாடு என்று சற்று யோசித்தது உண்டு ஆனால் இப்போது பாப்தாதா பார்க்கின்றார். எல்லோருமே இப்படித்தான் சொல்கின்றார்கள், நாமும் முன்பு பாரதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தோம். பாரதவாசி என்பதில் நஷா உள்ளது. பாரதம் இராஜதானி அல்லவா! அது நன்றாக மனதில் அமர்ந்து விட்டது. கேட்டுக் கொண்டே இருக்கின்றார்கள். நாங்கள் இதுவாக இருந்தது இல்லை. யார் அங்கு சென்றிருக்கிறார்களோ அவர்களிடம் கேட்கிறார்கள். நாங்களும் இப்படித்தான் இருந்தோமா? பாரதத்தின் பரிவாரத்தின் மீது அன்பு உள்ளது. சேவையில் இதுவரையில் நன்றாக செய்து இருக்கிறார்கள். இப்பொழுதெல்லாம். தனக்கு அருகாமையில் எங்கெல்லாம் சேவை இல்லையோ அங்கெல்லாம் கூட செய்வதற்கான லட்சியம் வைத்துள்ளார்கள். பலனாக அநேக இடங்களில் வெற்றியும் கிடைத்துள்ளது. அப்படித்தானே? சேவை செய்கிறீர்கள் அல்லவா? யாரெல்லாம் அக்கம்பக்கம் எல்லாம் சேவை செய்து கொண்டிருக்கின்றீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது! பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி.

நாலாபுறங்களிலுள்ள குழந்தைகள் பாபாவின் உள்ளத்திற்குப் பிரியமானவர்கள் ஒவ்வொரு குழந்தையும் இந்த வட்சியத்தையே மீண்டும் மீண்டும் நினைவில் கொண்டு வருகிறார்கள். மேலும் அதையேத்தான் கொண்டு வர வேண்டும். நாம் தீவிர முயற்சி செய்து பாபாவை உலகிற்கு முன்பாக வெளிப்படுத்த வேண்டும். பிரத்யட்ஷம் செய்ய வேண்டும். எல்லோருடைய உள்ளத்திலி ருந்தும் சொல்ல வேண்டும் மேரா பாபா ஆ கயா! எனது தந்தை வந்து விட்டார். பாப்தாதாவிற்கும் இதே ஆசைதான் இப்பொழுது வெகு விரைவாக எல்லோருக்கும் இந்த செய்தி சென்று சேர வேண்டும். ஒருவரும் வஞ்சிக்கப் படக்கூடாது, ஏதேனும் ஆஸ்தி பெற வேண்டும். ஜீவன் முக்தி அடையாவிட்டாலும் சரி, அன்போடு முக்தி என்ற ஆஸ்தியாவது பெறட்டும், ஏனென்றால் பாபா அனைவருக்குமே ஆஸ்தி தர வேண்டும். எத்தனைப் பேருக்கு ஆஸ்தியை நினைவூட்டுர்களோ அவர்கள் எல்லோரும் உங்கள் ராஜ்யத்தில் வருவார்கள். நீங்கள் இராஜ அதிகாரிக்கான ஆஸ்தி பெறுவீர்கள், எல்லாவகையான அனைத்துக் குழந்தைகளும் பாப்தாதாவிற்கு மிகமிகப் பிரியமானவர்கள்,

எல்லோருக்கும் பாப்தாதாவுடைய மிக மிக அன்பு மற்றும் ஆசீர்வாதங்கள். நல்லது.

தாதி ஜானகிஜியுடன்: (பாபா சம்ஸ்காரத்தை உருவாக்க வேண்டுமா) உருவாகியே உள்ளது. நீங்கள் இரு பக்கமும் பார்க்க வேண்டும். உடலையும் பார்க்க வேண்டும். சேவையும் பார்க்க வேண்டும். இரண்டுமே அவசியம். நீங்கள் அதிகமாக சேவை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். (பாபா செய்வித்துக் கொண்டிருக்கிறார்) செய்விக்கின்றார் ஆனால் நீங்கள் இன்னும் போகப்போக அதிகம் செய்ய வேண்டும். (பாபா மதுபனிலேயே இருந்து விடட்டுமா) அந்த நாளும் வரும். இருபக்கமும் பாருங்கள்.

ரமேஷ் சகோதரருடன்: உடலைக் கவனித்துக் கொள்ளுங்கள். இப்போது அதிக வேலை செய்ய வேண்டும். அரசாங்கம் எவ்வளவு முன்னேறிக் கொண்டு இருக்கிறதோ அந்தளவு நீங்களும் வேலையில் முன்னேற வேண்டும். எனவே உடலையும் சரியாகப் பார்த்துக் கொள்ளுங்கள். பாபாவும் தாதிமார்களும் உங்களோடு உதவியாக இருப்பார்கள். ஏதேனும் விசயத்தில் தேவை என்றால் உதவி பெறுங்கள். (மீட்டிங் குறைவாக நடைபெறுகிறது) மீட்டிங் வையுங்கள் ஆனால் எல்லோருக்கும் சமயம் இருக்கும்பொழுது மீட்டிங் வைக்க வேண்டும். எனவே எல்லோரும் ஒன்று கலந்து மதுபனில் குழுவினர் வருவதற்கு முன்பாக, எல்லா குழுவும் முடிந்த பிறகு மீட்டிங் தேதி எப்போது என்று அதைப் பற்றி சிந்தியுங்கள். எப்போதாவது ஏதேனும் நடைபெற இருந்தால் மாற்றம் செய்யுங்கள்.

பரதாதியுடன்: வியாதியை ஜீரணம் செய்து விடுகிறீர்கள். அனைவருக்கும் மகிழ்ச்சி, மிக்க நல்லது. உடலையும் சாட்சியாக இருந்து நடத்திக் கொண்டு இருக்கின்றீர்கள். நல்லது. பாப்தாதாவிற்கும் மகிழ்ச்சி. (ருக்மணி (பிராமணி) சகோதரியுடன்) நன்றாக நடிப்பை செய்து கொண்டிருக்கின்றீர்கள். ஒருபொழுதும் தொந்தரவு அடைவதில்லை. இந்த விசேஷ குணம் உள்ளது எல்லோருக்கும் இதனைக் கற்றுக் கொடுங்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 15.12.2010 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எனதை உனதாக மாற்றிவிட்டு கவலையில்லாத ராஜாவாக மாறுங்கள். ஒரு வினாடியில் விணானவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற பழக்கம் உடையவராகி ஒவ்வொரு எண்ணத்தையும் ஒவ்வொரு நேரத்தையும் லாபகரமாக ஈடுபடுத்துங்கள்!

இன்று நாலாபுறமும் உள்ள தன்னுடைய கவலையில்லாத மகாராஜாக்கள் என்ற குழந்தை களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். இப்படிப்பட்ட கவலையில்லாத மகாராஜாக்களின் சபை இப்போது மட்டுமே தென்படுகிறது. ஏனென்றால் இப்போது மட்டும் தான் பாபா கவலைகளை எடுத்துக் கொண்டு கவலையில்லாத இராஜக்களாக மாற்றிவிடுகின்றார். எனவே இப்படிப்பட்ட ஒரு சபை இப்போது மட்டுமே உங்களுக்குத் தென்படுகிறது. இப்போது நீங்கள் அனைவரும் காலையில் எழுந்தது முதலாக கவலையில்லாத மனோநிலையில் நிலைத்திருக்கின்றீர்கள். உண்பது. அருந்துவது, கர்மங்கள் செய்வது எதற்காகவும் எந்த கவலையும் இல்லை. உறங்கு வதும் கவலையில்லாமல் தான். இப்படிப்பட்ட மகாராஜாக்கள் மற்றும் கவலையில்லாதவர்கள். கண் விழித்தாலும், உறங்கினாலும் இப்படிப்பட்ட அனுபவம் செய்கிறீர்களா? ஏனென்றால் நீங்கள் அனைவரும் பாபாவிற்கு கவலைகளைக் கொடுத்து விட்டு ஆனந்தப் பெருமிதத்தை எடுத்துக் கொண்டீர்கள். எனவே கவலையில்லாத மகாராஜாக்களாக மாறிவிட்டீர்கள். ஒருவேளை போகப் போக ஏதேனும் கவலை வந்து விட்டாலும் அந்தக் கவலை உங்களை என்னவாக மாற்றி

விடுகிறது. ஆனந்தத்தில் இருந்தால் உங்களுடைய நெற்றியில் பிரகாசம் ஜொலிக்கிறது. கவலை வந்து விட்டால் தலைமீது பாரம் என்ற சுமை கூடை வந்து விடுகிறது. சொல்லுங்கள், உங்களுக்கு பிரகாசமான ஒளி பிடித்திருக்கிறதா? அல்லது சுமைக் கூடையா? கவலையில்லாத மகாராஜா தனக்கும் பிரியமானவராக இருப்பார், இப்படிப்பட்ட மனோநிலையில் பறந்து கொண்டிருப்பவருடைய பிரகாசமான ஒளியைப் பார்த்து பிறருக்கும் எவ்வளவு அன்பு வருகிறது. எனவே பாப்தாதா சதா குழந்தைகளை கவலையில்லாத இராஜா என்ற மனோநிலையில் நிலை நிறுத்துகின்றார். இந்த நினைவு சொரூபத்தில் நிலைநிறுத்துகிறார். எனவே உங்களுடைய சித்திரமாக பக்தர்கள் கூட இரட்டை மகுடதாரியாக (கிரீடம்) காண்பிக்கின்றார்கள். ஒன்று ஒளி மகுடம், மற்றொன்று விகாரங்களை வெற்றி அடைந்ததற்கான இராஜ மகுடம். இப்படி இரண்டுவிதமான மகுடம் காண்பிக்கப்படுகிறது. எனவே பாப்தாதா எல்லோருக்கும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் இதையே அறிவுரையாகத் தருகின்றார். சதா ஆனந்தத்தில் இருப்பது மிக சுலபம் தானே! என்ன சுலபம் தானே? தன்னிடம் உள்ள எல்லைக்குட்பட்ட எனது எனது என்ற விஷயங்களை மட்டும் பாபாவிற்குக் கொடுத்து விடுங்கள் போதும். எனது என்பதை உனது என்று மாற்றிவிட்டால் கவலையில்லாத இராஜாக்களாக மாறிவிடுகிறீர்கள். ஒரே ஒரு எழுத்து மட்டும் தான் அங்கு மாற்றம் மேரா-தேரா (உனது - எனது) மே மற்றும் தே. இந்த எழுத்தை மட்டும் மாற்றி விடுவதால் கவலையில்லாத இராஜா ஆகி விடுவீர்கள். சுலபம் தானே கவலையில்லாத இராஜா ஆகி விட்டீர்களா? அல்லது இப்பொழுதும் ஏதாவது கவலையிருக்கிறதா? அப்படி எப்பொழுதாவது மகிழ்ச்சிக்குப் பதிலாக கவலை வருகிறது என்றால் அதற்குக் காரணம் உனதை எனது என மாற்றி விடுவதால் தான் கவலை கவருகிறது. எனவே அனைவருக்கும் நடைமுறையில் வைக்க வேண்டிய லட்சியம் இது தான். கவலைகளை கொடுத்து விட்டீர்களா? அல்லது இடையிடையே ஆனந்தத்தை விட்டுவிட்டு கவலையில் வந்து விடுகிறீர்களா? கவலை வருகிறதா? கவலை அற்றவர்களாகி விட்டீர்களா? எப்போதுமே கவலையில்லாமல் இருக்கிறீர்களா? அப்படி சதா காலத்திற்கும் கவலையில்லாமல் இருக்கின்ற மகாராஜாக்கள் கை உயர்த்துங்கள். உறுதியாகத்தானா? அல்லது அவ்வப்பொழுதா? கவலையில்லாத இராஜாக்கள் கையை நன்கு உயர்த்துங்கள். அவ்வப்பொழுது இருக்கவும் இருக்கிறீர்கள்.

சேவை பற்றிய கவலை -அது வேறு விஷயம். ஏனெனில் அந்தக் கவலை, பிறரை கவலையில்லாமல் மாற்றுவதற்கான சாதனம். தன்னுடைய சம்ஸ்காரத்தால் கவலை வருகிறது என்றால் அதனை அந்த நேரத்திலேயே எனது என்பதற்குப் பதிலாக உனது என்று மாற்றி விடுங்கள். பாபாவிடம் கவலைகளைக் கொடுத்து விடுங்கள். மகிழ்ச்சியை எடுத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் தந்தை வந்திருப்பதே குழந்தைகளின் கவலைகளையெல்லாம் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சி தருவதற்காகத்தான். எனவே சோதனை செய்துப்பாருங்கள், என்னிடம் எப்பொழுதாவது நீண்டகாலமான சம்ஸ்காரம் வெளிப்பட்டுவிடுகிறதா? ஏனென்றால் பாப்தாதா கொஞ்சம் காலமாகவே குழந்தைகளுக்கு இதை சொல்லிக் கொண்டிருக்கின்றார். நிகழ்காலத்திற்கு ஏற்ப அவ்வப்பொழுது எது வேண்டுமாயினும் நடக்கலாம். அது எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம். எனவே ஒவ்வொரு குழந்தையும் தன்மீது இந்த விஷயத்தில் கவனம் வைக்க வேண்டும். ஒரு வினாடியில் முற்றுப்புள்ளி வைக்க விரும்பினால் வைக்க முடிகிறதா? உதாரணமாக, ஏதாவது வீண் எண்ணம் வந்து விட்டால் முற்றுப்புள்ளி மூலமாக ஒரு வினாடியில் வீணானவற்றை அழித்து விட முடிகிறதா? அந்தளவிற்கு பயிற்சி உள்ளதா? மாறாக அந்த நேரத்தில் சூழ்நிலைக்கு ஏற்ப முயற்சி செய்து வீனானவற்றை அகற்ற வேண்டியுள்ளதா? முற்றுப்புள்ளி வைக்க விரும்பி கேள்விக்குறியோ, ஏன், என்ன, எப்படி என்ற எண்ணங்களோ வந்து விடுகிறதா? அந்த சமயத்தில் இப்படியெல்லாம் யோசித்துக் கொண்டேயிருந்தால் இனி வர இருக்கின்ற காலத்தில் பாபா உடன் செல்வோம் என்ற லட்சியம், பாபா ஒருவினாடியில் அவர் பிந்துவாக இருக்கின்றார், ஒரு வினாடியில் வைக்க வேண்டிய புள்ளி, அதுவும் புள்ளி தான். அந்த அளவிற்கு பயிற்சி உள்ளதா? இதற்காக இப்போது இருந்தே இந்த பயிற்சியைப் பழகி விட்டால் பாபாவிற்கு நிகராக பாப்சமான் ஸ்ரீமத் என்ற கையோடு கை இணைத்து தனது வீட்டிற்குச் சென்றுவிடலாம். எனவே பாப்தாதா முன்பு கூட சொல்லியிருக்கின்றார். இந்த விஷயங்கள் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும். அதற்கான இரண்டு விஷயங்கள் ஒன்று, சங்கல்பம் என்ற கஜானா. மற்றொன்று நேரம் என்ற கஜானா, கஜானாக்கள் இன்னும் அதிகம் கிடைத்துள்ளது. ஞானம் என்ற கஜானா, சக்திகள் என்ற கஜானா. யோகத்தின் மூலமாக முக்கியமாக சம்பன்னம் அடைவதற்கான யுக்திகள் அனைத்துமே

பிராப்தமாகியுள்ளது. ஏனென்றால் இந்த சங்கம் என்ற சமயம் தான் முழு கல்பத்திலேயே மிகமிக மதிப்பு வாய்ந்த விசேஷமான நேரமாகும். இப்போது மட்டும் தான் நீங்கள் எவ்வளவு அடைய வேண்டுமோ அவ்வளவு அடைய முடியும். ஏனென்றால் இந்த ஒரு ஜென்மம் தான் மகான் தன்மை வாய்ந்தது. இந்த ஒரு ஜென்மத்தில் தான் அநேக ஜென்மங்களுக்கான பலனை பெற முடியும். சங்கமயுகத்தில் ஒரு வினாடியைக் கூட இழக்கக்கூடாது. ஒரு வினாடி அநேக ஜென்மங்களோடு இணைந்துள்ளது. ஒரு ஆண்டு சேமிப்பது பல ஆண்டுகளின் பிராப்தியைத் தருவதாகும். எனவே மதிப்பு வாய்ந்த இந்த நேரத்தில் நிமிடம், வினாடி ஒவ்வொரு மணி நேரமும் உயர்வானது தான். ஒவ்வொரு வினாடியும் மிக மதிப்பு வாய்ந்தது தான். மேலும் சங்கமயுகத்தின் பிறவியில் சங்கல்பம் தான் மிக முக்கியமான ஆதாரமாக உள்ளது. பாருங்கள். நீங்கள் யோகம் செய்யும் பொழுது கூட மன்மனாபவ என்று சொல்கின்றீர்கள். இதுவே தான் அஸ்திவாரத்திற்கு ஆதாரமாக அமைகிறது. மனதின் செயலே எண்ணங்களை உருவாக்குவது தான், எண்ணங்கள் மூலமாகத்தான் நினைவு யாத்திரையை அனுபவம் செய்கின்றீர்கள். ஓரிரண்டு எண்ணங்களில் கூட விசேஷமாக விதவிதமான சங்கல்பங்களைக் கொடுத்துப் பயிற்சி செய்ய வைக்கிறீர்கள் அல்லவா? எனவே அவைரும் சோதனை செய்துப் பாருங்கள், சமயத்தின் வேகத்திற்கு ஏற்ப நாள் முழுவதும் நடமாடும் பொழுதெல்லாம் காரியங்கள் செய்யும் பொழுதெல்லாம் அனைவருடைய சம்மந்ததில் வரும்பொழுதும் அந்தநேரம் முழுவதும் மதிப்பு வாய்ந்ததாக இருந்ததா? ஏனென்றால் நேரம் இன்னும் மதிப்பு வாய்ந்தது. எண்ணம் தான் சர்வ சக்திவானாக மாற்றுகிறது.

பாப்தாதா மீண்டும் மீண்டும் சொல்கிறார். பாப்தாதாவின் செல்லங்களே! உள்ளத்தில் குடிகொள்ளும் குழந்தைகளே! இப்பொழுது வீணான கணக்கை முடித்து விடுங்கள், லாபகரமாக ஈடுபடுத்துங்கள். லாபகரமாக மாற்றுவது தான் வெற்றியாகும். ஒரு வினாடி தானே போனது என்று நினைக்காதீர்கள். ஒவ்வொரு வினாடியும், ஒவ்வொரு எண்ணமும் வெற்றிக்கரமாக இருக்க வேண்டும். அந்தளவிற்கு தன்மீது கவனம் வைத்தே ஆக வேண்டும். அந்த அளவிற்கு முற்றுப்புள்ளி வைக்கிறோமா என்று சோதனை செய்யுங்கள். சோம்பல் வேண்டாம். பாப்தாதாவும் சொல்லியிருக்கிறார் ஆனால் நாம் புரிந்து

கொள்ளவில்லை, சமயத்தைப்பற்றி சிந்திக்கவில்லை. நேரம் மிக வேகமாக சென்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் வேகமாக செல்லும். இப்போது பாப்தாதா ஒவ்வொருவரிடமிருந்தும் சோம்பல் தனத்தை பெற்றுக் கொள்ள விரும்புகின்றார். எனக்குப் புரியவில்லை, நான் இதைப் பற்றி சிந்திக்கவில்லை, இப்படியெல்லாம் சொல்வதை பாபா கேட்க விரும்பவில்லை. இப்பொழுது புத்தாண்டு வரயிருக்கிறது, புதிய ஆண்டு வருவதற்கு முன்பாக இந்த பிராமண உலகில் இருந்து சோம்பல் தனத்துடன் இருக்கின்ற அலட்சியம், அலட்சியம் விதவிதமாக உள்ளது. அதனை இந்த ஆண்டில் மீதம் உள்ள சிறிது நாட்களுக்குள்ளாகவே இதற்கான பயிற்சியை ஆரம்பித்து விடுங்கள். மேலும் புதிய ஆண்டு ஆரம்பமானவுடன் பாப்தாதாவுடன் தைரியமாக சங்கல்பம் வைத்து அதற்கு விடை கொடுத்து அனுப்பி விடுங்கள். பழைய வருடத்திற்கு விடைகொடுத்து அனுப்புவதோடு இதற்கும் விடை கொடுத்து விடுங்கள். கொடுக்க முடியுமா? கொடுக்க முடியுமா? முடியும் என்பவர்கள் கை உயர்த்துங்கள். (அனைவருமே கை உயர்த்தினார்கள்) ஆகா குழந்தைகளே! ஆகா கை உயர்த்துவதில் பாப்தாதாவை நன்றாகவே குஷிப்படுத்தி விடுகிறீர்கள். அநேக குழந்தைகளுக்கு கை உயர்த்து வதற்கான செயலையும் செய்து காண்பிக்க வேண்டும் என்ற நினைவு இருக்கிறது. சிலரோ நினைவில் வைக்கக் கூட சோம்பலாக இருக்கிறார்கள். பாப்தாதாவிடம் ஆன்மீக உரையாடல் மிக நன்றாகவே செய்கிறார்கள். நடந்து விடும், பாபா நீங்கள் பாருங்களேன். இப்போது ஆகி விடும், இப்போது ஆகும்.... அப்படிப்பட்ட குழந்தைகளின் சோம்பலைப் பார்த்து பாபாவும் அந்த வார்த்தைகளைக் கேட்டு புன்முறுவல் செய்கின்றார். வேறு என்ன செய்வது நல்லது செய்ய வேண்டும் என நினைக்கின்றீர்கள், செய்ய வேண்டும். செய்ய வேண்டும்... இப்படி அதிகம் சிந்திக்கிறீர்கள் ஆனால் செய்வீர்களா அல்லது செய்வதில்லையா? என்ற இந்த சோதனையில் பிறகு என்ன சொல்வீர்கள். சோம்பல் அடைந்து விடுகிறீர்கள்.

இன்று நாலாபறமும் உள்ள குழந்தைகளுக்கு, பாப்தாதா கேள்விப்பட்டார். தன்னுடைய தேசத்திலும் மற்றும் அவரவரது இடங்களிலும் இருந்து குழந்தைகள் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். அங்கேயும் நிகழ்ச்சிகள் நன்றாகத் தென்படுகிறது. கேட்கவும் முடிகிறது. பாப்தாதா எதிரில் வந்திருக்கும் குழந்தைகளுக்கும் மற்றும் அவரவரது

இடத்திலிருந்து கேட்கின்ற, பார்க்கின்ற அனைத்து குழந்தைகளுக்கும் சொல்வது இது தான், இப்போது தன்னுடைய முயற்சியில். சங்கல்பத்தில் மற்றும் சங்கமயுக காலத்தில் இதனை கோடிட்டு காண்பியுங்கள். அதாவது இவற்றின் மீதெல்லாம் அதிகமான கவனம் வையுங்கள், குழந்தைகள் அனைவரும் அன்பில் என்னவோ பெரும்பாலும் பாஸாகி (வெற்றி) விட்டீர்கள். அந்த அன்பின் ஆகாரத்தால் தன்னை நன்றாசு முன்னேற்றிக் கொண்டேயிருக்கின்றீர்கள். நீங்கள் வைக்கின்ற அன்பிற்குக் கைமாறாக தந்தை தரும் அன்பின் காரணத்தால் முன்னேறிக்கு கொண்டியிருக்கின்றீர்கள் ஆனால் பாபா நினைக்கின்றார். எந்த அளவிற்கு அன்பில் அனுபவியாக முன்னேறிக் கொண்டிருக்கின்றீர்களோ. அப்படியே நினைவு என்னும் பாடத்திலும் அநேக ஜென்மங்களின் விகர்மங்களை விநாசம் செய்வதிலும் கவனம் வையுங்கள். ஏன்? விகாமங்கள் விளாசம் அடைந்தால் தான் தந்தையுடன் செல்ல முடியும். தந்தையுடன் இணைந்தே செல்வீர்கள். இல்லையென்றால் பின்னால் பின்னால் தான் வருவீர்கள். மேலும் பாபா நினைக்கின்றார், அன்பிற்கான கைமாறு அன்பான ஆத்மா சொல்வதை செய்வது தான். பாபாவும் விரும்புகின்றார். குழந்தைகளின் அன்பு தந்தை மீது இருக்கும்பொழுது தந்தையுடனே தானே இருக்க வேண்டும். இராஜாங்கத்திலும் பிரம்மாபாபாவுடனே இராஜ்யத்தில் வரவேண்டும். இராஜாங்கத்தில் வருவது என்றால் ராயல் குடும்பத்தில் வருவதாகும். ஆசனத்தில் அமரவில்லை. என்றாலும் ராயல் குடும்பத்திலாவது துணையாக வரலாமே இதனை எப்படிக் கண்டறிவது? இதைப்பற்றி பாப்தாதா முன்பு கூட சொல்லியிருக்கின்றார். நீங்கள் வந்த நாள் முதலாக, ஞானத்தில் எவ்வளவு ஆண்டுகளாக இருக்கின்றீர்களோ, அவ்வளவு காலத்தில் முழுமையாக நீங்கள் பாப்தாதாவின் மனம் என்னும் சிம்மாசனத்தில் எவ்வளவு காலமாக மண்ணில் கால் வைக்காமல் இருந்தீர்களோ, அதன் அடிப்படையில் தான் ராயல் குடும்பத்தில் நெருங்கிய சம்மந்தத்தில் வருவீர்கள். ராயல் குடும்பத்தவராக இருப்பீர்கள். அன்பு உள்ளவர்கள் தானே! அப்படியென்றால் அன்பு உள்ளவர்களுக்குத் துணையாக இருப்பது, பின் செல்லக்கூடாது. யார் மனம் என்னும் சிம்மாசனத்தில் இருக்கின்றார்களோ. அவர்கள் துவாப்பர யுகத்திலும், கவியுகத்திலும் கூட சம்மந்தத்தில் இருப்பார்கள், நெருங்கிய தொடர்பில் இருப்பார்கள்.

எனவே அன்பானவற்குத் துணையாக இருந்து சதா மனம் என்னும் சிம்மாசனத்தில் இருப்பவராக இருங்கள். மேலும் பலபிறவிகளுக்கான உரிமையைப் பெற்றுக் கொள்ளுங்கள். எனவே பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் அன்பு செய்கிறார். பாபா சான்றிதழ் கொடுத்து விட்டார். அன்பு என்னும் பாடத்தில் பெரும்பாலான குழந்தைகள் பாஸ். இப்போது அனைத்து பாடத்திலும் இப்படி பாஸாக வேண்டும். பாஸாகியே தீர வேண்டும். பாஸாக வேண்டும், அருகிலேயே இருக்க வேண்டும். (பாஸ் (வெற்றி) ஆக வேண்டும், பாஸ் (அருகே) இருக்க வேண்டும்) நல்லது,

முதன்முறையாக வந்திருக்கும் குழந்தைகள் எழுந்து நில்லுங்கள். முதல் முறையாக வந்திருக்கிறீர்கள். வகுப்பில் பாதிக்கு மேல் புதியவர்கள் தான், வந்திருக்கின்றீர்கள். வந்திருப்பவர்களை பாப்தாதா வரவேற்கின்றார். வாழ்த்துக்களும் தருகின்றார். முதன் முறையாக வந்தவர்களுக்கு வாழ்த்துக்கள். லேட்டாக வந்திருக்கலாம் ஆனால் டூ லேட் (மிகவும் கால தாமதம்) ஆவதற்கு முன்பே வந்து விட்டீர்கள். இப்பொழுது இருக்கின்ற சிறிது நேரத்திற்குள் தீவிர முயற்சி செய்து தன்னுடைய எதிர்காலத்தை எவ்வளவு உயர்த்த வேண்டுமோ தீவிர் முயற்சியின் மூலமாக உயர்த்திக் கொள்ளலாம். இதற்கு கவனம் வைக்க வேண்டும். ஏனென்றால் இப்பொழுதும் நீங்கள் முயற்சி செய்வதற்கான நேரம் இருக்கிறது. எவ்வளவு முன்னேற வேண்டுமோ அந்த அளவிற்கு முன்னேற முடியும். பாப்தாதாவும் இந்த தெய்வீக குடும்பமும் உங்களுக்கு துணையாக இருந்து உங்களுக்கு முன்னேறுவதற்கான எண்ண அலைகளை வழங்குவார்கள். எனவே முன்னேறுங்கள். தைரியம் வையுங்கள். தைரியம் உங்களுடையது. உதவி பாப்தாதா மற்றும் பரிவாரத்தினுடையது, முன்னேறுங்கள். சரிதானே! ஆம் என்று சொல்லுங்கள், முன்னேறிச் செல்லுங்கள். நல்லது.

சேவைக்கான வாய்ப்பு -குஜராத் மண்டலம்: குஜராத் எழுந்திரியுங்கள். கை அசையுங்கள். குஜராத்திலிருந்து வந்திருப்பவர்கள் இந்த ஹாலில் பாதிக்கு மேலிருக்கிறார்கள். மிக அதிகமாக இருக்கிறார்கள். நல்லது. குஜராத்திலிருந்து முதன் முறையாக வந்திருப்பவர்கள் எழுந்து

நில்லுங்கள். நல்லது முதல் முறையாக வந்துள்ளீர்கள். அதிலும் குஜராத் தான் அதிகம். நல்லது வாழ்த்துக்கள்.

இப்பொழுது குஜராத்தில் தினசரி வகுப்பிற்கு வருபவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எழுந்து நில்லுங்கள். நல்லது. குஜராத் சேவையில் முன்னேறிக் கொண்டேயிருக்கின்றது. இப்போது எதில் நம்பர் பெற வேண்டும். எண்ணிக்கையில் அதாவது கூட்டத்தில் (பிராமண குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது) நம்பர்-1 வந்து விட்டீர்கள், இப்பொழுது நிர்விக்னம் (தடையற்று)! பாப்தாதா சொல்கிறார், இது வரையில் எந்த மண்டலத்திலிருந்தும் இதற்கான பெயர் பட்டியல் வரவில்லை. அனைவரின் இலட்சியம் இது தான் ஆனால் இதுவரையில் இந்த விஷயத்தில் நம்பர் யாரும் எடுக்கவில்லை. பாப்தாதாவும் பார்க்கின்றார். நம்பர் எடுக்க வேண்டும் என்று தான் லட்சியம் வைக்கின்றீர்கள் ஆனால் நடைமுறையில், இப்பொழுது திட்டம் மட்டும் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது ஒவ்வொருவரும் நினையுங்கள், நான் நம்பர்-1 ஆக வரவேண்டும். அந்த நம்பரை நான் பெற வேண்டும். பெறுவீர்களா? பெறவேண்டும், அதற்காக முக்கியமாக இப்போது எழுந்த இத்தனை பேரும் அவரவர்களுடைய சென்டரில், ஒவ்வொருவரும் அவரவது இடத்தில் (ஏரியா) கவனம் கொடுத்து புது உலகிற்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை செய்ய முடியும் தானே! அங்கே இராஜா பிரஜா அனைவரும் ஒன்றாகத்தானே இருப்பார்கள். நிர்விக்ளமாக, தடைகள் அற்றவர்களாக இருப்பார்கள் ஆனால் அதற்குரிய சம்ஸ்காரம் அங்கே சென்றபின் தன்னுள் நிறைக்க முடியாது. அதை இங்கே தான் நிரப்பிக் கொள்ள வேண்டும். எனவே பாப்தாதா சிறிய மண்டலமோ, பெரிய மண்டலமோ அனைவரிடமிருந்தும் இந்த ரிசல்டையே பார்க்க விரும்புகின்றார். சொல்லுங்கள், நிமித்தமாக இருக்கின்ற தாதிமார்கள் மற்றும் தாதாக்கள் (மூத்தசகோதரர்கள்) இதில் முதல் பரிசு யார் பெறுவார்? குஜராத் பெறுமா? எதுவரையில்? மாதம் வேண்டுமா? 6-மாதம் விரைவாக செய்வீர்களா? வாழ்த்துக்கள். தாதிமார்கள் சொல்லுங்கள், முதல் நம்பர் எப்போது தெரிய வரும்? தெரிய வரும் அல்லவா?

மதுபனை சார்ந்தவர்கள் எழுந்திருங்கள். மதுபனைச் சார்ந்தவர்கள் நல்லது. கை அசையுங்கள். மதுபனைச் சார்ந்தவர்கள் கை உயர்த்துங்கள். சாந்திவன் மற்றும் மேலே உள்ள பண்டவ பவன் மேலே மூன்று இடங்கள் உள்ளது மற்றும் கீழே சாந்திவன் மற்றும் 5வது ஹாஸ்பிட்டல் மொத்தம் 5-பாண்டவர்கள் ஆகி விட்டீர்கள். எனவே முதலில் மதுபனைச் சார்ந்தவர்கள் செய்வீர்களா? கை உயர்த்துங்கள். செய்பவர்கள் கை உயர்த்துங்கள். ஒன்று இணைய தெரியும் அல்லவா? மதுபனைச் சார்ந்தவர்கள் என்றாலே அதிர்ஷ்டசாலிகள் தான். சிறிது இணைந்து சென்று ஒருவருக்கொருவர் பக்கா துணையாக இருங்கள். வேறு எதற்காகவும் துணையாக இருக்க வேண்டாம். இதற்காக ஒருவருக்கொருவர் துணையாக இருந்து மதுபன் நம்பர்-1 பெற வேண்டும். பெறுவீர்களா? இப்போது இதற்கு கை அசையுங்கள். முடிந்தது முடிந்தது, நடந்தது, நடந்தது, எல்லோரும் பார்த்தீர்கள், கேட்டீர்கள், மதுபனைச் சார்ந்தவர்களுக்கு இது மிகப் பெரிய பொன்னான வாய்ப்பு, மதுபன் என்றால் அதில் எல்லோரும் வந்து விட்டீர்கள் (ஐந்து இடமும்) எல்லோரும் ஒன்று தான், மதுபனைச் சார்ந்தவர்கள் என்றால் எல்லோரும் சேர்ந்து தான், மாறாக பாண்டபவன் தனி. மற்ற இடம் வேறு என்று இருக்கக்கூடாது. மதுபன் என்றால் எல்லோரும் ஒன்று தான். மதுபனைச் சார்ந்தவர்கள் புரிந்து கொண்டீர்களா? செய்வீர்களா? செய்வோம், என்பவர்கள் கை உயர்த்துங்கள். செய்வோம். எல்லோரும் ஒன்று இணைந்து செயல்படுவோம் எல்லோரும் கை உயர்த்தினார்கள் இது என்ன பெரிய விஷயம் என்று நினைக்கிறீர்களா? பாப்தாதா உடன் இருக்கின்றார். தாதிமார்களும் இருக்கிறார்கள், பிறகு என்ன? இது பெரிய விஷயமே இல்லையே? தாதிமார்கள் நினைக்கிறீர்கள். மதுபனை சார்ந்தவர்கள் நம்பர்-1 தானே நல்லது. பாபா இதைச் செய்து காட்ட வேண்டும் என்று அனைவருக்குமே சொல்கிறார் ஆனால் மதுபன். மதுபன் மதுபன் தான். குஜராத்தும் செய்து காண்பிப்போம் என்று சொல்கிறார்கள். நல்லது. அனைவரும் வைப்ரேஷன் தர வேண்டும். நடந்து விடும், ஒன்றும் பெரிய விஷயம் அல்ல தடைகள் என்ற பெயர் இருக்காது. போகட்டும் விடுங்கள் விஷயம் நடந்தேறிவிட்டது. கணக்கு வழக்கு முடிந்தது. அடையாளமே சிறிது காலத்திற்கு முன்பு தாதியிருந்த போது ஒருமுறை அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த ஆம் சரிங்க! என்ற பாடம் உறுதி செய்யப்பட்டது. இல்லை என்ற வார்த்தையேயில்லை.

(ஹான்ஜி) சரிங்க மிக நல்லது. மதுபன் முதல் நம்பர் வருமா? பாப்தாதாவிற்கு மதுபன் மீது ஒரு மகிழ்ச்சியுள்ளது. ஒவ்வொரு மண்டலத்தின் மீதும் உள்ளது, இப்பொழுது மதுபன் முன்னால் வந்துள்ளது ஆனால் பாப்தாதா அனைத்து மண்டலங்களுக்கும் சொல்கின்றார். ஹான்ஜி, இனிமையான ஆத்மா. இந்த பாடம் உறுதியாக இருக்க வேண்டும். உறுதிதானே! இதில் பரிசை மதுபன் எடுக்க வேண்டும் ஒரு வினாடியில் முடிந்தது போனதை முடிந்ததாக ஆக்கி விட வேண்டும் முடியுமா? முயற்சி செய்வோர் தான். நடந்தும் விட்டது, இருப்பினும் முடிந்ததை முடிந்ததாகக் கொண்டு பறந்து செல்லுங்கள். பறப்பவர்கள் பின்னால் இருப்பதை விட்டு விட்டுச் செல்கிறார்கள். அப்போது தான் பறக்க மடியும், மிக நல்லது.

இப்பொழுது குஜராத் ஏதாவது புதுமை செய்து காண்பிக்கட்டும். பாப்தாதா டெல்லியை சார்ந்தவர்களுக்கும் சொல்லியிருக்கிறார். புதுமையைச் செய்யுங்கள். பாப்தாதாவிற்கு செய்தி கிடைத்தது. உள்நாடு மற்றும் வெளிநாடு எல்லோரும் சேர்ந்து இளைஞர்களுக்கான ஒரு நிகழ்ச்சி ஆரம்பித்துள்ளார்கள். இதில் நல்ல ரிசல்ட் வர முடியும். இப்போது தான் புதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது ஆனால் பாரதமும் அயல் நாடும் ஒன்று இணைந்து மேலும் விந்தை செய்து காண்பிக்க முடியும். இப்போது தான் ஆரம்பிக்கப்பட்டது. ஆனாலும் டெல்லியைச் சார்ந்தவர்கள் நன்கு தைரியமாக இறங்கியுள்ளார்கள். ஆரம்பித்துள்ளார்கள். இப்போது இது உலகம் முழுவதும் பரவலாக விரிவடைந்து உள்நாடு மற்றும் அயல் நாடு எல்லோரும் ஒன்றிணைந்து ஒரு பிராமண குடும்பமாக உள்ளனர். உலகத்திற்கு முன்பாக உலகத்தையும் ஒன்று சேர்த்து விடுவார்கள் ஆரம்பித்து விட்டது, இப்போது முஸ்லீம் மக்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் இப்பொழுது நல்லதொரு நிகழ்ச்சி அமையுங்கள். அதில் மிகப் பெரிய அளவில் முக்கியமாக தேசங்களிலிருந்து வந்துள்ள அனைவரும் உலகிற்கு முன்பாக வெளிப்பட வேண்டும். நாம் எல்லோருமே ஒரு தந்தையின் குழந்தைகள், நம்மிடையே சகோதர சகோதரிகள், சகோதரத்துவம், சகோதரித்துவம் என்ற இந்த முழக்கமே எல்லா திசைகளிலும் பரவவேண்டும். ஒரே மேடையில் அனைத்து விதமான மக்களும் விசேஷமாக இதனை அனுபவம் செய்ய வேண்டும். எல்லோருமே

இதற்கான திட்டம் அமைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது எல்லைக்கு அப்பாற்பட்ட நிலையில் சென்றுக் கொண்டிருக்கிறது. அனைவருக்கும் தெரிய வரவேண்டும். இது ஒரு இறைவனுடைய குடும்பம் என்பது வெளிப்பட வேண்டும். மற்றப்படி இப்போது எல்லோரும் வந்துக் கொண்டிருக்கிறார்கள். சேவையும் செய்கிறார்கள். சுயமுயற்சியும் செய்கிறார்கள். இது இறைவனுடைய காரியம் இது உலகிற்கு முன்பு வெளிப்பட வேண்டும். இது ஒரு குடும்பம். நல்லது.

குஜராத்தைச் சார்ந்தவர்கள் சங்கல்பம் வைத்துள்ளீர்கள், மிக நல்லது. இப்போது ஏதேனும் புதுமை செய்து காட்டுங்கள், ஒவ்வொரு மண்டலமும் ஏதாவது புதுப் புது திட்டம் தீட்டுங்கள். மதுபன் மட்டும் அல்லது முக்கிய பெரிய நகரங்கள் செய்யட்டும் என்பது கிடையாது. அனைவருடைய திட்டமும் ஏதாவது ஒரு புதுமை இருக்க வேண்டும். அந்த அனைத்து விசேஷங்களையும் சேர்த்து ஒன்றாக செயல்படுத்த ஒரு திட்டம் தீட்டுங்கள், அதைப்பார்த்து எல்லோருமே இது நமது நிகழ்ச்சி என்று புரிந்து கொள்ள வேண்டும். இதில் ஏதாவது சேர்க்க வேண்டும் என்றால் அவரவரது கருத்துக்களைத் தரலாம். இப்பொழுது வெகுவிரைவாக இந்த முழக்கம் நாலாபுறமும் பரவேண்டும் அவ்வளவு தான் அவர்களுக்கும் சிறிது அடைவதற்கு நேரம் தரவேண்டும். ஏதேனும் ஒரு ஆஸ்தியை அடைய வேண்டும் அல்லவா? இறுதியாக வருபவர்கள் என்ன அடைவார்கள், எனவே சிந்தியுங்கள். விரைவாக ஏதாவது ஒரு ஆஸ்தியைப் பெற்றுச் செல்லட்டும். இல்லையென்றால் உங்களைத்தான் குறை கூறுவார்கள். எங்களுக்கு ஏன் இறுதியாக சொன்னீர்கள் என்று. அவர்களும் சிறிதாவது ஆஸ்தி பெறட்டும். முக்தி என்னும் ஆஸ்தி எல்லோருக்கும் கிடைக்கத்தான் போகிறது ஆனால் ஜீவன் முக்தியின் ஆஸ்தி? நல்லது.

குஜராத்திலிருந்து 50-கன்னியர்கள் சமர்ப்பணம் ஆகியுள்ளார்கள். நல்லது. சக்தி கிடைத்துள்ளது. சமர்ப்பணம் ஆவது என்றால் பாப்தாதா சொல்வதைச் செய்வதாகும். சங்கல்பம் வைத்து விட்டீர்கள். பாப்தாதா சொல்வதை நாம் செய்தே ஆவோம். இது சங்கல்பம் வைத்து விட்டீர்களா? ஆம் என்றால் கை உயர்த்துங்கள். சமர்ப்பண விழா செய்து விட்டீர்கள் ஆனால் இதை அடுத்து, என்ன பயிற்சி செய்தீர்கள், எதை சமர்ப்பணம் செய்தீர்கள். தடைகள் எதுவாக இருந்தாலும் தடையை

அகற்றுவதில் நிமித்தமாக இருப்பீர்களா? அந்த சக்தி வந்து விட்டதா? சமர்ப்பணம் என்பது இதுவும் உள்ளது அல்லவா? சமர்ப்பணம் இப்படி செய்வதிலும் நம்பர்-1 வரவேண்டும். தடைகளற்றவர்களாகவும் இருந்து, தான் இருக்கும் இடத்தையும் தடைகள் அற்றதாக மாற்ற வேண்டும். நல்லது ஒரு அடி எடுத்து வைத்துவீட்டீர்கள். இனி அடுத்த அடி முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். நல்லது. மேலும் முன்னேறிக் கொண்டேயிருங்கள். முன்னேற வைத்துக் கொண்டேயிருங்கள். நல்லது. இப்பொழுது நீங்கள் வாய் திறங்கள், குலோப் ஜாமுன் சாப்பிடுங்கள். பாப்தாதாவும் சமர்ப்பணம் ஆனதற்காக இனிப்பு வழங்குகிறார்.

இரட்டை அயல் நாட்டவர்: இரட்டை அயல் நாட்டவர்என்றாலே இரட்டை முயற்சியாளர்கள். இரட்டை தீவிர முயற்சியாளர்கள். பாப்தாதா பார்க்கின்றார்: இவர்களிடம் ஊக்கம் உற்சாகம் அதிகமாகவே உள்ளது. எது எப்படியிருந்தாலும் பெரும்பான்மையானவர்கள் ஒவ்வொரு ஆண்டும் மதுபன் வந்து விடுகிறார்கள். பரிவாரத்தையும், பாப்தாதாவையும் நேருக்கு நேராக சந்திப்பதில் ஊக்கம் அதிகமாகவே உள்ளது. எப்படியாவது சேமித்து விடுகிறார்கள். பாப்தாதாவும் பார்க்கின்றார். இவர்களும் டிக்கெட் எடுப்பதிலும் விதவிதமாகக் கையாளும் முறைகளும் நன்றாகவே உள்ளது. எப்படியாவது ஆண்டிற்கு ஒரு முறை பெரும்பான்மையானவர்கள் வந்து விடுகிறார்கள். அயல்நாட்டையும் இந்தியாவாக மாற்றி விடுகிறார்கள். அன்பு உள்ளது. மதுபன் வைப்ரேஷன் இவர்களைக் கவர்ந்து விடுகிறது பாப்தாதாவும் இவர்களுடைய விதவிதமான சேமிப்பு முறைகளைப் பார்த்து பாபாவிற்கும் மனமார்ந்த அன்பு அதிகம் எழுகிறது. ஆஹா அயல் நாட்டவரே ஆகா! முதலில் பெரிய விஷயமாக இருந்தது, ஆனால் இப்போது வெகு சுலபமாக வந்து விடுகிறார்கள். எப்படி இந்தியாவில் ஒவ்வொரு குரூப்பைச் சார்ந்தவர்கள் வருவது போலவே அவர்களும் வந்து விடுகிறார்கள். அயல் நாட்டில் இருந்து வருவது போல் அல்ல. இது தான் மதுபனின் மற்றும் உலகமென்ற முழு குடும்பத்தின் மீதுள்ள அன்பாகும். பாப்தாதாவிடம் அன்பு இருக்கவே இருக்கிறது பாப்தாதாவை எல்லோரும் மேரா பாபா (என்னுடைய பாபா) என்று உளமாற சொல்கிறார்கள். ஏனென்றால் பாப்தாதா அமிர்தவேளையில் இருந்து விசேஷமாக அயல்நாட்டில் வலம்

வருகிறார். பாப்தாதாவிற்கு வலம் வர எவ்வளவு நேரம் ஆகும்? அங்கேயும் வலம் வருகிறார். எப்படி இருக்கிறார் என்பதைப் பார்க்கின்றார்? ஈர்ப்போடு இருக்கிறார்கள். மூழ்கி முயற்சி செய்வதும் நன்றாக இருக்கிறது. இப்பொழுது ஒரு விஷயத்தில் பெரும்பாலும் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தியாவின் இன்னும் மீதமுள்ள இடங்களையும் சேவை செய்துவிட வேண்டும் என்பதைப் போலவே அயல் நாட்டிலும் அந்த எண்ணம் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. முடிந்த அளவிற்கு ஆங்காங்கே சேவை: செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அயல் நாட்டில் எத்தனை தேசங்களில் சென்டர் உள்ளது. (137-தேசங்களில் சேவை நடந்து கொண்டிருக்கிறது. எத்தனை ஆண்டுகளில் இத்தனை உருவாகியுள்ளது. (லண்டனை சார்ந்தவர்கள் 2011-ஆண்டை 40வது ஆண்டு. விழாவாகக் கொண்டாட இருக்கிறார்கள். நல்லது. கைத் தட்டுங்கள். (ஸ்பெயின், மெக்சிகோ. இங்கெல்லாம் கூட 30வது ஆண்டைக் கொண்டாடுகிறார்கள். நல்லது. நீங்கள் அனைவரும் இதைக் கேட்கும்போது மகிழ்ச்சி வருகிறது அல்லவா? ஏன்? எந்த தேசமாக இருந்தாலும் சரி, அயல்நாடோ அல்லது இந்தியாவோ, குறைந்தபட்சம் தந்தை வந்து விட்டார் என்ற செய்தி எல்லோரையும் சென்று சேர வேண்டும். என்னுடைய தந்தை வந்திருக்கிறார்: எனக்கு செய்தியே தரவில்லையே என்று யாரும் சொல்லிவிடக்கூடாது. இந்தியாவோ அல்லது அயல்நாட்டிலோ வெகுகாலமாக இல்லையென்றாலும் சரி சிறிது காலத்திற்காவது எல்லோருக்குமே செய்தி கிடைக்க வேண்டும் பகவான் வந்து விட்டார் என்று. பகவான் வந்தார், ஆஸ்தி கொடுத்து விட்டு சென்று விட்டார் என்று யாரும் சொல்லி விடக்கூடாது. செய்தி தருவது உங்களுடைய வேலை. அதன் படி நடப்பது நடக்காதது அவர்களுடைய வேலை ஆனால் செய்தியை சென்று சேரச் செய்வது உங்களுடைய வேலை. யார் எங்கே இருந்தாலும் அவர்களைச் சென்று அடைய வேண்டும். இப்பொழுது அறிவியல் சாதனமும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. விரைவாக எந்த செய்தியும் பரவி விடுகிறது. எல்லோரையும் செய்தி சென்று சேரும் வண்ணம் ஏதாவது திட்டம் திட்டுங்கள். முடியுமா கடினமா? இல்லைதானே? இப்போது பட்டியல் எடுங்கள், பாரத்தில் எதுவரை செய்தி சேர்ந்துள்ளது. அயல் நாட்டில் எதுவரை சென்று சேர்ந்துள்ளது, ஏதாவது வழி கண்டுபிடியுங்கள், சம்மந்தத்தில் வைப்பதற்கான சாதனமும் உள்ளது ஆனால் யாரும் புகார் செய்து விடக்கூடாது.

அப்படிப் பார்க்கும் பொழுது இன்னும் சில தேசங்கள். செய்தி சென்று சேராத இடங்கள் தெரிய வரும். மிக நல்ல நல்ல சாதனங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன ஆனால் அவற்றை எப்படி பயன் படுத்துவது என்பதற்கான திட்டம் தீட்டுங்கள்.

நாலாபுறமும் உள்ள குழந்தைகளுக்கு பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணிநேரமும் முன்னேறுவதற்கான வாழ்த்துக்கள். நேரம் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் சமயத்திற்காக எதிர்பார்க்கக் கூடாது. நீங்கள் சமயத்தை எவ்வளவு அருகில் கொண்டு வர வேண்டுமோ அந்த அளவிற்கு முடிவை கொண்டு வர வேண்டும். அந்த அளவிற்கு தான் முடிவு தான் அருகே கொண்டு வரும். சமயம் வந்தால் தயாராகலாம் என்று பிராணர்கள் நினைக்கக்கூடாது. நீங்கள் தான் சமயத்தை அருகில் கொண்டு வர வேண்டும். சமயம் பாபாவிற்குச் சொல்கிறது. இப்பொழுது பிராமண ஆத்மாக்கள் சமயமாகிய என்னை அருகே கொண்டு வரவேண்டும். இயற்கையும் பாபாவுக்குச் சொல்கிறது, இப்போது முடிவு நேரத்தை அருகே கொண்டு வரவேண்டும் என்று, அவர்களுக்கு பாப்தாதா என்ன பதில் சொல்வது? இப்பொழுது முடிவு நேரத்தை அருகே கொண்டு வருவது என்றால் தன்னை சம்பன்னமாக, சம்பூர்ணமாக மாற்றுவது ஆகும். ஏனென்றால் பாப்தாதா தனியாக செல்ல மாட்டார். குழந்தைகளோடுதான் செல்வார். எனவே அதற்கான தேதியைக் குறிப்பிடுங்கள். எதுவரையில்? வேலை கொடுத்தாயிற்று, இப்போது ஒன்று சேர்ந்து அதற்கான ஆலோசனை செய்யுங்கள். பாப்தாதா இயற்கைக்கு என்ன பதில் சொல்வது. இயற்கை மிகவும் தொந்தரவுக்கு ஆளாகியுள்ளது. துக்கத்தில் இருக்கும் ஆத்மாக்கள் மிகவும் மனதிற்குள் கூக்குரல் போட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். மனதால் சேவை இப்போது அதிகப்படுத்துங்கள். செய்கிறீர்கள், ஆனால் அந்த மன சேவையை இடைவிடாது அதிகரித்துக் கொண்டேயிருக்க வேண்டும். அதனை இன்னும் அதிகப்படுத்துங்கள், ஏனென்றால் இயற்கையும், துக்கத்தில் இருக்கும் ஆத்மாக்களும் பாபாவிடம் வருகிறார்கள். கதறுகிறார்கள். நீங்கள் அவர்களுக்கு ஏதேனும் சாந்தி சுகத்தின் அனுபவத்தை செய்ய வையுங்கள். அவர்கள் ஒரு வினாடியில் அமைதியைத் தேடுகிறார்கள். சிறிதாவது அமைதியை கொடுத்து விடுங்கள். பசியில் வாடுபவர்கள் ஏதேனும் கிடைக்காதா என்று

நினைப்பது போல் அவர்களுக்கு ஏதாவது சிறிதளவாவது கிடைக்கட்டும். எனவே அதற்கான மனதின் சேவையை அதிகப்படுத்துங்கள். வார்த்தைகள் மூலமாக சேவை நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கிறது. பாப்தாதாவும் அதைக்குறித்து மகிழ்சரி அடைகிறார். நல்லது. பாப்தாதா வீட்டுப் பாடம் கொடுத்திருக்கிறார், நினைவில் வையுங்கள், பிறருக்கும் நினைவூட்டுங்கள்.

பாப்தாதாவின் மன சிம்மாசனத்தில் உள்ள குழந்தைகளுக்கு உலக நன்மைக்கான காரியத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதா திருஷ்டி, வழங்குகிறார். திருஷ்டி வழங்கியபடியே உளமாற வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தைகளும் தூரத்தில் அமர்ந்திருந்தாலும் பாபாவிற்கு முன்பாக அமர்ந்திருக்கும் என்ற அனுபவத்தை செய்து கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் தன் உள்ளத்தில் அமர்த்தியபடி அனைத்து குழந்தைகளுக்கும் நமஸ்காரம், நமஸ்காரம் செய்கின்றார்.

தாதிமார்களுடன்: (பாபாவுடைய வலியுறுத்தும் விதம் அனைவரையும் ஊக்குவிக்கிறது. வெகு விரைவாக எல்லோருக்கும் செய்தி சென்று சேந்து விடும்). சென்று அடைந்து கொண்டு தான் இருக்கிறது ஆனால் இந்த சம்ஸ்காரம் இருக்கிறது அல்லவா, கேட்கும் பொழுது செய்ய வேண்டி ஆர்வம் வருகிறது ஆனால் சம்ஸ்காரம் இடையில் திரைச் சீலை போன்று மறைத்து விடுகிறது. பாபா செய்து கொண்டு தான் இருக்கிறார் ஆனால் எல்லோரும் குழுவாக இணைந்து இந்த வாக்குறுதி செய்யுங்கள், நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து செய்து காட்டுவோம், தினமும் நாங்கள் ஒருவருக்கொருவர் உடன் இருப்போர்களோடு இணைந்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு, உறங்கச் சென்றால் அன்றைய தினம் நன்றாகக் கழிந்தது போகும்!

சகோதரி மோகினியுடன்: எல்லாம், நன்றாக நடந்து விடும். இவர் இடையில் சிறிது தவறு செய்து விட்டார். எனவே அதிகமாகி விட்டது. சற்று அன்ன ஆகாரத்தில் கவனம் வையுங்கள், என்ன டைரக்ஷன் கிடைக்கிறதோ அதன்படி செய்யுங்கள். எல்லாம் நன்றாகி விடும். (பாபா இந்த தேகங்களை இளமையாக மாற்றி விடுங்களேன்) இது டிராமவின்

கையில் உள்ளது. பாபாவின் கையில் இல்லை. (பாப்தாதாவின் கையில் தான் உள்ளது) தற்காலிகமாக அது வேலை செய்வதற்காக!

பரதாதியுடன்: பாருங்கள், இவர் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறார்!

ரமேஷ் சகோதரருடன்: நீங்கள் செய்துள்ள திட்டம் சரியானது. செய்யலாம். அமர்ந்து தன்னுடைய திட்டத்தை ஆரம்பியுங்கள். மேலும் புதுப் புது கண்டுபிடிப்புகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அது எல்லாம் என்னென்ன உருவாகியுள்ளதோ அதனால் நமக்கு என்ன லாபம் ஏற்படும் என்பதை சிந்தனை செய்யுங்கள். நடப்பது நடந்து கொண்டு தான் இருக்கிறது.புதுயையாக ஏதாவது செய்யுங்கள். சகோதரி சாந்தியுடன்: வியாதியிலும் தன்னை நடத்துவது இது உங்களுக்கு நன்றாக வந்து விட்டது. எனக்கு உடல் நலம் இல்லை, நலம் இல்லை என்று அமர்ந்து விடக்கூடாது. உங்களுக்கு நடந்து கொள்ளத் தெரிந்து விட்டது. (பாபா உங்களுக்கு நன்றி உங்களுக்கும் நன்றி. உடலை நன்கு நடத்தத் தெரிந்து கொண்டீர்கள். சாந்திவனத்தின் சோலார் அமைக்கும் சகோதரர் கோலோ அவர்களுடன்: இப்போது இனி என்ன ஆகுமோ என்ற பயம் போய்விட்டது. என்ன ஆகும் அப்படி ஆகும்? ஏனென்றால் எல்லோருக்கும் இதே சங்கல்பம் நடந்தே ஆக வேண்டும். எனவே அனைவரின் சங்கல்பமும் இதனை செயல்படுத்திக் கொண்டு வருகிறது. நல்லது.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 31.12.2010 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பழைய வருடத்திற்கு விடைகொடுத்து அனுப்புவதுடன் பழைய சுபாவங்களுக்கும் விடை கொடுத்து அனுப்பி தடைகளற்றவர்களாக இருப்பதற்காக திட சங்கல்பம் எடுங்கள் மற்றும் இரக்க உள்ளம், மாஸ்டர் வள்ளலாக மாறி மனதின் சேவை மூலமாக துக்கம், அசாந்தியில் உள்ள ஆத்மாக்களுக்கு அடைக்கலம் கொடுங்கள்!

இன்று பாப்தாதா நாலாபுறமும் இருக்கின்ற குழந்தைகளுக்கு புத்தாண்டிற்காக மற்றும் புதிய உலகிற்கான வாழ்த்துக்களைத் தருவதற்காக சூட்சும வதனத்தை விட்டு ஸ்தூல வதனத்திற்கு வந்துள்ளார். குழந்தைகள் அனைவரும் கூட அன்பு மற்றும் சிநேகத்துடன் தன்னுடைய மதுபன் வீட்டிற்கு வந்துள்ளீர்கள். உலக மக்கள் புதிய ஆண்டை மட்டும் கொண்டாடுகிறார்கள் அது ஒரு நாள் மட்டும். நீங்கள் புதிய உலகிற்காக சங்கமயுகம் முழுவதுமே கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு எதிரில் புதிய உலகம் கண்ணில் சதா கலந்துள்ளது. நினைவு செய்யுங்கள். அங்கே சென்று விடுங்கள். கண்களில் கலந்திருக்கிறது தானே? அனுபவம் ஆகிறதா? இப்போது சங்கமயுகத்தில், தன்னுடைய இராஜ்யத்தில் இருப்பீர்கள். இப்படி கண்களில் தெளிவாக தென்படுகிறது. உலக மக்கள் ஒருவருக்கொருவர் ஒரு நாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பார்கள் ஆனால் உங்களுக்கு பாப்தாதா பரிசாக பொன் உலகையே தருகின்றார்.

அது நீண்டகாலம் நடைபெறும். ஒரு விநாடியில் அங்கு சென்று அடையும் அளவிற்கு கண்களில் கலந்துள்ளதா? அனைவருக்கு எதிரிலும் தன்னுடைய பொன்னுலகம் கண்களில் கலந்துள்ளதா? கலந்துள்ளது தானே? ஒரு வினாடியில் அங்கு செல்ல முடியும் அல்லவா? இன்று சங்கமத்தில், நாளை ராஜ அதிகாரியாக ராஜ்யம் செய்வீர்கள்.

இப்பொழுது சமயத்திற்கு ஏற்ப பூர்வஜ் ஆத்மாக்களுடைய உங்களுடைய பக்தர்கள் துக்கம் மற்றும் ஆசாந்தியின் காரணத்தால் எவ்வளவு கூக்குரல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது உங்களுக்குத் தெரிகிறதா? அந்த கூக்குரல் காதில் விழுகிறதா? எப்படியெல்லாம் துக்கம் அசாந்தியால் கதறிக் கொண்டிருக்கிறார்கள், எங்களுக்கு சாந்தியை கொடுத்து விடுங்கள். சுகத்தை கொடுத்து விடுங்கள். மகிழ்ச்சியை கொடுத்து விடுங்கள், இது உங்கள் காதுகளை வந்து அடைகிறதா? கொடுங்கள். கொடுங்கள். எனவே நீங்கள் அந்த ஆத்மாக்களுக்கு இரக்கம் உள்ளம் உடையவர்களாகிய கல்யாணகாரி வள்ளலில் குழந்தையான உருவத்தில் மனதின் மூலமாக வழங்குவதற்கான சேவை அவசியம் செய்ய வேண்டும். அந்த துக்கம் அசாந்தியில் உள்ள ஆத்மாக்களின் மீது பாப்தாதாவிற்கு மிகவும் இரக்கம் ஏற்படுகிறது. உங்களுக்கும் இரக்கம் ஏற்படுகிறது அல்லவா? (இருமல்) இன்று பிரம்மாபாபாவின் இருமல் வந்து விட்டது. எனவே உங்களுக்கும் அந்த ஆத்மாக்களின் மீது இரக்கம் ஏற்படுகிறது அல்லவா? இப்பொழுது இந்த வருடத்தில், ஏனென்றால் இன்றைய நாளில் புதிய வருடம் வருகிறது. பழைய வருடம் செல்லத்தான் போகிறது. சென்ற வருடத்தில் என்ன திட்டம் நீங்கள் தீட்டினீர்கள், வருடம் சென்று விடும், ஆனால் நீங்கள் அனைவரும் இந்த வருடத்தோடு இணைந்து வேறு எதற்கு விடை கொடுப்பீர்கள். வருடத்திற்கு விடை கொடுத்து அனுப்புவது கூடவே நீங்கள் தன்னுடைய வாழ்க்கையில் எதற்கு விடை கொடுத்து அனுப்புவீர்கள். தன்னுள் புதியதாக எதை நிரப்புவீர்கள். சதா காலத்திற்கும் விடை கொடுத்து அனுப்புவீர்களா? அல்லது சிறிது காலத்திற்காகவா? ஏனென்றால் பாப்தாதா சமிக்ஞை கொடுத்துள்ளார், இது வரையிலும் தன் மனதில் இருக்கின்ற சுபாவ சம்ஸ்காரங்களைப் பார்த்து அதனை தெரிந்து கொண்டு ஆழித்தே தீர வேண்டும். பாப்தாதாவிற்கு இந்த

பழைய சுபாவம் முயற்சியில் தடை ரூபமாகத் தென்படுகிறது. குழந்தைகள் ஒரு புறம் சொல்கிறார்கள் பாபா தான் எனது உலகம் என்று. பிறகு பழைய சுபாவ சம்ஸ்காரங்கள் எங்கிருந்து வந்தது? அப்படி உலகமே பாபா என்றிருந்தால் முயற்சியில் தடையாக இருக்கின்ற பழைய சுபாவ சமஸ்காரங்கள் அழிந்தே போக வேண்டும் அல்லவா? அமிர்தவேளையில் ஆன்மீக உரையாடல் செய்யும் பொழுது பாபா பார்க்கின்றார். அனைவரும் தன்னைப் பற்றிய கணக்கு வழக்கைத் தருகின்றீர்கள். அதில் இது வரையில் தன்னுடைய பழைய சுபாவ சம்ஸ்காரங்கள் தான் முயற்சியை தொய்வடையச் செய்கிறது. எனவே இன்றைய நாளில் வருடத்திற்கு விடைகொடுத்து அனுப்புவதோ, இந்த சம்ஸ்காரங்களுக்கும் விடை கொடுத்து அனுப்ப முடியுமா? அனுப்ப முடியுமா? கை உயர்த்துங்கள்! கொடுத்து விட வேண்டும் கை உயர்த்துவது என்னவோ மிகவும் சுலபம் தான் ஆனால் மனம் என்னும் கையை உயர்த்துங்கள். உயர்த்துகின்றீர்களா? பழைய சம்ஸ்காரங்களுக்கு சதா காலத்திற்காகவும்... கை உயர்த்துகின்றீர்களா? நீங்கள் உயர்த்துங்கள். நல்லது. பாப்தாதாவை பெரும்பானமையான குழந்தைகள் கை உயர்த்தி மகிழ வைத்து விட்டீர்கள் பாப்தாதாவிற்கு தைரியமான குழந்தைகள் என்பதில் தான் குஷி ஏற்படுகிறது. எங்கே தைரியம் இருக்குமோ அங்கே பாப்தாதாவின் உதவி சதா இருக்கிறது. எனவே இப்பொழுது கை உயர்த்தின பொழுதே சிறிய பெரிய சென்டர் இடங்கள் எதுவாயினும் சதா காலத்திற்கு நிர்விக்னமாக ஆகி விட்டது அல்லவா? ஏனென்றால் பாப்தாதாவிடம் வருகின்ற ரிசல்ட்டைப் பார்க்கும் பொழுது அதற்கான காரணம் பழைய சம்ஸ்காரமாகதான். இருக்கிறது. எனவே இன்று அந்த சம்ஸ்காரத்தை சங்கல்பத்தால் சமாப்தி (அழித்து விடுங்கள்) செய்து விடுங்கள். அதாவது நிர்விக்ன பவ என்ற வரதானத்தை அடைந்தீர்கள். அடைந்து விட்டீர்களா? வரதானத்தை அடைந்தீர்களா? அதை தைரியம் வைத்ததற்கான பலன் கிடைக்குமல்லவா? மேலும் பாப்தாதாவின் வரதானம் கிடைத்துள்ளது. குழந்தைகளின் ஒரு அடி தைரியம் வைத்தால் அநேக அடி பாபாவின் உதவி இருக்கவே இருக்கிறது. எனவே இந்த எண்ணத்தை நினைவில் வையுங்கள், நாம் பழைய சம்ஸ்காரங்களை கொடுத்து விட்டோம், அப்படி அது உங்களிடம் திரும்பி வந்து விட்டால் என்ன செய்வீர்கள்? அதை என்ன செய்வீர்கள்? கொடுத்தபொருளை திரும்பப் பெற்று தன்னிடம் வைப்பதில்லை.

ஏனென்றால் கொடுத்து விட்டோம் என்றாலே அது எனது அல்ல. எனது இல்லாதப் பொருளை தன்னிடம் எப்படி வைக்க முடியும்? பாபாவிற்கு கொடுத்து விட்டாகி விட்டது, பாபாவிடம் தானே கொடுத்தீர்கள். உறுதிதானா? கொடுத்து ட்டீர்கள் அல்லவா உறுதியாக? இப்பொழுது இரு கரங்களையும் உயர்த்துங்கள், உறுதியாக? பின்னால் இருப்பவர்களும் உயர்த்துகிறார்கள்.

பாப்தாதாவிற்கு இந்த விஷபத்தில் மகிழ்ச்சி தான். கலியுகத்தில் வாழ்ந்தாலும் பாபா மூலமாகப் பெறப்பட்ட பிராப்திகளை இந்த சங்கமயுகத்தில் அனுபவம் செய்கின்றீர்கள். உலகிய மக்களுக்கு இது கலியுகம் தான் ஆனால் உங்களுக்கு சங்கமயுகம். அதாவது அனைத்து பிராப்திகளையும் பெறும் யுகம். பரமாத்மாவின் பிராப்திகள் என்பது சர்வ சக்திகள், சர்வ குணங்கள், சர்வ ஞானம், பெறப்பட்ட இந்த அனைத்து பொக்கிஷங்களையும் நடைமுறையில் அனுபவம் செய்கிறீர்கள். எனவே இன்றைய நாளில் பாப்தாதா யாரெல்லாம் கை உயர்த்தினீர்களோ அந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் இங்கே எதிரில் அமர்ந்திருந்தாலும் சரி, தூரத்தில் அமர்ந்திருந்தாலும் சரி, உள் நாடு, வெளிநாட்டில் இருந்து ஆங்காங்கே கேட்டுக் கொண்டிருந்தாலும் சரி அந்த அனைத்து குழந்தைகளுக்கும் மிக மிக உளமாற என்ன வழங்கிக் கொண்டிருக்கின்றார்: வாழ்த்துக்கள் வழங்கிக் கொண்டு தான் இருக்கின்றார் ஆனால் வாழ்த்துக்களுடன் அனைவரது நெற்றியிலும் தனது ஆசீவாத கை வைக்கின்றார். நீங்களும், பாப்தாதாவும் மனதால் நடனம் ஆடிக் கொண்டிருக்கின்றீர்களா? ஆஹா! குழந்தைகளே ஆஹா என்று பாபா தன் மனதிற்குள் நடனமாடுகின்றார். சொல்லுங்கள். நீங்கள் மனதில் நடனம் ஆடுகின்றீர்களா? சொல்லுங்கள் ஹான்ஜி (சரி பாபா).

இப்பொழுது ஆசிரியயைகளைப் பாருங்கள். ஆசிரியைகள் அனைவரும் கை உயர்த்துங்கள். அயல் நாட்டு ஆசிரியைகளும் இருக்கின்றார்கள் அல்லவா? பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தையினுடைய திடமான சங்கல்பத்தைக் கேட்கும்போது குஷி ஏற்படுகிறது. இப்பொழுது பாப்தாதா விரும்புகின்றார். பாப்சமான் ஆக வேண்டும் என்று. குழந்தைகள் வைத்த லட்சியம் சம்பன்னம் சம்பூர்ணம் ஆக வேண்டும். அதில் நிர்விக்னமாக இருந்து திடசங்கல்பம் அந்த சம்பன்னமான சமயத்தையும் சமீபத்தில் கொண்டு வரும். பாப்தாதாவிற்கு இதுவும்

குஷி தான். அனைத்துக் குழந்தைகளும் என்ன எண்ணம் வைத்தார்களோ அதை சம்பன்னமாக பூர்த்தி செய்வார்கள். மேலும் துக்கம் அசாந்தியில் உள்ள உலகிய ஆத்மாக்களுக்கு மனதின் சேவை மூலமாக ஏதேனும் ஒரு வேகையில் அடைக்கலம் கொடுத்துக் கொண்டேயிருப்பார்கள். ஏனென்றால் அந்த அழுகுரல், கதறுதல் சகித்துக் கொள்ள முடிவதில்லை. அவர்களும் உங்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்கள்தானே? துக்கம் அசாந்தி அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. எனவே இப்பொழுது இரக்கம் உள்ளவர்களாக மாறுங்கள், அதோடு மட்டுமல்லமால் இந்த சங்கல்பத்தையும் வைத்துக் கொள்ளுங்கள், நடமாடும் பொழுதும், அமிர்தவேளையிலும் ஆத்மாக்களுக்கான மனதின் சேவையும் அவசியம் செய்வோம், இந்த சங்கல்பம் செய்ய முடியுமா? சம்ஸ்காரங்களை சதா காலத்திற்கும் அழித்து விடுவோம் என்று சங்கல்பம் செய்ததைப் போலவே, சதா காலத்திற்காகத்தானே செய்தீர்கள்? சிறிது காலத்திற்காக அல்லவே. எப்படி சம்ஸ்காரத்தை அழித்து விட்டு பாபாவிற்குச் சமமாக ஆவோம் என்று எண்ணம் வைத்தீர்களோ, அது போலவே வள்ளலின் குழந்தைகளாகிய மாஸ்டர் வள்ளல் சொரூபத்தின் மூலம் மனதின் சேவையும் செய்ய வேண்டும். இதற்காக தயாராக இருக்கிறீர்களா? மனதால் சேவை செய்ய தயாராகி விட்டீர்களா? மனதால் சேவை செய்வீர்களா? கை உயர்த்துங்கள். முழு நாளிலும் நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் மனதால் சேவை அவசியம் செய்ய வேண்டும். ஏனென்றால் குழந்தைகளாகிய நீங்கள் சுகமயமான உலகைக் கொண்டு வர வேண்டும். பாபா இந்த சேவைக்காகத்தான குழந்தைகளாகிய உங்களை தனது வலது கரமாக மாற்றியிருக்கிறார். கைகளால் தானே வழங்க முடியும். நீங்கள் பாபாவின் வலது கரங்கள் தானே? எனலே பாப்தாதா வலது கரங்களாகிய உங்களுக்கு இந்த சேவை தர விரும்புகின்றார். எல்லோருக்கும் ஏதாவது ஒன்றைக் கொடுத்துக் கொண்டேயிருங்கள். அவர்கள் கூக்குரல் இடுகிறார்கள் தாருங்கள் தாருங்கள் என்று, நீங்கள் துக்கத்தில் இருப்பவர்களுக்கு சுகம் கொடுங்கள், மன இருக்கத்தில் இருப்பவர்களுக்கு சக்தி கொடுங்கள், கொடுத்து புண்ணிய காரியம் செய்யுங்கள். இப்பொழுது தன்னை புரிந்து கொண்ட குழந்தைகளாகிய நீங்கள் தந்தையையும் புரிந்து கொண்டு ஆஸ்திக்கு அதிகாரி ஆகி விட்டீர்கள், பிறரையும் அப்படியே மாற்றி விடுங்கள், ஏனென்றால் இப்போது அனைவரும் முக்தியை

விரும்புகிறார்கள். எல்லோரையும் முக்திக்கு அனுப்பி விட்டு பாபாவின் வரதானத்தால் இராஜ்யத்தின் அதிகாரியாக ஆவீர்கள். எனவே பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளுக்கும் இதையே சங்கல்பமாக தருகின்றார் நிர்விக்னமாக ஆகுக, சேவாதாரி ஆகுக. யாரெல்லாம் பாபாவின் குழந்தையாக ஆகியுள்ளீர்களோ அவர்களுக்கு சங்கமயுகத்து பிராமண வாழ்க்கையின் ஆனந்தம் அனுபவம் ஆகிக் கொண்டிருக்கிறது, மேலும் அனுபவம் ஆகிக் கொண்டேயிருக்கும். அப்படி வந்திருப்பவர்கள் புதியவர் ஆனாலும் சரி, பழைய குழந்தைகள் ஆனாலும் சரி, தன்னை பாபாவின் ஆஸ்திக்கு அதிகாரி என்று உணர்ந்தவர்கள். அதீந்திரிய சுகம் என்னும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டேயிருங்கள். சம்ஸ்காரங்களை வெற்றி அடைவோம் என்ற சங்கல்பமும் முன்பு நீங்கள் செய்துள்ளீர்கள். அந்த அனைத்து ஆத்மாக்களும் கோடியில் ஒருவராக ஆகியுள்ளீர்களா, அல்லது அந்த ஒருவரிலும் ஒருவராக ஆகியுள்ளீர்களா? ஜனக் குழந்தை (ஜானகி தாதி) சொன்னார்கள், 108-மணி மாலை, 16000-மணி மாலையில் வருபவர்களை மட்டும் சந்தியுங்கள் என்று, நீங்கள் அப்படி உணர்கிறீர்களா, நாங்கள் 16000-மற்றும் இந்த 108-மாலையில் கண்டிப்பாக வருவோம் என்று. அப்படி நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள்.

புதியதாக இருக்கின்ற குழந்தைகளும் கை உயர்த்துகின்றார்கள், வாழ்த்துக்கள். நம்பிக்கை வெற்றியைத் தருகின்றது. பாப்தாதாவிற்கும் தெரியும் நம்பிக்கைப்புத்தி வைத்திருப்பவர்கள் முன்னால் செல்ல முடியும், செல்வார்கள். நல்லது. இங்கே முன்னால் அமர்ந்துள்ளீர்கள் அல்லவா? முதன் முறையாக வந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். அனைவர் சார்பாகவும் பாப்தாதா உங்களுக்கு வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார். நீங்கள் வைத்த நம்பிக்கையை அமிர்தவேளையில் சதா திரும்பத்திரும்ப நினைவு செய்து கொண்டேயிருங்கள். நல்லது பாப்தாதாவிற்கு குழந்தை களைப் பார்த்து ஒரு விஷயத்தில் மகிழ்ச்சி ஏற்படுகிறது டூலேட்டிற்கு முன்பாகவே வந்து தன்னுடைய ஆஸ்திக்கு அதிகாரியாகி விட்டீர்கள். எனவே இங்கு வந்திருப்பவர்கள் மற்றும் ஆங்காங்கே அவரவருடைய சென்டரில் இருக்கக் கூடிய குழந்தைகள் அனைவர் சார்பாகவும் பாப்தாதா உங்களுக்கு வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார். இப்போது நீங்கள் ஒரு விந்தை செய்து காண்பியுங்கள். தைரியம் உள்ளதா?

சொல்லுங்கள்? தைரியம் உள்ளதா? நீங்கள் ஆரம்பத்திலிருந்தே தடைகளற்றவர்களாக இருங்கள், நம்பிக்கையிலும், போதையிலும் நம்பர்-1 ஆகச் செல்ல வேண்டும். பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி தான். பழைய குழந்தைகள் பழைய குழந்தைகள் தான் ஆனால் புதிய குழந்தைகள் சிறிது காலத்திலேயே விந்தைகள் செய்து காண்பிப்பார்கள். நல்லது.

இப்போது பாப்தாதா விரும்புகின்றார் புதிய குழந்தைகள், பழைய குழந்தைகள் யாராயினும் அனைவருக்கும் ஒரு விளாடிக்கான வேலை தருகின்றார். அனைவரும் இப்போதே ஒரு வினாடியில் தன்னை அனைத்து சங்கல்பங்களிலிருந்தும் விலக்கிக் கொண்டு ஒரு வினாடியில் தன்னை பிந்து ரூபத்தில் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும். செய்வீர்களா? ஒரு வினாடியில் நான் பிந்துவாக இருக்கின்றேன், வேறு எந்த எண்ணமும் கூடாது, நான் பிந்து யாரெல்லாம் ஒரு வினாடியில் தன்னை பிந்துவாக நிலைத்திருக்கச் செய்தவர்கள் கை உயர்த்துங்கள். வினாடியில் இருந்தீர்களா? நல்லது. இப்பொழுது இந்த பயிற்சியை 15-நாட்கள், முழு நாளில் ஒவ்வொரு மணி நேரத்திலும் ஒரு வினாடி பிந்துவாக நிலைத்திருங்கள், இந்த பயிற்சியை ஒவ்வொருவரும் செய்ய வேண்டும். அங்கே உங்களுடைய சூழ்நிலையில் இருந்தாலும், தன்னுடைய காரியங்களை செய்படுத்திக் கொண்டிருநதாலும் சோதனைச் செய்யுங்கள், ஒரு வினாடியில் பிந்து ரூபத்தில் நிலைத்திருப்பதில் வெற்றிக் கிடைக்கிறதா? ஏனென்றால் இங்கே உங்களது வாயுமண்டலமும் வசதியாக இருக்கிறது ஆனால் அங்கே அவரவர்களது இடங்களில் ஒரு வினாடியில் பிந்து சொரூபத்தில் நிலைத்திருக்க முடியுமா? இந்த பயிற்சியை செய்யுங்கள். ஏனென்றால் பாப்தாதா சொல்லி விட்டார் காலம் போகப்போக எவ்வளவு முன்னேற்றம் அடைகிறீர்களோ, அந்த அளவிற்கு ஒரு வினாடியில் பிந்து நிலையில் நிலைத்திருக்க வேண்டிய பயிற்சி மிக அவசியமானதாக இருக்கும். எனவே தன்னைத்தானே சோதனை செய்யுங்கள், அவரவது இடங்களில் தன்னைப் பற்றிய ரிப்போர்ட் தங்களது ஆசிரியைகளுக்குத் தரவேண்டும், பிறகு டீச்சர்ஸ் மூலமாக இங்கு அனுப்பினாலும் சரி. அல்லது அங்கே வைத்துக் கொண்டாலும் சரி, அனைத்து வகுப்பிலும் இந்த ஒரு வீட்டுப்பாடம் அவசியம் தர வேண்டும், இதைப்பற்றிய ரிசல்ட் பாப்தாதாவிடம் வந்து சேரும்.

அப்போது பார்ப்போம். அதை வைத்து தெரிந்து கொள்ளலாம், நங்கள் 108'ல் வருவீர்களா, 16000-மாலையில் வருவீர்களா? இதற்கு அதிகாரி யார் என்பது ஒரு வினாடியில் தினசரியில் எந்த அளவிற்கு வெற்றி அடைகிறீர்களோ அதை வைத்து தெரிந்து கொள்ளலாம் நீங்கள் எதற்கு தகுதியானவர்கள் என்று, ஏனென்றால் இப்பொழுது கை உயர்த்த வைத்தால் எல்லோருமே கை உயர்த்திவிடுவீர்கள், ஆனால் நடைமுறை தாரணையில் தான் தெரிய வரும் நான் 108ல் வருவேனா? அல்லது 16000ல் வருவேனா என்பது. நீங்கள் ரிசல்ட்டை மட்டும் எழுதி அனுப்புங்கள். அதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஏனென்றால் தாதிமார்கள் புரிந்து கொள்ளுங்கள், நாங்களும் வருவோம் என்று பெயர் கொடுத்து விடுவார்கள் ஆனால் இந்த ரிப்போர்ட் மூலம் தெரிந்து விடும்.

பாப்தாதா கேட்கின்றார். சதா காலமும் ஒரு வினாடியில் எந்த ரூபத்தை அனுபவம் செய்ய விரும்புகின்றீர்களோ அதைச் செய்ய முடிகிறதா ஒரு வினாடியில்? 5-சொரூபங்களைப் பற்றி சொல்லட்பட்டது. அதையும் நீங்கள் விரும்பிய உடனேயே ஒரு வினாடியில் சொரூபமாக மாற முடிகிறதா? இந்த பயிற்சி செய்து தன்னைத்தானே தெரிந்து கொள்ளுங்கள், நான் எதை விரும்புகிறேனோ அதை ஸ்திதியில் ஒரு வினாடியில் இருக்கின்றேனா? அல்லது நேரம் அதிகமாகின்றதா? மற்றபடி பாப்தாதா குழந்தைகள் கை உயர்த்துவதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். பெரும்பாலான குழந்தைகள் கை உயர்த்திவிடுகிறார்கள். இப்பொழுது இந்த கையை உயர்த்திவிட்டீர்கள், ஆனால் பயிற்சி செய்து செய்து எப்படி துவபர மற்றும் கலியுகத்து பயிற்சியான தேக அபிமானத்தில் வருவது இயல்பாகி விட்டதோ அதேபோல எந்த சொரூபத்தில் நிலைத்திருக்க விரும்புகின்றீர்களோ அதுவும் அப்படியே மிக சுலபமாக இயல்பாகி விட வேண்டும். ஏனென்றால் அப்படிப்பட்ட நேரம் வரப்போகின்றது அப்பொழுது உங்களுக்கு இந்த பயிற்சி மிக அவசியமானதாக இருக்கும். எனவே இந்த பயிற்சியை ஒவ்வொருவரும் தத்தமது காரியங்களை செய்து கொண்டிருந்த பொழுதும் பயன்படுத்த வேண்டும். பிறகு இதைப் பற்றிய ரிசல்ட் தங்களுடைய ஆசிரியைகளுக்குக் கொடுத்துக் கொண்டேயிருங்கள் இந்த ஆண்டின் முடிவில் இந்த பயிற்சியை செய்து கொண்டேயிருங்கள் தனக்குத்தானே செய்து கொண்டேயிருங்கள், தனக்குத்தானே ஆசிரியராக மாறுங்கள் ஆனால் ரிசல்ட்டை

காண்பிப்பதற்காக தன்னைப் பற்றிய சார்ட் கொடுத்துக் கொண்டேயிருந்தால் கவனம் செல்லும். எப்படி தன் கைகளை தான் விரும்பிய வண்ணம் இயக்குவதை அனுபவம் செய்கிறீர்களோ, கை தான் விரும்பிய வண்ணம் நிறுத்த முடியும் தானே? அதேபோல் மனதை எந்த நிலையில் நிறுத்த விரும்புகின்றீர்களோ அதேநிலையில் நிலைபெற வேண்டும். மகா மந்திரமும் மன்மனா பவ என்பது நினைவார்த்தமாகும். மனதிற்கான இந்த பயிற்சியில் எவ்வளவு வெற்றி கிடைத்துள்ளது? இதனை தனக்குத்தானே அனுபவம் செய்யுங்கள்.

பாப்தாதா விரும்புவது இது தான். ஒவ்வொரு குழந்தையும் இப்போது சங்கயுகத்தின் சுகம், சங்கமயுகத்தின் பிராப்திகள், ஒவ்வொரு பிராப்தியிலும் அனுபவி ஆக வேண்டும். தன்னைத்தானே சோதனை செய்யுங்கள், ஒவ்வொரு பிராப்தி, ஒவ்வொரு சக்தி, ஒவ்வொரு ஞானத்தின் ரகசியங்கள், யோகத்திற்கான ஒவ்வொரு விதிகள், தாரணையிலும் ஒவ்வொரு தாரணையின் அனுபவங்கள், எல்லாவற்றிலும் அனுபவி ஆகியுள்ளேனா? தன்னைப்பற்றி இவை அனைத்திலும் சோதனை செய்து கொண்டேயிருங்கள், முன்னேறுங்கள். முன்னேற வைத்துக் கொண்டேயிருங்கள். இன்று பாப்தாதா இந்த பிராப்திகளை சோதனை செய்ய சொல்லிக் கொண்டிருக்கின்றார். ஏதேனும் ஒரு பிராப்தியில் குறையிருந்தாலும் நாடகப்படி சோதனையிலும் சமயத்திற்கேற்ப அதுவே வரும். எனவே அனைத்துப் பாடங்களிலும் சம்பன்னமாக, மற்றும் சம்பூர்ணமாக மாறுவதற்காக சோதனை செய்யுங்கள். மற்றும் மாற்றிக் கொள்ளுங்கள்.

இன்றும் பாப்தாதா உங்கள் அனைவருடைய சாதாரண சொரூபத்திலும் உங்களுடைய எதிர்கால ரூபத்தைப் பிராப்திகளின் ரூபத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றார். நல்லது. எல்லா இடங்களிலும் இருக்கின்ற கண்டெடுக்கப்பட்ட பாப்தாதாவின் உள்ளமெனும் சிம்மாசனத்திற்குரிய நம்பிக்கைக்குரிய, கீழ்படிபவருமான தீவிர முயற்சி செய்யும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் மிகமிக அதிகமான உளமார்ந்த அன்பு மற்றும் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள்! பாப்தாதாவிற்கும் குழந்தைகளைப் பார்த்து குஷி ஏற்படுகிறது. ஆஹா ஆஹா! ஆஹா எனது குழந்தைகளே ஆஹா!

சேவைக்கான வாய்ப்பு இந்தூர் ஜோன்: இந்தூரைச் சார்ந்த அனைத்து குழந்தைகளும் சேவையிலும், நினைவிலும் ஈடுபட்டுள்ளீர்கள், பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி ஒவ்வொருவரும் அவரவது முயற்சியிலும் பிராப்தியின் அனுபவத்தால் முன்னேறிக் கொண்டேயிருக்கின்றீர்கள், மேலும் முன்னேறிக் கொண்டேயிருங்கள். தைரியம் நன்றாக இருக்கிறது. எனவே எங்கே தைரியமோ அந்த தைரியத்திற்கான பலனும் பலமும் இரண்டுமே பிராப்தமாகிறது. இனி போகப்போக பாப்தாதா விரும்புவது இது தான். ஒவ்வொரு ஜோனும் ஏதேனும் சேவை மற்றும் தனது மனோநிலை நிர்விக்னமாக இருந்து முயற்சியிலும் தீவிரமடைந்து பாபாவின் அன்பிற்கு உகந்தவராக இருக்க வேண்டும். மேலும் மேலும் பாபாவின் அன்பால் உயர்ந்து கொண்டே யிருங்கள். நல்லது. இந்தூரின் விசேஷம் இது தான். அங்கே அரசாங்கத்துடன் நல்ல தொடர்பு வைத்துள்ளார்கள். இப்பொழுது அந்த அரசாங்கத்தின் நிமித்தமாக இருப்பவர்களோடு தொடர்பு வைத்திருப்பவர்கள், அவர்களுக்கு சேவையில் சகயோகியாக மாறுங்கள். இப்பவும் நல்ல தொடர்பு இருக்கிறது, அவர்கள் மூலமாக சேவை செய்ய வையுங்கள். இந்த சேவை நிமித்தமாக நண்பர்களாக மாற்றுங்கள். அவர்களின் சகயோகத்தால் உலக மக்கள் மீது நல்லதொரு அபிப்பிராயம் ஏற்படும். சேவையில் துணையாக்கிக் கொள்ளுங்கள். உங்களுக்கும் அந்த ஆவல் உள்ளது ஆனால் இன்னும் சிறிது முன்னேற்றுங்கள். அவர்களை நம்மவராக மாற்றிக் கொள்ளுங்கள். அப்படி வரமுடியும். மற்றப்படி கூட்டம் அதிகம் தான். இந்தூரில் இருந்து இன்று முதன் முறையாக வந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். இந்தூரைச் சார்ந்தவர்கள் கையை நன்றாக உயர்த்துங்கள். நல்லது. ஒவ்வொரு ஜோனும் அவரவர்களது சேவையில் வெற்றியை அடைந்து கொண்டேயிருக்கின்றீர்கள். மேலும் வெற்றி அடைந்து கொண்டேயிருப்பீர்கள். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார், முன்னேறிக் கொண்டேயிருக்கிறீர்கள், மேலும் முன்னேறிக் கொண்டேயிருப்பீர்கள்.

நீதித்துறையைச் சார்ந்தவர்கள்: நல்லது நீதித்துறையினர் தங்களது சேவையை செய்து கொண்டிருக்கிறீர்கள், மேலும் செய்து கொண்டேயிருப்பீர்கள் நல்லது முன்பு கூட நீதித்துறை யினருக்கு

சமிஞை கொடுத்திருந்தார். நீதித்துறையில் நல்லதொரு குழுவை உருவாக்கி, கீதையின் பகுவான் பரமாத்மாவாகத்தான் இருக்க முடியும் என்பதை நீங்கள் ஊர்ஜிதம் செய்து காண்பிக்க வேண்டும். அப்படி ஒரு குழுவை உருவாக்குங்கள். எப்படி தர்மத்தைச் சார்ந்தவர்களுக்காக சொன்னீரிகள், சிறிது முயற்சியும் செய்தீர்கள், அதுபோலவே நீதித்துறையை சார்ந்தவர்களும் ஒரு குழுவை உருவாக்குங்கள். கீதையின் பகவான் யார் என்பதை ஊர்ஜிதம் செய்து காண்பியுங்கள். முடியுமா? செய்ய முடியுமா? ஏனென்றால் இப்போது இந்த இரண்டு விஷயங்கள் ஊர்ஜிதமாக வேண்டும், ஒன்று கீதையின் பகவான், மற்றொன்று இறைவன் எங்கும் நிறைந்தவர் அல்ல என்பதாகும். இந்த இருவிஷயங்களும் மெல்ல மெல்லமாக ஊர்ஜிதம் ஆகி விட வேண்டும். இப்பொழுது உலகில் உண்மையில் பிரம்மா குமாரிகள் மனதிற்கு அமைதி தருகிறார்கள். மனதின் குழப்பங்களை தியானத்தால் விலக்கி விடுகிறார்கள் என்பது ஊர்ஜிதமாகியுள்ளது. இப்பொழுது மெதுமெதுவாக யாரேனும் மனதில் அமைதியற்று இருந்தால் இதனை மாற்றுவதற்கான நல்ல சாதனம் பிரம்மா குமாரிகளிடம் உள்ளது என்பதைப் புரிந்திருக்கிறார்கள். மெல்ல மெல்லமாக இது பிரசித்தமாகிக் கொண்டேயிருக்கின்றது. அதுபோல இந்த இரு விஷயமும் அத்தாரிட்டியாக இருப்பவர்களிடம் பிரசித்தம் அடைய வேண்டும். ஒருவருக்கொருவர் இதில் திருப்தி அடைந்து விட்டால் பிறகு பயமற்று சொல்லுங்கள். இந்த விஷயம் புரிந்து கொள்ள வேண்டியது. பிறகு மெல்ல மெல்ல இந்த விஷயம் பரவிக் கொண்டேயிருக்க வேண்டும் சொற்பொழிவைக் கேட்கும் பொழுது இப்போது சொல்கிறார்கள், பிரம்மா குமாரிகளின் சொற்பொழிவில் கருத்துக்கள் பாயிண்ட், பாயிண்டாக இருக்கிறது. கேட்க, புரிந்து கொள்ள முடிகிறது ஆனால் முக்கிய இப்போது இதனைப்பற்றிய முழக்கம் ஏற்பட வேண்டும். முக்கியமாக இந்த இரண்டு விசயங்கள். இதன் மூலமாக ஊர்ஜிதம் ஆகி விடும் இவர்களுக்கு கற்பிப்பவர் யார் என்பது அப்படி முயற்சி செய்யுங்கள். ஊர்ஜிதமாகும் அளவிற்கு இவர்களுக்கு கற்பிப்பவர் அத்தாரிட்டியான ஒருவர் என்பதை எல்லோரும் உணர வேண்டும். மற்றபடி நன்றாக இருக்கிறது இந்த துறை அமைத்ததிலிருந்து ஒவ்வொருவரும் அவரவரது சேவையை பொறுப்புடன் நன்கு காப்பாற்றி வருகிறீர்கள். ஒவ்வொரு வர்க்கத்தைச் சார்ந்தவர்களும் அவரவரது சேவையில் ஈடுபட்டு வருகிறீர்கள். எனவே

இந்த சேவையில் நிமித்தமாக இருக்கின்ற குழந்தைகளுக்கு பாப்தாதா உளமான அன்பை வழங்குகின்றார், சதா முன்னேறிக் கொண்டே செல்லுங்கள், பாபாவை பிரத்யட்சம் செய்வதற்கான புதுப்புது திட்டங்களை அமைத்துக் கொண்டேயிருங்கள். நல்லது.

இரட்டை அயல் நாட்டு சகோதர சகோதரிகளுடன்: இரட்டை அயல் நாட்டு குழந்தைகளுக்கு பாப்தாதாவின் விசேஷமான அன்பு நினைவுகள் பாப்தாதா பார்க்கின்றார் குப்தத்திலும் குப்தமாகவே சேவையின் வளர்ச்சி நன்கு செய்து கொண்டிருக்கின்றீர்கள். எனவே பாப்தாதா புரிந்து கொள்கின்றார். பாபாவிடம் உளமார்ந்த அன்பும் ஞானத்தின் முக்கியத்துவமும் ஒவ்வொரு குழந்தைகளின் உள்ளத்திலும் நன்றாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. எனவே வெளிநாட்டுக் குழந்தைகள் வளர்ச்சியும் நன்கு அடைந்து வருகிறார்கள். சுய முயற்சியிலும் ஆரம்பத்திலிருந்தே நாலுக்கு நாள் முன்னேற்றமடைந்து கொண்டே வருகிறார்கள். எனவே பாப்தாதா உள்ளத்தின் அன்பையும் உள்ளத்தின் தைரியத்தையும் மேலும் முன்னேறச் செய்கிறார். பாப்தாதாவிற்கு திருப்தியாக இருக்கின்றது சேவை வளர்ச்சி அடைந்து வருகின்றது. மேலும் செய்து கொண்டே இருப்பீர்கள். பாப்தாதாவின் நாலா புறமுள்ள குழந்தைகள் சேவையில் வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கின்றார்கள். இப்பொழுது அடுத்து என்ன செய்ய வேண்டும்? ஒவ்வொருவரும் எப்படி சுயமுயற்சியிலும், சேவையிலும் முன்னேறி வருகின்றீர்களோ அதுபோல இப்போது நினைவு எனும் பாடத்திலும் மேலும் ஆழமான அனுபவங்களை செய்வதில் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். கர்ம யோகி எனும் நடிப்பை நன்றாக செய்து அதிலும் நினைவு யாத்திரையை மேலும் அதிகரிக்க வேண்டும். நினைவு எனும் பாடத்தில் சற்று சக்தி வாய்ந்த அனுபவத்தை அதிகம் செய்ய வேண்டும். இதில் ஒருவருக்கொருவர் ஊக்கத்தை அதிகப்படுத்தி நம்பர்-1 பெற வேண்டும். மற்றபடி ரிசல்ட் வளர்ச்சியில் நன்றாக இருக்கிறது. கவனம் கொடுத்துள்ளீர்கள் அக்கம், பக்கம் இருப்பவர்களுக்கும் கவனத்தைத் திருப்ப வைத்துள்ளீர்கள் இதற்காக பாப்தாதா அயல்நாட்டைச் சார்ந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் வாழ்த்துக்களை வழங்குகின்றார்.

அயல் நாட்டு குழந்தைகள் பயிற்சிக்காக வந்திருப்பவர்கள்: நல்லது. அனைத்துக் குழந்தைகளுக்கும் மிக மிக அதிகமான அன்பு நினைவுகள் (குழந்தைகள் பாட்டு பாடினார்கள்) நன்றாக ஊக்கம் உற்சாகத்துடன் இருக்கின்றார்கள். இப்பொழுது அங்கே சென்று சேவையும் செய்ய வேண்டும். இந்த மகிழ்ச்சி மற்றும் யோகத்தையும் இரண்டையும் அதிகரிக்க வேண்டும். நல்லது.

இளைஞர்கள் பயிற்சிக்காக வந்திருப்பவர்கள்: நல்லது. இளைஞர்களின் மாற்றத்தை அரசாங்கமும் பார்க்க விரும்புகின்றது. எனவே இளைஞர்கள் ஒரு குழுவை உருவாக்குங்கள். இந்தியாவில் செய்தாலும் சரி ஆனால் இந்த ஒரு விசேஷத்தன்மையைக் காண்பியுங்கள், உலகில் துக்கம் அதிகரித்துக் கொண்டு இருக்கிறது ஆனால் எங்களிடம் சிவபாபா மூலமாக குஷி அதிகரித்துக் கொண்டு இருக்கிறது. தூய்மையும் அதிகரித்துக் கொண்டு இருக்கிறது. எது நடந்தாலும் சரி. நாங்கள் எடுத்த சங்கல்பத்தின்படி நாங்களும் அஹிம்சை (சாத்வீகமானவராக) மாறி உலகத்திலும் நன்மையைப் பரப்புவோம். இதில் நாங்களும் முன்னேறிச் செல்வோம் பிறருக்கும் எங்களது வாழ்க்கையைப் பற்றி சொல்லி எங்களைப் போலவே சிரேஷ்டாச்சாரியாக மிக உயர்ந்தவர்களாக மாற்றிக் கொண்டிருக்கின்றோம். இதனைப் பார்த்து அரசாங்கமும் மகிழ்ச்சி அடைகிறது. இந்த குமார் இளைஞர்களிடம் தனது வாழ்க்கையை நல்ல விதமாக அமைத்துள்ளார்கள். மேலும் முன்னேறிக் கொண்டே செல்வார்கள் எனவே இப்பொழுது மெல்ல மெல்ல இளைஞர்களின் பிரபாவம் அரசாங்கத்தையும் சென்று அடைந்து கொண்டிருக்கிறது. உலகம் செய்ய முடியாததை நீங்கள் செய்து காண்பிக்கின்றீர்கள். செய்து காண்பித்துக் கொண்டே இருங்கள். இந்த முழக்கத்தையும் பரவச் செய்யுங்கள். நல்லது. பாப்தாதாவிற்கும் இந்த இளைஞர்களின் குழு எதிர்காலத்தை எவ்வளவு உயர்த்திக் கொள்ள முடியும் என்பதைப் பார்க்கும் பொழுது மகிழ்ச்சி ஏற்படுகிறது. முன்னேறிக் கொண்டு இருக்கின்றீர்கள் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். பிறரையும் முன்னேற வைத்துக் கொண்டே செல்லுங்கள்.

இந்தூரைச் சேர்ந்த ஆஸ்டல் குமாரிகளுடன்: இந்தோரைச் சார்ந்த குமாரிகளும் நன்கு முன்னேறி வருகிறார்கள். சேவை நிலையங்களிலும் நன்கு உதவியாளராக மாறி வருகிறார்கள். பாப்தாதா

குமாரிகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார் ஏனென்றால் இந்த குமாரிகள் தன்னைத் தானே காப்பாற்றிக் கொண்டார்கள். மேலும் பிறருக்கும் நாளுக்கு நாள் ஊக்கம் உற்சாகத்தைக் கொடுத்துக் கொண்டும் இருக்கின்றார்கள். எனவே இந்த குமாரிகள் உலகிற்கு முன்பாக முன் உதாரணமாக இருக்கின்றார்கள். தன்னைப் போல் மாற்றிக் கொண்டே செல்லுங்கள். தன்னை சேவைக்கு நிமித்தமானவராக மாற்றிக் கொண்டே செல்லுங்கள். உங்களுடைய நல்ல முன்னேற்றத்தைப் பார்த்து பிறருக்கும் ஊக்கம் உற்சாகம் ஏற்படுகிறது. இது பாபாவிற்கும் பிடித்திருக்கிறது. நல்லது முன்னேறுங்கள் முன்னேற வைத்துக் கொண்டே செல்லுங்கள்.

தாதிமார்களுடன்: (பழைய வருடத்தின் கூடவே தன்னிடமுள்ள குறைகள் பலவீனங்களையும் பரிவர்த்தனை செய்துவிடுங்கள்) இப்போது பார்க்கலாம். அம்சம் அளவிற்குக் கூட பழமை தன்னிடம் இருக்கக்கூடாது. ஒவ்வொருவரும் உணர வேண்டும். இவர் முழுவதுமாக மாறி விட்டார் என்று இதையே அனைவரும் பார்க்க விரும்புகிறார்கள்.

பரதாதியுடன்: (நிர்மல் சாந்தா தாதி, பிரம்மாபாபாவின் மகள்) இவர் எப்போதுமே சிரித்த முகத்துடன் இருக்கின்றார். படுக்கையில் இருந்தாலும் முகம் மலர்ச்சியுடன் தான் இருக்கின்றார். இவரைப் போலவே எல்லோருமே முகம் மலர்ச்சியோடு இருங்கள். உடல் நலமா இதனை பராமரிக்கத் தெரிந்து கொண்டீர்களா இவருக்கும் இது தெரிந்து விட்டது. தைரியம் நன்றாக இருக்கிறது. ஆன்மீக தைரியம்.

(மன்மோகினி வனத்தில் ஸ்டுடியோ அமைக்கப்பட்டுள்ளது அதனுடைய வரைபடம் சகோதரர் ரமேஷ் அவர்கள் பாப்தாதாவிற்கு காண்பிக்கின்றார்) நன்றாக அமைத்துள்ளீர்கள். ஆரம்பியுங்கள் ஆனால் நல்ல முறையில் பராமரிக்கவும் வேண்டும். எல்லோர் துணையும் இருக்கிறது நன்றாக நடைபெறும்.

நல்லது. இன்று புதிய வருடம் ஆரம்பமாகிறது எனவே மதுபனில் உள்ள அனைவரும் ஞானசரோவர், பாண்டவ பவன் மற்றும் இங்கே சாந்திவனத்தில் இருப்பவர்கள் மற்றுமுள்ள அனைத்து மதுபன்

வாசிகளுக்கும் பாப்தாதா முக்கியமாக அன்பு நினைவுகள் வழங்குகின்றார். ஏனென்றால் யார் அருகே இருக்கின்றார்களோ அவர்கள் சதா சேவை மூலமாக தன்னை முன்னேற்றிக் கொண்டு இருக்கின்றார்கள். மேலும் முன்னேறிக் கொண்டே இருங்கள். ஏனென்றால் இங்குள்ள வாயுமண்டலத்தில் ஆனந்தத்தைப் பெறுவதற்காக சுகத்தைப் பெறுவதற்காக வெளியிலிருந்து வந்து அனுபவம் செய்கின்றார்கள். அப்படி என்றால் இங்கேயே இருப்பவர்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள். பாப்தாதாவும் விரும்புவது இதுதான். ஒவ்வொரு குழந்தையும் சதா பாபாவைப் போலவே அனைவருக்கும் குஷியினைத் தர வேண்டும். குஷியைப் பெற வேண்டும். இங்கே இருக்கின்ற வாயுமண்டலத்தில் எதனை தாரணை செய்ய விரும்புகிறார்களோ அதனை தாரணை செய்து லாபத்தை பெற முடியும். எனவே பாப்தாதா இங்கிருக்கின்ற அதிர்ஷ்டசாலி குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். மேலும் தனது பாக்கியத்தை செயலில் பயன்படுத்தி முன்னேறிக் கொண்டே இருக்கின்றீர்கள். மேலும் முன்னேறிக் கொண்டே இருப்பீர்கள். பாப்தாதா சேவாதாரிக் குழந்தைகள் மற்றும் சமர்ப்பணமான குழந்தைகள் அனைத்துக் குழந்தைகளையும் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார் ஆஹா குழந்தைகளே ஆஹா தனக்கு பிராப்தமாகியுள்ள பாக்கியத்தை சதா முன்பாக வைத்து அதீந்திரிய சுகத்தில் ஆடிக் கொண்டே இருங்கள். ஆட வைத்துக் கொண்டே இருங்கள். பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தைகளின் பாக்கியத்தின் மீதும் பெருமை உள்ளது. இது சாதாரண விஷயமல்ல. டிராமாபடி இந்த பாக்கியம் பிராப்தமாவதும் கூட உங்கள் வாழ்க்கையில் மிக மிகப் பெரிய பிராப்தி ஆகும். பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளிடமும் பறக்கும் கலையைப் பார்க்க விரும்புகின்றார். பறந்து கொண்டுதான் இருக்கிறீர்கள். மேலும் பறந்து செல்லுங்கள், பறக்க வைத்துக் கொண்டே இருங்கள். தன்னுடன் துணையாக இருப்பவர்களையும் முன்னேறச் செய்யுங்கள். அனைவருக்கும் பெயர் சகிதமாக விசேஷமாக புத்தாண்டிற்கான பாப்தாதாவின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்.

ஐதராபாத்தைச் சார்ந்த முக்கியஸ்தர்களுடன்: பாப்தாதா பார்க்கின்றார் இங்கு வந்திருப்பவர்கள் பாக்கியசாலி குழுவினர். வந்த நாளிலேயே

பறக்கும் கலையை அனுபவம் செய்கின்றீர்கள். மெல்ல மெல்லமாக செல்பவர்கள் அல்ல. பறக்க வைத்து தானும் பறப்பவர்கள். பாக்கியம் அடைய வந்துள்ளீர்கள், மிக்க நல்லது தன்னுடைய வீட்டிற்கு வந்து விட்டீர்கள். தன்னுடைய குடும்பத்தில் வந்து சேர்ந்து விட்டீர்கள். முந்தைய கல்பத்தில் பாக்கியம் இவர்களுக்கு இருந்தது. தன்னுடைய முந்தைய கல்பத்தின் பாக்கியம் அதனை இப்போதும் அடைந்து விட்டீர்கள் நல்லது, இப்போது ஐதராபாத்தை விஜபி சேவையை பார்க்க வேண்டும் என்றால் இவர்களைப் பாருங்கள் என்று ஐதராபாத்தை சுட்டிக் காட்டும் அளவிற்கு செய்து காண்பியுங்கள். நல்லது.

**புதிய ஆண்டில் 2011-ல் சுப ஆரம்ப வேளையில் பாப்தாதா அனைத்துக் குழந்தைகளுக்கும் வாழ்த்துக்களை அளித்தார்!** அனைவருக்கும் புத்தாண்டின் வாழ்த்துக்கள். ஆண்டு முழுவதும் தடைகளற்றவர்களாக அதிர்ஷ்டசாலிகளாக மகிழ்ச்சியில் இருங்கள். தன்னுடைய முகம் மற்றும் நடத்தை மூலமாக அனைவருக்கும் மகிழ்ச்சியையும் புன் சிரிப்பையுமே கற்பியுங்கள் சதா பறந்து கொண்டே இருங்கள். பறக்க வைத்துக் கொண்டே இருங்கள்: பறக்கும் கலை எல்லோருக்கும் பிரியமானது. எனவே பறந்து பறந்தே செய்தியையும் வழங்குங்கள். உங்களைப் பார்த்து எல்லோருமே மகிழ்ச்சி எனும் ஊஞ்சலில் ஆட வேண்டும். ஹேப்பி! ஹேப்பி! ஹேப்பி நியூ இயர்!!

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂